தேசபக்தர் சரிதை—2

வீரகேசரி

# விட்டல்பாய் படேல்



அல்லயன்ஸ் கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை

## : எமது அபிமானிகளுக்கு :

அன்பர்கள் தக்க ஆதரவு அளிப்பின், கீழ்க் கண்ட நூல்கள், ஒவ்வொன்ருய், அழகிய படங்களுடன் 'தை மாதம் முதல்' வெளிவரும்.

(3) கோபால கிருஷ்ண கோகலே
(4) லோகமான்ய பால கங்காதர திலகர்
(5) தாதாபாய் நௌரோஜி
(6) சித்தரஞ்சன தாஸர்
(7) லாலா லஜபதிராய்

முன்னதாகவே, தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்வோர்க்கு மாத்திரம், புத்தகம் தயாரானவுடன், புத்தக விலை மாத்திரமே சார்ஜ் செய்யப்படும். (தபால் செலவு இனும்.)

---

ஏற்கெனவே வெளிவந்துள்ள

(1) தியாகமூர்த்தி பண்டித மோதிலால் நேரு

**33-போட்டோ படங்களுடன், அணு 12.**

(டாக்டர் பி. வரதராஜலு நாயுடு அவர்கள் முன்னுரையுடன் கூடியது.)

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# வீரகேசரி விட்டல்பாய் படேல் : :

திருவள்ளுவர் நூல் நிலையம்



1. சிகிச்சையிலிருக்கையில்
தோட்டத்தில் உலவும் காட்சி

தேசபக்தர் சரிதை.—2

# வீரகேசரி :: விட்டல்பாய் படேல்

(10-அழகிய படங்களுடன்.)

இது
"சுதேச மித்திரன்" துணை ஆசிரியர்
திரு. R. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றியது.

ஸர் R. K. ஷண்முகம் செட்டியார், K. C. I. E.,
அவர்கள் முன்னுரையுடனும்,
"ஹிந்து" ஆசிரியர்
திரு. A. ரங்கஸ்வாமி ஐயங்கார், பி. ஏ., பி. எல்.,
அவர்கள் சிறப்புரையுடனும் கூடியது.

அல்லயன்ஸ் கம்பேனி,
மயிலாப்பூர், சென்னை.

காபிரைட்] [அணா 12

## ஆரியமத :: :: உபாக்யானம்

எங்கள் வெளியீடுகளில் தலைமை வகிப்பது. தெலுங்கு, கன்னடப் பதிப்புகளும் உண்டு. **150,000**-பிரதிகள்வரை செலவாகி இருப்பதே, இவைகளின் சிறப்புக்கும், உயர்வுக்கும் தகுந்த அத்தாட்சி யல்லவா? இவைகளில், அரிய நீதிக் கதைகளும், கண்ணைக்கவரும் போடோ படங்களும் நிறைந்துள்ளன. சிறுவர், சிறுமிகளும் களிப்புடன் வாசிக்கக்கூடிய இனிய எளிய தமிழ் நடை.

முதல் பாகம் : : விலை அணா **8**

2-ம் பாகம் : : விலை அணா **10**

---

ORIENTAL HOME UNIVERSITY PRESS, TRIPLICANE, MADRAS.

# முகவுரை

சென்ற சில வருஷங்களாகவே நமது தேச மக்களில் தலைசிறந்து விளங்குவோரில் சிலரை ஒருவர்பின்னொருவராக இழந்து துக்கிக்கும் துர்ப்பாக்கிய நிலைமையில் நாம் இருந்து வருகிறோம். விட்டல்பாய் படேலின் மரணத்தினால் இந்தியாவின் பொதுவாழ்வில் ஈடுபட்டிருந்த தலைவர்களில் மிகவும் சிரேஷ்டரான ஒருவரை நாம் இழந்துவிட்டோம். தேசீய வீரர்களின் கோஷ்டியில் படேலுக்குரிய ஸ்தானத்தை அவருக்கு அளிப்பது எதிர்காலச் சரித்திராசியர்களின் முக்கிய கடமையாக இருக்கும். ஆயினும் தேசமக்களின் நன்மதிப்புக்கு அவர் பாத்திரராகும்படி செய்யக்கூடிய என்னென்ன விசேஷ குணங்கள் அவரிடம் அமைந்திருந்தன வென்பதை அவருடைய சகாக்களாக இருந்திருக்கிற நாம் தெரிவிக்கக்கூடும்.

படேல் போர்க்குணம் மிகுந்தவராக இருந்தார். தீரம் மிகுந்த போர் வீரராக இருப்பதற்கு இன்றியமையாதவைகளான !தைரியம், அசைக்க முடியாத உறுதி, தம்மிடத்திலும் தமது கொள்கையிடத்திலும் பூரண நம்பிக்கை ஆகிய முக்கிய குணங்கள் ஒருங்கே அவரிடம்

அமைந்திருந்தன. ஒவ்வொரு போராட்டத்தை யும் கடைசிவரையில் நடத்தி ஒருகை பார்த்து விடுவதிலேயே அவர் திருஷ்டி யுடையவராக இருந்தார். விட்டுக் கொடுப்பதென்பதையே அறியாத பிடிவாதத்தன்மை வாய்ந்தவராக அவர் இருந்ததால் அவரைச் சமாளிப்பது அசாத்தியமாக விருந்தது. அந்தப் பிடிவாதம் மட்டுமின்றி அவர் மேற்கொண்ட ஒவ்வொரு விஷயத்தின் அம்சங்கள் பலவற்றையும் அவர் நன்கு ஆராய்ந்தறிந்தவராக இருந்தார். அதனுல்தான் அவரைச் சமாளிப்பது அதிகக் கஷ்டமாக இருந்தது. கஷ்டப்பட்டு வேலை செய்யும் ஆற்றல் அவருக்குப் பூரணமாக இருந்து வந்தது. விஷய ஞானம் அவருக்கதிகமாக விருந்ததே அவருடைய தைரியத்திற்கும் தன்னம்பிக்கைக்கும் முக்கிய காரணமாகும். இவ்வித அபாரத் தேர்ச்சியினுல் தமது எதிரிகளும், தம்மைப்போல் விஷயத்தின் நுட்பத்தை நன்கறிந்திராத தமது சகாக்களும் திடுக்கிட்டுத் திகைக்கும்படி அவர் செய்துவந்தார்.

தேசத்தின் பொது வாழ்வின் பல துறைகளிலும் அவர் செய்த சேவை அதிகமாயினும். இந்தியா சட்டசபையின் தெரிந்தெடுக்கப்பட்ட முதல் தலைவர் என்ற ஹோதாவில் அவர் செய்துள்ள கைங்கர்யம் மகத்தானதாகும். எனவே, இந்தச் சரித்திரத்தில் அவருடைய வாழ்நாளின்

முக்கிய பாகமாகிய அந்தக் காலத்தைப்பற்றிய விவரங்கள் மிகுந்திருப்பது சாலவும் பொருந்தும். ஒரு சட்டசபையின் தலைமைப் பதவியிலிருந்தால் எக்காலத்திலும் கஷ்டத்தைச் சகிக்க வேண்டியதாக விருப்பதோடு நாசுக்காக நடந்துகொள்ள வேண்டியு மிருக்கிறது. படேலைப் பொறுத்தமட்டில் அவர் சுராஜ்யக் கட்சியில் ஒரு முக்கியஸ்தராக விருந்ததால், அந்தக் கஷ்டம் இன்னும் அதிகரித்து வந்ததாகச் சொல்லலாம். இந்தியா சட்டசபையின் தலைவர் பதவியில் அவர் எவ்விதம் நடந்துகொண்டு வருகிறாரென்பதை அவருடைய நண்பர்களும்விரோதிகளும் ஒருங்கே உற்று நோக்கி வந்தனர். சில சமயங்களில் தகராறுகள் ஏற்பட்டதன் காரணமாக உதித்திருந்த வேகத்தில் விசேஷ உணர்ச்சியும் துவேஷமும் உண்டாகி யிருந்தபோதிலும், அவர் அந்த ஸ்தானத்தின் கௌரவத்தைக் காப்பாற்றியதோடு சபையின் பாத்தியதைகளையும் உரிமைகளையும் ஜாகரூகராக இருந்து பாதுகாத்து வந்தாரென்பது யாவரும் ஒப்ப முடிந்த விஷயம். ஆரம்பம் முதலே தமக்கு ஏற்பட்டிருந்த மகத்தான பொறுப்பின் தன்மையை அவர் நன்குணர்ந்திருந்தார். நிர்மாண வேலைகளைச் செய்வதற்கு அவசியமான ராஜதந்திரம் இந்தியர்களுக்கு அமைந்திருக்கிற தென்பதைத் தாம் நிரூபணம் செய்ய வேண்டியிருக்கிறதென்பதை

அவர் அறிந்திருந்தார். 1926-ம் வருஷத்திய பொதுத் தேர்தலுக்குப் பிறகு அவர் ஒருமனதாக மீண்டும் அந்த ஸ்தானத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டதே, அப்பதவியை வகிப்பதற்கு அவர் மிக்க தகுதி வாய்ந்தவர் என்பதற்குச் சிறந்த சான்ருகும். இரண்டாவது முறை அவர் அப்பதவியை வகித்திருந்த காலத்தில் தமது சகாக்கள் தம்மிடத்தில் வைத்த நம்பிக்கைக்குத் தாம் முற்றிலும் பாத்திரரென்பதை அவர் காட்டிக்கொண்டதோடு, அந்தப் பெரிய பதவியையும் கண்ணியமாகவும், கௌரவத்துடனும் வகித்திருக்கக் கூடியவர்கள் இந்தியாவி லிருக்கிருர்களென்பதை அவர் சந்தேகத்திற்கு இடமின்றி ஸ்தாபிதம் செய்துவிட்டார்.

நமது பிற்கால சந்ததிகள் தெரிந்து கொள்ளுவதற்காகத் திறம்பட நமது பெரியோர்களின் சரிதைகளைச் சரியாக எழுதிவைக்கும் வழக்கம் நமது தேசத்தில் இல்லாமலிருந்து வருவது மிகவும் வருந்தத்தக்கதாகும். விட்டல்பாய் ஜாவேரிபாய் படேலின் சரிதையைத் திறம்பட தெளிவாக ஸ்ரீமான் கிருஷ்ணமாச்சாரியார் எழுதியிருப்பதற்கு நமது பாராட்டுதலும், நன்றியும் அவருக்கு உரியதாகும்.

20, அக்பர் ரோட்,
புதிய டில்லி,
7—12—1933

ஆர்.கே. ஷண்முகம்செட்டி,
இந்தியா சட்டசபையின்
தலைவர்.

# சிறப்புரை

பாரத மாதாவின் சேவைக்கெனவே தமது வாழ்நாளை அர்ப்பணம் செய்திருந்த விட்டல்பாய் படேலின் சரிதையை அழகாகவும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்லும் இந்நூலை நான் மிகுந்த சந்தோஷத்துடன் தமிழ் நாட்டினருக்குச் சிபார்சு செய்கிறேன். அவருடைய வாழ்வின் சில விசேஷாம்சங்களை ஒரு காலத்தில் உலகிற்கு அறிவிக்கக்கூடிய சந்தர்ப்பம் எனக்கு வாய்க்கு மென்று நான் நம்புகிறேன். அவைகள் வெளிப் படையாகத் தெரியாமலிருந்தபோதிலும், தேசத் தின் விடுதலைக்காக அவர் எவ்விதம் மூர்த்தன்னிய மாகவும் முழு மனதுடனும் உழைத்து வந்தா ரென்பதை அவருடைய தேசத்தாருக்கும், முக் கியமாக பிற்காலத்திற் சிறந்த பிரஜைகளாக விளங் கக்கூடிய யுவர்களுக்கும், உணர்த்துவனவாக விருக்கும். அவர் வாழ்க்கையின் பிற்காலத்தில் குடும்ப சம்பந்தமான விஷயத்தில் ஏகாங்கியான நிலைமையில் இருந்தமையால் அவரிடம் பற்றற்ற ஒரு தன்மையும், எதையும் வெளியிட்டுச் சொல் லாத ஒரு அமைதியான குணமும் வளர்ந்து வர ஆரம்பித்தன. இவ்விரண்டு அரிய குணங்களும் அவருடைய சொந்த வாழ்க்கையையே பொறுத்

தவையாயினும், அவர் தமது வாழ்நாளெயெல்லாம் தேச கைங்கரியத்திலேயே செலவிட்டு வந்ததால் அதில் அவைகள் பிரதிபலித்து வந்தன. பொதுக் காரியங்களின் பல துறைகளில் அவர் சாதித்தவைகளுக்குக் காரணமாக இருந்தவைகளேயும், இந்தியா சட்டசபையின் தலைவர் என்ற ஹோதாவில் நியாயமான சந்தர்ப்பங் கிடைத்தபோதெல்லாம் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி அவர் நடந்து வந்ததையும் கவனித்துப் பார்த்தால் அவை மிக்க அபாரமானவைகளாக இருக்கின்றன. அவற்ருல் ஏற்படக்கூடிய ஒரு படிப்பினையை நமது நாட்டினர் தெரிந்து கொண்டு அதனுல் பயனடைய வேண்டியது மிக்க அவசியமாகும்.

தற்போது தமிழ் உலகத்திற்கு உதவப்பட்டுள்ள அவரது இந்த அரிய ஜீவிய சரித்திரம் உண்மையில் நமது நாட்டினர் மேற்சொன்ன படிப்பினையைப் பூர்வாங்கமாகவேனும் அடைவதற்குப் பெரிதும் உபயோகமாக இருக்குமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார்,

"ஹிந்து" ஆசிரியர்.

# நான் முகம்

தேசபக்தி மேலீட்டால் தாங்கள் பிறந்த தாய் நாட்டின் சேவையில் அதிக ஊக்கங் காட்டிய அருந்தலைவர்களைப் போற்றிப் புகழ்வது மேனுட்டாரின் உயரிய குணங்களில் ஒன்ருகும். நெல்ஸனைப் போற்ருத ஆங்கிலேயர் ஒருவருமில்லை; ஜார்ஜ் வாஷிங்டனைக் கொண்டாடாதவர்கள் அமெரிக்காவில் கிடையாது. அப்பெரியார்கள் பூதவுடலை நீத்துப் புகழுடலெய்திப் பலபல வருஷங்களாயினும், அவர்களுடைய ஞாபகார்த்தமாக ஏற்படுத்தியுள்ள சின்னங்களாலும், அவர்களுடைய வீர சரிதைகளை அக்காலத்தவர் சரியாக எழுதி வைத்திருப்பதாலும், அவர்களுடைய பெயர்களை அத்தேச மக்கள் என்றும் மறவாமலிருந்து வருகின்றனர். இந்தியாவிலும் அத்தகைய வீரர்கள் உதிக்காமலில்லை. மேனுட்டாரைப்போல அவர்கள் அதிகம் சாதிக்க முடியாமலிருந்திருக்கலாம். அதற்கு அவர்கள்மேல் தோஷங் கூறுவதில் பயனில்லை. தேசம் இருந்துவரும் நிலைமையே அதற்குப் பெரிதுங் காரணமாகும். இவ்வித நிலைமையிலும் அவர்கள் தேசமக்கள் கண்டு அதிசயிக்கத் தக்க அரிய சேவையைச் செய்திருக்கின்றனர்.

அத்தகைய பெரியார்களுடைய கோஷ்டியில் ஸ்ரீமான் விட்டல்பாய் படேலுக்கு முக்கிய ஸ்தானத்தைக் கொடுக்கவேண்டும்.

---

தேசத்தின் பொதுவாழ்வில் அவர் ஈடுபட ஆரம்பித்த கால் முதலாக பல துறைகளிலும் அவர் செய்துவந்த அரிய சேவையை என்னுடைய தொழில் முறையில் கவனித்து வந்த தில் எனக்கு அவரிடத்தில் விசேஷ மதிப்பு ஏற்பட்டிருந்தது. அவர் இந்தியா சட்டசபையின் தலைவராக இருந்தபோது சுற்றுப்பிரயாணமாகச் சென்னைக்கு வந்திருந்த சமயத்தில், அவருடன் சின்னாட்கள் நெருங்கிப் பழகும் பாக்கியத்தை நான் பெற்றிருக்கிறேன். அதனால் அவரை நன்கறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. இத்தகைய மகான்களை ஈன்றுள்ள பாரத மாதாவின் கதிமோட்சம் அதிகத் தொலைவிலில்லையென்ற நம்பிக்கை எனக்கு அப்பொழுது ஏற்பட்டது. அவர் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருந்த சமயத்தில் காலகதியடைந்துவிட்ட செய்தியை நான் பார்த்தபோது திடுக்கிட்டுப் போய் விட்டேன். அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு அவருடைய சரிதையை எழுதிக் கொடுக்கவேண்டுமென்று அல்லயன்ஸ் கம்பெனியின் சொந்தக்காரரான எனது ஆப்த நண்பர் ஸ்ரீமான் வி. குப்புஸ்வாமி ஐயர் என்னை வேண்

டிக்கொண்டபோது, அந்த வழியிலேனும் காலஞ் சென்ற பெரியாரிடத்தில் எனக்கிருந்த பக்தியை யும் விசுவாஸத்தையும் தெரிவித்துக் கொள்ளுவ தற்குச் சந்தர்ப்பம் வாய்ப்பதை என் வருத் தத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு ஒரு பெரிய ஆறுதலாக நான் கருதினேன். அதுவே இச்சிறு நூலை நான் எழுத முன் வந்ததன் காரணமாகும்.

காலஞ்சென்ற பெரியாருடைய குண விசே ஷங்களையும், அபார சாமர்த்தியத்தையும், தேசத் திற்காக அவர் செய்துள்ள அரிய சேவையையும் ஒரு சிறு நூலில் விவரிப்பதென்பது சாத்திய மில்லை. இருந்தாலும் அவர் காட்டிவிட்டுப் போயிருக்கும் வழி யென்னவென்பதை எனது தமிழ் நாட்டு சகோதரர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு என் சிற்றறிவுக்கு எட்டினவரையில் அவருடைய சரித்திரத்தைச் சுருக்கமாக எழுதி யுள்ளேன். இதில் குற்றங்குறைகள் இருக்க லாம். குற்றங்களைப் பாராட்டாமல் குணத் தை மட்டில் கிரகிக்க வேண்டுமென்பதே எனது வேண்டுகோள்.

இந் நூலுக்கு முகவுரை தரவேண்டுமென்று நான் செய்துகொண்ட வேண்டுகோளை உவப் புடன் ஏற்று, பல முக்கிய வேலைகளிடையேயும் அதை அனுப்பித் தந்த இந்தியா சட்டசபையின் தற்காலத் தலைவரும், எனது மதிப்புவாய்ந்த

நண்பருமான ஸர் R. K. ஷண்முகம் செட்டியார், K. C. I. E., அவர்களுக்கும், எனது கோரிக்கைக்கு இணங்கி சிறப்புரை கொடுத்த எனது ராஜீய குருவும், என்பால் அளவுகடந்த அன்பு காட்டி வருபவருமான "ஹிந்து" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலையும் வந்தனத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேசபக்தர்கள் தொகுதியில் ஏனைய பல தலைவர்களுடைய சரிதைகளையும் வெளியிட வேண்டுமென்று அல்லயன்ஸ் கம்பெனியார் பேரவாக் கொண்டிருக்கின்றனர். தமிழ் நாட்டினர் பூரண ஆதரவு அளித்து, அக்கம்பெனியாரின் அபீஷ்டம் சீக்கிரத்தில் நிறைவேறும்படி செய்ய வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

R. கிருஷ்ணமாச்சாரி.

# பொருளடக்கம்


| நே. | | பக்கம் |
|---|---|---|
| i. | ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களின் முகவுரை | iii |
| ii. | ஸ்ரீமான். ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களின் சிறப்புரை | vii |
| iii. | நூன்முகம் | ix |
| 1. | சரித்திரச் சுருக்கம் | 3 |
| 2. | பொதுவாழ்வில் பிரவேசம் | 12 |
| 3. | ரௌலட் சட்டம் | 16 |
| 4. | காங்கிரசில் சம்பந்தம் | 19 |
| 5. | மான்ட்போர்ட் சீர்திருத்தத்தின் தன்மை | 21 |
| 6. | கூட்டுக்கமிட்டிமுன் சாட்சியம் | 25 |
| 7. | ஒத்துழையாமையும் சட்டமறுப்பு விசாரணைக் கமிட்டியும் | 26 |
| 8. | சுராஜ்யக்கட்சி ஸ்தாபனம் | 2க் |
| 9. | முனிசிபல் சபைகளில் சேவை | 30 |
| 10. | இந்தியா சட்டசபையில் செய்த வேலை | 33 |
| 11. | ஹார்னிமன் பிரஷ்ட உத்தரவை நிவர்த்திக்க முயற்சி | 39 |

| நே. | | பக்கம் |
|---|---|---|
| 12. | மான்ய மறுப்பு | 41 |
| 13. | வதந்திகளுக்கு மறுப்பு | 43 |
| 14. | வரி விதிக்கும் சுதந்திரம் | 45 |
| 15. | சட்டசபைத் தலைவர் பதவி | 48 |
| 16. | மறுபடியும் தலைவர் பதவி | 59 |
| 17. | சபையின் சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு | 61 |
| 18. | இங்கிலாந்து யாத்திரை | 63 |
| 19. | மிஸ்டர் தேவலராவின் பரிச்சயம் | 64 |
| 20. | ரிசர்வ் பாங்கி மசோதா | 67 |
| 21. | சட்டசபைக் கார்யாலயப் பிரிவினை | 68 |
| 22. | பொதுஜனப் பாதுகாப்பு மசோதா | 70 |
| 23. | சபையில் வெடிகுண்டு | 76 |
| 24. | சட்டசபையி லிருப்பதேன்? | 82 |
| 25. | லார்டு இர்வினும், ஸ்ரீமான் படேலும் | 86 |
| 26. | சேனாதிபதி சம்பவம் | 90 |
| 27. | ஜமேதாராக நடித்த விந்தை | 94 |
| 28. | தலைவர் பதவி ராஜிநாமா | 96 |
| 29. | ராஜப் பிரதிநிதியின் பதில் | 109 |
| 30. | ஸ்ரீமான் படேலின் இரண்டாவது கடிதம் | 111 |
| 31. | பெஷாவர் விசாரணை | 131 |
| 32. | ஸ்ரீமான் படேலுக்குத் தண்டனை | 133 |
| 33. | அமெரிக்காவில் பிரசாரம் | 140 |
| 34. | லார்டு இர்வின் அநுதாபம் | 151 |
| 35. | ஆத்மாவின் பிரிவு | 153 |

| நே. | | பக்கம் |
|---|---|---|
| 36. | சகோதரருக்கு முகவிழியும் இல்லை | 157 |
| 37. | பிரேத வரவேற்பு | 159 |
| 38. | கடைசி யாத்திரை | 162 |
| 39. | தலைவர்களின் துயரம் | 170 |
| 40. | பத்திரிகைகளின் புகழுரை | 190 |
| 41. | சபைகளின் அநுதாபம் | 221 |

## சித்திரப் படங்கள்

| நே. | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிகிச்சையில் இருக்கையில் தோட்டத்தில் உலாவும் காட்சி | iv |
| 2. | காலஞ்சென்ற ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் | 2 |
| 3. | வி. ஜெ. படேல்-இந்தியா சட்டசபையின் உத்தியோகஸ்த ரல்லாத முதல் தலைவர் | 17 |
| 4. | ஸ்ரீமான் வி. ஜே. படேல் 1931-ம் வருஷத்தில் சிகிச்சைக்காக மேனாடுகளுக்குச் சென்றபோது எடுத்த படம். | 49 |
| 5. | ஸ்ரீமான் படேலின் சிலையை அமெரிக்க சிற்பி தயாரிக்கும் காட்சி | 65 |

| நெ. | | பக்கம் |
|---|---|---|
| 6. | ஜெர்மனியில் போலீஸ்காரருடன் ஸ்ரீமான் படேல் சம்பாஷிக்கும் காட்சி | 81 |
| 7. | ஸ்ரீமான் படேல் படுத்த படுக்கையாக விருக்கையில் சுபாஷ் பாபு கூடவிருந்து தேறுதல் சொல்லும் காட்சி | 129 |
| 8. | ஸ்ரீமான் படேல் இறந்துபோனதும் எடுத்த படம் | 155 |
| 9. | பிரேத ஊர்வலக் காட்சி | 177 |
| 10. | தகனத்திற்கு முன் தரிசனத்திற்காக ஸ்மசானத்தில் பிரேதம் வைக்கப்பட்டிருந்த காட்சி | 193 |


---

**அம்பலவாணன் அல்லது நாவாயக் கைதி :—** "விக்டர் ஹ்யூகோ" எழிதிய "லெஸ் மிஸரபிள்ஸ்" என்னும் உயர்தர நாவலின் தமிழ் அமைப்பு. இதன் ஆசிரியர் பி. எஸ். சுப்பிரமணியம், எம்.ஏ. இரண்டு பாகங்கள், அழகிய படங்களுடன் விலை ரூ. 3. தபால் செலவு தனி.



2. காலஞ்சென்ற

ஸ்ரீமான் விட்டல்பாய் படேல்



உ

# வீரகேசரி

# விட்டல்பாய் படேல்

"மகன் றந்தைக் காற்று முதவி யிவன் றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

— திருக்குறள்.

படேல் சகோதரர்களைப் புதல்வர்களாகப் பெற்றெடுத்த பெற்றோர்களின் பாக்கியமே பாக்கியம். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று திருவள்ளுவ நாயனார் சிலாகித்துக் கூறியுள்ள பயிர்த்தொழிலின் விசேஷத்தையும் முக்கியத்தையும் படேல் சகோதரர்களின் அருமைப் பிதா அறிந்திருந்தபோதிலும், பிரபல பிரெஞ்சு ராஜ தந்திரியான டிடாக்குவி வில்லே யென்பவர், அதிகப்படியான செல்வம் படைத்தவர்களுக்கோ அல்லது அரை வயிற்றுக் கஞ்சியில் திருப்தி யடைகிறவர்களுக்கோதான் அது ஏற்ற

தொழிலாகுமென்று உலக அனுபவத்தை யொட்டிக் கூறியிருந்த பொன்மொழி அவர் மனதில் ஊடுருவிப் பாய்ந்திருந்தது. இயற்கையாகவே அதிகச் செல்வம் படைத்தவராக அவர் இருக்கவில்லை; தமது செல்வப் புதல்வர்கள் அன்றாடக் காலக்ஷேபத்திற்கே திண்டாடிக் கொண்டிருக்கும்படியான துர்த்தசையில் அவர்களை விட்டு வைத்துப்போகவும் அவர் மனம் இடங் கொடுக்கவில்லை. ஆகையால் அந்தக் காலத்திய சம்பிரதாயத்தையும் மீறி, தமது புதல்வர்களை அவர் ஆங்கிலப் பாடசாலைக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் அந்தக் கல்வியினாலாய பலனைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளும் விசேஷ ஆற்றல் படைத்தவர்களாக இருந்தபோதிலும், அதன் அனுகூலத்தைப் பூரணமாக அடையக்கூடிய சௌபாக்கிய நிலைமையில் அவர்கள் இருந்து வரவில்லை. ஆயினும் "விளையும் பயிர் முளையிலே" யென்பதுபோல் பிற்காலத்தில் விசேஷப் பெருமையை அவர்கள் அடையக் கூடியவர்களென்று பலரும் எதிர்பார்ப்பதற்கு இடமிருக்கக்கூடிய வழியில் பால்ய முதலே இளைய சகோதரர்கள் இருவரும் விசேஷ ஊக்கத்தையும், விடா முயற்சியையும் காட்டிக் கொள்ளலானார்கள்.

சாமான்ய குடும்பத்தில் பிறந்த பலரும் தங்களுடைய உழைப்பினாலும், விடா முயற்சி

யினாலும் உலகில் மிகுந்த கௌரவம் வாய்ந்த பதவிகளை அடைந்திருப்பதற்குப் பல உதாரணங்கள் சரித்திரத்தில் நிறைந்திருக்கவில்லையா? அவ்விதமே இளைய சகோதரர்களிருவரும் தங்களுடைய சொந்த முயற்சியினாலும், உழைப்பினாலும், அந்தரங்க சுத்தியாலும் மகாஜனங்களுடைய நன்மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரர்களானார்கள். பிரெஞ்சு ராஜதந்திரியின் அபிப்பிராயத்தைப் பொய்ப்படுத்தி, திருவள்ளுவ நாயனாருடைய பொன்மொழியை மெய்ப்பித்துவிட வேண்டுமென்னும் பேரவா அவர்களுக்கு இருந்து வந்தது. இளைய சகோதரரான வல்லபாய் படேல் பாரிஸ்டர் தொழிலைச் செய்து வந்தபோதிலும், விவசாயிகளுடைய நிலைமையை உயர்த்த வேண்டுமென்ற ஆர்வத்தினால் அவர்களில் ஒருவராகத் தம்மையும் மதித்து, அவர்களுடைய க்ஷேமமே தேசத்தின் க்ஷேமமெனக் கருதி உழைத்துவந்து ஸர்தார் படேல் என்று எல்லாரும் போற்றித் துதிக்கும் பெருங் கௌரவத்தையும் அடைந்தார். விட்டல்பாய் படேலுடைய விருப்பமும் அதுவேயாயினும், ஜனங்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு சட்டசபைகளால் ஏற்பட்டுள்ள அனுகூலங்களை உபயோகித்துக் கொள்ளுவது பேருதவியாக இருக்குமென்ற அபிப்பிராயத்துடன் அத்துறையில் திரும்பினார். அவருடைய அறிவும், ஆற்ற

லும், ஊக்கமும், விடா முயற்சியும் எல்லோருடைய மனதையும் கவர்ந்தன. அவர் விரும்பாமலே ஒன்றின்மேலொன்ருகப் பல கௌரவ பதவிகளும் அவருக்குக் கிடைத்தன. அந்தப் பதவிகளில் அவர் செய்துவந்த பேருழியமும், அவர் காட்டிக்கொண்ட சுயேச்சை புத்தியும் ஜனங்களுக்கு அவரிடத்தில் நம்பிக்கை அதிகரிக்கும்படி செய்தன. கடைசியாக அவர் இந்தியா சட்டசபையின் தலைவர் ஸ்தானத்தையும் அடைந்தார்.

இந்தியர்களுக்குப் பொறுப்புவாய்ந்த பதவிகளை அளித்தால் அவர்கள் அவைகளைத் திறமையாக வகிக்கக் கூடுமென்பதை அவர் உலகிற்கு மெய்ப்பித்தார். அப்பதவியிலிருந்து கொண்டு அவர் சொல்லிவந்த தீர்ப்புகளும், அபிப்பிராயங்களும் காமன்ஸ் சபையின் பிரபல தலைவராக விருந்த லார்ட் அல்ஸ்வாட்டரின் ஞாபகம் தமக்கு ஏற்படும்படி செய்யக்கூடியவைகளாக இருக்கின்றனவென்று மிஸ்டர் பால்ட்வின் ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லியதைவிடச் சிறந்த புகழுரையை எவரும் பெறுவது சாத்தியமில்லை. சுதந்திரக் காற்று வீசிவரும் தேசத்தில் வசிக்கும் ஒருவருக்கு அவருடைய தீர்ப்புகள் போற்றத் தக்கனவாகத்தோன்றியிருக்கலாம். ஆனால், இந்தியாவில் கவர்ன்மெண்டாருக்கு அது புதிய அனுபவமாக

இருந்தது. அந்தப் பதவியின் பொறுப்புகளை நிர்வகித்து வருவதில் அவருக்கு ஏற்படுத்தப்பட்ட கஷ்டங்கள் பல. ஆயினும் அவைகளை அவர் சிறிதும் பொருட்படுத்தாமல் தேச நலமொன்றையே பிரதானமாகக் கருதி அந்தப் பெரிய பதவியின் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றி வைத்து வந்ததோடு, இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் எந்நாளும் தொடர்பு இருந்து வரும்படி செய்வதற்காக குடியேற்ற நாட்டு அந்தஸ்தை இந்தியாவுக்கு வழங்கிவிடுவதே சிறந்த மார்க்கமென்பதை அப்போதைக்கப்போது லார்டு இர்வினிடம் வற்புறுத்தி வந்தார். பூரண குடியேற்ற நாட்டு அந்தஸ்தில் அவர் திருப்தியடைந்துவிடத் தயாராக இருந்தார். அவர் சொல்லிய சிறந்த யோசனைகளை அதிகாரிகள் பின்பற்றியிருக்கும் பட்சத்தில் சமீபகால இந்திய சரித்திரத்தின் போக்கே வேறாக விருந்திருக்கும். லார்டு இர்வின் அவர் தெரிவித்து வந்த யோசனைகளுக்குச் செவிமடுத்து வந்தாராயினும் அவைகளை அவசியம் நிறைவேற்றி வைக்கும்படி காங்கிரஸுக்கு தேசத்தில் அவ்வளவு செல்வாக்கு இருந்து வருகிறதாவென்பதில் முதலில் அவருக்குச் சந்தேகமிருந்துவந்தது. அவருக்கு ஆலோசனை கூறுவதற்காக அவரைச் சூழ்ந்துள்ளவர்கள் அந்த சந்தேகம் வலுப்பெறும்படி செய்து வந்தார்கள். ஸைமன் கமிஷனுக்கு நாடெங்கும்

எதிர்ப்பு ஏற்பட்டபிறகே அவருக்கு உண்மை நிலை ஓரளவு புலப்படலாயிற்று. அதன் பிறகு நிலைமையைத் திருத்துவதற்கு அவர் வெகுதூரம் முயன்றாராயினும் காலப் பிற்பாடாகவே நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடைய சுபாவ குணத்தினாலோ அல்லது வேறு காரணங்களாலோ தேசத்தில் சமாதான நிலைமை ஏற்படுவது அசாத்தியமாகி விட்டது. லார்டு இர்வினுடைய பிரேரணைகளை மகாத்மா காந்தி நிராகரித்து விட்டது தவறென்றே ஸ்ரீமான் படேல் முதலில் கருதினார். இப்பால் நடந்த சம்பவங்களினால் அவருடைய செய்கையே சரியென்ற அபிப்பிராயம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது. குடியேற்றநாட்டு அந்தஸ்தில் திருப்தி அடைவதாக இருந்த அவர்மனம் பூரண சுயேச்சையை நாடலாயிற்று. ஆனால் மேற்கொண்டும் அந்தப் பதவியிலிருந்து வருவது தேசத்திற்குத் துரோகம் செய்வதாகுமென்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட ஆரம்பித்த நிமிஷத்திலேயே அவர் அதை உதறித் தள்ளிவிட்டு தேச சேவையில் திரும்பிவிட்டார். பூரண சுயேச்சையை நோக்கமாகக் கொண்டு அவர் உழைத்து வந்தார். காமன்ஸ் சபையின் தலைவர்களாக இருந்தவர்களுக்குப் பட்டமும் பென்ஷனும் கொடுப்பது இங்கிலாந்தில் வழக்கமாக இருக்கையில் இந்தியாவில் ஸ்ரீமான் படேலுக்குச் சிறைத்

தண்டனை கிடைத்தது. நீண்டகாலச் சிறை வாசத்தால் உடல்நிலை கெட்டு சிகிச்சைக் காக அவர் அந்நிய நாடு சென்றிருந்த இடத்திலும், இந்தியா சீக்கிரத்தில் விடுதலை பெற வேண்டுமென்ற எண்ணமே அல்லும் பகலும் அனவரதமும் அவருடைய முக்கிய ஸ்மரணையாக இருந்தது. ஆகையால் வைத்தியர்களுடைய எச்சரிக்கையையும் மதியாமல் அமெரிக்கா சென்று, இந்தியாவுக்காக அவர் அரிய சேவை செய்தார். சரீரம் மிகவும் நலிந்திருந்த சமயத்திலும் அவர் இந்த வேலையைச் செய்ததே அவருடைய வியாதி முற்றுவதற்கு முக்கியக் காரணமாகவிருந்தது. தமது அந்திய காலம் நெருங்கி விட்டதென்ற எண்ணத்தால் ஜன்ம பூமியைச் சீக்கிரம் அடைந்துவிட வேண்டுமென்று அவர் மிகவும் விரும்பியபோதிலும் அந்த அவா நிறைவேறாமலே போயிற்று. அந்நிய நாட்டில் அவர் உயிர் துறக்க வேண்டியதாயிற்று. சரீரத்திலிருந்து உயிர் பிரியும் சமயத்திலும், இந்தியா சீக்கிரத்தில் சுயேச்சை பெற வேண்டுமென்றே அவர் பிரார்த்தித்து வந்தார். வெண்ணெயெடுக்கும் சமயத்தில் தாழி உடைவதுபோல், முதிர்ந்த அறிவும், பழுத்த தேசாபிமானமும் மிகுந்தவர்களுடைய ஆலோசனை இந்தியர்களுக்கு மிகவும் அவசியமாக இருக்கும்சமயத்தில், அவரை இழக்கும் துர்ப்பாக்கியம் இந்தியாவுக்கு ஏற்பட்டுவிட்

டது இந்தியாவுக்குப் பெரிய துரதிர்ஷ்டமாகும். அவர் பூதவுடலை நீத்துவிட்டபோதிலும் அவருடைய புகழ் சரித்திரமுள்ளளவும் நிலைத்திருக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அவருடைய மரணத்திற்காக இந்தியாவிலுள்ள பல்வேறு மதத்தினரும், வகுப்பினரும் மிகுந்த துக்கத்தைத் தெரிவித்து வருவதிலிருந்தே அவரிடத்தில் ஜனங்களுக்கு எத்துணை மதிப்பு இருந்து வந்ததென்பது தெளிவாகிறது. அவருடைய மரணம் இந்தியாவுக்குப் பெரு நஷ்டமாயினும் அவர் காட்டிவிட்டுப் போயிருக்கும் வழியைப் பின்பற்றும்பக்ஷத்தில் தேசம் சீக்கிரத்தில் கதி மோக்ஷமடையலாமென்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீமான் படேல் புகழொடு வாழ்ந்தார்; புகழொடு மாண்டார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

# சரித்திரச் சுருக்கம்

கூர்ஜரத்திலுள்ள கெயிரா ஜில்லாவில், கார்ஸாத் என்னும் கிராமத்தில், தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனாரால் புகழ்ந்து கூறப் பட்டுள்ள உழுதொழிலை மேற்கொண்டிருந்த ஒரு நடுத்தர வகுப்பினர் குடும்பத்தில், 1871-ம் வருஷம் பிப்ரவரி மீ 18உ விட்டல்பாய் ஜாவேரி பாய் படேல் ஜனித்தார். பயிர்த்தொழிலில் அவருக்கு மிகுந்த பற்றுண்டாயினும், ஆங்கிலக்கல்வி வசதியால் ஏற்படக்கூடிய அனுகூலங்களை இழக்க அவரது பெற்றோர்கள் மனமில்லாதவர்களாய் குடும்பசம்பிரதாயத்தையும் மீறி அவரை ஆங்கிலப் பள்ளிக் கனுப்பினர். உள்ளூரிலிருந்த பாடசாலையில் அவர் கல்விபெற்று பிறகு நடியாட் சென்றார். அங்கு நடுத்தரக் கல்விப் பாடசாலையில் சேர்ந்து வாசித்து மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினார். அந்தக் காலத்தில் அப்பரீக்ஷையில் தேறியவர்களும் வக்கில் பரீக்ஷக்கு ஆஜராவதற்கு இடமிருந்ததால் அவர் ஜில்லா கோர்ட்டு வக்கீல் பரீக்ஷக்கு ஆஜராகித் தேறி, முதல் கிரேட் வக்கீல் சன்னது பெற்று, போர்ஸாத்தில் அத்தொழிலை ஆரம்பித்தார். அந்தக் காலம் முதலே அவர் புத்தி தீக்ஷண்யம் மிகுந்தவராக விருந்ததால் முதல் கிரேடு வக்கீலாகவிருப்பதில் அவ

ருடைய மனம் திருப்தியடைவதாக இருக்க வில்லை. இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறி வரவேண்டுமென்ற அவா அவரைப் பெரிதும் தூண்டியது. ஆனால் அவருடைய குடும்பத்தினருக்கு அவரை இங்கிலாந்துக்கு அனுப்புவதற்கு வேண்டிய ஐவேஜியில்லாததால் அவர் தமது சம்பாத்தியத்தைக் கொண்டே அதற்கு வேண்டிய பொருளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஊக்கமும், மனதில் உத்தேசித்த காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்ற உறுதியும் அந்தக்காலம் முதலே அவருக்கு இருந்து வந்ததால் அவர் அப்பொழுது தமக்குக் கிடைத்துவந்த குறைந்தவரும்படியிலும் சொற்பத் தொகையைச் சேமித்து வைக்க ஆரம்பித்து, சிறிது காலத்திற்குள் இங்கிலாந்து செல்லுவதற்கு வேண்டிய பொருளைச் சேர்த்துக்கொண்டு அங்கு சென்று, பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறித் திரும்பி வந்து, பம்பாயில் தொழிலை ஆரம்பித்தார்.

## போது வாழ்வில் பிரவேசம்

அவர் பம்பாய் வந்து சேர்ந்ததால் பொதுவாழ்வில் கலந்து கொள்ளவும் அவருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. 1914-ம் வருஷத்தில் அவர் பம்பாய் சட்டசபை அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பெற்றார். ஸர் டின்ஷா வாச்சா, டாக்டர் பராஞ்சபே இவர்களுடன் அவர் சேர்ந்துகொண்டு,

சட்டசபையில்ஜனங்களுடைய கட்சியைத்திறமையாக வாதித்து வந்ததுடன், வெளியிலும் ராஜீய, சமூக இயக்கங்களில் அதிகம் ஈடுபட ஆரம்பித்தார். சட்டசபையில் சரமாரியாக அவர் கேள்விகளைக் கேட்டு கவர்ன்மெண்டாருக்கு அப்பொழுது முதலே அதிகக் கஷ்டத்தை விளைவிக்க ஆரம்பித்து விட்டார். ஆரம்பக் கல்வியை இலவசமாகவும், கட்டாயமாகவும் போதிக்க வேண்டுமென்று அவர் சட்டசபையில் ஒரு மசோதாவையும் கொண்டுவந்து நிறைவேற்றி வைத்தார். ஸ்தல சுயவாட்சி ஸ்தாபனங்களின் நிர்வாகத்திலும் அவர் அதிக சிரத்தை காட்டி வந்ததால், 1916-ம் வருஷம் பூனாவில் நடந்த ஸ்தல சுயவாட்சி மகாநாட்டின் அக்கிராசனராக அவர் தெரிந்தெடுக்கப்பட்டார். 1917-ம் வருஷத்தில் மகாத்மா காந்தி கெயிராவில் ஆரம்பித்திருந்த ஸத்யாக்ரஹ இயக்கத்தில் அவர் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டதுடன், ஸர் கோகுல் தாஸ் பரேகுடன் சேர்ந்து அந்த ஜில்லா விவசாயிகளுடைய நிலைமையை நன்காராய்ச்சி செய்து சட்டசபையில் அவர்களுக்காகத் தீவிரமாகப் போராடினர்.

பொது வாழ்வில் அவர் இறங்கிய காலத்தில் அவர் மிதவாதிகள் கோஷ்டியையே சேர்ந்திருந்தபோதிலும் வரவர அவருடைய அபிப்பிராயம் மாறி, அவர் தீவிர தேசீய வாதியாகத்

திரும்பிவிட்டார். மகாத்மாகாந்தியின் தலைமையில் லோத்ராவில் நடந்த கூர்ஜர ராஜீய மகாநாட்டில் அவர் தேசீய உணர்ச்சியைத் தீவிரமாகக் காட்டிக்கொண்டார். அடுத்த வருஷத்திய கூர்ஜர ராஜீய மகாநாட்டுக்கு அவரே அக்கிராசனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். ஆசாரச் சீர்திருத்த மகாநாடு, கல்வி மகாநாடு, பிஜப்பூரில் நடந்த பம்பாய் மாகாண ராஜீய மகாநாடு இவைகளின் தலைமைப் பதவிகளும் அவருக்குக்கிடைத்தன. சமஸ்தானப் பிரஜைகள் க்ஷேமலாபத்திலும் அவர் விசேஷ சிரத்தை காட்டி வந்ததால் பரோடாவில் நடந்த சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டுக்கும், கத்தியவார் ராஜீய மகாநாட்டுக்கும் அவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் பம்பாய் சட்டசபை அங்கத்தினராக இருந்த காலத்தில் காங்கிரஸ்-முஸ்லீம் லீக் வெளியிட்ட கோரிக்கைகளை விளக்கியும், கூட்டியும் ராஜப் பிரதிநிதிக்கும் இந்தியா மந்திரிக்கும் ஸர் டின்ஷா வாச்சா, ஸர் நாராயண சந்தாவர்க்கர் முதலிய தலைவர்களுடன் சேர்ந்து அவர் ஒரு விக்ஞாபனத்தை அனுப்பி வைத்தார். அதில் இந்தியாவின் கோரிக்கைகளை ஆக்ஷேபிப்போருடைய கூற்றுக்களுக்குச் சரியான சமாதானத்தை அவரும் மற்றவர்களும் சொல்லியதோடு, முடிவாக இந்தியா விரும்புவதென்னவென்பதையும் தெரிவித்துக் கொண்டார்கள்:—

"பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் கௌரவமான பதவியையும் சுயவாட்சியையும் பெற்று, அந்த ஏகாதிபத்தியத்துடன் எக்காலும் சம்பந்தமுடையதாக விருந்து, அவசியமிருந்தால் அதற்காக யுத்தம் செய்யவும், பிராணனை விடவும் இந்தியாவானது தீவிரமான ஆசையுடையதாயிருக்கிறது. இந்த ஆசை நிறைவேறும்படி செய்ய ராஜ சக்கரவர்த்தியின் கவர்ன்மெண்டார் தங்களாலானதை யெல்லாம் செய்யத் தவற மாட்டார்களென்று நாங்கள் நம்பியிருக்கிறோம். நியாயமும் சுவாதீனமும் வேண்டுமென்று இந்தியா கேட்பதற்கு அநுசரணையாக இங்கிலாந்தின் ராஜ தந்திரிகள் நடந்து கொள்வார்களென்று நாங்கள் நம்புகிறோம். இந்தியாவின் தற்காலத் தேவைகளையும் பிற்கால கதியையும் பற்றிப் பட்சபாதமுள்ளவர்கள் என்ன தருக்கம் செய்தபோதிலும், இந்தியாவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் கேட்பதென்ன? இந்த நெருக்கடியான சமயத்தில் முதன் மந்திரியான மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் போன்றவர்கள் சிக்கலான பிரச்சினைகளைப் பைசல் செய்ய என்ன தைரியத்தையும் கற்பனா சக்தியையும் உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்களோ அந்த தைரியத்தையும் கற்பனா சக்தியையும் இந்தியாவின் பொருட்டும் ஏகாதிபத்தியத்திலடங்கிய மற்ற

தேசங்களின் பொருட்டும் உபயோகப்படுத்த வேண்டுமென்பதே. சேனையையும் கடற்படையையும் பற்றி சமீபத்தில் பார்லிமெண்டில் மிஸ்டர் லாய்ட் ஜார்ஜு பேசினபொழுது, இந்தியாவைக் குறித்து அவர் சொன்ன வார்த்தைகள் திருப்தியா யிருக்கின்றன:—"இந்தியாவானது எவ்வளவு தைரியத்துடன், எவ்வளவு விசுவாஸத்துடன் பிரிட்டிஷ் சேனைக்கு உதவி புரிந்திருக்கிறது? நமக்குக் கஷ்டம் நேர்ந்த சமயத்தில் அத்தேச ஜனங்கள் நமக்குப் பலமான உபகாரம் செய்தனர். யுத்தம் முடிந்து இந்தியாவின் விஷயங்களை நாம் பரிசீலனை செய்து மேல் காரியத்தைச் செய்ய வேண்டியபொழுது, இந்த உபகாரத்தை நாம் மறந்துவிட மாட்டோம்."

## ரௌலட் சட்டம்

மாகாண சட்ட சபையில் அவர் செய்துவந்த வேலை மிகவும் போற்றத்தகுந்ததாக இருந்ததால் இந்தியா சட்டசபைக்கு அவரை மகா ஜனங்கள் தெரிந்தெடுத்தனுப்பினர். மகா யுத்தத்தில் இந்தியா செய்த உதவியை மிஸ்டர் லாய்ட் ஜார்ஜு பாராட்டி அதை மறந்துவிடப் போவதில்லையென்று சொல்லியிருந்தும், ஜனங்களுடைய ஜீவாதாரமான உரிமைகளை வெகுவாகப் பாதிக்கக்கூடிய ரௌலட் மசோதாவை இந்தியா வர்ன்மெண்டார் சட்டசபையில் கொண்டு வந்



3. V. J. படேல், இந்தியா சட்டசபையின் உத்தியோகஸ்தரல்லாத முதல் தலைவர்.

தது அவருக்கு மிகுந்த உணர்ச்சியை உண்டு பண்ணியது. அந்த மசோதாவை ஜனப்பிரதிநிதிகளான பண்டித மதன்மோஹன மாளவியா, ஜனப் எம். ஏ. ஜின்ன, ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் முதலிய பலரும் பலமாக எதிர்த்தனர். ஆயினும், கவர்ன்மெண்டார் தங்களுக்கு இருந்து வரும் ஓட்டுப் பலத்தைக் கொண்டு அதைச் சட்டமாக நிறைவேற்றி வைத்துக்கொண்டு விடுவதென சங்கற்பித்துக் கொண்டு விட்டார்களென்பது நிச்சயமாகி விட்டதும் வீணே விவாதத்தை வளர்த்திக்கொண்டிராமல் இந்த துக்ககரமான விஷயத்தை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டு மேல் காரியங்களில், அதாவது அந்த சட்டத்தை கவர்ன்மெண்டார் ரத்து செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்படி செய்வதற்காக பொதுஜன அபிப்பிராயத்தை உருவகப்படுத்தும் வேலையில், ஈடுபடவேண்டுமென்று மற்றவர்கள் விரும்பினர். ஜனங்களைத்தயார்ப்படுத்தும் வேலையில் ஈடுபட ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் தயாராகவிருந்தபோதிலும், மிகுந்த ஆட்சேபகரமான அந்த மசோதாவானது அவ்வளவு சுலபமாகச் சட்டமாக நிறைவேறி விடுவதற்கு இடங்கொடுக்க அவர் சிறிதும் இஷ்டப்படவில்லை. ஆகவே, அவர் ஒவ்வொரு பிரிவுக்கும், ஒவ்வொரு உட் பிரிவுக்கும் திருத்தப் பிரேரணைகளை ஒன்றின்பின் ஒன்ருகக் கொண்டு

வந்துகொண்டிருந்தார். அந்த முயற்சியை அவர் கைவிட்டு விடும்படி செய்ய அதிகாரிகள் நயத்தி லும் பயத்திலும் செய்த முயற்சிகள் வீண் போயினவாதலால் லார்டு செம்ஸ்போர்டு இராக் கூட்டத்தை வைத்துக்கொண்டு மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றி வைக்க வேண்டியதா யிற்று. கடைசியாக மசோதா நிறைவேறியதும் அதை ஆட்சேபிப்பதற் கறிகுறியாக அவர் அந்தச் சபையின் அங்கத்தினர் பதவியை ராஜி நாமாச் செய்துவிட்டு வெளியேறிவிட்டார்.

## காங்கிரஸில் சம்பந்தம்

ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் 1915-ம் வரு ஷத்திலேயே முதன் முதலாக காங்கிரஸில் சம் பந்தப்பட்டார். அதில் அவர் அதிக அக்கறை காட்டி வந்ததால், 1918-ம் வருஷத்தில் பம்பா யில் மாண்ட்போர்டு யாதாஸ்தைப்பற்றி விவா திப்பதற்காகக் கூடிய விசேஷ காங்கிரஸின் உப சரணை சபைத் தலைவராக அவர் தெரிந்தெடுக்கப் பட்டார். அந்த வருஷக் கடைசியில் டில்லியில் பண்டித மதன்மோஹன மாளவியாவின் தலைமை யில் கூடிய 33-வது காங்கிரஸில் அரசியல் கோரிக்கைகளைக் குறித்து ஸ்ரீமான் கபர்தே பிரேரித்த தீர்மானத்தை அவர் ஆதரித்துப் பேசி னார். அந்த சமயத்தில் அவர் சொல்லியதா வது:—

இந்தத் தீர்மானத்தின் மூன்ருவது பிரிவானது இந்திய மகாஜனங்கள் ஜவாப்தாரியான ஆட்சிக்குத் தகுதியுடையவர்களாக இருக்கிருர்களென்றும், அரசியல் திருத்த யாதாஸ்தில் அதற்கு எதிரிடையாகக் கொண்டுள்ள அனுமானத்தை மறுப்பதாகவும் சொல்லுகிறது. மிஸ்டர் மாண்டேகுவும், லார்டு செம்ஸ்போர்டும் அவர்களுடைய யாதாஸ்தில் சொல்லியிருக்கும் சில விஷயங்கள் நமது அபிப்பிராயத்தில் முற்றிலும் தவருனவை யென்பதும், ஆதாரமற்றவை யென்பதும் நீங்கள் நன்கு அறிந்ததே. நாம் பூரண ஜவாப்தாரியான ஆட்சியைப் பெறுவதற்கு இன்னமும் தகுதியை அடையவில்லையென்று அவர்கள் சொல்லுகிருர்கள். இந்தியா மிகவும் ஏழ்மையான தேசமாக இருப்பதையும், சாமான்ய ஜனங்கள் அறிவிலிகளாகவும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவும் இருப்பதையும் அவர்கள் இதற்கு முக்கிய காரணங்களாகக் குறிப்பிட்டிருக்கிருர்கள். இந்த இரண்டு காரணங்களையும் நீங்கள் அலசிப் பார்ப்பீர்களானல், அவர்கள் அலசிப் பார்த்திருப்பார்களானல், இந்த தேச மகாஜனங்கள் 150 வருஷங்களாக பிரிட்டிஷ் அதிகாரி வர்க்கத்தின் ஆட்சி முறைக்குட்பட்டிருந்தும், அவர்களிற் மிகப் பெரும்பான்மையோர் மிக ஏழைகளாகவிருப்ப

தும், ஜனங்களிற்பலர் அறிவிலிகளாகவும், எழு தப் படிக்கத் தெரியாதவர்களாகவும் இருப்ப தும் இந்த ஆட்சிமுறைக்கே அகௌரவத்தைக் கொடுக்கக்கூடியவை யென்ற முடிவுக்குத்தான் நீங்களும் அவர்களும் வரக்கூடும். இந்தக் கார ணத்தைக்கொண்டே தேசத்தின் ஆட்சிமுறை யில் விசேஷ மாறுதலை ஏற்படுத்த வேண்டு மென்று நான் சொல்லுகிறேன். இப்போதைய ஆட்சிமுறை மாறி, ஜனங்களுக்கு ஜவாப்தாரி யான அரசாங்கம் ஏற்பட்டாலன்றி, 150 வருஷ அதிகாரிவர்க்க ஆட்சி முறையினால் ஏற்பட் டுள்ள தாரித்திரியமும் அறியாமையும் தேச த்தை விட்டகலப்போவதில்லை. இதனாலேயே ஜவாப்தாரியான ஆட்சி வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். இதையே நமக்கு ஜவாப்தாரி யான ஆட்சியைக் கொடுக்காம லிருப்பதற்குக் காரணமாக அந்த யாதாஸ்தின் கர்த்தர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

## மாண்ட்போர்டு சீர்திருத்தத்தின் தன்மை

அதே காங்கிரஸில் தேசத்தினருக்கு இருந்து வரும் அபிப்பிராயத்தை உத்தேசித்து மாகாணங் களில் பூரண ஜவாப்தாரியான ஆட்சியை ஏற் படுத்திவிட வேண்டும், தேசத்தின் எந்தப் பாகத் தையும் அரசியல் திருத்தத்தின் அனுகூலத்தி

லிருந்து விலக்கு செய்துவிடக்கூடாது என்னும் நிபந்தனைகளுக்குட்பட்டு சுயவாட்சி சம்பந்தமாக பம்பாயில் கூடிய விசேஷ காங்கிரஸ் நிறைவேற்றி யுள்ள தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்வதாகவும், உத்தியோகஸ்தர்களல்லாதஐரோப்பியர்கள், சுரங் கத்தொழில் அல்லது தேயிலைத் தொழிலை நடத்தி வருகிறார்களென்ற காரணம்பற்றி அவர்களுக்குத் தனித்தொகுதிகளை ஏற்படுத்தக்கூடாதென்றும், அவர்களுக்கு அவ்விதப் பிரதிநிதித்துவத்தை அளிப்பதாகவிருந்தால் மாகாணங்களில் அவர் கள் மொத்த ஜனத்தொகையில் இருந்துவரும் விகிதாசாரத்துக்குத் தகுந்தபடி அவர்களுடைய பிரதிநிதித்துவத்தை வரையறுக்கவேண்டுமென் றும் ஸ்ரீமான் பி. சக்கரவர்த்தி பிரேரணைசெய்த தீர்மானத்தை ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் ஆமோதித்துப் பேசுகையில் மனதிலிருப்பதை ஒளிக்காமல் சொல்லவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். அவர் சொல்லியதாவது:—

"கவர்ன்மெண்டார் கொடுக்க உத்தேசித் திருக்கும் அரசியலானது அதிருப்திகரமான தாகவும், ஏமாற்றத்தை விளைவிக்கக்கூடியதாக வும் இருக்கிறதா, இல்லையாவென்பதை முத லில் கவனிப்போம். மத்திய கவர்ன்மெண் டின் ஆட்சிமுறை இப்போதைப் போலவே இருந்துவரும் வரையில், வரிவிதிக்கும் விஷயங் களில் நமக்குப் பூரணசுதந்திரம் ஏற்படும்வரை

யில், கவர்ன்மெண்டார் கொடுக்க உத்தேசித்திருக்கும் சீர்திருத்தமானது திருப்திகரமானதென்றும் ஏமாற்றத்தை விளைவிக்கக்கூடாததென்றும் யாரும் மனப்பூர்வமாகச் சொல்ல முடியுமா? என்னைப் பொறுத்தவரையில், வரிவிதிக்கும் சுதந்திரத்தை அளிக்க மறுப்பது ஜவாப்தாரியான ஆட்சியையே மறுப்பதாகுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். வரிவிதிக்கும் சுதந்திரமில்லாத ஆட்சி, ஜவாப்தாரியான ஆட்சி ஆகாதென்று நான் முக்காலும் சொல்லுவேன். வரிவிதிக்கும் சுதந்திரத்தை அளிக்காத ஆட்சி உபயோகமற்றதாகும். வரிவிதிக்கும் சுதந்திரத்தை நமக்கு அளிக்காத அரசியலானது திருப்திகரமானதாகுமாவென்றுகாங்கிரஸிலிருந்து மாறுபட்ட அபிப்பிராயமுடையவர்களாகஇருக்கிறவர்களை நான் கேட்கிறேன். இந்தியா கவர்ன்மெண்டைப் பொறுத்தவரையில் அங்கு ஓரளவு ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்றும், அவ்விதம் ஓரளவு ஜவாப்தாரித்துவத்தை ஏற்படுத்தாத அரசியல் உபயோகமற்றதென்றும் தேச முழுவதும் ஒரு மனதாக அபிப்பிராயப் படுகிறது. இதில் பின்ன அபிப்பிராயத்திற்கு இடமில்லை; பின்ன அபிப்பிராயம் இருந்து வரவுமில்லை. இந்தியா கவர்ன்மெண்டில் சீர்திருத்தம் ஏற்

படாத வரையில் சீர்திருத்தம் உபயோகமற்ற தென்று காங்கிரஸும், மிதவாதிகள் மகா நாடும், ஒவ்வொரு இந்தியரும் அபிப்பிராயப் படுகிறார்கள். இவ்வித நிலைமையில் மாண்ட் போர்டு யாதாஸ்தில் குறிப்பிட்டுள்ள அரசிய லானது திருப்திகரமானதென்று சொல்ல முடியுமாவென்று நான் நமது மிதவாத நண் பர்களைக் கேட்கிறேன். இவ்விரண்டு காரணங் களையும் உத்தேசித்தே சீர்திருத்தமானது அதிருப்திகரமான தென்றும், ஏமாற்றத்தை விளைவிப்பதாக இருக்கிறதென்றும் காங்கிரஸ் தெரிவிக்கிறது. இவ்விதமிருந்தும் நம்மில் சிலர் மரியாதையை உத்தேசித்தோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ, 'அதி ருப்திகரமானதாகவும் ஏமாற்றத்தை விளை விப்பதாகவும்' என்ற பதங்களைத் தீர் மானத்திலிருந்து நழுவ விட்டுவிட வேண்டு மென்று சொல்லுவது எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கிறது. நாம் அவ்விதம் சொல் வதா, அல்லது நம் மனதில் இருப்பதை உள்ளபடி தெரிவிப்பதா? ராஜ தந்திரத் திற்கோ அல்லது மரியாதைக்கோ இதில் இட மில்லை. நம்மனதில் இருப்பதைச் சொல்லிவிட வேண்டும். இந்தியா கவர்ன்மெண்டில் சீர் திருத்தம் ஏற்படாத வரையில், வரிவிதிக்கும் சுதந்திரம் நமக்குக் கிடைக்காதவரையில், சீர்

திருத்தம் உபயோகமில்லை யென்பது உங்கள் அபிப்பிராயமாயின், கவர்ன்மெண்டாருடைய திட்டமானது மிகவும் அதிருப்திகரமானதாக வும் மிகுந்த ஏமாற்றத்தை விளைவிப்பதாகவும் இருக்கிறதென்று ஒருமனதாகத் தெரிவியுங் கள். வீணை வார்த்தைகளைக் கொட்டிப் பசப் பிக்கொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்? ஏன் நேரடியாக அதைச் சொல்லக்கூடாது? பிரிட்டிஷ் மகாஜனங்களும், பிரிட்டிஷ் பார்லி மெண்டும் பசப்பு வார்த்தைகளைக் கண்டு ஏமாந்துவிடப் போவதில்லை. சீர்திருத்தம் சரியாகத்தான் இருக்கிறதென்று சொல்லிக் கொண்டே அதில் சில மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று கேட்பதில் அர்த்தமில்லை.''

## கூட்டுக் கமிட்டி முன் சாட்சியம்

இதே காங்கிரஸில் ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் காங்கிரஸின் பொதுக் காரியதரிசிகளில் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். காங்கிர ஸின் சார்பாக பார்லிமெண்டு கூட்டுக்கமிட்டி முன் சாட்சியம் கொடுக்கவும், இந்தக் காங்கிரஸ் நியமனம் செய்த கமிட்டியார் ஸ்ரீமான் விட்டல் பாய் படேலை ஒருவராகத் தெரிந்தெடுத்தார்கள். இதன் மேல் இங்கிலாந்து சென்ற ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் அங்கு இந்தியாவின் சார் பாக விசேஷப் பிரசாரம் செய்ததோடு, கூட்டுக் கமிட்டி முன் ஆணித்தரமான சாட்சியமும்

கொடுத்தார். அதை எல்லாரும் பாராட்டினர். காங்கிரஸ் தூது கோஷ்டி இங்கிலாந்தில் செய்த முயற்சியில் வெற்றி பெற்றதற்கு ஸ்ரீமான் விட்டல்பாய் படேலே முக்கியக் காரணமென்று லோகமான்ய திலகரும், மிஸ்டர் பென் ஸ்பூரும் பஹிரங்கமாகத் தெரிவித்தார்கள். ஸ்ரீமான் படேல் இங்கிலாந்தி லிருந்தபொழுது பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியையும், 'இந்தியா' பத்திரிகையையும் மிதவாதிகள் ஆதிக்கத்திலிருந்து தேசீய 'வாதிகளிடத்தில் மாற்றுவித்தார். அரசியல் சட்டத்தின்கீழ் தயாரிக்கும் விதிகள் விஷயத்தில் யோசனை சொல்ல 1920-ம் வருஷத்தில் மற்றுமொருமுறை ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் இங்கிலாந்து சென்றார். அங்கு அப்பொழுதும் அவர் நல்ல வேலை செய்துவிட்டு காங்கிரஸ் வாதிகள் மேற்கொண்டு செய்யவேண்டிய வேலை விஷயமாகத் திட்டம் போட்டுக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்புவதற்குள் இவ்விடத்தில் நிலைமை வெகுவாக மாறுதல் அடைந்துவிட்டது.

## ஒத்துழையாமையும் சட்டமறுப்பு விசாரணைக் கமிட்டியும்

மகாத்மா காந்தியின் முயற்சியால் 1920-ம் வருஷத்தில் கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரஸ் ஒத்துழையாமையைக் கைக்கொண்டு விட்டது. காங்கிரஸ் வகுத்த திட்டத்தில் மூவகைப் பகிஷ்காரங்களும் சேர்ந்திருந்தன. அரசியல் திருத்தம்

அதிருப்திகரமானதாகவும், ஏமாற்றத்தை விளை விப்பதாகவு மிருந்தபோதிலும் அதன்மூலமாக ஏற்படும் அதிகாரங்களையும் உபயோகித்துக் கொள்ளுவதற்காக சட்டசபைகளைக்கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்ற பேரவாவுடையவ ராக அவர் இருந்தபோதிலும் தீவிர காங்கிரஸ் வாதியாதலால் காங்கிரஸின் கட்டளைக்கு விரோ தமாக நடந்துகொள்ள இஷ்டப்படவில்லை. மேலும், இந்திய ராஜீய வாழ்வில் மகாத்மா தலை யிட்டதன் பலனாக தேசத்தில் பொங்கி எழுந்து வழிந்தோடி வந்த தேசீய வெள்ளத்தின் வேகத் தைத் தடுத்துவிடவும் அவர் விரும்பவில்லை. ஆகையால் காங்கிரஸின் பொதுக்காரியதரிசியாக இருந்துகொண்டே தம்மாலியன்றவளவு காங்கிர ஸின் வேலைத் திட்டத்தை தேசம் நிறைவேற்றி வைத்து வரும்படி செய்ய அவர் முயற்சி செய்து வந்தார். ஆனால் மகாத்மா காந்தி தேசத்தின் சில பாகங்களில் ஏற்பட்டுவிட்ட கலகங்கள் காரணமாக ஒத்துழையாமை இயக்கத்தை பார் டோலியில் நிறுத்திவிட்டதைத் தொடர்ந்து கவர்ன்மெண்டாரும் அவரைக் கைது செய்து விட்டனர். அவரை விசாரணை செய்த ஜட் ஜானம் அவருக்கு 6 வருஷ தண்டனை விதித்து விட்டார்.

இதன் பலனாக ஒத்துழையாமை இயக் கம் தேசத்தில் ஓய்ந்துவிட்டதும், காங்கிர

ஸுக்குப் புதிய வழியில் உயிரூட்ட வேண்டு மென்ற எண்ணம் ஸ்ரீமான் படேலுக்கு ஏற்பட லாயிற்று. அதை எவ்விதம் செய்வதென்பதைப் பற்றி விசாரணை செய்வதற்காக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் 1922-ம் வருஷம் ஜூன் மாதம் 6, 7, 8-ந் தேதிகளில் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை அனுசரித்து அதே வருஷம் ஜூன் மாதம் 9-ந்தேதி கூடிய காங் கிரஸ் காரியக்கமிட்டியின் அங்கத்தினர்களைக் கலந்துகொண்டு காங்கிரஸின் ஆக்டிங் தலைவ ரான ஹகிம் அஜ்மால்கான் ஒரு கமிட்டியை நிய மனம் செய்தார். அந்தக் கமிட்டியில் ஸ்ரீமான் விட்டல்பாய் ஜாவேரிபாய் படேலையும் ஒரு அங் கத்தினராக அவர் நியமனம்செய்தார். அக்கமிட்டி யார் நாடெங்கும் சென்று விசாரணை செய்து 1922-ம் வருஷம் அக்டோபர் மாதம் 20-ந்தேதி 36-வது காங்கிரஸின் தலைவரான தேசபந்து சித்தரஞ்சன தாஸுக்குத் தங்களுடைய யாதாஸ் தை அனுப்பி வைத்தார்கள். கமிட்டி அங்கத் தினர்களுக்குள் பின்ன அபிப்பிராய மேற்பட் டது. ஸ்ரீமான்களான ஸி. ராஜகோபாலாச்சாரி யார், டாக்டர் அன்ஸாரி, ஸ்ரீமான் எஸ். கஸ் தூரி ரங்கய்யங்கார் இவர்கள் ஒருவிதமாகவும், ஹகிம் அஜ்மால்கான், பண்டித மோதிலால் நேரு, ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் இவர்கள் வேறு விதமாகவும் அபிப்பிராயந் தெரிவித்தனர். முந்

தின கோஷ்டியினர் சட்டசபைகள் வெறும் மாயைதானென்றும், அவைகளுக்குள் காங்கிரஸ் வாதிகள் நுழைவதால் தேசத்திற்கு எவ்வித அனுகூலத்தையும் செய்துவிட முடியாதென் றும் அபிப்பிராயப்பட் டிருக்கையில் பிந்தின கோஷ்டியினரான ஸ்ரீமான் படேல் உள்ளிட்ட மூவரும் ஒத்துழையாமை தர்மத்தைக் கைவிட்டு விடாமலே கவர்ன்மெண்டைத் தாக்குவதற்கு வசதிகளை அளிக்கக்கூடியவைகளாக இருக்கும் சட்டசபைகளையும் கைப்பற்றிக்கொள்ள வேண்டு மென்று சிபார்சு செய்தனர்.

## சுராஜ்யக் கட்சி ஸ்தாபனம்

தேசபந்து தாஸ் சிறையிலிருந்து வெளி வந்ததும் இதைப் பற்றித் தலைவர்களுக்குள் தீவிரமாக விவாதம் நடைபெற்றது. அவர் ஹகிம் அஜ்மால்கான், மௌலானா அபுல் கலாம் ஆஸாத் முதலியவர்களைக் கலந்து கொண்டு ஒத்துழையாமை தர்மத்தைக் கை விடாததாகிய ஒரு திட்டத்தின்மேல் காங்கிரஸ் வாதிகள் சட்டசபைகளைக் கைப்பற்றுவதையும் காங்கிரஸின் வேலைத் திட்டத்தில் ஒரு அம்ச மாகச் சேர்த்துக்கொள்ளும்படி காங்கிரஸுக்கு சிபார்சு செய்ய வேண்டுமென்று முடிவு செய் தார். அந்த வருஷக் கடைசியில் கயையில் கூடிய காங்கிரஸில் தலைமை வகித்த அவர் அவ்விதத் திட்டத்தை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ள வேண்டு

மென்று மிகுந்த உணர்ச்சியுடன் காங்கிரஸுக்குச் சிபார்சும் செய்தார். ஆனால் வைதீக ஒத்துழையாதார்களான மாறுதல் வேண்டாதவர்கள் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் தலைமையில் ஒன்று சேர்ந்துகொண்டு இந்த யோசனையைப் பலமாக எதிர்த்தனர். இதனால் தேசபந்துவின் உத்தேசம் நிறைவேற முடியாமற் போய்விட்டது. அவருடைய பிரேரணையும் தோல்வியுற்றது. ஆயினும் வெற்றி தோல்விகளில் சந்துஷ்டியோ அதைரியமோ அடையும் சுபாவம் அவருக்குச் சிறிதும் இல்லையாதலாலும், சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டியது தேச நலத்தைப் பெருக்குவதற்கு இன்றியமையாத தென்று அவர் மனப்பூர்வமாகக் கருதியதாலும், காங்கிரஸில் பெரும்பான்மையினராக அக்காலத்தில் இருந்துவந்த மாறுதல்வேண்டாத கோஷ்டியினரைத் தமது வழிக்குத் திருப்புவதற்காக தேசத்தில் பிரசாரத்தை நடத்துவதற்கு காங்கிரஸுக்குள் சுராஜ்யக் கட்சியை ஸ்தாபிதம் செய்தார். அதை அவர் ஸ்தாபிதம் செய்வதற்குஉற்ற துணையாக விருந்து, அந்தக் கட்சிக்கு தேசத்தில் ஆதரவு தேட முயற்சிசெய்த முக்கியஸ்தர்களில் ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் ஒருவராவர்.

## முனிசிபல் சபைகளில் சேவை

இவ்விதம் சட்ட சபைகளைக் கைப்பற்றுவதற்கு ஸ்ரீமான் படேல் சுராஜ்யக் கட்சியின் மூல

மாக முயற்சி செய்து வந்ததுடன் ஸ்தல சுயவாட்சி ஸ்தாபனங்களைக் காங்கிரஸ் மயமாக்குவதிலும் மிகுந்த சிரத்தை காட்டிவந்தார். அவர் பாந்த்ராவில் வசித்து வந்ததாலும், அவர் ஏற்கெனவே மாகாண, மத்தியசட்டசபைகளில் செய்துள்ள அரிய சேவையை அந்த முனிசிபல் எல்லைக்குட்பட்ட ஜனங்கள் நன்கறிந்திருந்ததாலும், அவரை அந்த சபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுத்தார்கள். காலக்கிரமத்தில் அவர் அந்த சபையின் தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பெற்று, அந்த சபையின் நிர்வாகம் மிகுந்த திறமை வாய்ந்ததாக இருக்கும்படி செய்தார். இவ்விதம் அவர் சிறப்பாக நிர்வாகத்தை நடத்தி வந்த விவரம் பம்பாய் நகரிலும் பரவவே, அந் நகரவாசிகள் அவரை அந்நகர கார்ப்பொரேஷன் அங்கத்தினர் பதவிக்கு அபேக்ஷகராக நிற்கும்படி வேண்டிக்கொண்டனர். ஸ்ரீமான் படேல் பொது ஜன அபிப்பிராயத்திற்கு விசேஷ மதிப்புக் கொடுக்கும் சுபாவம் இயற்கையாகவே அமைந்தவராதலால் பம்பாய் நகர வாசிகளின் வேண்டுகோளைத் தள்ளமுடியாமலும், முதலாளிகளுடைய ஆதிக்கத்திற்குட்பட்டுக் கிடந்த அந்த சபையின் நிர்வாகத்தில் ஜனநாயக உணர்ச்சி ஓங்கும்படி செய்ய வேண்டுமென்ற அவாவினுலும், கார்ப்பொரேஷன் அங்கத்தினர் ஸ்தானத்திற்கு அபேக்ஷகராக நின்று வெற்றி பெற்றார்.

அவர் அந்த சபைக்குள் நுழைந்தபொழுது அதில் 6,7 தேசிய வாதிகளே இருந்தனர். இருந்தாலும் தமது விசேஷ முயற்சியினால் வேறு சிலரையும் அவர் தமது பக்கம் இழுத்துக்கொண்டு, கார்ப்பொரேஷன் சபைக்குள் தேசியக் கட்சியொன்றை ஸ்தாபிதம் செய்தார்.

அவர் 1924-ம்வருஷத்தில் அந்த சபையின் அக்கிராசனராகவும் தெரிந்தெடுக்கப் பெற்ருர். அத்துறையில்அவர்செய்த ஊழியமும்,சபைத்தலைவர்கள் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்று அவர் காட்டிய வழியும் எல்லோரையும் பரவசப் படுத்தின. ஆயினும் மேலே சொல்லியிருந்தபடி அந்த சபையானது முதலாளிகள் நிறைந்த சபையாக விருந்தபடியால் பெரிய அதிகாரிகளுக்கு உபசாரப் பத்திரங் கொடுக்கும் உணர்ச்சி அங்கு ஓங்கி யிருந்தது. அந்தக் காலத்தில் ராஜப்பிரதிநிதியாக விருந்த லார்டு ரீடிங்கின் உத்தியோக காலம் முடிந்து அவர் சுதேசத்திற்குத் திரும்பவேண்டிய சமயம் வந்தது. அவருடைய ஆட்சி காலத்தில் தேசமானது பலவிதக் கஷ்டங்களுக்கும் ஆளாக வேண்டியிருந்ததாலும், கி. பு. கோ. 144 முதலிய பிரிவுகளை அவைகள் உத்தேசிக்கப்படாத காரியங்களுக்கும் உபயோகிப்பது மலிந்துவிட்டதாலும், அன்னாருக்கு பம்பாய் கார்ப்பொரேஷன் பிரிவுபசாரப் பத்திரம் படித்துக் கொடுப்பதை அவர் விரும்பவில்லை.

ஆயினும் கார்ப்பொரேஷன் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் லார்டு ரீடிங்குக்குப் பிரிவுபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானம் செய்துவிட்டார்கள். அந்தத் தீர்மானத்தை யொட்டி உபசாரப் பத்திரத்தைப் படித்துக் கொடுக்கவேண்டியது சபைத் தலைவருடைய கடமையாகும். ஆனால் உபசாரப் பத்திரத்தைப் படித்துக்கொடுக்க ஸ்ரீமான் படேலின் மனச்சாட்சி இடங் கொடுக்கவில்லை. ஆகையால், அவர் உபசாரப் பத்திரத்தைத் தாம் படித்துக் கொடுக்க முடியாதென்று சொல்லி விட்டார். இது முதலாளிகள் மிகுந்துள்ள கார்ப்பொரேஷன் சபை சகித்துக்கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. எனவே, அவர்கள் ஸ்ரீமான் படேலின் மீது நம்பிக்கையில்லைத் தீர்மானங் கொண்டுவந்து, அதைத் தங்களுக்கிருந்த ஓட்டுப் பலத்தைக்கொண்டு நிறைவேற்றிவைத்தனர். இதன்மேல் ஸ்ரீமான் படேல் அக்கிராசனர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டபோதிலும் மீண்டும் அப்பதவிக்கு அபேக்ஷகராக நின்று பெரும்பாலான ஓட்டுகளால் தெரிந்தெடுக்கப் பெற்றார். இவ்விதமாக அவர் பம்பாய் முதலாளிகளை மட்டந் தட்டினார்.

## இந்தியா சட்டசபையில் செய்த வேலை

தேசபந்து தாஸ் ஸ்தாபிதம் செய்த சுராஜ்யக் கட்சியில் ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் ஒரு முக்

கிய அங்கத்தினராக இருந்து தேசத்தில் தீவிரமாகப் பிரசாரம் செய்து வந்தாரென்பது மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கட்சியின் கொள்கையை அனுசரித்து அவர் இந்தியா சட்டசபையில் பம்பாய் நகரத்தொகுதி ஸ்தானத்திற்கு 1923-ம் வருஷத்தில் அபேக்ஷகராக நின்றார். அவருக்குப் பலமான போட்டியுமிருந்தது. ஆயினும் அவருடைய தேசாபிமானத்தையும், ஏழைகளிடத்தில் அவருக்குள்ள பரிவையும் பம்பாய் மகாஜனங்கள் நன்கறிந்தவர்களாதலால் அவரை மிகப் பெரும்பான்மையான ஓட்டுகளால் இந்தியா சட்டசபைக்குத் தெரிந்தெடுத்தனர். சுராஜ்யக் கட்சியினர் 1923-ம் வருஷத்திய பொதுத் தேர்தலில் நிறுத்திவைத்த அபேக்ஷகர்களில் பலர் வெற்றிபெற்றிருந்ததால் இந்தியா சட்டசபையில் சுராஜ்யக் கட்சியொன்றை ஸ்தாபிப்பது சாத்தியமாயிற்று. பண்டித மோதிலால் நேரு அந்தக் கட்சியின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். உப தலைவர் பதவிக்கு ஸ்ரீமான் படேலை அக்கட்சி அங்கத்தினர்கள் ஒருமனதாகத் தெரிந்தெடுத்தார்கள். பண்டித மோதிலால் நேருவுக்கு அவர் உற்ற துணையாகவிருந்து, சுராஜ்யக் கட்சியின் வேலைத் திட்டத்தைச் சட்டசபையில் நிறைவேற்றி வைப்பதற்கு மிகுந்த உதவியாக விருந்தார்.

இந்தியா சட்டசபை கூடிய சில தினங்களுக்குள் அரசியல் திருத்த விஷயமாக 1924-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 8-ந் தேதி ஸ்ரீமான் டி. ரங்காச்சாரியார் கொண்டுவந்த தீர்மானத்திற்கு பண்டித மோதிலால் நேரு பிரேரித்த திருத்தத்தை ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் ஆதரித்து, தேசியக் கோரிக்கை யென்னவென்பதைத் திட்டமாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொன்னார். அவர் அப்பொழுது சொல்லியதாவது:—

"கவர்ன்மெண்டின் அந்தரங்க சுத்தியை ஒருவரும் சந்தேகிக்கவில்லை யென்று பொக்கிஷ மெம்பர் சொன்னார். ஆனால் கவர்ன்மெண்டின் அந்தரங்க சுத்தியில் வருஷந் தவறாமல் காங்கிரஸ் சந்தேகத்தைத் தெரிவித்து வருவதை அவர் அறவே மறந்துவிட்டார் போலும்.

"ஸர் பேஸில் பிளாக்கெட்:— இந்த சபை அங்கத்தினர்களில் ஒருவரும் சந்தேகத்தை வெளியிடவில்லையென்றே நான் சொன்னேன்.

ஸ்ரீமான் படேல்:—இங்கு நான் அதில் சந்தேகத்தைத் தெரிவிக்கிறேன் (சிரிப்பு). கவர்ன்மெண்டார் எங்களை நம்பவில்லை. நாங்கள் அவர்களை நம்பவில்லை. ஒரு சவுஜனியமான முடிவுக்கு வருவதற்கு இதுவே தகுந்தகாலம். தொழிற் கட்சியினர் இப்பொழுது இங்கிலாந்தில் அதிகாரப் பதவியை வகித்து வருகிறார்கள். இராணுவம், கடற்படை இவைகளைத்

தவிர மற்ற எல்லா இலாகாக்களிலும் ஜனங்களுக்கு ஜவாப்தாரித்துவத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும், இந்தியா மந்திரி சபையை ஒழித்துவிட வேண்டுமென்றும் 1919-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டு மசோதா காமன்ஸ் சபையில் விவாதத்திலிருந்தபொழுது கர்னல் வெட்ஜ்வுட் திருத்தங்களைப் பிரேரித்திருக்கிறார். இதுதான் நாங்கள் இப்பொழுது விரும்புவது. தொழிற்கட்சியினர் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுவார்களென்றே நான் நம்புகிறேன். மேலும், பத்து வருஷ முடிவில் விசாரணைக் கமிஷனொன்றை நியமிக்க வேண்டுமென்று அரசியல் மசோதாவில் சொல்லியிருந்ததை கர்னல் வெட்ஜ்வுட் ஆட்சேபித்து, நான்கு வருஷங்களுக்குப்பிறகு தொழிற்கட்சியினர் அதிகாரப் பதவியை அடையும் பக்ஷத்தில் அவர்கள் கால கெடு தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இடங்கொடுக்க மாட்டார்களென்று சொல்லியிருக்கிறார். அவர் சொல்லிய ஜோஸியம் பலித்துவிட்டது. தொழிற் கட்சியினரும் நான்கு வருஷங்களில் அதிகாரப் பதவியை அடைந்திருக்கிறார்கள். சீக்கிரத்தில் கமிஷனை நியமிப்பதை சட்டம் தடுத்து விடாதென்று மிஸ்டர் மாண்டேகு சமாதானம் சொல்லியே, கர்னல் வெட்ஜ்வுட்டின் எதிர்ப்பைச் சமாளித்

துக்கொண்டார். தன் தலையிலெழுத பார்லி மெண்டோ அல்லது இந்தியா கவர்ன்மெண்டு சட்டமோதான் அதிகாரமுடைய தென்பதை காங்கிரஸ் எப்பொழுதும் ஒப்புக்கொண்ட தில்லை. இப்பொழுது மாகாணங்களில் சில இந்தியர்களிடத்திலும், மத்திய கவர்ன்மெண் டில் மூன்று இந்தியர்களிடத்திலும் சில இலா காக்களின் நிர்வாகம் ஒப்புவிக்கப்பட் டிருக் கிறது. அவர்கள் இப்பொழுது தங்களிடம் ஒப்புவித்துள்ள இலாகாக்களின் நிர்வாகத்தை நடத்துவதற்குத் தகுதி யுடையவர்களாயின், இதர இலாகாக்களின் நிர்வாகத்தையும் அவர் கள் ஏன் நடத்த முடியாது? மத்திய கவர்ன் மெண்டில் ஸ்ரீமான்களான சாட்டர்ஜி, சர்மா, ஷாபி இவர்கள் தங்களுடைய இலாகாக்களின் நிர்வாகத்தை நடத்தி, பிரிட்டிஷ் வாக்காளர் களுக்கும் ஜவாப்தாரிகளாக இருக்கக் கூடுமா யின், ஸ்தலத்திலுள்ள இந்திய வாக்காளர் களுக்கு அவர்கள் ஏன் ஜவாப்தாரிகளாக இருக்கக் கூடாது? இப்பொழுது இராணுவ மானது ஸிவில் உத்தியோகஸ்தர்களடங்கிய நிர்வாக சபையின் ஆதீனத்திற்குட்பட்டதாக இருந்து வருகிறது. இந்தியர்கள் நிர்வாகத்தை நடத்துகையில் அவர்கள் ஆதிக்கமுடையவர்க ளாக இருக்கிறார்களென்பதற்காக பிரிட்டிஷ் இராணுவ உத்தியோகஸ்தர்களோ அல்லது

பிரிட்டிஷ் துருப்புகளோ அவர்களுக்குக் கீழ்ப் பட்டு வேலை செய்ய மறுப்பார்களென்று நான் நினைக்கவில்லை. இந்தியாவானது ஏகாதிபத்தி யத்திற்காக ஏராளமாகப் பல யுத்தரங்கங்களி லும் தன்னுடைய ரத்தத்தைச் சிந்தியிருக்கை யில் தனக்குத் தொல்லை ஏற்படும்போது இதர குடியேற்றநாடுகள் தனக்கு உதவிசெய்யவேண் டுமென்று எதிர்பார்க்க அதற்கு உரிமையுண்டு.

"ஸர் மால்கம் ஹெயிலி:—நீங்கள் பிரிட்டிஷ் துருப்புகளை நம்பியிருக்க விரும்புகிறீர்களா?

"ஸ்ரீமான் படேல் :— நான் நிச்சயமாக அவர்களுடைய உதவியை நம்பியிருக்கி றேன். நாங்கள் ஏகாதிபத்தியத்தின் ஒரு அங்கந்தான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஒரு அங்கமாகவே நாங்கள் ஜவாப்தாரியான ஆட்சியை அடைய விரும்புகிறோம். இப் பொழுது ஏற்படுத்தியுள்ள சீர்திருத்தம் போலியானது. அதைத் திருத்தவோ, ஒழிக் கவோ நாங்கள் கங்கணங் கட்டிக்கொண்டிருக் கிறோம். கவர்ன்மெண்டார் எங்களுடன் சர்வ கட்சி மகாநாட்டில் ஒத்துழைத்தால் நாங்கள் அதை வரவேற்கத் தயார். ஆனால் மகாத்மா காந்தி, அலி சகோதரர்கள், மௌலானா அபுல் கலாம் ஆஸாத் இவர்கள் இல்லாத சர்வகட்சி மகாநாடு எவ்விதம் சாத்தியமென்பது எனக் குத் தெரியவில்லை."

கடைசியாக ஸ்ரீமான் படேல் இவ்விதம் சொல்லியது ஐரோப்பிய அங்கத்தினர்களுக்கு வெடிகுண்டுபோ லிருந்தது. முடிவாக மிகுந்த விவாதத்திற்குப் பிறகு இந்த தேசீயக்கோரிக்கைத் தீர்மானம் பெரும் பான்மையான ஓட்டுகளால் நிறைவேறியது.

## ஹார்னிமன் பிரஷ்ட உத்தரவை நிவர்த்திக்க முயற்சி

அதே வருஷம் பிப்ரவரி மாதம் 19-ந் தேதி இந்தியாவுக்குத் திரும்பி வருவதில் மிஸ்டர் பி. ஜி. ஹார்னிமனுக்கு கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியுள்ள தடைகளை நிவர்த்தி செய்துவிட வேண்டு மென்று ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் ஒரு தீர்மானத்தை இந்தியா சட்டசபையில் பிரேரணைசெய்தார். அவர் அப்பொழுது சொல்லியதாவது:—

“மிஸ்டர் ஹார்னிமனை கவர்ன்மெண்டார் தேசப்பிரஷ்டம் செய்தபொழுது அதற்குரிய காரணங்களை அவர்கள் உத்தரவில் சொல்லவில்லை. ஆனல் அவரை வெளியேற்றி ஒரு மாதத்திற்குப் பிறகு இந்தியா மந்திரி காமன்ஸ் சபையில் டில்லி கலகத்தின்போது போலீஸார் உபயோகித்த தோட்டாக்கள் விஷயமாக மிஸ்டர் ஹார்னிமனை ஆசிரியராகக் கொண்ட “பம்பாய் கிரானிகிள்” பத்திரிகை

பொய்யான செய்திகளை வெளியிட்டதும், துருப்புகளிடையே அதிருப்தியை உண்டு பண்ணுவதற்காக அவர்களுக்கு அந்தப் பத்திரிகையை இலவசமாக வழங்கியதுமே அவரைத் தேசப்பிரஷ்டம் செய்ததற்கு இரண்டு முக்கிய காரணங்களென்று சொன்னார். ஆனால் 'கிரானிகிள்' நிர்வாக போர்டார் இந்தக் கூற்றுக்களை மறுத்திருக்கின்றனர். மிஸ்டர் மாண்டேகு சொல்லியது பிசகென்பதை நிரூபணம் செய்வதற்கு சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்று மிஸ்டர் ஹார்னிமன் வேண்டிக்கொண்டார். அது அளிக்கப்படவில்லை. அதன்பேரில் மிஸ்டர் ஹார்னிமன் அந்தக் குற்றச் சாட்டை மறுத்து மிஸ்டர் மாண்டேகுவுக்குக் கடிதம் அனுப்பியபோது அதைப்பற்றி விவாதிப்பதற்கு காமன்ஸ் சபை ஏற்ற இடமில்லையென்று அவர் சொல்லிவிட்டார். பிறகு அவரைத் திரும்ப அனுமதிப்பது பம்பாய்க் கவர்ன்மெண்டின் இஷ்டத்தைப் பொறுத்ததென்று அவர் சொல்லியிருக்கிறார். பம்பாயில் பழைய கவர்னர் போய் புதிய கவர்னர் வந்திருக்கிறார். அவர் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு ஜனங்களுடைய நன்மதிப்பைப் பெறக்கூடிய சில காரியங்களையும் செய்திருக்கிறார். மிஸ்டர் ஹார்னிமனுக்கு ஏற்படுத்தியுள்ள தடைகளை நிவர்த்தி செய்துவிட வேண்டு

மென்று தேசம் ஒரு மனதாக அபிப்பிராயப் படுவதால் அவைகளைப் போக்கிவிட வேண்டியது அவசியம்.''

ஸர் மால்கம் ஹெயிலி தீர்மானத்தை எதிர்த்தபோதிலும் முடிவாக அது நிறைவேறி விட்டது. கவர்ன்மெண்டார் ஓட்டுகளை எண்ண வேண்டுமென்றும் கேட்கவில்லை.

## மான்ய மறுப்பு

அதே வருஷம் மார்ச்சு மாதம் 10-ந்தேதி சுங்கவரி இலாகாவுக்காக கவர்ன்மெண்டார் கோரிய மான்யம் முழுவதையும் நிராகரித்து விட வேண்டுமென்று பண்டித மோதிலால் நேரு கொண்டுவந்த பிரேரணையை ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் ஆதரித்துப் பேசுகையில், தேசீய வாதிகளின் முடிவானது அதீதமானதாயினும் கவர்ன்மெண்டாரால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள நிலைமையில் அது நியாயமானதுதானென்றும், ஜனங்கள் ஏழ்மைத்தனத்தினால் தவிக்கிறார்களென்றும், பலர் பிணிவாய்ப்பட்டு மடிந்துவருகிறார்களென்றும், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி நூற்றைம்பது வருஷங்களுக்கு அதிகமாக நடந்துவந்தும் அது இவைகளைத் தடுக்க முடியவில்லையென்றும், அதைக் கவனிக்கையில் இந்த மான்யத்தை அனுமதிப்பதற்கில்லையென்றும் அவர் சொன்னார். மேலும், புதிய சீர்திருத்தத்தின் பலன் ஆயிரக்கணக்கானவர்கள்

சிறையிலிடப்பட் டிருப்பதுதா னென்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். மேலே அவர் பேசிய தாவது:—

"அத்தாக்ஷிகள் மூலமாக நீங்கள் இந்த தேசத்தின் ஆட்சியை நடத்திவரும்படி செய்து விட நாங்கள் விரும்புகிறோம். இந்தியா கவர்ன் மெண்டு சட்டம் வெறும் குப்பைக் காகிதந் தான். அதை அவ்விதமே நீங்கள் பாவிக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். ராஜப் பிரதிநிதி இந்த மான்யத்தை அநு மதித்துவிட்டால் என்ன செய்வதென்று கேட் கலாம். எங்களுடைய கோரிக்கைகளை நீங் கள் அங்கீகரிக்கும்படியாவது, அல்லது பொது இயக்கத்தின் நிர்ப்பந்தத்தினால் நீங்கள் திரும் பும்படியாவது செய்ய நாங்கள் விரும்புகிறோம். அந்தப் பொறுப்பு உங்களுடையதாகவே இருக் கும். ஒவ்வொரு படியிலும் நான் முட்டுக்கட் டை போட விரும்புகிறேன். நான் அவ்விதம் செய்ய பண்டித மோதிலால் நேரு அநுமதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன் (சிரிப்பு). இப் பொழுதும் உங்களுக்கு இன்னொரு சந்தர்ப்ப மளிக்கிறோம். நீங்கள் என்னை நம்பாவிடில் நான் உங்களை நம்பப் போவதில்லை. நீங்கள் உங்களுடைய வழிகளைத் திருத்திக்கொள்ள வேண்டும்; அல்லது நீங்கள் திருந்தும்படி நாங்கள் செய்யவேண்டும். நீங்கள் திருந்தா

விடில் இந்தியாவானது உங்களுக்குப் பஞ்சணை யாக இருக்கப் போவதில்லை".

பண்டித மோதிலால் நேருவின் பிரேரணை அதிகப்படி ஓட்டுகளால் நிறைவேறிவிட்டது. அன்றே வருமான வரி இலாகா மான்யம் முழு வதையும் நிராகரித்துவிட வேண்டுமென்று ஸ்ரீமான் படேல் பிரேரணை செய்தார். முந்தின தீர்மானத்திற்குச் சொல்லிய காரணம் இதற் கும் பொருந்துமென்று அவர் ஒரே வார்த்தை யில் சொல்லிவிட்டார். இந்தப் பிரேரணையும் ஒரு அதிகப்படி ஓட்டால் நிறைவேறிவிட்டது.

## வதந்திகளுக்கு மறுப்பு

தேசியக் கட்சியினரையும் கூட இழுத்துக் கொண்டுபோவதற்காக சில சமயங்களில் பண்டித மோதிலால் நேரு விட்டுக் கொடுக்கவேண்டிய தாயிற்று. இதில் ஸ்ரீமான் படேல் மிகுந்த கசப் புற்றிருப்பதாகவும், சுராஜ்யக் கட்சியில் பிள வேற்பட்டு விட்டதென்றும் சில பத்திரிகைகள் கதை கட்டிவிட்டன. இதை மறுத்து மார்ச்சு மாதம் 15-ந்தேதி ஸ்ரீமான் படேல் ஒரு அறிக் கையை வெளியிட்டார். அதில் அவர் சொல்லிய தாவது :—

"சென்ற திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் நடந்த சம்பவங்களைச் சில பத்திரிகைகள் திரித்துக் கூறியிருக்கின்றன. அதன்மூலமாக சுராஜ்யக் கட்சியினருக்குள் பிளவை உண்டு

பண்ணி விடலாமென்பது கருத்தாயின் அவை களின் எண்ணங்கள் அவலமாகிவிடும். சுராஜ்யக் கட்சிமுழுவதும் ஒருமனதுடன், ஒருநோக்கத் துடன்வேலை செய்துவருகிறது. இந்தியா சட்ட சபையில் நாங்கள் மைனுரிட்டியாக இருந்து வருவது எங்களுடைய துர்ப்பாக்கியமே யன்றி எங்களுடைய குற்றமன்று. சுராஜ்யக் கட்சி யின் கொள்கையையும் வேலைத் திட்டத்தையும் விளக்கி நான் சென்ற திங்கட்கிழமை செய்த பிரசங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் பண்டித மோதிலால் நேரு ஆதரித்திருக்கிருர். எங்கள் இருவருடைய அபிப்பிராயத்தையும் ஸ்ரீமான் சாட்டர்ஜி வேண்டுமென்றே அல்லது தம்மையுமறியாமலோ திரித்துக்கூறியிருக்கிருர். பண்டித மோதிலால் நேரு கூட்டுக்கட்சியாகிய தேசியக்கட்சியின் சார்பாகப் பேசினுர். சுராஜ் யக் கட்சியினரும் சுயேச்சைக் கட்சியினரும் ஒப்புக்கொள்ளக் கூடியதையே அவர் சொன் ஞர். ஆனுல் சுராஜ்யக் கட்சியினர் என்ற தனிப் பட்ட ஹோதாவில் நான் சொல்லியதனைத்தை யும் அவர் ஆதரித்தார். மத்திய மாகாணங்களில் சுராஜ்யக் கட்சியினர் எடுத்துக்கொண்ட காரி யத்தைச் சாதித்துவிட்டதை அவரே சமீபத் தில் பாராட்டியிருக்கிருர். ஆகையால் இங்கு அவருக்கு மெஜாரிட்டி பலமிருக்கும் பக்ஷத் தில் அவர் என்ன செய்வாரென்பதில் எவ்

விதச் சந்தேகமும் இருப்பதற்கில்லை. செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அபிப்பிராயமானது தேசியக் கட்சியினரில் ஒரு சாராரின் அபிப்பிராயமே. அதை அவர் தெளிவாகவும் சொல்லிவிட்டார். சுராஜ்யக்கட்சியினர் இனிச் செய்யக் கூடியதற்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை".

## வரி விதிக்கும் சுதந்திரம்

வரி விதிக்கும் சுதந்திரத்தை அளிக்காத எவ்வித அரசியலும் ஜவாப்தாரியான அரசியலாக முடியாதென்பது ஸ்ரீமான் படேலின் திட்டமான அபிப்பிராயமென்பதை டில்லி காங்கிரஸில் அவர் செய்த பிரசங்கத்திலிருந்து அறிந்துகொண்டிருக்கலாம். எஃகுத் தொழில்காப்பு மசோதாவைப் பரிசீலனை செய்த தனிக் கமிட்டியின் யாதாஸ்துக்கு அவர் எழுதிய குறிப்பிலும் இதைத் தெளிவுபடுத்தினர்:—

கவர்ன்மெண்டார் ஆஜர் செய்யும் வரிப் பிரேரணைகள் இந்தியா சட்டசபையை மிகுந்த சங்கடமான நிலைமையில் வைத்துவிடுகின்றன வென்பதை இந்தியா சட்டசபை, தனிக் கமிட்டி இவைகளின் நடவடிக்கைகளிலிருந்து நான் அறிந்துகொண்டு விட்டேன். அவைகளை அப்படியே ஒப்புக்கொள்ளவோ, அல்லது நிராகரிக்கவோ வேண்டிய நிலைமையில்தான்

இந்தியா சட்டசபை இருந்து வருகிறது. இவ்விதமாக கவர்ன்மெண்டாரின் அங்கீகார மன்னியில் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்தத் தொழிலை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டு இதிலிருந்து கிடைக்கும் லாபத்தை அவர்கள் அடைய வேண்டுமென்று சொல்லப்பட்ட பிரேரணையை அவர்கள் நிராகரித்துவிட்டதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதுவும் கமிட்டித் தலைவருடைய அதிகப்படி ஓட்டால் நிராகரிக்கப்பட்டது. தொழிலாளர்களுடைய நிலைமையில் அபிவிருத்தி ஏற்படுத்த வேண்டுமென்று கமிட்டியில் பெரும்பாலோர் நிறைவேற்றிய பிரேரணையையும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஜாம்ஷெட்பூரிலுள்ள இந்தத் தொழிற்சாலையை அவர்கள் எடுத்துக்கொண்டுவிட வேண்டுமென்ற யோசனையையும் அவர்கள் ஏற்கவில்லை. அந்நிய நாட்டு முதலுக்கு இந்தப் பாதுகாப்பின் பலன் கிடைக்க முடியாமற் செய்துவிட வேண்டுமென்ற பிரேரணையையும் அவர்கள் அங்கீகரிக்கவில்லை. கவர்ன்மெண்டார் அளிக்க உத்தேசித்திருக்கும் பாதுகாப்பு போதியதாக இல்லாதபோதிலும், அவர்களுடைய சம்மதமின்றி தனிக் கமிட்டியோ இந்தியா சட்டசபையோ இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கில்லை. ஆகவே,

ஜவாப்தாரியான ஆட்சிதான் இதற்குப் பரிகாரம்.''

இருந்தாலும் அந்நிய நாட்டு முதல், இந்தப் பாதுகாப்பின் அனுகூலத்தை அடைந்துவிட முடியாமல்தடுத்துவிடுவதற்காக மூலதனத்தில் மூன்றிலிரண்டு பாகம் இந்தியருடையதாக இருக்க வேண்டுமென்பதை பாதுகாப்பு மசோதாவின் 3-வது பிரிவில் சேர்த்துவிட வேண்டுமென்று அவர் பிரேரணை செய்தார். இந்தியர்களுடைய முதலுக்குத்தான் பாதுகாப்பு என்று வரையறுக்காவிடில் பண்டங்களை வாங்குவோர் மிகுந்த பாதகத்திற்காளாக வேண்டி வருமென்று அவர் சொன்னார். இந்தப் பிரேரணையின்மேல் தீவிரமாக விவாதம் நடந்தது. சட்டசபை இந்தப் பிரேரணையை வற்புறுத்தும் பக்ஷத்தில் கவர்ன்மெண்டார் இந்த மசோதாவையே நழுவ விட்டுவிடக் கூடுமென்று பண்டித மோதிலால் நேரு அஞ்சியதால் ஒரு மாற்றுத் திருத்தத்தை அவர் பிரேரித்தார். இதன்மேல் கவர்ன்மெண்டு மெம்பரும் பண்டித நேருவும் கலந்தாலோசித்து ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தனர். இது சபையினரால் அங்கீகரிக்கப்பட்டது. ஆனல் ஸ்ரீமான் படேல் இதற்கு எதிரிடையாக ஓட்டு செய்தார்.

இதர கட்சியினருடைய ஆதரவையும் பெறுவதற்காக பண்டித மோதிலால் நேரு சிறிது விட்டுக்கொடுத்து வருகையில் ஸ்ரீமான் படேல்

பிடிவாதமாக சுராஜ்யக் கட்சியின் கொள்கையை வற்புறுத்தி வந்ததிலிருந்து இந்தக் கட்சிக்குள் பிளவேற்பட்டு விட்டதென்று பலரும் சரடு திரித்துவிட ஆரம்பித்தனர். முன்னேற்பாட்டின் படியே இவ்விதம் நடந்து வருகிறதென்பதை அவர்கள் சிறிதும் அறிந்தார்களில்லை. தேச நலத்தைவிட்டுக் கொடுத்துவிடாமல் இருவரும் அரும்பாடுபட்டு வந்தனர்.

## சட்டசபைத் தலைவர் பதவி.

இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தின் 63-வது பிரிவின்படி இந்தியா சட்டசபையின் முதல் கூட்டத்திலிருந்து நான்கு வருஷங்களுக்குப் பிறகு அந்த சபையினரே தங்களில் ஒருவரை அக்கிராசனராகத் தெரிந்தெடுத்துக் கொள்ள சுதந்திரம் கொடுத்துவிட வேண்டுமாதலால் 1925-ம் வருஷத்தில் அந்த உரிமையை உபயோகித்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் சபைக்கு வாய்த்தது. அப்பொழுது சபையின் உப தலைவராகவிருந்த ஸ்ரீமான் டி. ரங்காச்சாரியார் அந்த ஸ்தானத்திற்கு அபேக்ஷகராக நின்றார். அவரை கவர்ன்மெண்டார் ஆதரித்தனர். அவர் இந்தியா சட்டசபை அங்கத்தினர்களுக்கு விடுத்த சுற்றுக் கடிதமொன்றில் தமக்கு 50 ஓட்டுகள் வரையிலிருந்து வருகின்றனவென்றும், தம்மை அங்கத்தினராகக் கொண்டுள்ள சுயேச்சைக்கட்சி



4. ஸ்ரீமான் வி. ஜே. படேல் 1931-ம் வருஷத்தில் சிகிச்சைக்காக மேனாடுகளுக்குச் சென்றபோது எடுத்தபடம்.

யினரும் தம்மை ஆதரிப்பதென்று தீர்மானம் செய்துவிடும் பக்ஷத்தில் தாம் வெற்றி பெறுவது நிச்சயமென்றும், இந்த உபகாரத்தையாவது தமக்குச் செய்யவேண்டுமென்றும் சொல்லியிருந்தார். இவ்விதம் 50 அங்கத்தினர்களுடைய ஆதரவு இருக்கிறதென்று அவர் சொல்லியது யாருடைய ஆதரவைக் குறித்ததென்பதைச் சொல்லத் தேவையில்லை. சுராஜ்யக் கட்சியினர் ஸ்ரீமான் விட்டல் பாய் படேலை அந்த ஸ்தானத்திற்கு அபேக்ஷகராக நிறுத்தத் தீர்மானித்தார்கள். ஆனால் மற்றொரு அபேக்ஷகரைப்போல் பெரிய இடத்து ஆதரவு தமக்கு இருக்கிறதென்று சொல்லிக் கொள்ளக்கூடிய நிலைமையில் அவர் இல்லை; அந்த ஆதரவை அவர் எதிர்பார்க்கவுமில்லை; அந்த ஆதரவு தமக்குக் கிடைக்காதென்பதும் அவருக்கு நிச்சயமாகத் தெரியும். ஆகையால் ஜனப்பிரதிநிதிகளுடைய ஆதரவு இருந்தாலேயே தாம் அப்பதவிக்கு அபேக்ஷகராக நிற்க விரும்புவதாக அவர் ஒரு சுற்றுக்கடிதத்தை விடுத்தார். அவரை சுராஜ்யக் கட்சியினர் அபேக்ஷகராக நிறுத்தியதிலிருந்து கட்சிக்குள் இருந்து வந்த சங்கடத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு இதை ஒரு நல்ல சந்தர்ப்பமாக பண்டித மோதிலால் நேரு உபயோகித்துக்கொள்ள முன் வந்துவிட்டாரென்று சொல்லியவர்களுமுண்டு. ஆனால் பண்டித மோதிலால் நேருவை அறிந்தவர்கள்

அவ்வித சின்ன புத்தியை அவருக்கு கற்பிக்கச் சிறிதும் விரும்பமாட்டார்கள். இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தின்கீழ் ஏற்பட்டுள்ள அதிகாரங்கள் மிகவும் குறைவானவைகளாக இருந்துவரும் நிலைமையில் அஞ்சா நெஞ்சுடனும் உறுதியுடனுமிருக்கும் ஒருவர் தலைவர் பதவியை வகித்தால் தான் அந்த சொற்ப அதிகாரங்களையும் தேசத்திற்கு அனுகூலமான வழியில் பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாமென்பது அவருடைய துணிவாகையால் தமது கட்சிக்கு ஸ்ரீமான் படேல் பெரிய பலமாக இருக்கக்கூடியவராயினும் அவரை அபேக்ஷகராக நிறுத்திவைக்க பண்டிதர் முன்வந்தார். ஸ்ரீமான் படேலை அறிந்தவர்களுக்கும் அவர் அப்பதவியின் கௌரவத்தையும் சம்பளத்தையும் ஒரு பொருட்டாகக்கருதி அதை அபேக்ஷித்தவரில்லை யென்பது சுலபமாகப் புலப்பட்டிருக்கக் கூடும்.

இரு அபேக்ஷகர்களுக்குள் போராட்டம் பலமாக இருந்தது. யார் முடிவில் ஜயம் பெறுவார்களென்பது முடிவு வரையில் நிச்சயமில்லாமலிருந்தது. கடைசியாக இரண்டு அதிகப்படி ஓட்டுகளால் ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் 1925-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 22-ந் தேதி இந்தியா சட்டசபையின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். சுராஜ்யக் கட்சியினர் எல்லோரும் ஒருமனதாக அவருக்கு ஓட்டு செய்த

போதிலும், இதர கட்சியினருடைய ஆதரவும் அவருக்குக் கிடைத்ததே வெற்றிக்கு முக்கியக் காரணம். ஸ்ரீமான் படேலின் தீவிர தேசாபிமானமும், திறமையும் இதற்குக் காரணங்களென்று சொல்லுவது மிகையாகாது. அவர் பம்பாய் கார்ப்பொரேஷன் தலைவராக விருந்த பொழுது அதன் கமிஷனராகவிருந்த மிஸ்டர் கிளேட்டன் என்னும் ஐரோப்பியரும் தமது செல்வாக்கை ஸ்ரீமான் படேலுக்கு அனுகூலமாக உபயோகித்ததை இங்கு குறிப்பிடாமலிருப்பதற்கில்லை. அவருடைய தேர்தலை அங்கீகரிப்பதாக ராஜப் பிரதிநிதியிடமிருந்து 24-ந் தேதி செய்தி கிடைத்தது.

இந்தியா சட்டசபையின் தலைவர் அப்பதவிக்கேற்பட்டுள்ள உடைகளை அணிந்தே சபைக்குள் வரவேண்டும். ஸ்ரீமான் படேல் கதரே கதிமோட்ச மளிக்கவல்லது என்ற அபிப்பிராயமுடையவ ரல்லராயினும் தம்மளவில் அதனாலான உடைகளையே அணிந்துகொள்ளும் வழக்கமுடையவராக விருந்தார். எனவே, அவர் சட்டசபைத் தலைவர் ஸ்தானத்தை வகிக்க வரும் பொழுது எவ்வித உடைகளை அணிந்து வருவாரென்று பலரும் யோசிக்கலாயினர். "அவர் கதர் வேஷ்டியை உடுத்திக் கொள்ளுகிறவராயிற்றே! இந்தப் பதவிக்குக் கால் சட்டை அணிந்துகொள்ள வேண்டுமே! அவர் என்ன

செய்யக்கூடும்?'' என்று பலரும் பலவாறு எண்ணமிடலாயினர். ஸ்ரீமான் படேலுக்கா இவ்விதநிலைமையில் என்ன செய்வதென்று தெரியாது? ஸ்ரீமதி ஸரோஜினி தேவி ஸிம்லா வந்திருந்தார். அவர் புதிதாக வாங்கி வைத்திருந்த கருப்புக் கதர் பட்டுப் புடவையைக் கொடுத்தார். அதைக் கொண்டு ஸ்ரீமான் படேல் கௌனைத் தயாரித்துக் கொண்டு விட்டார். மாஜி பிரசிடெண்டு கொடுத்த தலையணியை அவர் தரித்துக் கொண்டார். இடுப்பில் எப்பொழுதும் போல் கதர் வேஷ்டியை உடுத்திக்கொண்டார். சபையின் தலைமைப் பதவியை ஏற்கத் தயாராக சட்டசபை மண்டபத்திற்குள் நுழைந்து விட்டார். இவ்விதம் அவர் தமது கொள்கையைக் கைவிடாமலும், உத்தியோகத்தின் சின்னங்களை விட்டுக் கொடாமலுமிருந்தது பலருக்கும் அதிசயத்தை விளைவித்தது.

ஸ்ரீமான் படேல் சட்டசபை மண்டபத்திற்குள் வந்ததும் மாஜி தலைவரான ஸர் பிரெடரிக் ஓயிட் அவரை வரவேற்று அவருக்கு ஆசிகூறினர். அதற்கு ஸ்ரீமான் படேல் பதிலளிக்கையில் ஸர் பிரெடரிக் ஓயிட்டின் சில தீர்ப்புகளே இந்தியா சட்டசபையில் தமக்குக் கவர்ச்சியை உண்டுபண்ணியதற்கு முக்கியக் காரணங்களென்பதை ஒப்புக்கொண்டார். பிறகு கவர்ன்மெண்டின் சார்பாக ஸர் அலெக்ஸாண்டர் முட்டிம

னும், சுராஜ்யக் கட்சியின் சார்பாக பண்டித மோதிலால் நேருவும், சுயேச்சைக் கட்சியின் சார்பாக ஜனுப் எம்.ஏ. ஜின்னுவும், ஐரோப்பியர்கள் சார்பாக கர்னல் ஸர் ஹென்ரி ஸ்டானியனும், திவான் பகதூர் டி. ரங்காச்சாரியாரும் அவருக்கு வாழ்த்துக் கூறினுர்கள். ஸ்ரீமான் ரங்காச்சாரியார் இந்த சமயத்தில் சொல்லிய சில வார்த்தைகள் இங்கு குறிப்பிடத்தக்கன :—

"நம்முள் எவ்வளவு வித்தியாசமிருந்து வருகிறதென்பதை நீங்கள் அறிவீர்கள். நான் உங்களுடன் இந்த ஸ்தானத்திற்குப் போட்டி போட்டேன். நேரிய வழியில் நம்முள் போட்டி நடந்தது. வெற்றி எனதாக விருக்கையில் கடைசி நிமிஷத்தில் அதை நீங்கள் பறித்துக்கொண்டு விட்டீர்கள். இருந்தாலும் மனப்பூர்வமாக உங்களுடைய வெற்றியை நான் பாராட்டுகிறேன். நான் உங்களைச் சிறிது காலமாகவே நேர்முகமாக அறிவேன்; ஆனுல் வெகு காலமாகவே உங்களைப்பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். நீங்கள் பெரிய தேசாபிமானி என்ற பிரக்யாதி பெற்றிருக்கிறீர்கள். தேசாபிமானம் என்ருல் பிறரை வெறுப்ப தென்பது அர்த்தமில்லை. ஒரு பிரபல முனிசிபாலிட்டியின் தலைவராக நீங்கள் இருந்து வெகு திறமையாக அந்த வேலையைச் செய்திருக்கிறீர்கள். பல கட்சியின

ரும் அதைச் சொல்ல நான் கேட்டிருக்கி றேன். இப்பொழுது நீங்கள் அடைந்திருக் கும் இந்தப் பெரிய பதவியையும் நீங்கள் சிறப்பாக வகித்திருப்பீர்க ளென்பதில் எனக் குச் சிறிதும் சந்தேகமில்லை."

ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் வாழ்த்துக்க ளுக்குப் பதிலளிக்கையில் சொல்லியதாவது:—

"சென்ற 15 வருஷங்களாகப் பொது வாழ் வில் ஈடுபட்டிருந்து விட்டு இப்பொழுது இந் தப் பதவியை வகிப்பது பெரிய கஷ்டமாக இருக்குமென்ற அபிப்பிராயமே என் மனதில் ஓங்கியிருக்கிறது. இருந்தாலும் விசேஷ நம் பிக்கையுடனும், இதன் பலாபலன்களை நன் ருக ஆலோசித்துமே நான் இப்பதவியை ஏற் றுக்கொண்டிருக்கிறேன். உத்தியோகஸ்தரல் லாத அங்கத்தினராக விருப்பதால் என்னு டைய தேசத்திற்கு அதிக சேவை செய்ய முடியுமா, அல்லது நீங்கள் அளிக்க முன்வந்த இந்தப் பதவியை யேற்பதால் அதிக சேவை செய்ய முடியுமா வென்பதை நான் தீர்க்கமாக ஆலோசிக்க வேண்டியிருந்தது. நான் அபே க்ஷகனாக நிற்பதென்று முடிவு செய்வதற்கு முன் பல நாட்கள் இதைப்பற்றி யோசித் தேன். கடைசியாக இந்தப் பதவியை வகிப் பதால் தேசத்திற்கு அதிக சேவை செய்யக் கூடுமென்று கருதி இதை ஏற்றேன். சுராஜ்

யக் கட்சியினர் பிறர்மீது தோஷங் கூறுவதையே நோக்கமாகக் கொண்டவர்களென்றும், நாச வேலைக்காரர்களென்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, கௌரவமான சந்தர்ப்பம் வரும்பொழுது நாசத்திற்கு பட்டிலன்றி நிர்மாணத்திற்கும் அவர்களுக்கு விசேஷத் திறமை இருந்து வருகிறதென்பதை இந்த சபைக்கும் உலகிற்கும் அவர்கள் மெய்ப்பிக்க வேண்டியது அவசியமாகி விட்டது. பொறுப்பு ஏற்படுகையில் அதை நிறைவேற்றி வைக்க அவர்கள் தயாராக இருக்கிறார்களென்பதையும் காட்டிக்கொள்ள வேண்டியிருந்தது. புதிய தலைவராகிய என்னுடன் எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டுமென்று ராஜப்பிரதிநிதி வேண்டிக் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். எனக்கு முன்னிருந்தவரும் என்னுடன் ஒத்துழைக்கும்படி உங்களை வேண்டிக்கொண்டார். நானும் அந்த வேண்டுகோளை இப்பொழுது செய்து கொள்ளுகிறேன். அது ஒருதலைப்பட்சமானதாக இருக்கமுடியாதென்பதை நான் அறிவேன். ஒத்துழைப் பென்பது பரஸ்பரமானது. நான் என்னுடன் ஒத்துழைக்கும்படி உத்தியோகஸ்தர்களை வேண்டிக்கொள்ளும்பொழுது அவர்களுடன் நான் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் உங்களுக்கு

எழுதியுள்ள கடிதத்தில் எவ்விதக் கொள்கை யைப் பின்பற்றுவது என்னுடைய உத்தேச மென்பதைத் தெரிவித்திருக்கிறேன். கட்சிப் பிரதி கட்சிகளைச் சிறிதும் கவனியாமல் நிஷ் பக்ஷபாதமாக என்னுடைய கடமையை நான் செய்துவருவேன். இந்த நிமிஷம் முதல் நான் கட்சி மனிதனல்லாதவனாகி விடுகிறேன். நான் இனி ஒரு கட்சியையும் சேர்ந்தவனன்று. நான் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவன். சுராஜ்யக் கட்சியின் தலைவரும் என்னை அவருடைய கட்சி பந்தத்திலிருந்து விடுவித்து விடுவா ரென்று நான் நம்புகிறேன். நான் ராஜப்பிரதி நிதியைக் காணப்போக மாட்டேனென்றும், அதைச் செய்வேனென்றும், இதைச் செய்வே னென்றும் பல இடங்களில் தப்பெண்ணங்க ளும் சந்தேகங்களும் ஏற்பட்டிருக்கின்றன. நான் அவ்விதமொன்றும் செய்யப் போவ தில்லை. என்னுடைய உத்தியோக ஜோலியாக தினம் பன்முறை ராஜப்பிரதிநிதியைப் பேட்டி காண வேண்டியிருந்தாலும் அதற்கு நான் தயாராய் இருக்கிறேன். இதைப்பற்றி ஒருவ ருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை"

ஸ்ரீமான் படேல் அக்கிராசனராக விருந்து, சபையில் அப்போதைக்கப்போது எழுந்த பிரச் சினைகளின் மேல் கொடுத்த தீர்ப்புகள் நிஷ்பக்ஷ பாதமானவைக ளாகவும், நியாய புத்தியுள்ள எல்

லோரும் போற்றத்தக்கனவாகவுமிருந்தன. அவர் நிர்த்தாக்ஷண்யமான வழியில் நடந்துகொண்டு வந்தார். இருந்தாலும் சட்டசபை இலாகா வானது கவர்ன்மெண்டின் ஒரு அங்கமாக இருந்து வந்ததால் அந்த இலாகாவின் காரிய தரிசியிடமிருந்து நிஷ்பக்ஷபாதமான ஆலோசனை களை எதிர்பார்க்கக் கூடிய நிலைமையில் பிரசி டெண்டு இருந்துவரவில்லை. ஆகவே, பிரசி டெண்டுகள் மகாநாட்டில் இந்தியா சட்ட சபைக்குத் தனிக் காரியாலயத்தை ஏற்படுத்தி விட வேண்டுமென்று அவர் யோசனை சொன் ஞர். அந்த மகாநாடும் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அதன்படியே ஒரு தீர்மானமும் செய்தது. அத்தீர்மானத்தை உடனே இந்தியா கவர்ன்மெண்டுக்கு அவர் அனுப்பிவைத்தார்.

1927-28ம் வருஷத்திய வரவு செலவு திட்டம் 1926-ம் வருஷம் மார்ச்சு மாதம் 9ந்தேதி விவா தத்திலிருந்தபோது பண்டித மோதிலால் நேரு சபையில் ஒரு பிரசங்கத்தைச் செய்துவிட்டு தமது கட்சியினருடன் சட்டசபையிலிருந்து வெளியேறி விட்டார். சபையிலுள்ள பெரும் பான்மைக் கட்சியினர் வெளியேறி விட்டதால் சபை பிரதிநிதித்துவத் தன்மையை இழந்து விட்டதென்றும், ஆகையால் கவர்ன்மெண்டார் ஆட்சேபத்திற்குரிய விஷயங்களைச் சபையில் கொண்டுவரக் கூடாதென்றும் ஸ்ரீமான் படேல்

சொல்லி சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விட்டார். இவ்விதம் அவர் சொல்லியது தங்களைக் குறைத்துக் கூறியதாகுமென்று மற்றக் கட்சியினர் நினைத்துக்கொண்டனர். ஸ்ரீமான் படேல்மீது நம்பிக்கையில்லைத் தீர்மானத்தை அவர்கள் கொண்டுவரும்படி செய்யவும் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் சபையில் அங்கத்தினர்கள் குறைவாக விருப்பதைத் தங்களுக்கு அனுகூலமாக கவர்ன்மெண்டார் உபயோகித்துக் கொண்டுவிடக் கூடாதென்பதை எடுத்துக்காட்டுவதே தமது நோக்கமென்பதை ஸ்ரீமான் படேல் தெளிவுபடுத்திவிட்டதால் அந்த முயற்சிகளுக்கு இடமில்லாமற் போய்விட்டது.

## மறுபடியும் தலைவர் பதவி

1926ம் வருஷத்தில் இந்தியா சட்டசபை கலைக்கப்பட்டு, மறுபடியும் பொதுத் தேர்தல் நடத்தி வைக்கப்பட்டது. இந்தத் தடவை ஸ்ரீமான் படேல் கூர்ஜரத் தொகுதியில் அபேக்ஷகராக நின்று போட்டியன்னியில் இந்தியா சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப் பட்டார். பார்லிமெண்டு தலைவரைப் போட்டியன்னியில் தெரிந்தெடுப்பது இங்கிலாந்தில் சம்பிரதாயமாக இருந்துவருகிறது. அந்த சம்பிரதாயத்தை இந்தியாவில் பின்பற்ற முடியாதென்று சொல்லுவதற்கில்லை. ஆகையால் ஸ்ரீமான் படேல் மீண்டும் பிரசிடெண்டாகத் தெரிந் தெடுக்கப் படுவதை கவர்ன்மெண்டு

அங்கத்தினர்களில் சிலர் உள்ளூற விரும்பாத போதிலும், வேறு விதியின்றி அவரே மீண்டும் தேர்ந்தெடுக்கப்படும்படி விட்டுவிட வேண்டியதாயிற்று. ஸ்ரீமான் படேல் 1927-ம் வருஷம் ஜனவரி மாதம் 20-ந்தேதி இந்தியா சட்டசபையின் தலைவராகப் போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் அந்த ஸ்தானத்தை மீண்டும் வகித்ததும் கவர்ன்மெண்டின் சார்பாக அக்காலத்திய உள்நாட்டு அங்கத்தினரான ஸர் அலெக்ஸாண்டர் முட்டிமன் அவரைப் பாராட்டிப் பேசுகையில் சொல்லியதாவது:—

"இது மூன்றாவது சபையாகும். இதனுடைய வாழ்நாளானது இந்தியாவின் அரசியல் சரித்திரத்தில் ஒரு முக்கியமான காலமாக விருக்கும். தேசத்தின் எதிர்கால வாழ்வை முடிவுசெய்ய வேண்டிய காலமாக இது இருக்குமென்றும் சிலருக்குத் தோன்றலாம். இந்த முக்கியமான காலத்தில் இந்த சபையின் தலைமைப் பதவியை வகிப்பது விசேஷப் பொறுப்பை ஏற்படுத்துவதாக இருப்பதோடு, விசேஷ அனுகூலங்களைச் செய்வதற்கு சந்தர்ப்பத்தையும் அளிப்பதாக இருக்கிறது. உங்களுடைய மகத்தான பதவியின், மகத்தான பொறுப்பைச் சிறப்பாக நீங்கள் நிறைவேற்றிவைக்காமலிருந்து விடுவீர்களென்ற பயம் எனக்குச் சிறிதுமில்லை. நீங்கள் இந்த சபையின் தலைவராக மீண்டும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் இந்த சமய

மானது பாராட்டத் தக்கதாக இருப்பதுபோலவே உங்களுடைய உத்தியோக வாழ்வும் வெற்றிகரமானதாக இருக்குமென்று நான் நம்புகிறேன்".

இந்தியா கவர்ன்மெண்டின் உள்நாட்டு அங்கத்தினரிடத்தில் இதிலும் அதிகமான புகழ்ச்சியை ஒருவரும் எதிர் பார்ப்பதற்கில்லை. இதற்கு ஸ்ரீமான் படேல் தக்க பதிலளித்தார்.

## சபையின் சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு

ஸ்ரீமான் படேல் சபையின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எந்த அளவு சிரத்தையுடையவராக இருக்கிறாரென்பதைப் பொது ஜனங்கள் பரீக்ஷிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் சிறிது காலத்திற்குள்ளேயே மறுபடியும் வாய்த்தன. அவர் பதவியேற்று ஐந்து தினங்களுக்குள், அதாவது ஜனவரி மாதம் 25-ந்தேதி, சீனாவில் நடந்துவந்த ராணுவ நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுவதற்காக இந்தியர்களும் சேர்ந்ததொரு படையை அனுப்ப கவர்ன்மெண்டார் சம்மதித்துள்ள அவசர விஷயத்தைப்பற்றி விவாதிப்பதற்காக இந்தியா சட்டசபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் ஒரு அவசரப்பிரேரணையைக் கொண்டுவந்தார். இது அந்நியநாட்டுசம்பந்த விஷயத்தில் தலையிடுவதாக இருக்கிறதென்ற காரணம்பற்றி இது ஒழுங்கு முறைக்கு விரோதமானதென்று ஸர்

அலெக்ஸாண்டர் முட்டிமன் ஆட்சேபித்தார். ஸ்ரீமான் படேல் இதன்மேல் தீர்ப்புக் கூறுகையில் விதிகளின்படியே தாம் நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருப்பதாகவும், பிரிட்டிஷ் அல்லது இந்திய கவர்ன்மெண்டின் அந்நியநாட்டுக் கொள்கையைப்பற்றிய விவாதத்தை இது எழுப்புவதாக இருந்தால் விதிகளின்படி இது ஆட்சேபகரமானதாக இருக்கலாமென்றும், ஆனால் இந்தியா கவர்ன்மெண்டார் துருப்புகளை அனுப்பச் சம்மதித்துள்ள குறுகிய விஷயத்தைப்பற்றியே இது விவாதத்தை எழுப்புவதாக இருப்பதால் விதிகளின்படி தாம் இதை நிராகரிப்பதற்கில்லையென்றும், இந்தியா கவர்ன்மெண்டார் துருப்புகளை அனுப்ப நேர்ந்த காரணங்களைச் சொல்லாமல் விவாதத்திற்கு பதில் சொல்லுவது கஷ்டமாக இருந்தால் அது ஹோம் மெம்பருடைய துர்ப்பாக்கியமென்றும், தாம் அதற்காகப் பிரேரணையை அநுமதிக்க மறுப்பதற்கில்லையென்றும் சொல்லிவிட்டார். முடிவில் ராஜப்பிரதிநிதி தமது விசேஷ அதிகாரத்தை உபயோகித்து இந்தப் பிரேரணையின்மேல் சபையில் விவாதம் நடைபெறமுடியாமல் தடுத்து விட்டாராயினும் ஸ்ரீமான் படேல் தமது கடமையைச் சரியாக நிறைவேற்றிவைத்துவிட்டார்.

அடுத்த பிப்ரவரி மாதம் எட்டாந்தேதியன்று ரயில்வே வரவுசெலவு திட்ட விவாதம் முடிந்து

பொது வரவுசெலவு திட்டம் ஆஜர் செய்யப் படும்வரையில் நாணயச் செலாவணி மசோதா வைப்பற்றிய விவாதத்தை கவர்ன்மெண்டார் ஒத்தி வைத்துக்கொண்டு விட்டதால் ஏற்பட் டுள்ள நிலைமையைப்பற்றி விவாதிக்க ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் மற்றொரு அவசரப்பிரே ரணையைக் கொண்டுவந்தார். இது அவசர விஷய மில்லையென்றும், விதிகளுக்கு விரோதமானதாக இருக்கிறதென்றும் ஸர் அலெக்ஸாண்டர் முட்டி மன் ஆட்சேபித்தார். இதன்மேல் பிரசிடெண்டு தீர்ப்புக் கூறுகையில் அவசரமிருந்தாலன்றி சபை யின் சாதாரண நடைமுறையைப் பாதிக்கக் கூடிய அவசரப்பிரேரணைகளை அனுமதிக்கத் தலை வர் விரும்புவதில்லையென்றும், ஆனால் இந்தமசோ தாவை முன்னதாக எடுத்துக்கொள்ளவேண்டுமா அல்லது ஒத்திவைத்துக்கொள்ள வேண்டுமா வென்பதை முடிவு செய்யவேண்டியது அவசர மென்று நிர்வாக சபையினர் கருதி ஒரு கூட்டம் கூடி இதைப்பற்றி யோசித்திருக்கையில் இது அவசர விஷயமில்லையென்று சொல்ல அவர் களுக்கு வாயில்லையென்றும் சொல்லி பிரே ரணையை அநுமதித்துவிட்டார்.

## பார்லிமெண்டு முறையை அறிய இங்கிலாந்து யாத்திரை

ஸ்ரீமான் படேல் பார்லிமெண்டு முறைகளை அறிந்து வருவதற்காக இங்கிலாந்துக்கும் இதர

தேசங்களுக்கும் சென்றிருந்தார். இங்கிலாந்தில் அதிகாரிகளும் மற்றோரும் அவரை வரவேற்று மிகுந்த உபசாரம் செய்தனர். இந்தியா மந்திரியாக அப்பொழுது இருந்த லார்டு பர்க்கன்ஹெட் ஒரு ஹோட்டலில் ஸ்ரீமான் படேலுக்கு விருந்து நடத்திவைத்தபோது எவ்விதப் பானத்தை அவர் விரும்பக்கூடு மென்று கேட்டார். ஸ்ரீமான் படேல் மதுவிலக்கு வாதியாதலால் சுத்த ஜலமே வேண்டுமென்று கேட்டார். அந்த ஹோட்டலி லுள்ள பானங்களில் அந்த ஒன்றைப்பற்றியே தாம் எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்க முடியாதென்று லார்டு பர்க்கன்ஹெட் சொல்லி சுத்த ஜலத்தைத் தருவித்துக்கொடுத்தார். மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியும் ஸ்ரீமான் படேலுக்குப் பேட்டி யளித்தார். ஸ்ரீமான் படேல் கதருடை யுடனேயே அவரைப் பேட்டிகாணச் சென்றிருந்தார். இவ் விருவரிடத்திலும் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தைக் காலதாமதமின்றியில் வழங்கி விடுவதே இரு தேசங்களும் தொடர்புடையவைகளாக இருக்கும்படி செய்வதற்குச் சிறந்த மார்க்கமென்பதை அவர் வற்புறுத்தினர்.

## மிஸ்டர் தேவலராவின் பரிச்சயம்

இந்த சுற்றுப்பிரயாணத்தின்போது ஸ்ரீமான் படேல் டப்ளினுக்கும் சென்றிருந்ததால் மிஸ்டர் தெவலராவின் பரிச்சயமும் சிநேகமும் அவருக்கு



5. ஸ்ரீமான் படேலின் சிலையை அமெரிக்க சிற்பி தயாரிக்கும் காட்சி.

ஏற்பட ஆரம்பித்தது. பெயிஞ பெயில் கட்சியினர் அவர்களுடைய கொள்கையை மாற்றிக் கொண்டதற்கு ஸ்ரீமான் படேல் சொல்லிய யோசனையே முக்கியக் காரணமாகும். இப்பால் அவ்விருவருக்குள்ளும் சிநேகம் முதிர்ந்து அவர்கள் அத்யந்த நண்பர்களாகிவிட்டனர். ஸ்ரீமான் படேலின் ஆலோசனைகளை மிஸ்டர் தெவலரா அடிக்கடி நாடினர். அவருடைய யோசனையைப் பின்பற்றியதாலேயே அதிகாரப் பதவியை அடைந்து பெயிஞ பெயில் கட்சியின் லட்சியத்தை நிறைவேற்றி வைத்துக்கொள்ளுவது சாத்தியமானதற்காக பஹிரங்கமாக ஸ்ரீமான் படேலுக்கு வந்தனம் செலுத்தவேண்டுமென்ற விருப்பம் மிஸ்டர் தெவலராவுக்குப் பூரணமாக விருந்தது. ஆனல் பல்வேறு காரணங்களால் ஸ்ரீமான் படேல் அதற்கு இஷ்டப்படவில்லை யாதலால் மிஸ்டர் தெவலராவின் அபிலாஷை நிறைவேற முடியாமற் போயிற்று.

ஸ்ரீமான் படேல் ராஜீய விவகாரங்களில் சம்பந்தப்பட முடியாமல் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டு விட்டபோதிலும் தம்மைத் தெரிந்தெடுத்த வாக்காளர்களுடைய க்ஷேமலாபத்தைப் பாதுகாக்கும் பொறுப்பைச் சிறிதும் அலக்ஷியம் செய்துவிடவில்லை. கூர்ஜரப் பிரதேசமானது வெள்ளத்தால் மிகுந்த பாதகமடைந்தபொழுது சட்டசபையில் அவர் ஒரு

தீர்மானங் கொண்டுவரும்படிசெய்து, அது நிறைவேறும்படி செய்ததோடு, தம்மாலியன்ற பொருளுதவியையும் கஷ்டப்படுவோருக்குச் செய்து வந்தார். அவருடைய வேண்டுகோளின் பேரில் லார்டு இர்வினும் ஸ்தலத்திற்குச்சென்று பார்வையிட்டு ஜனங்களுக்கு அநுதாப வார்த்தைகள் கூறியதோடு அவர்களுக்கு தகுந்த சகாயத்தை பம்பாய் கவர்ன்மெண்டார் அளிக்கும்படியும் செய்தார். பர்டோலி வாசிகள் சக்தியின்மை காரணமாக வரிகொடாமலிருக்கவேண்டிவந்த பொழுது அவர்களுடைய நிலைமையில் ஸ்ரீமான் படேல் அநுதாபங்காட்டி அவர்களுடைய கட்சியின் நியாயத்தை லார்டு இர்வினிடம் வற்புறுத்தியதன் பலனாக அவர்களுடைய கஷ்டத்திற்குப் பரிகாரமேற்படுவது சாத்தியமாயிற்று.

## ரிசர்வ் பாங்கி மசோதா

ரிசர்வ் பாங்கி மசோதா விஷயத்தில் ஸ்ரீமான் படேல் சொல்லிய தீர்ப்பானது கவர்ன்மெண்டார் திகைக்கும்படி செய்துவிட்டது. 1927-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் கொண்டுவந்திருந்த ரிசர்வ்பாங்கி மசோதாவில் விசேஷ மாறுதல்களைச் செய்தபிறகு 1928-ம் வருஷத்தில் அதே மசோதாவைத் திரும்ப பொக்கிஷ மெம்பர் கொண்டுவந்த பொழுது ஒரு மசோதாவில் விசேஷ மாறுதல்களைச் செய்தபிறகு அதையே திரும்பக் கொண்டுவருவது பார்லிமெண்டு

முறைக்கு விரோதமானதென்றும், பழைய மசோதாவை வாபீஸ் வாங்கிக்கொண்டே புதிய மசோதாவைக் கொண்டுவரவேண்டுமென்றும் அவர் சொன்னார். பழைய மசோதாவை வாபீஸ் வாங்கிக்கொள்ளுவதற்கு சபையின் அனுமதி கிடைக்குமென்ற நம்பிக்கை கவர்ன்மெண்டுக்கு இல்லாமலிருந்ததால் அவ்விதப் பிரேரணையைக் கொண்டுவர அவர்கள் இஷ்டப் படவில்லை. எனவே, புதிய மசோதாவானது ஒழுங்கு முறைக்கு விரோதமானதென்று ஸ்ரீமான் படேல் சொல்லி அதை நிராகரித்துவிட்டார். கவர்ன்மெண்டாருடைய செய்கையால் ரிசர்வ் பாங்கி ஏற்பாடு நிறைவேற முடியாமற் போய்விட்டது.

## சட்டசபைக் கார்யாலயப் பிரிவினை

இந்தியா சட்டசபைக்குத் தனிக் கார்யாலயம் ஏற்படுத்திவைக்கவேண்டுமென்று சட்டசபைத் தலைவர்கள் மகாநாடு 1926-ம்வருஷ ஆரம்பத்தில் செய்த தீர்மானத்தை இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஸ்ரீமான் படேல் அனுப்பியிருந்ததைப் பற்றி மேலே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சட்ட இலாகாவின் காரியதரிசியாகவிருந்த மிஸ்டர் கிரேஹாம் இதை விரும்பவில்லை. எனவே, அவர் பல ஆக்ஷேபங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். கவர்ன்மெண்டுக்கு சட்டசபைத் தலைவர்கள் மகாநாட்டுத் தீர்மானத்தை அனுப்பி

ஒருவருஷ காலத்திற்கு அதிகமாகியும் எவ்விதப் பதிலும் அவர்களிடமிருந்து கிடைக்காததால் 1927-ம்வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஸ்ரீமான் படேல் ஒரு திட்டத்தைத் தயாரித்தனுப்பினர். அதை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்காமல் பல ஆட்சேபங்களைத் தெரிவித்தனர். கடைசியாக 1928-ம்வருஷம் செப்டம்பர் மாதம் 5-ந்தேதி தமது முயற்சியின் விவரங்களையும் கவர்ன்மெண் டாரின் ஆட்சேபங்களையும் சபையில் அவர் அறி வித்து, எவ்விதம் தமது திட்டம் நேர்மையான தென்பதையும், கவர்ன்மெண்டாரின் ஆட்சேபம் ஊத்துக்கு நிற்கக்கூடாத தென்பதையும் அவர் எடுத்துக் காட்டினர். இதன்பேரில் ஹோம் மெம் பர் கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்தை மறு தினம் அறிவிப்பதாகத் தெரிவித்துக் கொண் டார். அவருடைய பதிலானது திருப்திகரமான தாக இல்லாதபோதிலும், ஸ்ரீமான் படேல் ராஜப் பிரதிநிதியான லார்டு இர்வினைக்கண்டு பேசியதா லும், அவருடைய தலையீட்டினுலும் இந்தப் பிரச்னை திருப்திகரமாகத் தீர்ந்து, இந்தியாசட்ட சபைக்குத் தனிக் கார்யாலயம் ஏற்படுவது சாத் தியமாயிற்று. இதன் பெருமையில் ஒரு பாகத் திற்கு லார்டு இர்வின் உரியராயினும், ஸ்ரீமான் படேலின் விடாமுயற்சியும் ஊக்கமுமே இந்தியா சட்ட சபைக்குத் தனிக்கார்யாலயம் ஏற்பட் டதற்கு முக்கியக் காரணமாகும்.

இதுபோன்ற தகராறுகள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டு வந்ததால் கவர்ன்மெண்டு அங்கத்தினர்களில் சிலருக்கும் ஸ்ரீமான் படேலுக்கும் கசப்பு அதிகரித்துவிட்டது. அது பல வழிகளில் உருப்பெறவும் ஆரம்பித்துவிட்டது. ஸ்ரீமான் படேலைத் தாக்க இரண்டு பத்திரிகைகளின் பிரதிநிதிகள் கருவிகளாக உபயோகிக்கப் பட்டனர். இவ்விதம் உணர்ச்சிமுற்றி வெடித்துப் போய்விடும் நிலைமை ஏற்பட்டுவிட்டதால் லார்டு இர்வின் மறுபடியும் தலையிட்டு சபையின் பிரதான புருஷரான கனம் ஜேம்ஸ் கிரார் வருத்தமுணர்த்துவிக்கும்படி செய்தார். ஸ்ரீமான் படேல் கண்ணிய புருஷராதலால் அதை ஏற்றுக்கொண்டு, 1928-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 24-ந்தேதி சபையிலும் அதை அறிவித்ததுடன், சென்றுபோனதை எல்லோரும் மறந்துவிடும்படியும் யாவரையும் வேண்டிக்கொண்டார்.

## பொதுஜனப் பாதுகாப்பு மசோதா

இந்தியா சட்டசபையின் அக்கிராஸனாதிபதி பதவியில் ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் இருந்துவந்த காலத்தில் ஏற்பட்ட பல தகராறுகளில் பொதுஜன சாவதானத்தைப்பற்றிய மசோதாவைப் பொறுத்த தகராறு அதிக முக்கியமானதாகும். இது பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த பிரிட்டிஷ் அல்லது சமஸ்தானப் பிரஜைகளல்லாதவர்களை இந்தியாவிலிருந்துவெளியேற்றி

விடுவதற்கு கவர்ன்மெண்டாருக்கு அதிகாரத்தை ஏற்படுத்திகொள்ள உத்தேசிக்கப்பட்டது. இந்த மசோதாவைத் தனிக் கமிட்டி பரிசீலனை செய்து யாதாஸ்தை அனுப்பிவைத்திருந்தது. இதை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டின் ஹோம் மெம்பரான ஸர் ஜேம்ஸ் கிரீரார் 1928ம் வருஷம் செப்டம்பர் மாதம் 24ந்தேதி இந்தியா சட்டசபையில் பிரேரணை செய்தார். மேலெழுந்தவாரியாகக் கவனிக்கையில் பொதுவுடைமைக் கட்சியினரின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக இது உத்தேசிக்கப்பட்டதாகக் காணப்பட்ட போதிலும், பொது ஜனங்களுடைய சுதந்திரத்தை கவர்ன்மெண்டார் பறிமுதல் செய்துவிடுவதற்கு அவர்களுக்கு அதிகாரத்தை ஏற்படுத்திவிடுமென்று ஜனப்பிரதிநிதிகள் கருதியதால், அவர்கள் முழுமூச்சாக இந்தப் பிரேரணையை எதிர்க்க ஆரம்பித்தனர். தொடர்ச்சியாக நான்கு தினங்கள்வரை இதன்மேல் விவாதம் நடந்தது. ஆயினும் இந்தக் கூட்டத்தில் இந்த மசோதாவை நிறைவேற்றிவைத்துக் கொள்ளும் நோக்கத்தை கவர்ன்மெண்டார் பூர்த்திசெய்து வைத்துக் கொள்ள முடியவில்லை. ஆகையால் அடுத்த கூட்டத்திற்கு இந்த மசோதா ஒத்தி வைத்துக்கொள்ளப்பட்டது. 1929ம் வருஷம் ஜனவரி மாதக்கூட்டத்தில் இந்த மசோதாவைத் திருத்தி கவர்ன்

மெண்டார் மறுபடியும் கொண்டுவந்தனர். இதன் மேல் மேற்கொண்டும் சபையில் உக்ரமான விவாதம் நடந்தது. இந்த சமயத்தில் இந்த மசோதாவைப்பற்றி விவாதிப்பது ஒழுங்குமுறைக்கு விரோதமானதென்ற ஆட்சேபத்தை பண்டித மோதிலால் நேரு எழுப்பினர். வக்கீல் தொழிலில் அவர் வல்லுனராதலால் அந்த ஆட்சேபத்திற்குத் தகுந்த ஆதாரங்களை எடுத்துக்காட்டினர். ஸர் ஜேம்ஸ் கிரீரர் இதற்குப் பதில் சொல்ல வேண்டியதாகிவிட்டது. தருக்க முறையில் அவர் தேர்ந்தவரில்லை; சட்டப் பயிற்சியும் அவருக்கு அதிக மில்லையாதலால் பண்டிதரின் வாதத்தில் எவ்வித ஊனமிருந்து வருகிறதென்று அவரால் கண்டறியக்கூடவில்லை. ஆகவே, பதில் சொல்லுவதுபோல் ஏதோ சொன்னர். இந்த சம்பவங்கள் நடந்துகொண் டிருக்கையில் சட்ட மெம்பரான ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் நித்திரையிலாழ்ந்திருந்தார். இதுபோன்ற நிலைமைகளேற்படுகையில் அவரே எழுந்து சட்ட நிலைமையை விளக்க வேண்டும். ஸ்ரீமான் படேல் எழுந்தார்; கனம் சட்ட மெம்பர் ஆழ்ந்த சிந்தனையி லாழ்ந்திருப்பதாகத் தோன்றுவதால், விவாதத்திலிருக்கும் விஷயத்தின் சட்ட அம்சத்தை அவர் விளக்குவாரென்று எதிர் பார்ப்பதாகச் சொன்னர். ஸ்ரீமான் தாஸ் அகப்பட்டுக்கொண்டுவிட்டார். சபையில் எதைப்பற்றி விவாதம் நடந்ததென்

பதும் அவருக்குத் தெரியவில்லை. அவர் எழுந்து இதைப்பற்றி ஆலோசிப்பதற்காக அவகாசம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதன்பேரில் கூட்டக் கடைசியில் இந்த விஷயத்தை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாமென்று ஸ்ரீமான் படேல் அறிவித்தார். கடைசியாக மீரட்டில் விசாரணையிலிருந்து வரும் சதியாலோசனை வழக்கில் இதே விஷயம் முடிவு செய்யப் படவேண்டியதாக இருக்கையில், இந்த மசோதாவை இப்பொழுது விவாதிப்பது ஒழுங்கு முறைக்கு விரோதமானதென்று ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் தீர்ப்பு சொல்லி விட்டார். சட்ட சபையின் அதிகாரங்களையும் சுதந்திரங்களையும் துஷ்பிரயோகம் செய்விக்கக் கூடியதாக இருக்கும் ஒரு மசோதாவை நிராகரிக்க சட்ட சபையின் தலைவருக்கு இயற்கையாகவே சுதந்திரமுண்டென்றும் அவர் இந்தத் தீர்ப்பில் சொல்லிவிட்டார். இந்த முடிவானது கவர்ன்மெண்டாருக்கு மிகுந்த ஏமாற்றத்தை விளைவித்ததில் அதிசயமொன்றுமில்லை. லார்டு இர்வின் இந்தியா சட்டசபையின் இந்தக் கூட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருகையில் செய்த பிரசங்கத்தில் ஸ்ரீமான் படேலின் இந்தத் தீர்ப்பைப்பற்றி பிரஸ்தாபித்து, அது நேர்மையற்றதென்ற அர்த்தம் தொனிப்பதற்கு இடம் கொடுக்கக்கூடிய வார்த்தைகளை உபயோ

கித்தார். பிரசிடெண்டு ஸ்தானத்தின் கௌரவத்தையும் மதிப்பையும் காப்பாற்றுவதில் ஸ்ரீமான் படேல் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறவராதலால் சட்டசபையில் தம் முன்னிலையிலேயே தம்முடைய தீர்ப்பை ராஜப் பிரதிநிதி தாக்கிப்பேசியது அக்கிராசனாதிபதி ஸ்தானத்தை அகௌரவித்த தாகுமென்று அவர் அபிப்பிராயப் பட்டார். எனவே, அதை ஆட்சேபித்து லார்டு இர்வினுக்கு 1929ம் வருஷம் மே மாதம் 8ந்தேதி அவர் ஒரு கடிதம் எழுதினார்:—

"சில தினங்கள் முன் இரண்டு சபைகளின் கலப்புக்கூட்டத்தில் நீங்கள் செய்த பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தபோது எனக்கு மிகுந்த துக்கமும், ஆச்சரியமும், வருத்தமும் ஏற்பட்டன. அங்கத்தினர்கள்முன் பேசுவதற்காக இரண்டு சபைகளும் சேர்ந்த கலப்புக் கூட்டத்தைக் கூட்டிவைக்க அரசியல் சட்டத்தின்படி உங்களுக்கு அதிகாரமுண்டு. ஆனால் அக்கிராசனரின் தீர்ப்பைக் கண்டிப்பதற்கு இந்த சந்தர்ப்பத்தை நீங்கள் உபயோகித்துக் கொண்டது எங்குமில்லாத புதுமையாகவும், சட்டசபை, அக்கிராசனர் இவர்களுடைய கௌரவத்தைப் பாதிப்பதாகவும் இருப்பதோடு அரசியல் முறைக்கும் சம்பிரதாயத்திற்கும் விரோதமானதா யிருக்கிறது. இத்தியாதி காரணங்களால் நீங்கள் செய்த காரியத்தை

நான் பொறுத்துக்கொண்டு இருந்து விடுவதற்கில்லை. இவ்விதம் நீங்கள் செய்ததை இப்பொழுதே ஆட்சேபிக்காமல் விட்டுவிட்டால் அது கெட்ட வழிகாட்டி யாகிவிடுவதோடு உங்களுக்குப்பின் வருகிறவர்களும் அவ்விதம் செய்வதற்கு இடங்கொடுத்துவிடு மாதலால், அக்கிராசனராகிய நான் இதைப் பலமாக ஆட்சேபிக்க வேண்டியிருக்கிறது. ........ இதற்குமுன் அரசின் பிரதிநிதியான எவரும் நீங்கள் செய்ததுபோல் பார்லிமெண்டின் தலைவருடைய தீர்ப்பை இவ்விதம் கண்டித்ததில்லை.''

இதற்கு ராஜப் பிரதிநிதியின் சார்பாக அவருடைய அந்தரங்கக் காரியதரிசி மே மாதம் 15ந் தேதி எழுதிய பதிலில் அக்கிராசனரின் தீர்ப்பை ஆட்சேபிப்பதாவது அல்லது அவரைக் கண்டிப்பதாவது ராஜப்பிரதிநிதியின் உத்தேசமில்லையென்றும், அந்தப் பிரசங்கம் செய்யப்பட்ட நிலைமையில் அவ்வித அர்த்தத்திற்கு அது இடங்கொடுக்கக் கூடுமாயினும் சட்டசபைக்குள் அக்கிராசனரே சர்வாதிகாரி யென்பதை அவர் நன்குணர்ந்திருக்கிறா ரென்றும், அந்தத் தீர்ப்பினால் ஏற்பட்டுவிட்ட நிலைமையைக் குறிப்பிட்டு அதைச் சமாளித்துக் கொள்ளுவதற்காக எவ்வித நடவடிக்கையை எடுத்துக் கொள்ளவேண்டி வந்துவிட்டதென்பதைக் குறிப்பிடுவதே அவருடைய

உத்தேசமென்றும், சபையின் கௌரவத்தையும் தலைவரின் அதிகாரத்தையும் பாதுகாப்பதில் அவருக்குப் பூரண சிரத்தை இருந்து வருகிற தென்றும், காலக்கிரமத்தில் நேர்மையான சம்பிர தாயங்கள் ஏற்பட்டுவிடுமென்று அவர் எதிர் பார்ப்பதாகவும், அவ்விதம் அவைகள் ஏற்படும் படி செய்யும் விஷயத்தில் தலைவர் ஒத்துழைப் பாரென்று அவர் நம்புவதாகவும் சொல்லியிருந் தார்.

இந்த கடிதப்போக்கு வரத்துகளின் விவரங் களை 1929ம் வருஷம் செப்டம்பர் மாதம் 2ந்தேதி ஸ்ரீமான் விட்டல் பாய் படேல் இந்தியா சட்ட சபையில் அறிவித்து, ராஜப்பிரதிநிதியின் பதிலா னது திருப்திகரமானதாகவும், சபையின் கௌர வத்தையும், தலைவரின் அதிகாரத்தையும் பாது காப்பதாகவும் இருக்கிறதென்றும், இந்த விஷயத் தை இதனுடன் நழுவவிட்டு விடலாமென்றும் தெரிவித்தார்.

## சபையில் வெடி குண்டு

1929ம் வருஷம் ஏப்ரல் மாதம் 8ந்தேதி ஸ்ரீமான் படேலின் தலைமையில் இந்தியா சட்ட சபையின் கூட்டம் நடந்துகொண் டிருக்கையில் பார்வையாளர்கள் காலரியிலிருந்து இரண்டு வெடி குண்டுகள் சபையில் எறியப்பட்டன. இது சபையில் மிகுந்த திகிலையும் பரபரப்பையும் விளைவித்தது. நல்லவேளையாக ஒருவருக்கும்

காயமேற்படவில்லை. வெடிகுண்டுகளை எறிந்தவர்களை அந்த சமயத்திலேயே கைது செய்து விட்டார்கள். அவர்கள்மீது காலக்கிரமத்தில் வழக்குத் தொடரப்பட்டு அவர்களுக்குத் தகுந்த சிக்ஷையும் விதிக்கப் பட்டது. இந்தக் குற்றத்தை ஸ்ரீமான் படேல் அழுத்தமாகக் கண்டித்தார். ஆனால்இந்த சம்பவத்தின்பலனாக சபையின்காவல் விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்கும் சபையின் தலைவரான ஸ்ரீமான் படேலுக்கும் தகராறு ஏற்பட்டது. டில்லி, ஸிம்லா போலீஸ் சூப்பரின்டெண்டென்டுகள் சொல்லியுள்ள யோசனைகளையும் தாம் சமீபத்தில் செய்துள்ள ஏற்பாடுகளையும் பரிசிலனை செய்து பார்வையாளர்களுக்கு அனுமதிச் சீட்டுகள் கொடுக்கும் விஷயத்தில் எவ்வித முறையைப் பின்பற்றுவது பலன் தரத்தக்கதாக இருக்கு மென்று யோசனை சொல்லவும், காவல் விஷயத்தில் இந்தியா சட்டசபை தனது சொந்த உத்தியோகஸ்தர்களை நியமித்துக் கொள்ளும் காலம் வந்துவிட்டதா வென்பதை அறிவிக்கவும் ஹோம் மெம்பர் தலைமையில் ஒரு கமிட்டியை செப்டம்பர் மாதம் 3ந்தேதி பிரசிடெண்டு படேல் நியமனம் செய்தார். அக்டோபர் மாதம் 15ந்தேதிக்குள் கமிட்டியார் யாதாஸ்தை அனுப்பி வைக்கவேண்டுமென்றும் ஆக்ஞை யிடப்பட்டது. கமிட்டியாருடைய யாதாஸ்தும் குறித்தகாலத்தில் கிடைத்தது. ஆனால் அதன்மேல் எடுத்துக்

கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் விஷயத்தில் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் ஸ்ரீமான் படேலுக்கும் தகராறு ஏற்பட்டது. 1930ம் வருஷம் ஜனவரி மாதம் 20ந்தேதி இந்தியா சட்டசபை கூடியதும் இது சம்பந்தமான விஷயங்களை அவர் சபையில் அறிவித்தார். சபைத் தலைவரையும் இதர அங்கத்தினர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு தங்களுடையதாதலால் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிற நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவும், தங்களுக்கு அவசியமெனத் தோன்றுமளவு காவலாளிகளை நிறுத்தி வைக்கவும் தங்களுக்கு அதிகாரமுண்டென்று டில்லி சீப் கமிஷனரும் கவர்ன்மெண்டாரும் அபிப்பிராயப்படுவதாகவும், ஆனால் சட்டசபை மண்டபத்திற்குள் தாமே சர்வாதிகாரி யென்றும் தம்முடைய அங்கீகாரத்தைப் பெறாத காரியத்தைச் செய்யமுடியாதென்றும் தாம் அபிப்பிராயப் படுவதாகவும், முதல் நாளிரவு சீப் கமிஷனர் அவர் பிறப்பித்திருக்கும் உத்தரவுகளின் விவரங்களைக் குறிப்பிடும் கடிதமொன்றைத் தமக்கு அனுப்பியதாகவும், அது அந்தரங்கமானதென்று குறிப்பிடப்பட்டிருப்பதால் அதைத் தாம் சபையில் படிப்பதற்கில்லை யென்றும், அதே காலத்தில் ஹோம் மெம்பரிடமிருந்தும் தமக்கு ஒரு கடிதம் கிடைத்ததென்றும், போதிய பாதுகாப்பை ஏற்படுத்தும் பொறுப்பு தங்களுடையதாகவே இருக்கவேண்டு

மென்று சபையுடன் கூடிய கவர்னர் ஜனரல் முடிவு செய்திருப்பதால் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி சீப் கமிஷனருக்கு ஆக்ஞாபிக்க பட்டிருக்கிறதென்று அதில் கண்டிருந்ததென்றும், சீப் கமிஷனர் பிறப்பித்துள்ள உத்தரவுகளையெல்லாம் படிக்கையில் சபையின் மண்டபத்திற்குள் தலைவரின் அதிகாரத்திற்குப் பதிலாக கவர்ன்மெண்டுக்கு ஆதிக்கம் ஏற்பட்டு விடுவதாக இருக்கிறதென்று தமக்குத் தோன்றுகிறதென்றும், இவ்வித நிலைமையில் பத்திரிகை நிருபர்கள் தவிர மற்றப்பார்வையாளர்கள் எல்லோரையும் வெளியேற்றி விடுவதைத் தவிர தமக்கு வேறு வழியில்லையென்றும், இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுடைய முடிவைப் புனராலோசனை செய்வார்களென்று தாம் கருதுவதாகவும், தாமும் மேற்கொண்டு என்ன செய்வதென்பதை ஆலோசிக்கப் போவதாகவும் அறிவித்தார். இதன் மேல் ஹோம் மெம்பர் ஏதோ சொல்ல எழுந்தார்.

ஸ்ரீமான் படேல்:— என் உத்தரவை முதலில் நிறைவேற்றிவைக்க வேண்டும்.

ஸர் ஜேம்ஸ் கிரீரார்:— தாங்கள் அறிவித்த முடிவைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பத்திரிகை நிருபர்கள் காலரி தவிர மற்றவை காலி செய்யப்பட்டன. போலீசாரும் வெளியேற்றப்பட்டனர்.)

டாக்டர் ஏ. சுஹ்ரவர்தி:— அனுமதிச்சீட்டுகள் இல்லாமலே இந்த சபைக்கு வருவதற்கு உரிமையுள்ள ராஜாங்க சபை அங்கத்தினர்கள் விஷயத்திலும் உங்களுடைய உத்தரவு பிரயோகமுள்ளதாகுமா ?

தலைவர்:— ஆம்.

ஸர் ஜேம்ஸ் கிரீரார்:— உங்களுடைய உத்தரவை நான் மதிக்கிறேனாயினும், இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

தலைவர்:— அங்கத்தினர் முதலில் உட்காரவேண்டும். அவர் எதைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறார் ?

ஸர் ஜேம்ஸ் கிரீரார்:— நீங்கள் இப்பொழுது வெளியிட்ட முடிவைப்பற்றி.

தலைவர்:—நான் உத்தரவு பிறப்பித்து விட்டேன். அதை ஒருவரும் ஆட்சேபிக்க முடியாது.

இந்தத் தகராறும் முற்றி இந்தியா சட்டசபை காலரிகளுக்கு ஒருவரும் அனுமதிக்கப் படாமலிருந்ததால் லார்டு இர்வின் மறுபடியும் தலையிட்டு சமாதானத்தை ஏற்படுத்திவைத்தார். பாதுகாப்புக்குக் குறைவில்லாமலும் இந்தியா சட்டசபைத் தலைவரின் அதிகாரத்தைப் பாதிக்காமலும் இந்த பிரச்சினையைத் தீர்த்து விடக்கூடிய யோசனைகளைக் குறிப்பிடும் கடிதத்தை 1930ம் வருஷம் பிப்ரவரி மீ 19ந் தேதி அவர் பிரசிடெண்டு



6. ஜெர்மனியில் போலீஸ்காரருடன்
ஸ்ரீமான் படேல் சம்பாஷிக்கும் காட்சி

படேலுக்கு அனுப்பினார். இந்தக் கடிதத்தை ஸ்ரீமான் படேல் 20ந் தேதி நடந்த சபையின் கூட்டத்தில் படித்து அதில் அடங்கியுள்ள ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளுவதாக அறிவித்தார். இவ்விதமாக இந்தத் தகராறும் தீர்ந்தது. ஸ்ரீமான் படேல் சட்டசபைத் தலைவருடைய கௌரவத்தையும் அதிகாரத்தையும் ஸ்தாபித்துக் கொண்டார்.

## சட்டசபையி லிருப்பதேன்?

காங்கிரஸ் வாதிகள் சட்ட சபைகளைப் பஹிஷ்கரித் திருக்கையில், அதைச் சேர்ந்தவரான ஸ்ரீமான் படேல் இந்தியா சட்டசபையின் அக்கிராசனர் பதவியில் இருந்துவருவதைப்பற்றிப் பலரும் குறைகூறி வந்தனர். ஸ்ரீமான் படேல் தமது நிலைமை யென்ன வென்பதை 1930-ம் ஹு ஜனவரி மாதம் 21-ந் தேதி இந்தியா சட்டசபையில் விவரித்தார். அவர் சொல்லியதாவது:-

"இந்த சபையில் காங்கிரஸ் வாதிகள் இல்லாமல் இருப்பது தேச நன்மைக்குகந்த வழியில் என்னுடைய கடமையைச் செலுத்துவதற்குப் பெரிய இடையூறாக இருக்குமென்று சொல்லப்படுகிறது. இந்த சபையிலுள்ள இதர கட்சியினரும், காங்கிரஸ் வாதிகளுக்குப் பதிலிகளாக வருகிறவர்களும் முன்போலவே எனக்குப் பூரண ஆதரவை அளித்து வரமாட்டார்களென்று நான் நினைப்

பதற்கு எவ்விதக் காரணமுமில்லை யாதலால் நான் அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் அக்கிராசனருக்கு முக்கியமாக இருக்கவேண்டிய இரண்டு லட்சணங்களாகிய சுயேச்சையையும் நிஷ்பக்ஷபாதத் தன்மையையும் பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலைமை மாறுபட்ட சந்தர்ப்பங்களால் ஏற்பட்டுவிடின் அந்த நிமிஷம் முதல் என்னை இந்த ஸ்தானத்தில் காணமாட்டீர்கள். சட்டசபைக்குள்ளேயோ அல்லது வெளியேயோ இருந்துவரும் எந்த ராஜீயக் கட்சியின் கட்டளையையும் சட்டசபையின் தலைவர் பின்பற்றுவது அபாயகரமானதென்று நான் கருதியபோதிலும், தேச நலத்தை நாடி அதிக சுதந்திரத்தைப் பெறுவதற்காக இந்தியா சட்டசபையின் தலைவரும் அந்தப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட வேண்டிய நிலைமை ஏற்படலாம். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஸைமன் கமிஷன் அமைப்பை வெளியிட்டதும் அந்தக் கமிஷனைப் பஹிஷ்கரித்துவிட வேண்டுமென்று என்னுடைய தேசத்தாரில் பெரும்பாலோர் தீர்மானித்தபோது அவ்வித நிலைமை ஏற்பட்டது. பஹிஷ்கார இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடுவதற்காக தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிடலாமாவென்று அப்பொழுது நான் ஆலோசித்தேன். ஆனால்

நான் இந்தப் பதவியி லிருப்பதால் தேசத்திற்கு அதிக சேவை செய்யக்கூடுமென்று எனக்கு யோசனை சொல்லப்பட்டது. நான் அதை ஒப்புக்கொண்டு, பத்திரிகைகளுக்கும் அவ்விதமே ஒரு அறிக்கையை வெளியிட்டேன். முக்கியமான பல விஷயங்களில் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் எனக்கும் அபிப்பிராய பேதமேற்பட்ட பல சந்தர்ப்பங்களிலும் நான் இந்தப் பதவியை ராஜிநாமாச் செய்துவிடலாமாவென்று யோசித்ததுண்டு. ஆனால் சபையினருடைய ஆதரவு எனக்கு இருந்துவரும் வரையில் நான் இந்தப் பதவியிலிருந்துவர வேண்டுமென்றும், என்னிடம் அதிருப்தியுள்ளவர்கள் வேண்டுமானல் நம்பிக்கையில்லைத் தீர்மானங் கொண்டுவந்து கொள்ளட்டுமென்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நண்பர்கள் எனக்கு ஆலோசனை கூறினார்கள். லார்டு இர்வின் பல சந்தர்ப்பங்களில் தலையிட்டு நெருக்கடியான நிலைமையை நிவர்த்தி செய்திராவிடின் இந்தப் பதவியில் நான் இவ்வளவு காலமிருந்திருக்கமாட்டேன். ராஜப்பிரதிநிதியின் அறிக்கையினாலும், லாகூர் காங்கிரஸ் தீர்மானத்தினாலும் தேசத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையை நான் மிகுந்த கவலையுடன் கவனித்தேன். தேச நன்மையை உத்தேசித்து இந்த சமயத்தில் நான் இப்

பதவியிலிருந்து வரவேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். காங்கிரஸானது பூரண சுயேச்சையையே தனது லட்சியமென்று மாற்றிக்கொண்டிருந்த போதிலும், எவ்விதப் பாதுகாப்புமின்றி குடியேற்றநாட்டு அந்தஸ்தைப் பெற இந்தியா தகுதியுடையதென்பதை ஒப்புக்கொண்டு, அதை ஏற்படுத்துவதர்கான வழிகளைக் கண்டறிவதற்காக இருதேசப் பிரதிநிதிகளுமடங்கிய மகாநாட்டைக் கூட்டுவதே கிரேட் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இருந்து வரவேண்டிய சம்பந்தத்தை சவுஜன்யமாக முடிவு செய்து கொள்ளுவதற்குத் தகுந்த மார்க்கமென்றும், இதில் எவ்வளவுக் கெவ்வளவு காலஹரணமேற்படுகிறதோ அதற்குத் தகுந்தபடி தேசத்தில் அதற்கு சவுகரியமான நிலைமை குறைந்துவிடுமென்றும் நான் எப்பொழுதும் அபிப்பிராயப்பட்டு வந்திருக்கிறேன். இப்பொழுதும் அதே அபிப்பிராயந்தான் எனக்கு இருந்து வருகிறது. நான் இந்தப் பதவியிலிருந்து வந்திருக்கும் நான்கு வருஷ காலத்தில் இந்த அபிப்பிராயத்தை வற்புறுத்துவதற்கு வாய்த்த சந்தர்ப்பம் ஒன்றையும் நழுவவிட்டதில்லை. ராஜப்பிரதிநிதியின் அறிக்கை போதியதாக இருக்கவில்லையென்பதை நான் அறிவேன். இருந்தாலும் மொத்தத்தில் கவ

னிக்கையில் மிகுந்த சங்கடமான நிலைமையி லும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அவர் மனப்பூர்வமாக முயற்சி செய்திருக்கிறு ரென்பதை நான் ஒப்புக்கொள்ளாமலிருப்ப தற்கில்லை. காங்கிரஸ் அவருடைய அறிக்கை யில் அதிருப்தி அடைந்திருக்கிறதென்பது வாஸ்தவமே. காங்கிரஸுக்கு இருந்துவரும் பின்பலத்தை அலக்ஷியம் செய்வது பெரிய தவ ருகும். ராஜியை ஏற்படுத்த என்னுலியன்ற வழியில் நான் முயற்சி செய்தேன். அது பலன் தராமற் போய்விட்டது. இருந்தாலும் பரஸ்பரம் விட்டுக் கொடுப்பதால் எல்லாக் கட்சியினருக்கும் திருப்திகரமான ஏற்பாட் டைக் கண்டுபிடிப்பது இன்னமும் அசாத்திய மென்று நான் நினைக்கவில்லை. அதற்கு இன் னும் காலப்பிர்பாடாகி விடவில்லை யென்றே நான் நினைக்கிறேன். இவ்வித அபிப்பிராய முடையவனுகை நான் இருப்பதால் இந்த ஸ்தானத்திலிருந்து இந்த சபைக்கும் தேசத் திற்கும் ஊழியம் செய்துவருவதென்று நான் தீர்மானித்திருக்கிறேன்.”

## லார்டு இர்வினும், ஸ்ரீமான் படேலும்

இந்த சந்தர்ப்பத்தில் லார்டு இர்வினுக்கும் ஸ்ரீமான் படேலுக்கும் இருந்துவந்த சம்பந்தத் தைப்பற்றிச் சில விஷயங்களைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். லார்டு இர்வின் ராஜப்

பிரதிநிதி பதவியை ஏற்றுக்கொண்ட காலமுதல் இந்தியா சட்ட சபையின் தலைவருக்கும் இப்தியா கவர்ன்மெண்டின் முக்கிய உத்தியோகஸ்தர்கள் சிலருக்கும் முக்கியமான விஷயங்களில் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. லார்டு இர்வின் தமது உத்தியோகஸ்தர்களுடைய வார்த்தைகளுக்கே செவி கொடுக்கிறவராக இருந்தால் இருதரத்தாருக்கும் ஏற்பட்ட தகராறுகள் முற்றி வெடித்துப்போயிருக்கும். ஆனால் ஸ்ரீமான் படேலின் சுயேச்சை புத்தியிலும், சட்ட சபையின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவருக்கு இருந்துவந்த சிரத்தையிலும் லார்டு இர்வினுக்கு விசேஷ மதிப்பு ஏற்படலாயிற்று. மேலும், தம்முடைய ஆட்சி காலத்திற்குள் இந்தியாவில் ஏற்பட்டிருந்த ராஜீய நிலைமையைச் சமனப்படுத்திவிடவேண்டியது அவசியமென்ற அபிப்பிராயமும் திட்டமாக அவருக்கு இருந்தது. ஸ்ரீமான் படேல் தேசத்தில் விசேஷச் செல்வாக்கும் சக்தியுமுடையதாக இருந்த காங்கிரஸைச் சேர்ந்தவராக இருந்ததாலும், சட்டசபைத்தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டதன் காரணமாக தனிப்பட்டதன்மையை அவர் ஏற்படுத்திக்கொண்டுவிட்டபோதிலும் காங்கிரஸில் செல்வாக்குள்ள தலைவர்களுடன் நெருங்கிய சம்பந்தமுடையவராக இருந்துவந்ததாலும், அவர் மூலமாக காங்கிரஸின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு லார்டு இர்

வின் விரும்பினர். இருதரத்தினரும் ராஜீய நிலைமையைப்பற்றி கலந்தாலோசித்தனர். ஸ்ரீமான் படேல் அப்போதைக்கப்போது தேசத்திலிருந்து வரும் நிலைமையை லார்டு இர்வினுக்கு அறிவித்து வந்தார். அதிகாரிகள் நேரிலும் யாதாஸ்துகள் மூலமாகவும் தேசத்தில் நிலைமை திருப்திகரமாக இருந்துவருகிறதென்றும், ஸைமன் கமிஷன் நியமனத்தால் ஏற்பட்டிருந்த உணர்ச்சியைச் சமனப்படுத்துவதற்கு ஒன்றும் செய்யவேண்டியதில்லையென்றும் சொல்லிவந்த போதிலும் ஸ்ரீமான் படேல் சொல்லியபடி தேசத்தில் உணர்ச்சியும் கசப்பும் நாளுக்குநாள் அதிகரித்து வந்தனவென்பதை அவர் அறிந்துகொண்டார். ஆதலால் அவருடைய வார்த்தைகளுக்கு விசேஷ மதிப்பையும் கௌரவத்தையும் அவர் கொடுக்கலானர். இவ்விதம் அவர்களுக்குள் நெருங்கிய சிநேகம் இருந்து வருவதை விரும்பாத உத்தியோகஸ்தர்களில் சிலர், அவருடைய நிலைமைசங்கடமானதாகும்படி செய்து வந்ததைக் காணவே, சுபாவமாகவே பெரிய புத்திபடைத்த அவருக்கு ஸ்ரீமான் படேலைத் தாங்கி நிற்கவேண்டுமென்ற எண்ணம் இயற்கையாகவே உண்டாயிற்று. ராஜப் பிரதிநிதி பதவியிலிருந்த வேறு எவரும் அதிகாரிகளுடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு அவர்களுடைய கௌரவத்தைப் பாதுகாக்க முன்வந்திருப்பார்களாயினும் லார்டு இர்வின் நியாய புத்தியுடன்

ஸ்ரீமான் படேலைத் தாங்கிநின்று, பலசந்தர்ப் பங்களில் ஏற்பட்ட நெருக்கடிகளையும் நிவர்த்தி செய்து வைத்தார். ஹோம் மெம்பர் ஸ்ரீமான் படேலிடம் வருத்த முண்டாகும்படி அவர் செய்ததைக்காட்டிலும் வேறு சிறந்த திருஷ்டாந் தம் இதற்கு வேண்டியதில்லை. 1929-ம் வருஷத் திய தீபாவளி அறிக்கைக்கு ஸ்ரீமான் படேலே முக்கிய தூண்டுகோலாகவிருந்தாரென்று சொல் லுவது மிகையாகாது. இந்த நிலைமையில் லார்டு இர்வினுடைய பெருந்தன்மையை ஸ்ரீமான் படேல் 1930-ம் வருஷம் ஜனவரி மாதம் 21-ந் தேதி வெளியிட்ட அறிக்கையில் சிலாகித்ததில் அதிசய மொன்றுமில்லை. ஆனால் அவர் ராஜி நாமாச் செய்துவிட்டபிறகு அதிகாரிகளுடைய கட்சியை லார்டு இர்வின் தாங்கிநின்றது இயற்கையேயாகும்.

## ஸர் ஜான் ஸைமனும், ஸ்ரீமான் படேலும்

இந்தியா சட்ட சபைத் தலைவருடைய அந் தஸ்தையும் கௌரவத்தையும் காப்பாற்றுவதில் ஸ்ரீமான் படேல் விசேஷ சிரத்தையுடையவராக இருந்தார். மற்றொரு உதாரணத்தைக் கொண் டும் இதை நிரூபணம் செய்யக்கூடும். ஸைமன் கமிஷன் அங்கத்தினர்கள் டில்லிக்கு வந்திருந்த பொழுது அவர்களை சட்டசபைக் கூட்டத்திற்கு ஸ்ரீமான் படேல் அழைக்கவேண்டுமென்று டில்லி உத்தியோகஸ்தர்கள் அவருக்கு யோசனை சொன்

ஞர்கள். ஆனால் இந்தியா சட்ட சபையின் தலைவராகிய தம்மை அவர்கள் வந்து பார்த்துவிட்டுப் போகும் வரையில் அவர்களை ஒரு பொருட்டாகத் தாம் கருதுவதற்கில்லையென்று ஸ்ரீமான் படேல் சொல்லிவிட்டார். இந்தியா சட்டசபையின் தலைவரைவிட ஸர் ஜான் ஸைமன் அந்தஸ்தில் உயர்ந்தவரென்று அவர்கள் சொல்லிப்பார்த்தார்கள். ஆனால் ஸ்ரீமான் படேலா இத்தகைய வாதங்களுக்கெல்லாம் மசிந்துவிடக் கூடியவர்? ஸைமன் கமிஷனானது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஒரு அங்கமாக இருப்பதெனில் அதனுடன் தாம் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளுவதற்கில்லை யென்று அவர் சொல்லிவிட்டார். இதைப்பற்றிப் பெரிய இடங்களில் பலத்த விவாதம் நடந்தது. ஆயினும் ஸ்ரீமான் படேல் சிறிதும் விட்டுக்கொடுக்கவில்லை. கடைசியாக ஸர் ஜான் ஸைமனே முதலில் ஸ்ரீமான் படேலைப் பேட்டி காண வரவேண்டியதாயிற்று. இவ்விதமாக அவர் தமது பதவிக்குரிய கௌரவத்தைக் காப்பாற்றினார்.

## சேனாதிபதி சம்பவம்

ஸ்ரீமான் படேல் எப்பொழுதும் தனி வழியைப் பின்பற்றும் சுபாவமுடையவ ராதலால், அவருக்கு அத்தியந்த நண்பர்கள் அதிகமில்லை யென்று பலரும் சொல்லுவதுண்டு. பொதுவாக

நோக்குமிடத்து இது ஓரளவு உண்மையேயானு லும், அவருடைய பூரண நம்பிக்கைக்கும் நன் மதிப்புக்கும் பாத்திரர்களான அந்தரங்க நண்பர் களே இல்லையென்று சொல்லுவதற்கில்லை. ஸ்ரீமான்களான ஏ. ரங்கஸ்வாமி அய்யங்கார், சுபாஷ் சந்திரபோஸ், கே. ஸி. ராய் போன்ற பொறுக்கான சிலருடன் அவருக்கு நெருங்கிய சிநேகம் இருந்துவந்தது. ஆயினும் உத்தியோக ஹோதாவில் அவர் விருப்பு வெறுப்புகளைச் சிறி தும் காட்டிக்கொள்ளாமல் எல்லோரையும் சரி சமத்துவமாகவே பாவித்து வந்தார். தமது ஸ்தா னத்தின் கௌரவத்திற்குப் பாதகத்தை விளை விக்கக்கூடிய தவறைச் செய்துவிடும் சட்ட இலாகா உத்தியோகஸ்தர்களாயினும், சட்ட சபையை அலட்சியம் செய்யும் சேனதிபதி போன்ற பெரிய உத்தியோகஸ்தர்களாயினும், அவருக்கு ஒன்றுதான். இருதரத்தாரையும் கடிந் துகொள்ள அவர் சிறிதும் தயங்குவதில்லை.

ஒருசமயத்தில் சேனதிபதியையும் அவர் மட்டந் தட்டிவிட்டார். இந்த சம்பவமானது என்றுமில் லாத அதிகப் பரபரப்பை விளைவித்தது. ஸர் வில் லியம் பர்ட்வுட் சேனதிபதியாக இருந்தார். அவர் எல்லோரிடமும் நெருங்கிப் பழகியதாலும், மரி யாதையினுலும் சபையிலுள்ள ஐரோப்பிய, இந் திய அங்கத்தினர்களுடைய மதிப்பைப் பெற்றவ ராக இருந்தார். ஸ்கீன் கமிட்டி யாதாஸ்தைப்

பற்றி சட்டசபையில் விவாதம் நடந்துகொண் டிருந்தபோது அவர் கவர்ன்மெண்டின் சார்பாகப் பேசினார். சபையும் இடைவேளை போஜனத்திற் காகக் கலைந்தது. மறுபடியும் சபை கூடியபோது சேனாதிபதி அவருடைய ஸ்தானத்தி லிருக்க வில்லை. எதிர்க்கட்சியினர் அவருடைய பிரசங்கத் திற்கு என்னபதில் சொல்லுகிறார்களென்பதைக் கவனிக்க சேனாதிபதி சபையில் பிரசன்னமாக இல்லாததை அந்தக் கோஷ்டியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் ஸ்ரீமான் படேலின் அறிவிப்புக்குக் கொண்டுவந்தார். சேனாதிபதி செய்தது பெரிய பிசகென்று ஸ்ரீமான் படேல் சொல்லியதோடு, சபையினுடைய மன்னிப்பையும் அவர் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று அறிவித்தார். இவ் விதம் அவர் நிர்த்தாக்ஷண்யமாகச் சொல்லிவிட் டது ஸிம்லாவிலுள்ள வெள்ளையர்கள் திடுக் கிடும்படி செய்து விட்டது. வானமே இடிந்து விழுந்து விட்டதாகவும், பிரிட்டிஷாருடைய பெருமைக்கே பங்கம் விளைந்துவிட்டதாகவும் அவர்கள் நினைத்துவிட்டார்கள். இந்தியாவி லுள்ள அரசரின் படைகளுடைய தலைவர் மன் னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்பது அவர் கள் சகித்துக்கொள்ள முடியாத புதுமையாக விருந்தது. இவ்விதம் சேனாதிபதியை அவமானப் படுத்தியதற்காக பிரசிடெண்டு ஸ்தானத்தையே ஸ்ரீமான் படேல் ராஜிநாமாச் செய்துவிடவேண்டு

மென்று நிர்ப்பந்திக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரி வர்க்கத்தினருக்குள் பேச்சாட ஆரம்பித்தது. ஸ்ரீமான் படேலின் ஜாகைக்கும் ராஜப்பிரதிநிதியின் மாளிகைக்குமாக ஒரு நிர்வாக சபை அங்கத்தினர் நடந்துகொண்டிருந்தார். மறுநாள் பத்திரிகைகளில் இதைப்பற்றி எவ்விதப் பிரஸ்தாபமும் செய்யப்படவில்லை. ஆனால் சேனாதிபதிக்கு ஒரு சிற்றுண்டி விருந்து நடைபெறப் போவதாக அழைப்புப் பத்திரங்கள் பிரபலஸ்தர்களுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தன. இந்த விருந்தில் நடப்பதைப் பத்திரிகை நிருபர்கள் ஜாக்கிரதையாகக்கவனித்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் அவர்களுக்கு வேண்டுகோள் செய்து கொள்ளப்பட்டது. இந்த விருந்துக்குப் பலரும் அழைக்கப்பட்டிருந்தார்கள். சேனாதிபதி முன்னதாக வந்தார். சிறிது நேரம் கழித்து ஸ்ரீமான் படேல் வந்தார். அவர் கம்பீரமாகப் பந்தலுக்குச் சென்றார். ஒன்றையும் லட்சியம் செய்யாதவர் போல் கூட்டத்தின்மீது அவர் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு நேராக சேனாதிபதி இருந்தவிடம் சென்று அவருடன் கைகுலுக்கிவிட்டு, அவருடன் உரையாட அவர் பக்கத்தில் அமர்ந்தார். விருந்தின் உத்தேசம் நிறைவேறிவிட்டது. சேனாதிபதி மறுநாள் சட்டசபையில் எழுந்து, இருதரத்தாரும் முன்னதாகவே ஏற்பாடு செய்து கொண்டிருந்தபடி தாம் சபையில் இல்லாமற்

போய்விட்டதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். ஸ்ரீமான் படேலும் அதைச் சபையின் சார்பாக ஏற்றுக்கொண்டதோடு, தாம் அவசரத்தில் சொல்லிவிட்ட சில கடுமையான வார்த்தைகளுக்காக வருத்தமுணர்த்தினர். இதனுடன் இத்தகராறு தீர்ந்துவிட்டது. ஆயினும் சேனாதிபதி அதுமுதல் இன்றளவும் இந்தியா சட்டசபையில் காலடி வைக்கவில்லை. இனியும் வைப்பாராவென்பது சந்தேகமே. இந்த சம்பவத்திலிருந்து ஸ்ரீமான் படேல் எத்துணை ஆண்மைத்தன்மையும், சுயேச்சை புத்தியும் வாய்ந்தவரென்பது வெளிப்படுகிறது.

## ஜமேதாராக நடித்த விந்தை

ஸ்ரீமான் படேல் சட்டசபை மண்டபத்திற்குள் அதிகக்கண்டிப்பைக் காட்டுகிறவராக இருந்த போதிலும் வெளியில் மிகுந்த சரஸியாகவும், தமாஷில் அதிகப் பிரியமுடையவராகவும் இருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சாதாரண உடையுடன் இந்தியா சட்ட சபை மண்டபத் தாழ்வாரத்தில் உலாவிக் கொண்டிருக்கையில் அந்தக் கட்டிடங்களைப் பார்வையிடுவதற்காக இரண்டு அமெரிக்கர்கள் வந்தார்கள். ஸ்ரீமான் படேல் சாமான்ய மனிதரைப்போல் நின்று கொண்டிருந்ததால் அவரிடத்தில் தங்களுடைய பெயர்கள் அச்சிட்ட சீட்டுகளைக்காட்டி, தாங்கள் வந்திருப்பதன் நோக்கத்தையும் தெரிவித்துக்

கொண்டனர். ஸ்ரீமான் படேல் அவர்களை நெடுக அழைத்துச்சென்று காட்டினார். பிறகு இந்தியா சட்ட சபை மண்டபத்திற்குள்ளும் அழைத்துச் சென்றார். அங்கிருந்த தலைவர் ஆசனத்தைக் காட்டி அதுதான் அக்கிராசனர் வீற்றிருக்குமிடமென்று சொல்லி அதில் அவர்கள் அமரும்படி செய்து, கீழே நின்றுகொண்டபடியே அவர்களுக்கு சலாம்செய்தார். அவர் சாமான்ய வேலைக்காரரென்று அமெரிக்கர்கள் நினைத்து அவர் செய்த உதவிக்காக சன்மானம் கொடுக்க முன் வந்தார்கள். அதை வாங்கிக்கொள்ள அவர் மறுத்துவிட்டார். பிறகு அங்கு சமீபத்தில் இருந்த வேலைக்காரனைக் கூப்பிட்டு தேசபாஷையில் அவர்களை பாக்கி இடங்களுக்கும் அழைத்துப்போய்க்காட்டி, கடைசியாகத்தமது அறைக்கு அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார். அவர்கள் சுற்றிப்பார்த்துவிட்டுத் திரும்பிவந்ததும் தங்களுக்குப் பணியாள்போல்நடித்தவரே சட்டசபையின் அக்கிராசனரென்பதை அறிந்து அப்படியே ஸ்தம்பித்துப்போய்விட்டனர். கடைசியாக அவர்கள் அறியாமையால் தாங்கள் செய்துவிட்ட பெரியபிசகை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டனர். ஸ்ரீமான் படேல் அவர்களுடைய பயத்தைப் போக்கி தம்முடன்கூடச் சிறிது நேரம் அவர்களை அமரவைத்துப் பேசி வழி அனுப்பினார்.

## தலைவர் பதவி ராஜிநாமா

தேச நலத்தை உத்தேசித்து ஸ்ரீமான் படேல் சாத்தியமான காலம்வரை இந்தியா சட்டசபையின் அக்கிராசனர் பதவியிலிருந்துவர விரும்பிய போதிலும், அவர் சுயேச்சையாகவும் நிஷ்பக்ஷபாதமாகவும் அந்தப் பதவியை வகித்திருக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. எனவே, ஜனவரி மாதம் 21-ந்தேதி வெளியிட்ட அறிக்கையில் அவர் தெரிவித்தபடி அந்தக் காலம் வந்ததுமே அவர் இந்தியாசட்டசபைத் தலைவர் ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்துவிட்டார். அவர் ராஜப்பிரதிநிதிக்கு இது சம்பந்தமாக அனுப்பிய இரண்டு கடிதங்களும் சரித்திரத்தில் இடம் பெறக்கூடியவை. அவைகளின் விவரம் கீழே குறிப்பிடப்படுகிறது:—

சிம்லா, ஏப் 25—

எனது அன்புடைய லார்டு இர்வினுக்கு,

இந்தியா சட்டசபைத் தலைவர் பதவியையும் அங்கத்தினர் பதவியையும் நான் ராஜிநாமாச் செய்துவிடுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் இந்தியா சட்டசபைக்கு முதன் முதலில் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவனாகிய நான் எனது கடமைகளை நிறைவேற்றி வைப்பதில் அடைந்த கஷ்டங்களையும் சில தடைகளையும்பற்றித் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு

கிறேன். அதோடு நான் ராஜிநாமாச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்கான காரணங்களையும் சுருக்கமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1925-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் முதல், நான் தலைவர் பதவியில் இருந்துவந்தேன். நான் எப்பொழுதும் பாரபக்ஷமின்றி கண்டிப்பாகவும் பூரண சுயேச்சையுடனும் நடந்துவந்தேன். பொது ஜனங்களின் கரகோஷத்திற்கு நான் ஆசைப்படவில்லை; அவ்விதமே அதிகாரி வர்க்கத்தினரின் ஆத்திரத்துக்கும் நான் அஞ்சவில்லை. எந்தக் காலத்திலும் நான் மேற்சொன்ன இரண்டு காரணங்களுக்காகவும் எனது முறைக்கு மாறுகச் சென்றதில்லை. நான் செய்த சில காரியங்கள் தவறுனவைகளாக இருக்கலாம். ஆனல் என் மனச்சாட்சிப்படியே நடந்துகொண்டேனென்பதை மட்டில் நான் நிச்சயமாகச் சொல்லக்கூடும். ராஜீய உணர்ச்சியுடனே, சொந்த அபிமானங் காரணமாகவோ நான் ஒரு காரியமும் செய்யவில்லை. சட்டசபையின் நன்மையைக் கருதியும் நாட்டின் நன்மையைக் கருதியுமே என் சிற்றறிவுக்கு எட்டிய வழியில் என் வேலைகளைக் கவனித்து வந்தேன். இவ்விதம் என் கடமையை நிறைவேற்றி வருகையில் அதிகாரி வர்க்கத்தினரின் கோபத்துக்கும் நான் ஆளானதுண்டு. அவர்கள் என் கொள்கையை

ஒருவிதத்தில் அனுசரித்தாலும் அவர்களுக்குப் பாதகம் நேரக்கூடிய விஷயத்தில் அவர்கள் சகிப்புத்தன்மையைக் காட்டியதில்லை. கவர்ன்மெண்டு நடக்க வேண்டியிருப்பதால் சட்டசபைத் தலைவரும் அதிகாரி வர்க்கத்தினரின் விருப்பத்திற்கேற்ப நடந்து, அவர்களின் காரியங்களைச் சுலபமாக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் நான் அவர்களுக்கு இடங்கொடுக்கவில்லை. நிருவாகத்தின் ஒரு அம்சமாக நான் இருக்க முடியாதென்றும், எவ்வளவு முக்கியமான விஷயமாக இருந்தாலும் அவர்களுடைய இஷ்டப்படியெல்லாம் நான் நடந்துகொள்ள முடியாதென்றும் சொல்லிவிட்டேன். அதன் பலனாக எனக்குக் கஷ்டங்கள் பல விளைவிக்கப்பட்டன.

சென்ற மூன்றுவருஷங்களாக தலைவர் பதவி ஒரு முள்படுக்கையைப் போலவே இருந்துவந்தது. அவர்கள் தலைவரை மற்றக் காரியங்களில் பஹிஷ்கரிக்கவும் ஆரம்பித்தனர். தலைவரின் செய்கையைப்பற்றி நியாயமில்லாத பாஷையில் பத்திரிகைகள் சிலவற்றில் தாக்கி எழுதப்பட்டிருந்தது. நான் என் அபிப்பிராயத்தை வெளியிட்டுச் சொல்லவுங் கூடவில்லை. மௌனமாக இவற்றையெல்லாம் நான் பொறுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் தங்களிடம் தனியாக என் மனதிலுள்ள

த்தை வெளியிட்டு வந்ததுதான் எனக்கு ஆறுதலாகவிருந்தது. அதிகாரிவர்க்கத்தினர், தலைவரின் அதிகாரத்தையோ சபையின் மதிப்பையோ கவனிப்பதில்லை. அவர்கள் எப்போதும் தலைவரின் அதிகாரத்தைக் குறைக்கவும், பொதுஜனங்கள் மதிப்புக் குறைவாகத் தலைவரைப்பற்றி நினைக்க வழிதேடவுந்தான் முயற்சித்து வந்தனர். இவை போதாவென்று தலைவர் விஷயமாக வெறும் தூஷணையையும் தவருன அபிப்பிராயத்தையும் வளர்க்க ஒரு சில்லரைக் கோஷ்டி வேலைசெய்து வந்தது. அக் கோஷ்டியினர் தங்களுக்கும் என்னிடத்தில் துவேஷமுண்டாகும்படி செய்ய வேலைசெய்து வந்தார்கள். அந்த முயற்சி எவ்வளவு தூரம் பலித்ததென்பது எனக்குத் தெரியாது. அந்தக் கோஷ்டியினரின் ஆதரவால் சில பத்திரிகை நிருபர்கள் தலைவருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்வதிலேயே கண்ணுயிருந்தனர். இதனுல் இந்தியா கவர்ன்மெண்டின் தலைமை ஸ்தானத்திலுள்ள வெள்ளைக்காரர்கள் இந்தியா சட்டசபையின் தலைவராக நான் இருப்பதைக் காணச் சகிக்கவில்லை. இப்பொழுது நான் இந்தப் பதவியிலிருந்து விலகுவதால் அவர்களெல்லோருக்கும் சந்தோஷமேற்படும். இனி சங்கடமில்லையென்றும் அவர்கள் நினைப்பார்கள். இந்த நிலைமையில் என் நடவடிக்கை

களை அந்தரங்கமாக இருந்து கவனிக்கவும் ஆட்களை நியமித்தார்களென்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதனால் நீங்கள் ஆச்சரியமடைய மாட்டீர்களென்று நான் நம்புகிறேன். நானே வெறுத்துப்போய் ராஜிநாமாச் செய்துவிட்டால் பொறுப்பமைந்த ஒரு பதவியை வகிக்க இந்தியருக்கு யோக்கியதை இல்லையென இந்தியாவின் விரோதிகள் சொல்வதற்கு இடந் தேடிக்கொடுத்து விடலாமென்ற நோக்கத்துடன் கட்டுப்பாடாகவும் திட்டமாகவும் ஒரு சதியாலோசனை நடத்தப்பட்டு வருவதாகவே நான் எண்ணினேன்.

இந்தியா கவர்ன்மெண்டும் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் என் விஷயத்தில் சற்றும் அன்பு செலுத்தவில்லையென்பது உலகறிந்த விஷயம். நேராக என்மீது நம்பிக்கையில்லைத் தீர்மானங் கொண்டுவந்து என்னை நீக்கினலொழிய வேறு வழியால் என்னை நீக்க முடியாது. அவ்விதம் நீக்குவதற்கு சபையில் எப்போதும் அவர்களுக்கு மெஜாரிட்டி கிடைக்காதென்பதும், தாங்களும் அவ்விதப் பிரேரணையை உடனே அநுமதித்துவிட மாட்டீர்களென்பதும் அவர்களுக்கு திட்டமாகத் தெரியும். அதனல் வேறு வழியில்லாமல் தலைவர் பதவியில் நானிருந்ததைச் சகித்துக்கொண்டிருந்து வந்

தார்கள். இத்தனை கஷ்டங்களுக்கிடையிலும் நான் எனது வேலைகளைக் கவனித்துவந்தேன். இந்த வேலையிலிருப்பதால் நாட்டுக்கு சேவை செய்து வருவதாக நான் எண்ணியதே இதற்குக் காரணம். விஷயங்கள் முற்றிவிட்டால் அதிர்ஷ்டவசமாக வெற்றி எனக்கே கிடைத்து வந்தது. அவர்கள் தோல்வி யடைந்து வந்தார்கள். கோழைகளான வேறெ வராவது இந்தப் பதவியி லிருந்துவந்தால் முன்னமே அதை விட்டுவிட்டிருப்பார்கள்; அல்லது அவர்கள் அதிகாரி வர்க்கத்துக்குப் பணிந்து போயிருப்பார்கள். நான் இவ்விரண்டி லொன்றையும் செய்யாமல் என் வேலையிலிருந்து கொண்டே சில சம்பிரதாயங்களை ஏற்படுத்திக் கொண்டும், இந்தியா சட்டசபையின் மதிப்பை உயர்த்தக்கூடிய தீர்ப்புகளை அளித்துக்கொண்டு மிருந்தேன். என் உத்தியோக கால முழுவதும் சட்டசபையும் தலைவரும் ஒருபுறமும், கவர்ன்மெண்டு மற்றொருபுறமு மாகவிருந்து போராட வேண்டியிருந்தது. தலைவரின் அதிகாரத்தை விட்டுக்கொடுக்கா மலும் சட்டசபையின் மதிப்பையும் அதன் சுதந்திரத்தையும் குறைக்காமலும் நான் சர்வ சக்தி வாய்ந்த இந்த அதிகாரி வர்க்கத்தின ருக்கு எதிராக எனது காரியங்களை நிறை வேற்றி வரவேண்டி யிருந்தது. நான் எனது

கட்சியையே பெரும்பாலும் ஸ்தாபிதம் செய்திருக்கிறேன்.

இந்த ஐந்து வருஷங்களும் எனக்கு பிரமாத தொல்லையும் கவலையும் இருந்து வந்ததால் என் தேக சுகம் கெட்டுவிட்டது. ஆனால் இன்னும் எனது நாட்டினர் என் விஷயத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு அம்சமே இப்போது எனக்கு ஆறுதலை அளிக்கிறது. நான் தனிப்பட்ட ஒருவரையும் குறைகூறவில்லை. இவ்விதக் கேவலமான காரியங்கள் நடப்பதற்கு இடங்கொடுக்கும் ஆட்சி முறையையே நான் கண்டிக்கிறேன். எவ்வளவு சீக்கிரத்தில் இந்த முறை ஒழிகிறதோ அவ்வளவு எல்லோருக்கும் நன்மையாகும். இவ்வளவு கஷ்டங்களிருந்தாலும் இனியும் நான் இந்தியா சட்டசபைத் தலைமைப் பதவியிலிருப்பதால் நாட்டுக்கு நன்மை ஏற்படுவதாக விருப்பின் ஆட்சேபமின்றி அப்பதவியிலேயே இருப்பேன். ஆனால் இப்போது நிலைமை மாறியிருப்பதால் இந்தியா சட்டசபைத் தலைவர் பதவியிலிருந்து செய்யக்கூடிய உதவியொன்றுமில்லை. காங்கிரஸ்காரர்கள் லாகூர் தீர்மானப்படி சட்டசபையைப் பஹிஷ்கரித்துவிட்டார்கள். பிறகு எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த பண்டித மாளவியாவும் அவரது தோழர்களும் சட்டசபை விரும்

பாத போதே கவர்ன்மெண்டார் ஏகாதிபத்தியச் சலுகை முறையை அது ஆதரிக்கும்படி நிர்ப்பந்தித்த விதத்தைக்கண்டு ராஜிநாமாச் செய்துவிட்டார்கள். இப்போது இந்தியா சட்டசபை அதன் பிரதிநிதித்துவத் தன்மையை இழந்துவிட்டது.

காப்புவரி மசோதா சபையில் ஆலோசனைக்கு வந்தபொழுது ஒவ்வொருவரும் பிரிட்டிஷ் சலுகையை ஒப்புக்கொள்ளவேண்டும், இல்லையானல் இந்திய மில்தொழில் அழிய வேண்டியதுதான் என்று கவர்ன்மெண்டார் சொன்னதைக் கண்டு தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக ஓட்டுக் கொடுக்கவேண்டி யிருப்பதாகக் கூறினர்கள். தலைவராக இருப்பவர் அங்கத்தினர்களுக்கு அவரவர்கள் இஷ்டப்படி ஓட்டுசெய்ய உள்ள உரிமையையும் பாதுகாத்துக் கொடுக்கச் சக்தியற்றவராக இருந்தால் அந்த சபையில் அதன் பிறகும் தலைமை வகிப்பது சரியாவென நான் யோசித்தேன். இப்படி யிருந்தால் நிருவாகிகளின் அபிப்பிராயத்தை சட்டசபை அப்படியே அங்கீகரித்துக் கொண்டு வரவேண்டியதுதான். இவ்வித நிலைமையில் நான் சட்டசபைத் தலைவராக விருப்பது நாட்டுக்குத் துரோகம் செய்வதாகும். இதுநிற்க, நாட்டில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கையில் நான் சட்ட

சபைத் தலைவராக விருந்தால் நான் இந்தியா வின் லக்ஷியத்திற்குத் துரோகம் செய்தவ னுவேன்.

1930-ம் வருஷம் ஜனவரிமாதம் 21-ந்தேதி லாகூர் காங்கிரஸ் தீர்மான சம்பந்தமாக இந் திய சட்டசபைத் தலைவர் ஹோதாவில் என் நிலைமையை விளக்குகையில் நான் பின்வரு மாறு கூறினேன். "சட்டசபைத் தலைவர் எவ ரேனும் வெளிப்பட்ட ஒரு ராஜீயக்கட்சியின் கட்டளைப்படி நடப்பது அபாயகரமான தாகும். ஆனாலும் இந்தியாவில் வேறுவித மான நிலை ஏற்பட்டால் நாட்டின் மொத்த நன்மையைக் கருதி இந்தியா சட்டசபைத் தலைவர் ராஜிநாமாச் செய்யவேண்டிய அவசி யம் நேர்ந்தாலும் நேரும்." அவ்வித நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. என் நாட்டி னர் இப்போது உயிரையும் திரணமாக மதித்து உலக சிரேஷ்டரான மகாத்மாவின் தலைமையில் காங்கிரஸ் மகாசபை ஆரம்பித் துள்ள பலாத்காரமற்ற ஒத்துழையாமை இயக் கத்திலும் சட்டமறுப்பு இயக்கத்திலும் இறங்கி யிருக்கின்றனர். என் நாட்டில் பிரபலஸ்தர் களாகவுள்ள நூற்றுக் கணக்கானபேர் முன் னமே அரசர் பெருமானின் விருந்தினராகச் சிறைக்கு சென்றுவிட்டார்கள். அவசியம் நேர்ந்தால் உயிரைவிடவும் ஆயிரக்கணக்கான

பேர் தயாராக இருக்கின்றனர். லட்சக்கணக் கானபேர் அந்த இயக்கத்தில் கலந்துகொண்டு சிறைச்சாலைக்குச் செல்லவும் சித்தமாக விருக் கின்றனர். என் தேசத்தின் விடுதலைப்போராட் டத்தில் நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கும் இந்த சமயத்தில் நான் அவர்களுடன் தோளு டன் தோளாகச் சேர்ந்து வேலைசெய்ய வேண் டுமே யொழிய இந்தியா சட்டசபையின் அக் கிராசனப் பதவியில் இருந்துகொண்டிருக்கக் கூடாது. சென்ற நான்கு வருஷங்களாகத் தாங்கள் அதிகாரத்துக்கு வந்ததுமுதல் அவ் விதக் காரியங்கள் ஒன்றும் நடைபெரும லிருக்க நான் என்னுலான முயற்சி செய்துவந் தது தங்களுக்குத் தெரியும்.

இந்தியாவின் கோரிக்கையான பூரண குடி யேற்ற நாட்டந்தஸ்தை பிரிட்டன் ஏற்றுக் கொண்டு இரண்டு நாட்டினருங் கலந்து அந்த அந்தஸ்தை வழங்கும் முறையை நிர்ணயித்து விட்டால் இந்த நெருக்கடியான நிலை ஏற்படா தென நான் பல நாளாகச் சொல்லி வருகி றேன். இக்கடிதத்துடன் தங்களுக்கு அனுப்பி யுள்ள இன்னொரு கடிதத்தில் நான் இது விஷயமாகச் செய்த முயற்சியின் பலன் இன்ன தென விளக்கியிருக்கிறேன். ஆகவே, அந்தக் கடிதத்தையும் இதன் ஒரு அங்கமாகக் கொள் ளலாம். நான் சிறிதுகாலமாக இந்தியாவுக்கு

நல்லகாலம் வருமென்றும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சுயேச்சையுடன்கூடிய ஒரு தேசமாக இந்தியா தனக்குரிய ஸ்தானத்தை அடையுமென்றும், தங்களுடைய முயற்சியால் அதிகத் தியாகமும் கஷ்டமும் அடையாமலே அந்த நிலையை அடையுமென்றும் நம்பியிருந்தேன். ஆனால் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் சமீபத்தில் நடந்துள்ள சம்பவங்களைப் பார்த்தால் என் எண்ணம் சரியன்று என்று தெரிகிறது. அதோடு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடைய மனம் மாறுதலடைந்திருப்பதாகவும், இந்த நாட்டின் ஆட்சிமுறை தத்துவமே மாறியிருப்பதாகவும், இந்தியாவில் குடியேற்ற நாட்டந்தஸ்து அநுஷ்டானத்தி லிருப்பதாகவும் கூறுவதெல்லாம் கண்ணைத் துடைக்கும் வித்தைதானென்பதும் தெரிந்துவிட்டது. வரிவிதிக்கும் சுதந்திர சம்பிரதாயம் எவ்விதம் உண்மையற்றதாக இருக்கிறதோ அவ்விதமே மேற்சொன்னதும் கிரியாம்சையில் இல்லாமல் வெறும் வாய்ப்பேச்சாகவே இருக்கிறது. காங்கிரஸின் கோரிக்கை நியாயமானதென்று அங்கீகரித்து பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் நன்மை ஏற்படக்கூடிய விதத்தில் திருப்தியாக இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குச் சிறிதும் எண்ணமில்லையென்பதை நான் ஆட்சேபமின்றிச் சொல்லக்

கூடும். அதோடு நில்லாமல் பெரிய மனிதர்களின் நியாயமான அபிலாஷைகளை அடக்க வழக்கப்படி முன்பின் பாராமல் அடக்கு முறைக் கொள்கையையும் கவர்ன்மெண்டார் அனுஷ்டிக்க ஆரம்பித்து விட்டனர். சர்வ கட்சி மகாநாட்டில் இந்தியாவின் கோரிக்கையாகிய குடியேற்றநாட்டு அந்தஸ்தைப்பற்றிய விவாதமே நடக்குமென்று உறுதி கூறுத போது அந்த சர்வகட்சி மகாநாட்டில் காங்கிரஸ் கலந்துகொள்ளக் கூடாதென மகாத்மா முடிவுசெய்தது மிகச் சரியாகவிருக்கிறது. இந்த நிலைமையில் எனக்கு கவுரவமும் தேசாபிமானமுமானவழி இந்தக் கவர்ன்மெண்டோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல் விலகுவதைத் தவிர வேறில்லை. ஆகவே, என் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு சுதந்திரப் போராட்டத்தில் என் நாட்டினரோடு கலந்து கொள்ளப் போகிறேன்.

அவ்வியக்கத்தில் மும்முரமாகக் கலந்து கொள்ள என் தேகநிலை இடங்கொடுக்க வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன். எப்படி யிருந்தாலும் இந்த ராஜிநாமா மூலம் அந்த இயக்கத்திற்கு ஒரு ஆதரவு ஏற்படு மென்பது மட்டில் நிச்சயம். தாங்கள் என் விஷயத்தில் எப்போதும் சிநேகபாவத்துடன் அன்புகாட்டி வந்ததற்கு என் நன்றியைத்

தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவ்வப் போது தாங்கள் எனக்கு ஆலோசனை கூறி வந்ததையும், ஓரேமாதிரியாக என்னிடம் தாங்கள் அன்புகாட்டி வந்ததையும் நான் மறக்கமாட்டேன். இரண்டு சந்தர்ப்பங்களில் என் விஷயத்தில் தாங்கள் விசேஷ அக்கரை காட்டியதை நான் என்றும் ஞாபகத்தில் வைத்திருப்பேன். நான் உத்தியோகத்தி லிருந்த சமயத்தில் எனது ஓட்டர்களுக்குக் கஷ்டங்கள் சில ஏற்பட்டன. 1927-ம் வருஷத்தில் வெள்ள மிகுதியால் அவர்கள் கஷ்டப்பட்டபோது என் வேண்டுகோளுக் கிணங்கி தாங்கள் வெள்ளத்தால் சேதமடைந்த இடங்களைப் போய்ப்பார்த்தீர்கள். கிராமந்தோறும் கஷ்டத்துடன் சென்று அங்குள்ளவர்களிடம் அநுதாபங் காட்டினீர்கள். அந்த சமயத்தில் அவர்களுக்கு அந்த அநுதாபம் அவசியம் வேண்டியிருந்தது. 1928-ம் வருஷத்தில் பார்டோலியில் அநீதமாக வரியை உயர்த்தியபோது எனது வேண்டுகோளுக்கிணங்கி பம்பாய்க் கவர்ன்மெண்டுடன் கலந்து பெருத்த சச்சரவு ஏற்படாமல் தடுத்து உதவினீர்கள். இன்றுமுதல் உத்தியோக தோரணையில் எனக்குத் தங்களுடனிருந்து வந்த சம்பந்தம் நீங்கிவிட்டாலும், எப்போதும் சொந்த ஹோதாவில் எனக்குத்

தங்களிடம் மதிப்பிருக்கு மென்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். உத்தியோகப் பற்றற்றத் தன்மையில் நாமிருவரும் ஒன்ருகச் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம் என்ருவது நேருமென்றும், அப்போது நாம் இருவருடைய வேலைகளின் பலாபலன்களையும் சீர்தூக்கிப் பார்க்க முடியுமென்றும் நான் நம்பியிருக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

**வி. ஜே. படேல்.**

இதன் அங்கமாகச் சேர்த்துக்கொள்ளும்படி இதன் கூடவே அனுப்பியிருந்த கடிதத்தை **ஸ்ரீ**மான் படேல் சேர்ந்தாற்போல் வெளியிடவில்லை. ஆனல் ராஜப்பிரதிநிதி இதற்கு அனுப்பிய பதிலில் அந்தக் கடிதத்தில் கண்டிருந்தவற்றிற்கும் சேர்த்து பதில்சொல்லிவிட்டார். ராஜப்பிரதிநிதியின் பதில் கிடைத்த பிறகு இரண்டாவது கடிதத்தை ஸ்ரீமான் படேல் வெளியிட்டார்.

## ராஜப்பிரதிநிதியின் பதில்

ராஜிநாமாக் கடிதத்திற்கு ராஜப்பிரதிநிதி 26-ந் தேதி அனுப்பிய பதிலின் விவரமாவது:—

25-ந்தேதியிட்டு தாங்கள் எழுதிய இரண்டு கடிதங்களும் கிடைத்தன. தாங்கள் இந்தியா சட்டசபையின் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிடுவதாகவும், அதற்கான காரணங்

கள் இன்னின்னவென்றும் குறிப்பிட்டிருக்கி றீர்கள். நியாயமான வாதத்தால் தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றுவிக்க முடியா தென்று தங்களுடைய கடிதங்களிலிருந்து திட்டமாகத் தெரிகிறது. தங்களுடைய கடி தங்களுக்கு விரிவான பதில் எழுதுவதால் பிர யோஜன மேற்படுமென்றும் நான் நினைக்க வில்லை. தாங்கள் என் கவர்ன்மெண்டு உத்தி யோகஸ்தர்கள்மீது சாட்டியுள்ள குற்றங்களே அவைகள் உண்மையாயிருக்க முடியாவென்ப தற்குப் போதிய அத்தாக்ஷியாகும். தங்களுக் கும் எனக்கும் உத்தியோகமுறையில் சம்பந் தம் இருந்துவந்தபோது நாம் கலந்து பேசிய விஷயங்கள் பலவற்றை உங்களுடைய கடிதத் தில் பிரஸ்தாபித்திருக்கிறீர்கள். தங்களு டைய நோக்கம், செய்கை இவைகளின் உள் கருத்துக்களைப்பற்றி அபிப்பிராயம் சொல்லக் கூடிய நிலைமையில் நான் இல்லையானாலும், என் னுடைய மனோபாவத்தை விளக்குவதற்கு நானே தகுதியுடையவன். ஒரு சம்பவத்தைப் பற்றித் தாங்கள் தப்பபிப்பிராயங் கொண் டிருப்பதைமட்டில் உதாரணமாக நான் எடுத் துக் காட்டுகிறேன். தங்களுடைய ஆலோ சனைப்படியே எனது கவர்ன்மெண்டு 1928-ம் வருஷத்தில் பார்டோலியில் ஏற்பட்ட வரி கொடா இயக்க சம்பந்தமாகத் தனது கட

மையை நிறைவேற்றியதென்று தாங்கள் நினைத்துக்கொண்டிருப்பதை நான் குறிப்பிடவிரும்புகிறேன். இப்பொழுது நமது உத்தியோக சம்பந்தம் விலகிவிடுவதைப்பற்றி நான் வருத்தப்படுகிறேன். தாங்களும் தாங்கள்போய்ச் சேரவிருக்கும் கோஷ்டியினரும் சட்டங்களை மீறும்படி நாட்டினருக்குச் சொல்லுவதைவிட அரசர் பெருமானுடைய கவர்ன்மெண்டுடன் வெளிப்படையாகக் கலந்து பேசுவதாலேயே சமாதானத்திற்கு வழி ஏற்படுமென்பதையும் நீங்கள் இப்பொழுது செய்ய உத்தேசித்திருக்கும் காரியத்தால் நாட்டுக்கு எவ்வளவு கேடு ஏற்படும் என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்.”

## ஸ்ரீமான் படேலின் இரண்டாவது கடிதம்

ராஜிநாமாவை அங்கீகரிப்பதாக ராஜப்பிரதிநிதி எழுதிய பதிலில் தமது இரண்டாவது கடிதத்தையும்பற்றிப் பிரஸ்தாபித்து விட்டதால் அதை உடனே **ஸ்ரீ**மான் படேல் வெளியிட்டார். அதன் விவரமாவது:—

இந்த சமயத்தில் தவறான வழியில் சென்றுவிட்டால் சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடுமானால் என்னசெய்வதென்று தெரியாமல் நீங்கள் குழம்பிக் கொண்டிருப்பதாக

எனக்குத் தோன்றுகிறது. தாங்கள் பம்பா யில் வந்திறங்கியவன்று நான் தங்களுடன் வெகுநேரம் பேசினேன். அப்போது நான் 1920-ம் வருஷத்தில் ஒத்துழையாமை இயக் கம் என்றதொரு பெரிய இயக்கம் ஆரம்பிக் கப்பட்டதையும், அதன் நோக்கம் அநேகமா கப் பூர்த்தியான தென்றாலும் அது முடிவில் தோற்றுப்போன விவரத்தையும் தங்களுக்குச் சொன்னேன். அந்த இயக்கம் அப்போது பலிக்காமற்போனாலும் காங்கிரஸ்தான் இந்தி யாவில் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபன மாக இருக்கிறதென்றும், காந்திஜி இன்னும் இந்திய ராஜீய உலகுக்கு உயிர்போலிருக்கிறு ரென்றும், இந்தியாவில் பெரும்பாலோர் அவ ரைப் பின்பற்றுவதாகவும், பாமர ஜனங்களைக் கொண்டு ஒரு இயக்கத்தை நடத்த அவரே தகுதியுடையவரென்றும், ஆகவே அவருடன் சீக்கிரத்தில் கலந்துகொண்டு அவருடைய ஒத் துழைப்புடன் இந்தியப் பிரச்சினையை ஒரு வழியாகத் தீர்த்துவைக்க முயற்சி செய்ய வேண்டுமென்றும் அப்பொழுது நான் கூறி னேன். அப்போது தாங்கள் இந்த நாட் டுக்கே புதியவராக இருந்தமையால் திட்ட மாக ஒருவித அபிப்பிராயத்தையும் வெளியிட வில்லை. அதன்பிறகு சட்டப்படி தங்களுக்கு யோசனைகூற ஏற்பட் டிருக்கிறவர்களுடன்

அந்நியோந்நியம் கொண்டீர்கள்; ஸிவிலியன்களோடும் கலந்து பேசினீர்கள்; பொதுஜனங்களில் பற்பலவித ராஜீய அபிப்பிராயமுடைய பிரபலஸ்தர்களையும் தாங்கள் தருவித்துப் பேசினீர்கள்; ஆனால் தங்களிடம் நெருங்காமலிருந்தவர்கள் காந்திஜியைப் பின்பற்றுபவர்களான காங்கிரஸ் வாதிகள்தான். அதன் பிறகு நாம் மற்றும் சில சமயங்களில் கலந்து பேசியபோது தாங்கள் காந்திஜிக்கு ராஜீய உலகில் உண்மையாகச் செல்வாக்கிருக்கிறதாவென்ற விஷயத்தில் சந்தேகப்பட்டதுண்டு. அதோடு காங்கிரஸைப் பின்பற்றுவோர் குறைந்துவிட்டதாகவும் தாங்கள் அபிப்பிராயப்பட்டீர்கள். இதிலிருந்து எனது ஆலோசனையைத் தாங்கள் புறக்கணித்து வருவதாகவும், தங்களுக்குத் தவருக விஷயங்களைப் பிறர் சொல்லி வருவதாகவும் நான் உணர்ந்தேன். அதன்மேல் காந்திஜி இந்தியாவில் சீக்கிரத்தில் பொதுவான ஒரு இயக்கத்தை ஆரம்பிப்பாரென்றும், அதை அடக்க தங்கள் எண்ணத்துக்கு விரோதமாகவும் அடக்குமுறைகளைக் கையாளவேண்டிய துரதிர்ஷ்டம் தங்களுக்கு வந்து வாய்க்குமென்றும் நான் கூறினேன். நான் ஒருவனே அவ்விதம் சொல்லியதால் அதைத் தாங்கள் பூரணமாக அங்கீகரிக்க மாட்டீர்களென்றும் எனக்குத் தெரியும்.

நான் 1927-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்குச் சென்றேன். அங்கும் அரசர் பெருமானிடம் மேற்சொன்ன விஷயங்களைச் சொன்னேன். லார்டு பார்க்கன்ஹெட்டிடமும் மற்றும் இங்கிலாந்திலுள்ள பிரபலஸ்தர்களிடமும் அவ்விதமே சொன்னேன். லார்டு பார்க்கென்ஹெட்டிடம் இந்திய அரசியல் திருத்த விஷயமாகப் பேசுகையில் உடனே பூரண ஜவாப்தாரியான ஆட்சிமுறை இந்தியாவுக்கு வழங்கப்படாவிடில் பிரயோஜன மில்லையென்றும், அதிலும் இனித் தாமதம் செய்தால் நிலைமை நெருக்கடியாகி இரண்டு நாடுகளுக்கும் உள்ள அந்நியோந்நியம் குறையுமென்றும் கூறினேன். இந்தியாவின் பாதுகாப்பு சம்பந்தமாகவுள்ள கஷ்டத்தை அவர் எடுத்துச் சொன்னார். நான் "மனமுண்டானால் வழியுண்டு" என்று அதற்குப் பதில்சொன்னேன். இங்கிலாந்து மாத்திரம் சில நிபந்தனைகளுக்குட்பட்டு 5 வருஷத்துக்குப் போதுமான உத்தியோகஸ்தர்களை அனுப்ப ஒப்புக்கொண்டால் இந்தியாவின் பாதுகாப்பு விஷயத்தில் இருந்துவருவதாகச் சொல்லப்படும் கஷ்டம் நீங்கிவிடுமென்றும், காலதாமதமின்றி காங்கிரஸ் திருப்தியடையக்கூடிய வழியில் இந்தியப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கா விட்டால் 1921-ம் வருஷத்தில் ஏற்பட்டதுபோன்ற ஒத்

துழையாமை இயக்கமும் சட்டமறுப்பு இயக்கமும் அதிக பலமாக 1930-ம் வருஷத்திலும் ஆரம்பமாகுமென்றும், அதைச் சமாளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுமென்றும் நான் அப்பொழுது அவரிடம் கூறினேன்.

இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு நான் வந்தவுடன் இந்த விஷயங்களையெல்லாம் உங்களிடம் சொன்னேன். இதற்கு இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு வெள்ளையர்களே அடங்கிய ஸைமன் கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட எனக்கு மிக்க வருத்தமும் ஆச்சரியமும் உண்டாயிற்று. நான் கூறிய யோசனைகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்குக்கு ஒப்பாக முடிந்தனவென்று நான் நினைத்துக்கொண்டேன். என் நாட்டினரில் மிகப் பெரும்பான்மையோர் அந்தக் கமிஷனைப் பஹிஷ்கரிப்பதென முடிவு செய்தனர். நானும் அந்த சமயத்தில் பஹிஷ்காரக் கிளர்ச்சியில் என் நாட்டினருடன் கலந்துகொள்ள விரும்பி தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட எண்ணினேன். இதற்கிடையில் ராஜப்பிரதிநிதி என்றமுறையில்லாமல் சொந்த நண்பர் என்ற ஹோதாவில் தங்களுடன் நான் இதைப்பற்றி யோசித்தபோது ராஜிநாமாச் செய்யவேண்டாமெனதாங்கள் எனக்கு யோசனை சொன்னீர்கள்.

நானும் அதை ஏற்றுக்கொண்டு, பஹிஷ்கார இயக்க சம்பந்தமாக என் நிலைமையை விளக்கி பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை அனுப்பி னேன். பஹிஷ்கார இயக்கம் பெருவாரியா கப் பரவி விசேஷ வெற்றியுடன் முடிந்தது. அதைக் கண்டபின்தான் முதன் முதலாகத் தாங்கள் நான் சொல்லிவந்த விஷயங்களில் ஏதோ உண்மை யிருக்கிறதென்று உணர்ந்தீர் கள். தங்களுக்குத் தெரிந்தவரை இந்தியாவின் நிலைமையைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு, நேரில் அறிவிக்கவும், பஹிஷ்காரக்காரர்களை சமரஸப்படுத்த ஏதாவது ஒரு அறிக்கை வெளியாகும்படி செய்யவும் தாங்கள் இங்கி லாந்துக்குப் புறப்பட்டீர்கள். ஸைமன் கமி ஷன் பஹிஷ்காரத்தால் ஏற்பட்ட கஷ்டத் தைத் தவிர்க்க ஒருவழி கண்டுபிடிப்பதற்கா கத் தாங்கள் இங்கிலாந்துசெல்ல முடிவுசெய்த வுடனே எனது மனம் சற்று மாறுதலடைந் தது. இந்தியா தன் கோரிக்கையைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்கு உதவிசெய்யவே தாங்கள் வந்திருப்பதாகவும், உண்மையான சிநேக பாவத்துடன் இரண்டு நாடுகளும் வாழ்ந்துவரும்படி செய்வதற்குத் தாங்கள் வழிதேட உத்தேசித்திருப்பதால் தங்கள் முயற்சியின் பலனாக இந்தியா அதிகத் தியா கம் செய்யாமலே சுதந்திரம் பெற்றுவிடுமென்

றும் நான் எண்ணினேன். தங்களுக்கு இது விஷயமாக நல்லெண்ண மிருப்பதாகவே நான் நினைத்தேன். ஆனால் நீங்கள் இவ்விஷயத்தில் ஒரு எல்லைக் குட்பட்டுத்தான் காரியம் செய்யக் கூடுமென்பதையும், உங்களுக்குள்ள கஷ்டங்களையும் நான் அந்த சமயத்தில் சரிவர உணர்ந்துகொள்ளவில்லை. எப்படியும் தங்கள் முயற்சி வீணாகக் கூடாதென்று நான் ஒரு முக்கிய விஷயத்தில் தங்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டி, சென்ற வருஷம் மே மாதம் 2-ந்தேதி தாங்கள் ஸிம்லாவைவிட்டு இங்கிலாந்துக்குப் புறப்படும் சமயத்தில் தங்களைக் கண்டு காந்திஜியையும் பண்டித மோதிலால் நேருவையுங் கண்டு எவ்வித அறிக்கையை வெளியிட்டால் காங்கிரஸுக்குத் திருப்தியாகவிருக்கும் எனக் கேட்டறிந்து கொள்வது நலமென்று கூறினேன். தாங்கள் பண்டித மோதிலாலின் அபிப்பிராய மென்னவென்பதை ஒரு பொது நண்பர்மூலம் அறிந்துகொண்டதாகவும், அவர்களை அழைத்துப் பேச அவகாசமில்லை யென்றும் கூறினீர்கள். தங்களுடைய அந்தஸ்தைக் கருதியும், காங்கிரஸ் அதிகப் பிரதிநிதித்துவ முடையதா என்பதில் தங்களுக்குச் சந்தேக மிருந்துவந்ததால் காந்திஜிக்கு நாட்டிலுள்ள மதிப்பு இவ்வளவெனத் தாங்கள் தெரிந்துகொள்ளாமல்

இருந்தாலும் அப்போது எனது யோசனையைக் கேட்க மறுத்துவிட்டீர்கள் என்றே நான் எண்ணிக்கொண்டேன்.

தாங்கள் இங்கிலாந்தி லிருந்தபோது தங்களுக்கு நான் இரண்டு கடிதங்கள் எழுதினேன். எனக்கும் தங்களிடமிருந்து இரண்டு கடிதங்கள் கிடைத்தன. நான் என்னுடைய முதல் கடிதத்தில் மே மாதம் 25-ந்தேதி குறிப்பிட்ட விஷயங்களையே வற்புறுத்தி யிருந்தேன். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் எந்த வழியிலாவது காங்கிரஸ் தலைவர்கள் லண்டன் மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி செய்துவிட்டால் பாதிப் போராட்டம் தீர்ந்துவிடுமென்றும், காங்கிரஸ் தலைவர்களின் சரியான அபிப்பிராயத்தை முன்னதாக அறிந்து கொள்ளாமல் போனதுதான் தவறென்றும், ஆகவே ஒருக்கால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வெளியிடும் முறை காங்கிரஸ் தலைவர்கள் ஒப்புக்கொள்ள முடியாததாகவிருக்குமோ வென்று நான் அஞ்சுவதாகவும் குறிப்பிட்டிருந்தேன். இரண்டாவது கடிதத்தில் இங்கிலாந்துக்குப் புறப்படுமுன் தாங்கள் உண்மையில் முக்கியமானதாக விளங்கும் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுடன் நேருக்கு நேராகப் பேச முடியாமற்போனதுபற்றி எனக்கிருந்த வருத்தத்தை வெளியிட்டிருந்தேன். அதோடு

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் காந்திஜியை யாவது, பண்டித மோதிலால் நேருவையாவது அல்லது இருவரையுமாவது பூரணமாக நம்பி முதலில் அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு பிறகு அறிக்கையை வெளியிடவேண்டுமென்றும், சரியான சந்தர்ப்பத்தில் சரியான காரியத்தைச் சரிவரச் செய்யப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு தயங்கக்கூடாதென்றும், அந்தஸ்தை அதிகமாக அது பாராட்டிக் கொண்டிருக்கக்கூடாதென்றும் நான் குறிப்பிட்டிருந்தேன். தாங்கள் எனக்கு எழுதிய கடிதங்களில் நமது கஷ்டம் நீங்கி சமாதானம்ஏற்படுவதற்கான வழியைக் கண்டுபிடிக்கத் தங்களாலான முயற்சி செய்வதாகவும், எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டுவருவதற்கு அத்தியாவசியமாகச் செய்யவேண்டிய காரியங்களை அக்கரையுடன் செய்வதாகவும் கூறியிருந்தீர்கள். அக்டோபர்மாத முடிவில் தாங்கள் இந்தியாவுக்கு வந்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் சார்பாக ஒரு அறிக்கையை வெளியிட்டீர்கள். தாங்கள் அன்புடன் அந்த அறிக்கையின் நகல் ஒன்றையும் எனக்கு முன்னதாக அனுப்பியிருந்தீர்கள்.

அக்டோபர் அறிக்கை வெளியிடப்படுவதற்கு இரண்டு தினங்களுக்குமுன் நான் தங்களை டில்லியில் கண்டபோது இந்த அறிக்கை

வெளியிடப்பட்டால் காங்கிரஸ் வாதிகளுக்குப் பெருங் கலக்கம் ஏற்பட்டுவிடுமென்றும், இந்த அறிக்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டால் கல்கத்தா காங்கிரஸ் தீர்மானத்துக்கு விரோத மாகவும் பலதடவைகளில் சொல்லியுள்ள உறுதிக்கு மாருகவும் போகவேண்டியிருக்கு மென்றும், இந்த அறிக்கையை அவர்கள் நிரா கரித்துவிட்டால் மிதவாதிகள் முதலிய வர்கள் ஆதரவை அவர்கள் இழந்து விடுவார்களென்றும், மிதவாதிகள் இந்த அறிக் கையை அங்கீகரிப்பது நிச்சயமென்றும் நீங்கள் கூறினீர்கள். என்னைப் பொறுத்தமட்டில் சர்வ கட்சி மகாநாட்டை ஏற்றுக்கொள்ளவே நான் விரும்பினேன். ஆனல் அந்த மகாநாட்டின் அமைப்பு திருப்திகரமானதாக இருக்கவேண்டு மென்றும், ராஜீயச் சிறையாளருக்குப் பொது வாக மன்னிப்பு அளித்துவிட வேண்டுமென் றும் நான் விரும்பினேன். நானும் எனது காங் கிரஸ் நண்பர்களும் கோரிய யாவும் இந்த சர்வ கட்சி மகாநாட்டினுல் கிடைத்துவிடுமென்று எண்ணி நான் இந்த மகாநாட்டை ஏற்றுக் கொள்ள நினைத்ததாகக் கருதவேண்டாம். இம் மகாநாடும் பலனற்றுப்போய் நாட்டில் ஏமாற் றம் ஏற்பட்டுவிட்டால் காங்கிரஸ் பொதுஜன இயக்கத்தை ஆரம்பிக்க இன்னும் அதிக நியாயமிருக்குமென்று எண்ணியே அவ்விதம்

நான் அபிப்பிராயப்பட்டேன். அதோடு தாங்கள் இவ்விஷயத்தில் அக்கரையாக உண்மையுடன் அதிகமாக உழைப்பதைக் கண்டு மகாநாட்டைப் புறக்கணிக்கக்கூடாதென நான் நினைத்தேன். காங்கிரஸ் தலைவர்களில்லாமல் சர்வகட்சி மகாநாட்டை நடத்துவதென்பது கூடாத காரியம் என்றுமட்டும் அப்போதும் நான் நினைத்தேன்; அதனால்தான் காந்திஜியோடு கலந்து அறிக்கையைப்பற்றி ஆலோசிக்கும்படி தங்களுக்குச் சொன்னேன். டிசம்பர் மாதம் 7-ந்தேதி நான் தங்களுக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினேன்.

'அக்டோபர் அறிக்கையை காங்கிரஸ் கட்சியினர் அங்கீகரிக்காமல் மற்றக் கட்சிகள் அங்கீகரித்துவிட்டால் போதாது. மற்றக் கட்சிகள் அங்கீகரிப்பது ஒரு பெரிய காரியமல்ல. பல தடவைகளில் நான் இதைத்தான் தங்களுக்கு விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இப்போதும் அதையே சொல்லவிரும்புகிறேன். லாகூர் காங்கிரஸ் சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றி சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாதென்று தீர்மானித்துவிட்டால் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் கெட்ட காலந்தான். ஆகவே காங்கிரஸ் அவ்விதம் செய்யாமலிருக்க எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். இந்த சந்தர்ப்பத்திலும் நிலைமை

யைச் சமாளிக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர் மகாத்மாகாந்தி ஒருவர்தான் என்பதைத் தங்களுக்கு முன்னமே சொல்லியிருக்கிறேன். ஆகவே அவரைத் திருப்தி செய்து, அவருக்கு ஆதரவளிக்க தங்களாலானவரை முயற்சிக்க வேண்டுமென்று மீண்டுமொருமுறை கேட்டுக்கொள்ளுகிறேன்."

பம்பாயில் நான் தங்களைக் கண்டு பேசிய போது காந்திஜியும் அவரது சகாக்களும் காங்கிரஸில் சுயேச்சைக் கொள்கையை அங்கீகரிக்காமல் சற்றுப் பொறுத்துப் பார்க்கலாமெனச் சொல்வதற்கேற்றவாறு அவர்கள் திருப்தி அடையும்வண்ணம் லாகூரில் காங்கிரஸ் கூடு முன் ஏதாவது செய்யவேண்டுமென நான் கேட்டுக்கொண்டேன். அதற்கேற்ப டிசம்பர் 23-ந்தேதி டில்லியில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு காந்திஜியும் பண்டித மோதிலால் நேருவும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவுக்குக் குடியேற்றநாட்டு அந்தஸ்து வழங்குவதைப்பற்றிய திட்டத்தை சர்வகட்சி மகாநாட்டில் அங்கீகரிப்பார்களென்று உறுதி கூறினால்தான் காங்கிரஸ் சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொள்ள முடியும் என காங்கிரஸ் சார்பாக வெளியிட்டார்கள். தாங்கள் அந்த உறுதிகொடுக்க முடியாதெனச் சொல்லிவிட்டதால் கூட்டம் கலைந்துவிட்டது.

தாங்கள் உண்மையாக இந்தியப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க தங்களாலானவரை அரும்பாடுபடுகையில் தங்களை அவ்வித உறுதி கூறும்படி காந்திஜி கேட்டது அநியாயமென நான் அப்போது நினைத்தேன். ஆனால் பிறகு இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடந்த சம்பவங்களைப் பார்க்கையிலும், எர்ல் ரஸ்ஸல் செய்த பிரசங்கத்தை நோக்குகையிலும், ஜனவரி 25-ந்தேதி தாங்கள் இந்தியா சட்டசபையில் செய்த பிரசங்கத்தைக் கவனிக்கையிலும், பொதுஜனத் தலைவர்களிற் பலர் பலாத்காரத்தைத் தூண்டாமல் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டதற்காகவும் அடக்கு முறைக்கு ஆளாகிவருவதை எண்ணுகையிலும், கடைசியாகத் தங்கள் கவர்ன்மெண்டார் இந்தியா சட்டசபைத் தலைவர் கூறிய யோசனைக்கு நேர்மாறாகவும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் பலர் வரி சுதந்திர விஷயமாக வெளியிட்டுள்ள தத்துவத்திற்கு விரோதமாகவும் ஏகாதிபத்தியச் சலுகை முறையை ஏற்படுத்தியதைச் சிந்தித்துப் பார்க்கையிலும், நான் முதலில் கொண்ட கருத்து தவறென்றும், மகாத்மா செய்ததே சரியென்றும் தோன்றுகிறது.

தலைவர்கள் தங்களிடமிருந்து போனபிறகு லாகூரில் காங்கிரஸ் கூடியது. நாட்டின் லக்ஷியம் பூரண சுயேச்சையென அது தீர்மானித்

தது. அதை அடைவதற்கு ஒத்துழையாமை யையும் சட்டமறுப்பையும் கருவிகளாகக் கொள்ள அது தீர்மானித்தது. காந்திஜி தங்க ளுக்கு இறுதிக் கடிதம் எழுதினுர். சட்ட மறுப்பு இயக்கத்தையும் ஆரம்பித்துவிட்டார். நாட்டில் அவருக்கு விசேஷ ஆதரவு கிடைத்து வருகிறது. எனது நாட்டினரில் சிரேஷ்டர் களில் நூற்றுக்கணக்கானவர்கள் முன்வந்து சிறை புகுந்துவிட்டனர். இன்னும் ஆயிரக் கணக்கான பேர்கள் அவர்களைப் பின்பற்றத் தயாராக இருக்கின்றனர். அவசியம் நேர்ந்தால் அவர்கள் தேசத்திற்காக உயிரையும் அர்ப்ப ணம் செய்ய சித்தமாகவிருக்கிறுர்கள். 1921ம் வருஷத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இத் தகைய இயக்கத்தை அடக்கப் பலவழிகளை அனுஷ்டித்தது. காங்கிரஸ் வாதிகளில் ஆயிரக் கணக்கான பேரை அப்போதும் சிறைப்படுத்தி யது. ஆனுல் அந்த இயக்கத்தின் பலனுக நாட் டில் ஆச்சரியகரமான ஒரு எழுச்சி நிலைத்து விட்டது. நாடெங்கும் சுதந்திர தாகம் அதி கரித்துவிட்டது. ஸைமன் கமிஷன் விஷயமாக வும், காங்கிரஸ் தலைவர்களிடம் நம்பிக்கை வைக்காத விஷயமாகவும் தாங்கள் நடந்து கொண்ட மாதிரிக்கெல்லாம் காரணம் தங்க ளுக்கு யோசனை கூறுவோர் காங்கிரஸுக்கும் காந்திஜிக்கும் நாட்டில் அதிகச் செல்வாக்கில்லை

யெனத் தவருகச் சொல்லிவிட்டதேயாகும். தங்கள்மீது குற்றமில்லை. யாராயிருந்தாலும் சுற்றியிருப்பவர்கள் இந்தியாவின் ராஜீய நிலைமையைச் சரியாக உணர்ந்துகொள்ளாமல் தவருன ஆலோசனை கூறினுல் தாங்கள் நடந்து கொண்டதைப் போலவேதான் நடந்து கொள்ளுவார்கள்.

சென்ற சில தினங்களாக நடந்துவரும் சம்பவங்களைப் பார்த்தபின்னுவது தாங்கள் உண்மை யின்னதென உணர்ந்துகொண்டிருப்பீர்கள் என நான் நம்புகிறேன். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் எனது கடைசி யோசனையை வெளியிட விரும்புகிறேன். இரண்டு தேசங்களின் நன்மையையுங் கருதி தாங்கள் தங்கள் அந்தஸ்தையே அதிகமாகப் பாராட்டாமல் காந்திஜியைக் கூப்பிட்டு ஒரு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். பார்லிமெண்டே இவ்விஷயத்தில் முடிவு சொல்லக் கூடிய அதிகாரம் பெற்றிருப்பதால் அதற்கிடையில் ஒருவித முடிவும் செய்துவிட ஒருவருக்கும் அதிகாரமில்லையெனச் சொல்லலாம். ஆனுல் இவ்விதம் சொல்வதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. பார்லிமெண்டே கடைசியாக முடிவு செய்யும் அதிகாரமுடையதாக இருக்கட்டும். ஆனுலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தங்களைப் பொறுத்தமட்டில்

"எங்கள் யோசனைகள் இவைதான்" என்று சொல்லுவதில் என்ன ஆட்சேபமிருக்கிறது? காந்திஜியும் அவ்விதம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு சொல்லவேண்டுமென்றுதான் விரும்புகிருர். அப்போதுதான் சர்வகட்சி மகாநாடு கூடி மற்ற விஷயங்களை யோசித்து முடிவு செய்ய சவுகரியமாக இருக்கும். பிரிட்டிஷ் துருப்புகளும் உத்தியோகஸ்தர்களும் பொறுப்புவாய்ந்த மந்திரியின் பார்வையில் இந்தியாவில் இருப்பதுபற்றியும், அவர்கள் எத்தனை நாள் எவ்வித முறையில் இருப்பதென்ற விஷயத்தைப்பற்றியும், அந்நியநாட்டுவிஷயங்களைப் பற்றியுந்தான் மகாநாட்டில் யோசிக்க வேண்டுமேயொழிய மற்ற நிருவாக சம்பந்தமான காரியங்களை அங்கு யோசிக்கக்கூடாது. இரண்டுநாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து பேசி இவைபோன்ற விஷயங்களை ஒருவிதமாக முடிக்கவே மகாநாடு கூடவேண்டும்.

காங்கிரஸ் பூரண சுயேச்சையே தனது லட்சியமென்று முடிவு செய்துவிட்டது உண்மைதான். ஆனாலும் இப்போது இன்னும் அதிகத் தியாகமும் கஷ்டமுமின்றி இந்தியாவுக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பூர்ண ஜவாப்தாரியான ஆட்சி வழங்குவதாக பிரிட்டிஷார் முன்வந்து சொல்லும்பக்ஷத்தில் அதை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளுமென்றே நான் நம்

புகிறேன். அத்தகைய ஆட்சியே தற்காலத்தில் இந்தியாவுக்கு ஏற்றதாகவும் இருக்கக்கூடும். ஜனவரிமாதம் 21-ந்தேதி இந்தியா சட்டசபையில் கூறியபடி யாதொரு நிபந்தனையும் கட்டுப்பாடுமின்றி குடியேற்றநாட்டந்தஸ்து இந்தியாவுக்கு வழங்கப்படும் என்ற உறுதி இருந்தாலொழிய இரண்டு தேசங்களுக்கும் அந்நியோந்நியம் ஏற்படாது. இவ்விதத்தில் இந்தியப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முன்வரவேண்டும். அதிலும் தாமதமின்றி உடனே இவ்வழிக்கு வந்தால்தான் நாட்டில் பலரும் அதை அங்கீகரிப்பதற்கான ஒரு உணர்ச்சியிருக்கும். தாமதம் நேர்ந்தால் அதுவும் சந்தேகந்தான்.

சென்ற நான்கு வருஷங்களாக நான் இந்தியா சட்டசபையின் தலைவர் பதவியிலிருந்துகொண்டு தங்களுக்கு இந்த அபிப்பிராயத்தையே வற்புறுத்தி வந்திருக்கிறேன். லாகூர் காங்கிரஸுக்கு முன்னமே இவ்விதம் ஏற்பாடு செய்திருந்தால் மிக நன்மையாக இருந்திருக்கும். அப்போது அவ்விதம் செய்தாலும் ஒரு கட்சியார் பூரண சுயேச்சை வேண்டுமெனக் கேட்க முற்படுவார்கள். மேற்சொன்ன ஏற்பாட்டை அங்கீகரிக்கிறவர்களை அவர்கள் கண்டிப்பார்கள். ஆனால் இது குடும்ப சில்லரைச் சண்டையாகும்.

தாங்கள் எவ்விதக் கஷ்டமான நிலையிலிருக்கிறீர்க ளென்பதும் எனக்குத் தெரியும். இந்தியாவில் மீண்டும் சமரஸம் ஏற்படவேண்டு மென்று விரும்புகிறவர்கள் தங்களைவிட வேறு எவரும் இருக்கமாட்டார்கள் என்பதும் எனக்குத்தெரியும். தாங்கள் இந்நாட்டில் மகாஜனங்கள் எப்படியாவது சுதந்திரம் பெற உறுதி கொண்டிருக்கிறார்க ளென்பதைச் சமீப சம்பவங்களால் அறிந்திருக்கலாம். அதைக் கொண்டு தாங்கள் பெரு முயற்சி செய்து பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரை மேற்சொன்ன வழிக்குத் திருப்ப முயற்சிசெய்யவேண்டும்.

வேறு எந்தக் காரணத்தினலாவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரைத் தாங்கள் இந்த வழிக்குத் திருப்ப முடியவில்லையானல் 32-கோடி ஜனங்களின் நியாயமான உரிமையை மறுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள அடக்கு முறைக் கொள்கையில் தங்கள் பெயரை சம்பந்தப்படுத்திக் கொள்ளாமல் தங்களுடைய பதவியை ராஜிநாமாச் செய்துவிடவேண்டும். இதுவே என்னுடைய யோசனை. தாங்கள் இந்தியாவுக்கு நல்லூழியம் செய்யவே முயற்சிக்கிறீர்கள். தங்களுட னிருப்பவர்கள் தங்களுக்குச் சரியானபடி யோசனை சொல்லியிருந்தால் இன்னும் அதிக நன்மையை இந்தியாவுக்குச் செய்திருப்பீர்கள். ஆனல் இப்பொழுது ராஜி



7. ஸ்ரீமான் படேல் படுத்த படுக்கையாக விருக்கையில் சுபாஷ் பாபு கூடவிருந்து தேறுதல் சொல்லும் காட்சி

நாமாச் செய்து விடுவதாயின் அதனால் நீங்கள் இந்தியாவுக்குப் பேருழியம் செய்தவர்களாவீர்கள்.

அடக்கு முறையைக் கையாளப் போகின்றீர்களா? ராஜிநாமாச் செய்யப் போகின்றீர்களா? தாங்கள் இரண்டில் ஒன்றைத்தான் செய்யவேண்டும். ஏகாதிபத்தியத்தில் தங்களுக்குத் தற்சமயம் வெகு மதிப்பிருப்பது எனக்குத் தெரியும். இந்தியப் பிரச்சினையை உண்மையில் தீர்த்துவைக்க வேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கிருப்பதும் எனக்குத்தெரியும். இங்கிலாந்திலுள்ள பற்பல கட்சியினரிடமும் தங்களுக்குச் செல்வாக்கு அதிகமுண்டு. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் தங்களிடம் அதிக நம்பிக்கை வைத்திருக்கின்றனர். ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் தாங்கள் தைரியமாக முன் வந்து சந்தர்ப்பத்திற் கேற்றவாறு நடந்துகொண்டால் இரண்டு நாடுகளுக்கும் இதுவரை ஒருவரும் செய்யாத பேருழியத்தை நீங்கள் செய்தவர்க ளாவீர்கள்.”

ஸ்ரீமான் படேல் ராஜிநாமாச் செய்துவிட்டதை அறிந்து தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் தலைவர்கள் அவருக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பினர். ராஜப்பிரதிநிதியின் பதிலைப்பற்றி ஸ்ரீமான் படேல் அபிப்பிராயங்

கூறுகையில் அதில் இர்வின் கை பட்டிருப்பதா கத் தெரியவில்லையென்று சொன்னார். அவர் ஸிம்லாவை விட்டுப் புறப்படுகையில் ஸிம்லா காங்கிரஸ் கமிட்டியார் அவரை ஊர்வலமாக ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று வழியனுப்ப விரும்பினர். ஆனால் ஜில்லா போலீஸ் சூப்பரின் டெண்டெண்ட் காங்கிரஸ் கமிட்டியின் காரிய தரிசியைக் கூப்பிட்டனுப்பி லைசென்ஸில்லாமல் மால் பக்கமாக ஊர்வலம் செல்லக்கூடா தென்று எச்சரிக்கை செய்தார். ஆனால் அவர் ஊர்வலத்தை நடத்துவதென்று தீர்மானித்து விட்டதாகச் சொல்லிவிட்டு வந்து ஸ்ரீமான் படேலின் அபிப்பிராயத்தைக் கேட்டார். அவ ரும் அதற்குத் தயாரென்று சொல்லவே ஊர் வலத்திற்கு சன்னத்தம் செய்யப்பட்டு விட்டது. கடைசிக் கட்டத்தில் போலீஸ் அதிகாரி அங்கு வந்து ஸ்ரீமான் படேல் கவர்ன்மெண்டு உத்தியோ கஸ்தராக இருந்ததை முன்னிட்டு ஊர்வலத்தை அனுமதிப்பதாகத் தெரிவித்தார். இது பெரும் வெற்றியென ஸிம்லா காங்கிரஸ் வாதிகள் கருதி யதில் ஆச்சரியமில்லை.

## பிஷாவர் விசாரணை

1930-ம் வருஷத்தில் ஒத்துழையாமை இயக் கம் ஆரம்பித்ததும் பிஷாவரில் மதிப்பு வாய்ந்த சில முஸ்லீம் தலைவர்களை எல்லைப்புற கவர்ன் மெண்டார் கைது செய்வித்தனர். அவர்களை

விடுவிக்கும்படி கேட்டுக் கொள்ளுவதற்காக ஏராளமான ஜனங்கள் போலீஸ் ஸ்டேஷன் முன்பு கூடினர். இதிலிருந்து அவர்கள் கலகம் செய்யக் கூடியிருப்பதாக அதிகாரிகள் நினைத்துக்கொண்டு விட்டனர். துருப்புகளை அவர்கள் கூப்பிட்டனுப்பினார்கள். கவச மோட்டார்கள் ஸ்தலத்திற்கு வந்தன. அவைகள் வரும் வேகத்தில் ஜனக்கூட்டத்திலிருந்த சிலர்மீது ஏறி விட்டன வென்று சொல்லப்பட்டது. மேலும், துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது. இதனால் உயிர்ச்சேதம் அதிகம் ஏற்பட்டது. இதைப்பற்றி விசாரணை செய்விக்க காங்கிரஸ் காரியக் கமிட்டியார் ஸ்ரீமான் படேலின் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தனர். இந்த சம்பவ சம்பந்தமாக பொது ஜனங்களுக்கு மிகுந்த உணர்ச்சி ஏற்பட்டிருந்ததால் கவர்ன்மெண்டாரும் விசாரணை செய்விக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் காங்கிரஸ் நியமனம் செய்த கமிட்டியார் விசாரணை செய்வதை அவர்கள் விரும்பவில்லை. எனவே, அந்தக் கமிட்டியார் எல்லைப்புற மாகாணத்திற்குள் அடிவைக்கக் கூடாதென்று கவர்ன்மெண்டார் தடுத்துவிட்டனர். ஆயினும் ஸ்ரீமான் படேல் கமிட்டியார் ராவல் பிண்டியி லிருந்துகொண்டு சாட்சிகளை விசாரணை செய்து முடிவாக யாதாஸ்தை வெளியிட்டனர். ஆனால் அந்த யாதாஸ்தைப் பிரசுரிக்க முடியாமல்

கவர்ன்மெண்டார் தடுத்து விட்டதால் அந்த சம்பவங்களைப்பற்றி படேல் கமிட்டியாருடைய முடிவென்னவென்பதைப் பொது ஜனங்கள் அறிந்துகொள்ள முடியாமற் போய்விட்டது.

## ஸ்ரீமான் படேலுக்குத் தண்டனை

ஸ்ரீமான் படேல் சுயேச்சையாக விருந்து கொண்டு உருவான வேலைகளையே செய்து வர வேண்டுமென்று பலரும் விரும்பினர். ஆனால் கவர்ன்மெண்டார் கையாண்டு வந்த கடுமையான அடக்கு முறைகளின் பலனாக மதிப்பு வாய்ந்த காங்கிரஸ் தலைவர்களிற் பலர் ஒருவர் பின்னொருவராகச் சிறை சென்றுகொண்டிருந்ததால் காங்கிரஸ் காரியக்கமிட்டியில் ஸ்தானங்கள் காலியாகிக்கொண்டு வந்தன. அந்தக் கமிட்டி சட்ட விரோதமானதென்றும் கவர்ன்மெண்டார் விளம்பரப்படுத்தி யிருந்தனர். இவ்வித நிலைமையில் காரியக்கமிட்டியில் அங்கத்தினர் ஸ்தானத்தை யேற்று, அதன் பலாபலன்களுக்கு ஆளாவதே தேசத்திற்குத் தாம் செய்யவேண்டிவ கடமை யென்று ஸ்ரீமான் படேல் கருதி அக்கமிட்டியில் ஸ்தானமேற்றார். அந்தக் கமிட்டியின் கூட்டம் 1930-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் டில்லியில் டாக்டர் அன்ஸாரியின் பங்களாவில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. ஸ்ரீமான் படேல் டில்லி சென்று கமிட்டியின் கூட்டத்திலும் பிரசன்னமாக விருந்தார். அதிகாரிகள் அந்தக் கூட்

டத்திற்காகப் பிரசன்னமாக விருந்த அங்கத்தினர்களைக் கைது செய்தனர். மாஜிஸ்திரேட் முன் வழக்கு விசாரணைக்கு வந்தது. சத்யாக்ரஹ தர்மத்தை யொட்டி தாம் குற்றவாளிதானென்று ஸ்ரீமான் படேல் ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்திரேட்டின் வேலை சுளுவானதாகி விட்டது. அவர் ஸ்ரீமான் படேலுக்கு 6 மாத தண்டனை விதித்தார். 35 கோடி மகா ஜனங்கள் தலையிலெழுதும் இந்திய பார்லிமெண்டின் தலைவராக இருந்த அவர், உள்நாட்டு அங்கத்தினராகிய ஸர் ஜேம்ஸ் கிரீராரும், இந்தியாவிலுள்ள அரசருடைய சேனைகளின் தலைவரான மேன்மை தங்கிய ஸர் வில்லியம் பர்ட்வுட்டும் சட்டசபையில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி செய்த அவர், நிர்வாகிகளுடன் ஏற்பட்ட ஒவ்வொரு தகராறிலும் வெற்றிபெற்ற அவர், பொதுஜன சாவதான மசோதாவும், ரிசர்வ் பாங்கி மசோதாவும் ஒழுங்கு முறைக்கு விரோதமானவைகளென்று தீர்ப்பு செய்ததன் மூலம் கவர்ன்மெண்டார் திடுக்கிட்டுப் போகும்படி செய்த அவர், தம்மைத் தாக்கியதற்காக "டைம்ஸ் ஆப் இந்தியா" முதலிய ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் சுவதோஷ ஸ்வீகரணம் செய்யும்படி செய்த அவர், ஒரு சாமான்ய மாஜிஸ்திரேட்டால் தண்டனை விதிக்கப்பட்டார். அதிலும் ராஜப்பிரதிநிதிக்கு அடுத்தபடியாக மிகுந்த கௌரவமான

ஸ்தானத்தை அவர் சுமார் 5 வருஷ காலம் வகித்திருந்த இடத்திலேயே அவருக்கு இவ்விதம் தண்டனை விதிக்கப்பட்டது இந்தியாவில் இருந்து வரும் நிலைமை விசதமாகத் தெரியும்படி செய்யக்கூடியதாக விருந்தது. மாஜிஸ்திரேட் தீர்ப்பைக் கூறியதும் ஸ்ரீமான் படேல், "இங்கிலாந்தில் பார்லிமெண்டின் தலைவர்கள் அந்தப் பதவியிலிருந்து விலகும்பொழுது அவர்களுக்குப் பட்டமும் பென்ஷனும் கொடுப்பது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் இந்தியாவில் சுயேச்சை புத்தியுள்ள சட்டசபைத் தலைவர்களுக்கு சிறையே ஏற்ற இடமென்பது அதிகாரிகளுடைய அபிப்பிராயமாக இருந்து வருகிறது" என்று கசப்புடன் தெரிவித்ததை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது பொருந்தும். தண்டனைக்குப் பிறகு அவரை அதிகாரிகள் அம்பாலா சிறைக்கு மாற்றினார்கள். ஆனால் சட்டசபைத் தலைவராக இருந்த காலத்தில் அதிகாரிகளால் ஏற்பட்ட தொந்தரவின் பலனாகக் கவலை அதிகரித்து அவருடைய தேக சுகம் கெட்டுப் போயிருந்த நிலைமையில் சிறை வாசத்தின் நிர்ப்பந்தங்களும் கஷ்டங்களும் உள்ளூற அவருக்கு இருந்துவந்த வியாதியின் சின்னங்கள் வெளிப்படும்படி செய்ய ஆரம்பித்து விட்டன. ஆகையால் அவருக்கு ஏற்பட்டுள்ள வியாதி யென்னவென்பதைக் கண்டறிந்து, தகுந்த சிகிச்சையைச்

செய்விப்பதற்காக அவரை அதிகாரிகளே கோயமுத்தூர் சிறைக்கு மாற்ற வேண்டியதாயிற்று. அங்கும் அவருடைய தேக ஸ்திதி குணமடையாததால், தண்டனை காலம் முடியு முன்பே, அதாவது 1931-ம் வருஷம் ஜனவரி மாதத்திலேயே, அவரை கவர்ன்மெண்டார் விடுதலை செய்துவிட வேண்டியதாயிற்று. அவர் தகுந்த சிகிச்சை செய்து கொள்ளுவதற்காக நேரே பம்பாய் சென்றார். சிறையிலிருந்து இவ்விதம் ஒருவர் விடுதலையாகிச் செல்லுகையில் அவருடைய ரயில்வேக் கட்டணத்தை கவர்ன்மெண்டார் கொடுக்கவேண்டும். ஸ்ரீமான் படேல் மிகுந்த கௌரவம் வாய்ந்த இந்தியா சட்ட சபையின் தலைவர் பதவியை வகித்திருந்தவராதலால், அவர் முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய அந்த வகுப்பு ரயில்வேக் கட்டணத்தைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இரண்டாவது வகுப்புக் கட்டணத்தையே அதிகாரிகள் கொடுத்தார்கள். இது சம்பந்தமாக ஸ்ரீமான் வெங்கட்டரமணய்யங்காருக்கும் கவர்ன்மெண்டுக்கும் கடிதப் போக்குவரத்து நடைபெறவேண்டியது அவசியமாயிற்று. ஸ்ரீமான் படேல் பம்பாய் சென்று தமது குடும்ப வைத்தியரிடம் சிகிச்சை செய்துகொண்டும் அவருடைய தேகஸ்திதி குணமடையவில்லை. அவருடைய குடும்ப வைத்தியர்களும் அவர் வியன்னு சென்று

நிபுணர்களிடத்தில் சிகிச்சை செய்துகொள்ள வேண்டுமென்று யோசனை சொன்னார்கள். இந்தியாவில் போராட்டம் கடுமையாக விருந்துவந்த நிலைமையில் தாய்நாட்டை விட்டுச் சென்றுவிட அவருக்கு விருப்ப மில்லையாயினும், சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் எழுத வேண்டுமென்னும் தர்மத்தையொட்டி வைத்தியர்களுடைய வார்த்தைகளைத் தள்ள முடியாமல் அவர் 1931-ம் வருஷம் பிப்ரவரி மாதக் கடைசியில் வியன்னா சென்றார். இதனால் இப்பால் காந்திஜிக்கும் லார்டு இர்வினுக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளிலாவது, அதன் பலனாக ஏற்பட்ட உடன்படிக்கை விஷயத்திலாவது அவர் சம்பந்தப்பட முடியாமற் போய்விட்டது. ஆனால் அந்த உடன்படிக்கை இந்தியாவுக்குத் திருப்திகரமானதில்லை யென்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொள்ள அவர் சிறிதும் தயங்கவில்லை. வியன்னாவில் அவர் தகுந்த நிபுணர்களைக் கொண்டு சஸ்திர சிகிச்சை செய்துகொண்டதில் அவருடைய தேகஸ்திதி சிறிது குணமடைந்தது. காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் பலனாக இரண்டாவது சர்வகட்சி மகாநாட்டில் காங்கிரஸின் பிரதிநிதியாக மகாத்மா காந்தி கலந்துகொள்ளத் தீர்மானித்து லண்டன் சென்றார். ஸ்ரீமான் படேல் தமது தேகஸ்திதி சிறிது குணமடைந்ததும் லண்டன் சம்பாஷணை

களிலும் மகாநாட்டிலும் மகாத்மா காந்திக்கும் மற்றவர்களுக்கும் யோசனை சொல்லுவதற்காக லண்டன் சேர்ந்தார். ஆனால் வைத்தியர்கள் அவர் அதிகத் தீவிரமாக எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாதென்று விதித்திருந்ததாலும், மகாத்மா காந்தி முன்னேற்பாடாக ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டு சென்றிருந்ததாலும், அவர் அதிக உதவிசெய்ய முடியாமற் போயிற்று. அந்த மகாநாட்டு முடிவில் மகாத்மா இந்தியா திரும்பியபொழுது ஸ்ரீமான் படேலும் அதேகப்பலில் அவருடன்கூடவே இந்தியா வந்து சேர்ந்தார். ஆனால் மகாத்மா இந்தியாவில் காலடி வைக்குமுன் ஐக்கிய மாகாணங்களில் வரிகொடா இயக்கமும், எல்லைப்புற மாகாணத்தில் தொல்லையும் ஏற்பட்டுவிட்டன. ராஜப்பிரதிநிதி அவசரச் சட்டங்களை இயற்றி வைத்துவிட்டார். மதிப்பு வாய்ந்த தலைவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டு விட்டனர். இவைகளைப்பற்றி விவாதித்து திருப்திகரமான முடிவுக்கு வருவதற்காகத் தமக்கு பேட்டி அளிக்கவேண்டுமென்று ராஜப் பிரதிநிதியை மகாத்மா வேண்டிக்கொண்டார். அவ்விதம் அவர் பேட்டி யளிக்காவிடில் காங்கிரஸ் என்ன செய்ய வேண்டுமென்று காரியக் கமிட்டியார் சில தீர்மானங்களைச் செய்திருந்தனர். ராஜப்பிரதிநிதி மகாத்மா காந்திக்குப் பேட்டி கொடுக்க மறுத்துவிட்டார். மற்று

மொருமுறை மகாத்மா செய்துகொண்ட வேண்டுகோளும் பலனற்றதாகி விட்டது. ராஜப் பிரதிநிதி ஒன்றின்மேலொன்முகப் பல அவசரச் சட்டங்களை இயற்றி வைத்துவிட்டார். ஸ்ரீமான் படேலும் பாபு சுபாஷ் சந்திரபோஸனும் இந்தியா வின் லட்சியம் பூரண சுயேச்சையாகவே இருக்க வேண்டு மென்றும், அதைச் சிறிதளவும் விட்டுக் கொடுக்கக் கூடாதென்றும் ஒரு அறிக்கையை வெளியிட்டனர். பாபு சுபாஷ் சந்திரபோஸ் பம் பாயிலிருந்து வங்காளத்திற்குத் திரும்பிச்சென்று கொண்டிருக்கையில் வழியில் அவரை அதிகாரி கள் அவசரச் சட்டத்தின்கீழ் கைதுசெய்துவிட் டார்கள். ஸ்ரீமான் படேலையும் 1932-ம் வருஷம் ஜனவரி மாதம் 6-ந்தேதி அவசர அதிகார அவ சரச் சட்டத்தின்கீழ் கவர்ன்மெண்டார் கைது செய்து, விசாரணைக்குக் கொண்டுவராமலே பாதுகாப்பில் வைத்துவிட்டனர். ஏற்கெனவே சிகித்ஸை செய்துகொண்டதில் முற்றிலும் குண மடையாம லிருந்த ஸ்ரீமான் படேலின் தேக நிலைமையானது மீண்டும் சிறைவாஸத்தால் அதிகக் கோளாறடைந்தது. கவர்ன்மெண்டார் மறுபடியும் தேகஸ்திதியை உத்தேசித்து சிகிச் சைக்காக ஐரோப்பா செல்ல அவருக்கு மார்ச்சு மாதம் 5-ந்தேதி அனுமதி கொடுத்தனர். சிறையி லிருந்து அவரை நேராகக் கப்பலுக்கு அழைத் துச் சென்றனர். அதிகப் பேர்களுடன் பேசவும்

அவர்கள் அனுமதியளிக்கவில்லை. ஸ்ரீமான் படேல் மீண்டும் வியன்னா சென்று சிகித்ஸை செய்து கொண்டு இங்கிலாந்துஅடைந்து, மிஸ்டர் தெவல ராவின் அழைப்பின்மேல் டப்ளின் சென்று அவருடன் சம்பாஷித்துவிட்டு, அமெரிக்காவி லுள்ள இந்திய நண்பர்கள் பலருடைய வேண்டு கோளின்பேரில் அங்கு இந்தியாவின் கட்சியைப் பிரசாரம் செய்வதற்காக 1932-ம் வருஷம் நவம் பர் மாதம் சென்றார். வைத்தியர்கள் இவ்வித வேலையை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஸ்திதியில் அவருடைய தேகநிலைமை இருந்துவரவில்லை யென்று எச்சரிக்கை செய்தும் தேச நலத்தைக் கருதி அதை அவர் அலக்ஷியம் செய்துவிட்டார்.

## அமெரிக்காவில் பிரசாரம்

அமெரிக்காவில் அரசர்களும் கண்டு பொறா மைப்படக் கூடிய வரவேற்பு அவருக்குப் பல விடங்களிலும் அளிக்கப்பட்டது. பல அரசாங் கங்களின் கவர்னர்கள் அவரை வரவேற்று உப சாரம் செய்ததோடு, அவருக்கு விருந்துகளும் நடத்திவைத்தார்கள். மிஸ்டர் ஹென்றி போர்டு அவருடைய உபயோகத்திற்காகத் தமது மோட் டார்களைக் கொடுத்தார்.

அவருக்கு அங்கு நடந்த உபசாரங்களைப்பற்றி யும் அவர் செய்த வேலைகளைப்பற்றியும் ரெவ ரெண்ட் ஜே. டி. சுந்தர்லாந்து 1933-ம் வருஷம்

மார்ச்சு மாதத்திய "மாடர்ன் ரிவியூ"ப் பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருந்தார்:—

இந்தியாவின் வீர புருஷரும், அதன் சுதந்திரத்திற்காக அஹிம்ஸா வழியில் போராடும் தீர புருஷருமான ஸ்ரீமான் வி. ஜே. படேல் 1932-ம் வருஷம் நவம்பர் மாதம் இங்குவந்தார். இந்தியாவில் சிறைப்பட்டுக் கிடந்ததாலும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக நான்கு தடவை சஸ்திர சிகிச்சை செய்து கொள்ளவேண்டியிருந்ததாலும் அவருடைய தேகம் நலிந்திருந்தபோதிலும், அவர் பல இடங்களுக்கும் சென்று இந்தியாவுக்காகஅரிய சேவை செய்துவருகிறார். இந்தியாவிலிருந்து வந்த வேறு எவருக்கும் பெரிய இடங்களிலும் இவ்வளவு மரியாதையும் வரவேற்பும் கிடைத்ததில்லை. நியூ யார்க், பிலடெல்பியா, பால்டிமோர், பாஸ்டன், டெட்ராயிட், வாஷிங்டன் முதலிய பெரிய நகரங்களின் மேயர்கள் அவரை அதிக மரியாதையுடன் வரவேற்றார்கள். அவருடைய படங்களும், அவர் நீண்ட காலமாக இந்தியாவுக்குச் செய்துள்ள அரிய சேவையின் விவரங்களும் பிரபலப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன. கலாசாலைகளிலும், நாடக மேடைகளிலும், பெரிய மண்டபங்களிலும், மாதாகோயில்களிலும், பல்வேறு சங்கங்களிலும் அவர் செய்த பிரசங்கங்

களில் சுயவாட்சிக்கு இந்தியாவுக்குள்ள பாத்தியதையை அவர் தெளிவாக எடுத்துச்சொன்ஞர். இந்தப் பெரியாரின் விஜயம் இங்கு வெகுகாலம் வரை ஞாபகத்தி லிருந்துவரும். அவருடைய பிரசங்கங்களும், பத்திரிகைகளுக்கு அவர் கொடுத்துள்ள பேட்டிகளும் எங்கும் மிகுந்த உணர்ச்சியை உண்டுபண்ணியிருக்கின்றன. புராதன காலத்தில் மிகுந்த சீரும் சிறப்பும் வாய்ந்திருந்த அவருடைய தேசமானது, தன்னைத்தானே ஆட்சிசெய்து கொள்ளுவதற்குச் சக்தியுடைய தென்றும், அதற்கு உடனே சுதந்திரத்தைக் கொடுக்க வேண்டுமென்றும் இங்குள்ளவர்கள் நினைக்கும்படி அவர் செய்துவிட்டார்.”

அவர் பல முக்கிய ஸ்தலங்களுக்கும் சென்று இந்தியாவின் நிலைமையை விவரித்தார். ஒரு கூட்டத்தில் இந்தியா சட்டசபையின் மாஜி தலைவரான ஸர் பிரெடரிக் ஒயிட்டும் அவரும் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஸர் பிரெடரிக் ஒயிட் இந்தியாவானது பிரிட்டிஷ் ஆட்சியால்விசேஷஅனுகூலம் அடைந்திருக்கிறதென்று சொன்னபோது அதை ஸ்ரீமான் படேல் தகுந்த ஆதாரங்களுடன் மறுத்துக் கூறினுர். மற்ருெரு சமயத்தில் இந்தியாவின் நிலைமையைப்பற்றி மாஜி இந்தியா மந்திரியான மிஸ்டர் வெட்ஜ்வுட் பென்னும் ஸ்ரீமான் படேலும் பேசுவதற்கு ஏற்

பாடு செய்யப்பட்டது. ஸ்ரீமான் படேல் பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பிரதிகூலங்களை எடுத்துச்சொல்லி, சர்வகட்சி மகாநாட்டு ஏற்பாடு வெறும் மாயைதானென்றும், இந்தியாவை ஏய்க்கும் வித்தைதானென்றும் கூறினார். மிஸ்டர் வெட்ஜ்வுட்பென் ஸ்ரீமான் படேலின் குற்றச்சாட்டுகள் சிலவற்றை ஒப்புக்கொண்டபோதிலும் சர்வகட்சி மகாநாட்டுக்கு ஏற்பாடுசெய்த தொழிற்கட்சி கவர்ன்மெண்டார் அந்தரங்க சுத்தியுடனேயே அவ்விதம் செய்தார்களென்றும், அதில் கலந்துகொள்ளுவதால் இந்தியா அனுகூலமடையலாமென்றும் சொன்னார். இந்தக் கூற்றுக்களுக்கு ஸ்ரீமான் படேல் ஆணித்தரமான பதிலளித்தார். கடைசியாக ஸ்ரீமான் படேலின் அபிப்பிராயத்தையே கூட்டத்தினர் ஏற்றுக்கொண்டனர்.

இவ்விதம் அமெரிக்காவில் அவர் எவ்விதம் இந்தியாவினுடைய கட்சியைப் பிரசாரம் செய்தாரென்பதை ஆகாயவசனி மூலம்அவர் செய்த ஒரு பிரசங்கத்தின் சங்கிரஹத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

> நான் சுதந்திர தேசத்திலும், தனிப்பட்டவர்கள் சுதந்திரத்திற்காகவும் அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காகவும் போராடிய ஜார்ஜ் வாஷிங்டன், ஆப்ரஹாம் லிங்கோன் இவர்கள் பிறந்தநாட்டிலும் இப்பொழுது

இருக்கிறேன். ரத்த சம்பந்தத்தாலும், நெருங்கிய பந்துத்துவத்தாலும் நீங்கள் பிரிட்டனுடன் பிணைபட்டிருப்பதை நான் அறிவேன். ஏகாதிபத்தியப் பித்து எப்பொழுதும் பிரிட்டனுடைய குணமாக இருந்துவந்திருக்கிறது. அமெரிக்க மகாஜனங்களுடைய சுதந்திரத்திற்கு அது எப்பொழுதும் எதிரிடையாகவே இருந்தது. நீங்கள் சுதந்திரப் போராட்டத்தின்மூலமாகவே சுயேச்சை வாழ்வை அடைந்தீர்கள். பூர்விக சம்பந்தத்தில் உங்களுக்குப் பற்று இருந்தபோதிலும் சுதந்திரத்தில் அதைக்காட்டிலும் அதிகப் பிரியம் உங்களுக்கு இருந்துவருகிறது. எனவே, ஏகாதிபத்திய உணர்ச்சியினால் ஏற்பட்டுவரும் விபரீதங்களை நான் தாராளமாக உங்களுக்குச் சொல்லக்கூடும்.

இதனால் இந்தியாவிலுள்ள நாங்கள் அவதிப்படுகிறோம். எங்களுடைய அவதியானது உலகத்தையும் மறைமுகமாகப் பாதிக்கிறது. இந்த வியாதியின் விஷமானது உலகம் முழுவதும் பரவிக்கொண்டுவருகிறது. உலகச் சுணக்கத்திற்கு இதுவே முக்கியக் காரணம். சமீப கால உதாரணத்தை எடுத்துக்கொள்ளுவோம். கிரேட் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் சகோதரத்துவ மிருந்துவருவதாக அடிக்கடிச் சொல்லப்பட்டு வந்தபோதிலும், உலகிலுள்ள

ஆங்கிலம் வழங்கும் இந்த இரண்டு நாடுகளை யும் நெருங்கப் பிணைத்துவிடுவதே நோக்க மென்று அடிக்கடிக் கூறப்பட்டு வந்தபோதி லும், ஏகாதிபத்திய வெறியே ஒட்டாவா மகா நாட்டுக்குக் காரணம். இந்த ஏகாதிபத்திய மகாநாடானது சந்துஷ்டிவாய்ந்த குடும்பக் கூட்டமன்று. இது பக்கத்திலுள்ள தேசங்க ளுடன் பொருளாதாரப் போராட்டத்தைத் தீவிரமாக எவ்விதம் நடத்துவதென்று முடிவு செய்துகொள்ளுவதற்காகக் கூடிய யுத்த சபையேயாகும். இப்பொழுது ஏற்பட்டிருக் கும் என்றுமில்லாத விதமான பொருளாதாரச் சுணக்கத்தால் உலகிலுள்ள ஒவ்வொரு தேச மும் மிகுந்த கஷ்டங்களுக் காளாகியிருக்கை யில் ஒட்டாவாவில் பொருளாதாரப் போராட் டத்திற்கு விதை விதைக்கப்பட்டது.

ஏகாதிபத்தியத்திற் குட்பட்ட தேசங்களுக் குள் புதிய சம்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளு வதே ஒட்டாவா மகாநாட்டின் நோக்கமென்று வெளிப் படையாகச் சொல்லிக்கொள்ளப்பட் டது. ஆனால் அதன் உண்மை நோக்கம் வேறு. முதலாவதாக, இந்தியாவின்மீதுள்ள பிடிப் பை பிகுப்படுத்திக் கொள்ளவும், பிரிட்டிஷ் சாமான்களை வாங்குவதற்கு எதிரிடையாக அங்கு ஏற்பட்டிருக்கும் இயக்கத்தை நசுக்க வும் இது உத்தேசிக்கப்பட்டது. இரண்டாவ

தாக, யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு எதிரிடையான காரியத்தைச் செய்வதற்காக இது உத்தேசிக்கப்பட்டது. இதற்காக எவ்வித முறை அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்பது நன்றாகத் தெரிந்ததுதான். முதலாவதாக, கானடாவுக்குப் போலிச் சலுகைகளை அளித்து, அந்நிய நாடுகளுடன் அதற்கு இருந்துவரும் வியாபார சம்பந்தத்தை அறுத்துக்கொள்ளும்படி செய்துவிடுவது உத்தேசம். இயற்கை அமைப்பினாலும், பொதுவான பழக்க வழக்கங்களாலும் கானடாவானது உங்களுடைய தேசத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. உங்களுடைய தேசத்துடன் இருந்துவரும் வியாபார சம்பந்தத்தை கானடா குறைத்துக்கொள்ளும்படி செய்வதற்காகவே ஒட்டாவா மகாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இது ஆஸ்திரேலியாவுக்கும் பொருந்தும். ஒட்டாவா வரிச் சலுகைகள் உங்களுடைய வியாபாரத்திற்கு எதிரிடையாகவே உத்தேசிக்கப்பட்டவை. ஆர்ஜென்டைனும் இதர தென் அமெரிக்க நாடுகளும் உங்களுடன் வைத்துக்கொண்டிருக்கும் வியாபார சம்பந்தத்தைக் கத்தரித்துக் கொள்ளும்படி செய்வதற்காக கானடாவையும் ஆஸ்திரேலியாவையும் கிரேட் பிரிட்டன் உபயோகித்துக்கொள்ளப் போகிறது. ஐரோப்பாவிலும் இவ்வித

முறையையே அனுஷ்டிக்கப் போகிறார்கள். ஸ்வீடன், டென்மார்க்கு, ஹாலந்து, பெல்ஜியம் இவைகள் உங்களிடமிருந்தும், ஜெர்மனியிடமிருந்தும் அதிக சாமான்களை வாங்கும் தேசங்களாக இருந்து வருகின்றன. தங்களுடைய விவசாயப் பொருள்களை உங்களுக்கு விற்றே அவைகள் காலக்ஷேபம் செய்ய வேண்டும். இப்பொழுது செய்துகொள்ளப் பட்டு வரும் ஏற்பாடுகளால் உங்களுடைய வியாபாரத்திற்கு எவ்வளவு பாதகம் ஏற்படுமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

எங்களுடைய ஆலைத்தொழிலும், கப்பல் கட்டும் தொழிலும், உலோகத் தொழிலும் நசித்துப் போய்விட்டன. வித்தை, வர்த்தகம், உற்பத்தி இவைகளில் பெருத்திருந்த எங்களுடைய தேசமானது விவசாய தேசமாகிவிட்டதோடு, அந்த விவசாயத் தொழிலும் க்ஷீணதசையி லிருந்துவருகிறது. லட்சக்கணக்கான ஏகர் விஸ்தீரணமுள்ள பூமிகளில் ஏகருக்கு 20 டாலர் வருமானங் கிடைப்பதும் கஷ்டமாகவிருக்கிறது. தாய்நாட்டில் நாங்கள் ஒடுக்கப்பட்டு வருவதோடு, குடியேற்ற நாடுகளிலும் எங்களுடைய தேசத்தினர் பலவித அவமானங்களுக் குட்படுத்தப்பட்டு வருகிறார்கள். நாங்கள் அங்கு சமூக வாழ்வில் பறையர்களாகவும், பிரஜா உரிமைகளில்லாதவர்களாகவும்

இருந்து வருகிறோம். கிரமமான வழிகளிலும் பூசொத்தை நாங்கள் குடியேற்ற நாடுகளில் வாங்குவதற்கில்லை. வெள்ளையர்கள் கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்காக நாட்டை வளப்படுத்துவதற்கு எங்களை அழைத்துப்போனார்கள். அந்த வேலை முடிந்ததும் எங்களை அவமதித்து வெளியேற்றுகிறார்கள். குடியேற்ற நாடுகளில் இந்தியர்களுக்கு இருந்துவருவதைக் காட்டிலும் நூறு மடங்கு அதிக சுதந்திரமுடையவர்களாக அந்நிய நாட்டினர் இருந்து வருகிறார்கள்.

சர்வதேச, ஏகாதிபத்திய மகாநாடுகளில் எங்களுடைய வாயை அவர்கள் அடைத்து விடுகிறார்கள். எங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு தங்களுடைய காரியங்களை அவர்கள் சாதித்துக்கொள்ளுகிறார்கள். இந்த மகாநாடுகளுக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தனுப்ப எங்களுக்கு சுதந்திரம் கொடுக்காமல் தங்களுடைய விருப்பப்படி நடத்துகொள்ளக் கூடியவர்களை அவர்கள் நியமனம் செய்தனுப்பி விடுகிறார்கள்.

உலகின் இப்போதைய தொல்லைகளுக்கு, ஏகாதிபத்தியப் பித்தே முக்கிய காரணம். என்னுடன் எனது தேசத்திற்கு வாருங்கள். என்னுடைய தேசச் சாளர வழியாக உலக நிலைமையை உற்று நோக்குங்கள்.

அதன் மூலம் மூலப்பொருள்களின் விலை இப்பொழுது ஏன் குறைவாக இருந்துவருகிற தென்பதை நீங்கள் அறிந்துகொள்ளுவீர்கள். ஏகாதிபத்தியப் பித்தானது மனித சமூகம் பின்னோக்கிச் செல்லும்படி செய்து வருகிறது......எங்களுடைய க்ஷேமம் மட்டில் எங்கள் தேசம் விடுதலை பெறுவதைப் பொறுத்ததாக இருக்கவில்லை. உலகின் கதிமோக்ஷமும் அதைப் பொறுத்திருக்கிறது.

சரீரம் துர்ப்பலமான ஸ்திதியிலிருந்தும் அவர் ஊரூராகச்சென்று பிரசாரம் செய்தது அவருடைய தேகஸ்திதி சீர்கேடடைந்து விடும்படி செய்துவிட்டது. அதனால் மறுபடியும் சிகிச்சைக்காக ஸ்ரீமான் படேல் வியன்னாவுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. அங்கு அவர் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த காலத்திலும் இந்தியாவின் நினைவே எப்பொழுதும் அவருக்கு இருந்துவந்தது. இந்தியாவில் நடந்துவந்த சம்பவங்களைப்பற்றி அவர் அப்போதைக்கப்போது அபிப்பிராயந் தெரிவித்துவந்தார். பலவழிகளிலும் கவர்ன்மெண்டைத் தாக்குவதன் மூலமாக அவர்கள் தேசியக் கோரிக்கைகளுக்கு இணங்கிவரும்படி செய்யக்கூடுமென்ற திட்டமான அபிப்பிராயம் அவருக்கு இருந்துவந்ததால், சட்டசபைப் பிரவேசம் உள்ளிட்ட தீவிரமான வேலைத் திட்டமொன்றை அவர்

தயார் செய்திருந்தார். பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டியில் கலந்து கொள்ளுவதற்காக லண்டன் சென்றிருந்த இந்தியப் பிரதிநிதியான ஸ்ரீமான் ஏ. ரங்கஸ்வாமி அய்யங்காரும் அந்த ஜோலியி னிடையே ஸ்ரீமான் படேலைப் பார்க்கச்சென்றார். இருவரும் அந்த திட்டத்தைப்பற்றி விவாதித் தனர். அந்த திட்டத்தை இந்திய மகாஜனங்கள் ஏற்றுக்கொண்டு தீவிரமான வேலையில் இறங்கும் படி செய்வதற்காக சீக்கிரத்தில் இந்தியாவுக்குத் திரும்பிவிடுவதற்கு ஸ்ரீமான் படேல் துடித்துக் கொண்டிருந்தார். சென்ற செப்டம்பர் மாதம் 25-ந்தேதி ஹிந்துப் பத்திரிகைப் பிரதிநிதிக்குப் பேட்டி அளித்தபோதும் அந்த ஆர்வத்தை அவர் தெரிவித்துக்கொண்டார். ஆயினும் அவ ருடைய தேகஸ்திதி குணமடையாததால் அங்கு மேற்கொண்டும் இருந்து சிகிச்சை செய்து கொள்ள வேண்டியதாயிற்று. இவ்வித நிலைமை யிலும் அவர் அல்லும் பகலும் அறுபது நாழிகை யும் இந்தியாவைப்பற்றி சிந்தித்த வண்ண மாகவே இருந்தார். இந்தியா சம்பந்தமாக ஸ்விட்ஜர்லாந்தில் ஓர் இடத்தில் ஏற்பாடு செய் யப்பட்டிருந்த கூட்டத்திற்கு வைத்தியர்களு டைய ஆலோசனையையும் மீறி அவர் சென்ற இடத்தில் வியாதி திரும்பிக்கொண்டுவிட்டது. அவரைப் போலவே தேக அசௌக்கியங் காரண மாகச் சிறையிலிருந்து விடுதலையடைந்து, சிகிச்

சைக்காக மேனாடுகளுக்குச் சென்றிருந்த ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ் தமது தேக அசௌக்கியத்தையும் சிறிதும் பொருட்படுத்தாமல் அவருடன் கூடவே விருந்து, அவசியமான எல்லா சிச்ருஷைகளையும் செய்து வந்தார். நிபுணர்களான ஆஸ்திரிய, ஸ்விட்ஜர்லாந்து வைத்தியர்களும், தாதிகளும் எவ்விதப் பிரதிப் பிரயோஜனத்தையும் சிறிதும் எதிர்பாராமல் அவருக்குத் தங்களாலியன்ற எல்லாவித சிகிச்சைகளையும் சிச்ருஷைகளையும் செய்தனர். ஸ்ரீமான் படேலும் நமனை எதிர்த்துத் தீவிரமாகப் போராடி வந்தார். அவர் பிணிவாய்ப்பட் டிருப்பதில் மிகுந்த கவலைப்படுவதாகவும், அவர் சீக்கிரம் குணமடைந்து தாய்நாடு திரும்பவேண்டுமென்று பிரார்த்திப்பதாகவும் இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பலர் அவருக்குத் தந்திகள் அனுப்பியது அவருக்கு மிகுந்த தைரியத்தைக் கொடுப்பதாக விருந்தது.

## லார்டு இர்வினின் அநுதாபம்

லார்டு இர்வினும் லண்டனிலிருந்து அவருக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் லார்டு இர்வின் சொல்லியிருந்ததாவது :—

"எனது அன்புள்ள படேல்,

"நீங்கள் அசௌக்கியமாகவிருப்பதாகச் சிறிது காலத்திற்கு முன் பத்திரிகைகளில் படித்தேன்.

உங்களுடைய தேகஸ்திதியைப்பற்றி மிஸ் ஹாரிஸனிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது. அதைப் பார்த்ததும் உங்களுக்கு இந்தக் கடிதமெழுத வேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. நாம் ஒருவரையொருவர் இந்தியாவில் அறிந்து கொள்ளக்கூடிய நிலைமையிலிருந்ததற்குப் பிறகு அநேக சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. பொது விஷயங்களில் நாம் வெகுதூரம் பிரிந்திருக்க வேண்டியிருக்குமென்றே நான் அஞ்சுகிறேன். ஆயினும் நீங்கள் பிணிவாய்ப்பட்டிருக்கையில் லேடி இர்வின் சார்பாகவும், என் சார்பாகவும் எங்களுடைய உண்மையான அநுதாபத்தை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவதை அது தடுத்துவிடுவதற்கில்லை. உங்களுக்குக் கஷ்டகால மேற்பட்டிருக்கிறதென்பதை நான் அறிவேன். நீங்கள் சரீரத்துன்பம் அதிகம் அனுபவித்து வருவதாகவும் தெரிகிறது. நான் அடிக்கடி உங்களைப்பற்றி நினைத்ததுண்டு."

## ஸ்ரீமான் படேலின் பதில்

அன்பு ததும்பும் இக் கடிதத்திற்கு தேக அசௌக்கியத்தினால் ஸ்ரீமான் படேல் நேரில் பதில் எழுத முடியவில்லை. அதனால் அவர் சார்பாக ஸ்ரீமான் சுபாஷ்சந்திர போஸ் பின்வரும் பதிலை அனுப்பினார் :—

"அன்புள்ள லார்டு இர்வின்,

"நீங்கள் மிகுந்த அன்புடன் அனுப்பிய அநுதாபக் கடிதத்திற்காக லேடி இர்வினுக்கும் உங்க

ளுக்கும் தமது மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளும்படி ஸ்ரீமான் படேல் விரும்புகிருர். அவர் சொல்லொணுக் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் இந்த சமயத்தில் பக்ஷத்துடன் அவரைப்பற்றி லேடி இர்வினும் தாங்களும் நினைத்தது உங்களுடைய அன்பைக் காட்டுகிறது. அவர் உங்களுக்கு நேர்முகமாக பதில் எழுதமுடியாத நிலைமையி லிருந்துவருவ தற்கு மிகவும் வருந்துகிருர். ஆயினும் சிறிது குணமடைந்ததும் கடிதம் எழுதுவதாகத் தங்களுக்கு அறிவிக்க வேண்டுகிருர். உங்களுடைய கடிதமானது அவருக்கு மிகுந்த திருப்தியைக் கொடுத்திருக்கிறது. அவருடைய நிலைமையைப் பொறுத்தமட்டில் அது வரவர க்ஷீணித்துவருகிறதென்பதையும், நம்பிக்கைக்கு அதிக இடமில்லையென்பதையும் நான் வருத்தத்துடன் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது.”

## ஆத்மாவின் பிரிவு

இவ்வித நிலைமையில் அவருடைய தேக ஸ்திதியில் சிறிது அபிவிருத்தி காணப்படுவதாக நடுவில் கிடைத்த செய்திகள் இந்தியர்களுக்கு ஆறுதலையும் அவர் சுகஜீவியாகச் சீக்கிரத்தில் இந்தியாவுக்குத் திரும்பிவிடுவாரென்ற நம்பிக்கையையும் அளிப்பனவாகவிருந்தன. ஆனல் திடீரென்று வேறு கோளாறுகள் தலைக்காட்டிவிட்டன. இனி

அவர் பிழைப்பது கஷ்டமென்று வைத்தியர்களும் தெரிவித்துவிட்டார்கள். படிப்படியாக அவருடைய ஜீவநாடியும் ஒடுங்கி வந்துவிட்டது. 1933-ம் வருஷம் அக்டோபர்மாதம் 22-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 1-30 மணிக்கு அவர் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பை அடைந்து விட்டார். அவருடைய சரீரத்திலிருந்து ஆவி பிரியும்வரையில் அவருக்கு நல்ல பிரக்ஞை இருந்து வந்தது. இந்தியா சுதந்திரம் பெறவேண்டுமென்ற எண்ணமே அவர் மனதில் அந்த நிமிஷத்திலும் ஓங்கியிருந்தது. இறப்பதற்கு முன் அவர் விடுத்த கடைசிச் செய்தியிலும் அதையே அவர் தெரிவித்தார்:—

> என்னுடைய தேச மகாஜனங்களுக்கும் உலகின் பல பாகங்களிலுமுள்ள இந்தியாவின் நண்பர்களுக்கும் எனது ஆசியைத் தெரிவியுங்கள். நான் இறக்குமுன் இந்தியா சீக்கிரத்தில் சுயேச்சை அடையவேண்டுமென்றே பிரார்த்தித்துக்கொண் டிருக்கிறேன்.

ஸ்ரீமான் படேலுடைய அந்திய காலத்தில் அவருக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்த பாபு சுபாஷ்சந்திர போஸ், மேனாட்டுவைத்தியர்கள், தாதிகள் இவர்களுடைய சேவையை இந்தியா என்றும் மறப்பதற்கில்லை. அவருடைய கடைசி விருப்பப்படி தகனக்கிரியைகளுக்காக அவருடைய உடலத்தை ஸ்ரீமான் சுபாஷ் சந்திர



8. ஸ்ரீமான் படேல் இறந்து போனதும் எடுத்த படம்

போஷ் பதனப்படுத்தி இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். ஸ்ரீமான் படேலின் மனைவி வெகு காலத்திற்கு முன்பே இறந்துவிட்டதாலும், அவருக்குப் பிள்ளைகள் இல்லாததாலும், அவருடைய அருமைச் சகோதரரான ஸர்தார் வல்லபாய் படேல் தம்முடைய ஈமக்கிரியைகளைச் செய்ய வேண்டுமென்று அவர் தெரிவித்துக்கொண்டதை மகாத்மா காந்திக்கும், அவருடைய நண்பர்கள் சிலருக்கும் ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ் அறிவித்தார். ஸர்தார் வல்லபாய் படேல் சிறையிலிருந்து வருவதாலும், தமையனுருடைய ஈமக்கிரியைகளைச் செய்வதற்காக தம்மை விடுதலை செய்யவேண்டுமென்று அவர் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளக் கூடியவரில்லை யாதலாலும், ஸர்தாரின் புதல்வரே இந்தச் சடங்குகளைச் செய்யவேண்டுமென்று மகாத்மா ஒரு அறிக்கையை வெளியிட்டார். ஸ்ரீமான் படேலின் பூதவுடம்பை வரவேற்று ஊர்வலமாக அதை எடுத்துச்சென்று கடைசிச் சடங்குகளை நிறைவேற்றிவைப்பதற்காக மிஸ்டர் ஹார்னிமன் தலைமையில் பம்பாயில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. தகனக்கிரியைகளை நடத்திவைப்பதற்கு ஸ்ரீமதி ஸரோஜினியின் தலைமையில் மற்றொரு கமிட்டியும் நியமனம் செய்யப்பட்டது. சௌபாத்தி கடற்கரையில் தகனக்கிரியைகளை நடத்த அனுமதிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டா

ரைக் கமிட்டியார் வேண்டிக்கொண்டனர். லோக மான்ய திலகர் விஷயத்தில் பம்பாய்க் கவர்ன் மெண்டார் இந்த அனுமதியைக் கொடுத்திருந்த னர். ஆனல் இப்பொழுதும் அவ்விதம் செய் வது ஒரு சம்பிரதாயத்தை ஏற்படுத்தி விடுவ தாக இருக்குமாதலாலும், வேறு பலர் விஷ யத்திலும் அவ்வித வேண்டுகோள் செய்துகொள் ளப்படுவதற்கு இடமேற்பட்டுவிடு மாதலாலும், அனுமதிகொடுக்க முடியாதென்று பம்பாய்க் கவர்ன்மெண்டார் ஒரு அறிக்கையை வெளியிட்டு விட்டனர். இந்த முடிவைப் புனராலோசனை செய்யவேண்டுமென்று கமிட்டியார் மறுபடியும் வேண்டிக்கொண்டதும் பிரயோஜனப்படவில்லை. இந்தியா சட்டசபை அங்கத்தினர்களில் பலரும் ராஜப்பிரதிநிதிக்குச் செய்துகொண்ட வேண்டு கோளும் அவ்விதமே பலனற்றதாகி விட்டது. கடைசியாகக் கமிட்டியார் சோனுப்பூர் ஸ்மசா னத்தில் தகனக்கிரியைகளை நடத்துவதென்று முடிவுசெய்ய வேண்டியதாயிற்று. கவர்ன்மெண் டின் பிடிவாதத்திஞல் காலஞ்சென்ற பெரியா ருடைய கடைசி விருப்பங்களில் ஒன்று நிறை வேற முடியாமற் போய்விட்டது.

## சகோதரருக்கு முகவிழியும் இல்லை

தகனக் கிரியைகளை நடத்துவதற்காக இறந்து போன பெரியாருடைய சகோதரரான சர்தார் வல்லபாய் படேலை விடுதலை செய்யவேண்டு

மென்று பிரமுகர்களிற் பலர் பம்பாய்க் கவர்ன் மெண்டாரை வேண்டிக்கொண்டனர். அரிய சகோதரரை இழந்துவிட்டதால் துக்க சாகரத்தில் மூழ்கி யிருக்கக்கூடிய ஸர்தார் படேலுக்கு வேறு எந்த விஷயத்திலும் இந்த சமயத்தில் புத்தி பிரவர்த்திப்பது அசாத்தியமாக விருக்கக் கூடிய காரணம்பற்றி அவரை எவ்வித நிபந்தனையுமின்றி கவர்ன்மெண்டார் விடுதலை செய்வார்களென்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் இதற்கும் தங்களாலியன்ற இடையூறை விளைவிப்பதற்குவாய்த்த சந்தர்ப்பத்தை கவர்ன்மெண்டார் நழுவ விட்டுவிட விரும்பவில்லை. ஆகையால் தகனக்கிரியைகளுக்காக விடுதலைபெற்றிருக்கும் சில தினங்களில் ராஜீயப் பிரசாரத்தில் ஈடுபடுவதில்லை யென்றும், கெடு முடிவில் ஆஜராகி விடுவதாகவும் மற்றும் அவர் உறுதிமொழி கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் நிபந்தனைகளை விதித்தனர். இந்தக் கிரியைகளைச் செய்து முடிப்பதற்காகத் தம்மை விடுதலை செய்விக்க எவரும் பிரயத்தனம் செய்வதையே விரும்பாமலிருந்த தீர புருஷரான ஸர்தார் படேலா அவமானகரமான இந்த நிபந்தனைகளுக்குச் சம்மதிக்கிறவர்? ஆகவே, அவர் உறுதிமொழிகளைக் கொடுக்க முடியாதென்று திட்டமாகச் சொல்லிவிட்டார். இவ்விஷயத்திலும் கவர்ன்மெண்டார் காட்டிய சின்னபுத்தியி

ளுல் சகோதரருடைய முகவிழியைப் பெறவும், அவருடைய தகனக்கிரியைகளை நடத்தவும் ஸர்தார் படேலால் முடியாமற்போயிற்று.

## பிரேத வரவேற்பு

காலஞ்சென்ற பெரியாரின் பிரேதத்தை அவருடைய கடைசி வேண்டுகோளின்படி இந்தியாவில் தகனம் செய்வதற்காக ஸ்ரீமான் சுபாஷ் சந்திரபோஸ் தகுந்த வைத்தியர்களைக் கொண்டு அதை நன்ருகப் பதனப்படுத்தி "நார்க்குந்தா" வென்னும் கப்பலில் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தாரென்று முன்னரே படித்திருக்கலாம். அந்தக் கப்பல் ஏடன் அடைந்தபோது அங்கு வதியும் இந்தியர்கள் சவப்பெட்டிக்கு மாலைகள் சாத்தித் தங்களுடைய மரியாதையைக் காட்டிக் கொண்டார்கள். நவம்பர் மாதம் 9-ந்தேதி மாலை 4-மணிக்கு கப்பல் பம்பாய்த் துறைமுகம் அடையுமென்று எதிர்பார்க்கப்பட் டிருந்தது. இந்தியாவுக்காகக் கடைசிவரை அஞ்சா நெஞ்சுடன் போராடிய வீரரிடத்தில் பம்பாய் வாசிகள் தங்களுக்கு இருந்துவரும் மரியாதையைக் காட்டிக் கொள்ளுவது சாத்தியமாகும்படி செய்யும் பொருட்டு அந்நகரிலுள்ள பல பெரிய காரியாலயங்களின் அதிகாரிகளும் 9-ந்தேதி பிற்பகலும் 10-ந்தேதியும் தங்களுடைய காரியாலயங்களை மூடிவிட்டனர். அன்று பகல் 2-மணி முதல் நகரின் நாஞபாகங்களிலிருந்தும் துறைமுகத்தை

நோக்கி ஜனங்கள் செல்ல ஆரம்பித்துவிட்டனர். கப்பல் தாமதித்து வந்ததால் மாலை 5-மணிக்கு பாக்கியிருந்த காரியாலயங்களும் மூடப்பட்டதும் அவைகளின் உத்தியோகஸ்தர்களும் துறைமுகப் பக்கம் திரும்பி விட்டார்கள். மோல் ஸ்டேஷனுக்கு அருகாமையில் எங்கும் ஒரே ஜனக் கூட்டமாக விருந்தது. தெருக்களில் இடமில்லாமல் ஜனங்கள் அருகிலுள்ள கட்டிடங்கள்மீதும் ஏறி நின்றுகொண்டிருந்தனர். ஜனக்கூட்டத்தில் கஷ்டமொன்றும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும், பொதுஜன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறாமல் தடுக்கவும் 400 போலீஸ் கான்ஸ்டேபில்களும் கழிகள் தாங்கிய உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தனர்.

ஸ்டேஷனுக்குள் ஜனக்கூட்டம் சேர்ந்துவிடாமல் அவர்கள் வழியில் நின்றுகொண்டு, அனுமதிச் சீட்டு பெற்றிருந்தவர்களையே உள்ளேபோக விட்டார்கள். அவ்வித அனுமதிச்சீட்டு பெற்றிருந்த ஸ்ரீமதி ஸரோஜனிதேவி, மிஸ்டர் பி. ஜி. ஹார்னிமன், ஸ்ரீமான்களான ஜம்னுதாஸ் மேட்டா, கே. எப். நாரிமன், டாக்டர் ஹார்திகர், வி. எப். ஆண்டிரூஸ், டாக்டர் தசமுகர், புருஷோத்தம்தாஸ் திரிகம்தாஸ், டாக்டர் படேல், டாக்டர் தேசாய், சங்கரபாய் அமீன், தாதுபாய் தேசாய், ஜனுப்களான ஹுசேன்பாய் லால்ஜி (மாஜி மேயர்), சாக்ளா, முகம்மது சுலேமான்,

ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்யாயா முதலிய பல சமூகத் தலைவர்களும், தலைவிகளும் பலபொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் ஸ்டேஷனுக்குள் சென்று கப்பல் வருகையை எதிர்நோக்கியிருந்தார்கள். துக்கக்குறியைக் காட்டிக்கொள்ளுவதற் கறிகுறியாக ஸ்ரீமதி ஸரோஜினிதேவி வெள்ளைக் கதர்ப்புடவை கட்டிக்கொண்டிருந்தார். கப்பல் நங்கூரம் பாய்ச்சியதும் தகனக்கிரியைக் கமிட்டியின் தலைவியான ஸ்ரீமதி ஸரோஜினி தேவி, மிஸ்டர் ஹார்னிமன், ஸ்ரீமான்களான ஜம்னாதாஸ் மேட்டா, கே. எப். நாரிமன், மகன்லால் தேசாய் முதலியவர்களும், இறந்தவரின் பந்துக்களும், பத்து தொண்டர்களும் கப்பலில் ஏறினார்கள். சவப்பெட்டி இறக்கப்படும்வரை அந்தக் கப்பலில் வந்தவர்கள் கீழே இறங்க அனுமதிக்கப்படவில்லை.

ஸ்ரீமான் படேலின் பிரேதம் 7 அடி நீளமும் $3\frac{1}{2}$ அடி அகலமுமுள்ள ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. மேல்மூடி வெள்ளைக் கதர் சால்வையால் மூடப்பட்டிருந்தது. சவப்பெட்டியுடன் கூடவந்த ஸ்ரீமான் கோவர்த்தனதாஸ் படேல், ஸ்ரீமதி ஸரோஜினி தேவி முதலியவர்களை அது வைக்கப்பட்டிருந்த குளிர்ச்சியான கீழ்த்தளத்திற்கு அழைத்துச் சென்றார். சவப்பெட்டியை அவர்கள் தரிசித்ததும் அப்படியே சிறிதுநேரம் மௌனமாக நின்று வணக்கஞ்

செலுத்தினர். பிறகு அதை மேல் தளத்திற்குக் கொணர்ந்து அங்கிருந்து பாரஞ்சாம்பியின் மூலமாகக் கரையி லிறக்கினார்கள். அவ்விதம் இறக்குவதற்காகத் தூக்கியபோது கப்பல் உத்தியோகஸ்தர்கள் வரிசையாக நின்று வணக்கத்தைக் காட்டிக்கொண்டனர். சவப்பெட்டியை பிளாட்பாரத்தில் சில நிமிஷங்கள் வைத்தனர். அங்குக் கூடியிருந்தவர்கள் அதன்மீது மாலைகள் போட்டு மரியாதை செய்தார்கள். ஹிந்து (சென்னை), கேசரி (புனா) பத்திரிகைகளின் ஆசிரியர்கள், உத்தியோகஸ்தர்கள் இவர்கள் சார்பாகவும் மாலைகள் போடப்பட்டன. பிறகு வெளியிலிருந்த முனிஸிபல் ஆம்புலன்ஸ் லாரியில் ஜி. டி. ஆஸ்பத்திரிக்கு சவப்பெட்டியை எடுத்துச் சென்றார்கள். இரவில் அது அங்கேயே வைக்கப்பட்டிருந்தது.

## கடைசி யாத்திரை

1933-ம் வருஷம் நவம்பர் மாதம் 10-ந்தேதி பம்பாயில் தென்பட்ட காட்சியானது பல வருஷங்கள்முன் லோகமான்ய பாலகங்காதர திலகர் பிரேத ஊர்வலக் காட்சியை ஞாகப்படுத்துவதாக இருந்தது. அன்று காலை 7-மணிக்கு பிரேத ஊர்வலம் புறப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது அதற்கு முன்னதாகவே சவப்பெட்டி ஜி. டி. ஆஸ்பத்திரியிலிருந்து "ஏஷியன் பில்டிங்கு"க்குக் கொண்டுவரப்பட்டு விட்டது.

பிரேதத்தைப் பெட்டியிலிருந்து எடுத்து ஹிந்துக்கள் சம்பிரதாயப்படி திறந்த வண்ணம் கொண்டுபோக வேண்டுமென்று பலரும் விரும்பினர். ஆனால் அதிகாரிகள் அனுமதி கொடுக்காததால் சவப் பெட்டியை அப்படியே ஊர்வலமாக எடுத்துச் செல்லவேண்டிய தாகிவிட்டது. எனவே, ஊர்வலம் புறப்படுமுன் தொண்டர்கள் அப்பெட்டியைப் புஷ்பங்களால் அலங்கரித்தனர். அவர்களைத் தவிர தகனக்கிரியைக் கமிட்டியின் அங்கத்தினர்களும், நகர பிரமுகர்கள் பலரும் அங்குவந்து சவப்பெட்டிக்கு மாலைகள் சாத்தினார்கள். ஊர்வலம் சரியாக 7-20-மணிக்கு ஆரம்பமாயிற்று. சவப்பெட்டி ஒரு லாரியில் வைக்கப்பட்டது. அதில் ஸ்ரீமான் படேலுடைய பெரிய உருவப்படமும் வைக்கப்பட்டிருந்தது. சவப்பெட்டியானது புஷ்பங்களில் புதைந்து கிடந்ததென்று சொல்லுவது மிகையாகாது. முன்னணியில் ஸ்திரீகள் சென்றனர். அவர்களுக்கடுத்தாற்போல் சவப்பெட்டியை ஏற்றியிருந்த லாரி சென்றது. அதில் ஸ்ரீமதி ஸரோஜினி தேவியும், ஸர்தார் படேலின் புதல்வியான ஸ்ரீமதி மணிபென் படேலும் வீற்றிருந்தனர். அந்த லாரியைத் தொடர்ந்து தலைவர்கள் சென்றனர். அவர்களுக்குப் பின்னால் ஒரு மைல்தூரம் வரையில் சுமார் 2 லட்சம் ஜனங்கள் தொடர்ந்து வந்தனர். வழிநெடுக ரஸ்தாக்களின் இருபுறங்

களிலுமுள்ள நடைபாதைகளிலும் வீடுகளின் மாடிகளிலும் ஏராளமாக ஜனங்கள் நின்று புஷ்ப மாரி பொழிந்த வண்ணமிருந்தனர். நாழிகை யாகவாகக் கூட்டமும் அதிகரித்துக்கொண்டிருந் தது. போலீஸாரும் கூடவே வந்துகொண்டிருந் தனர். தொண்டர்கள் இருபுறங்களிலும் அணி வகுத்துச் சென்றனர்.

ஹார்ன்பி ரஸ்தாவிலுள்ள ஓயிட் எவே லெயிட்லா கம்பெனிமுன் ஊர்வலம் செல்லுகை யில் நான்கு ஸ்திரீகள் ஓடிவந்து லாரியின் முன் பக்கத்தில் விழுந்தனர். சவப் பெட்டியைத் திறந்து பிரேதத்தை எல்லோரும் தரிசிப்பதற்கு அனுமதித்தாலன்றி ஸத்யாக்ரஹம் செய்யப் போவதாக அவர்கள் சொன்னார்கள். அவர்க ளுடைய அவாவைப் பூர்த்திசெய்து வைப்பது அசாத்தியமென்று ஸ்ரீமதி ஸரோஜினி தேவி, ஸ்ரீமதி மணிபென் படேல் முதலியவர்கள் சொல்லி அவர்களை சமாதானப் படுத்துவது பெருங் கஷ்டமாகிவிட்டது. ஊர்வலம் கார்ப் பொரேஷன் கட்டிடத்திற்குமுன் வந்ததும் நகர மேயரான டாக்டர் ஜாவேலும், நிரந்தரக் கமிட்டி யின் தலைவரான ஜனுப் ஜாபர்பாய் லால்ஜியும், மற்றும் பல கவுன்சிலர்களும் சவப்பெட்டிக்கு மாலைகள் சாத்தி மரியாதை செய்தனர். பல சங்கங்கள் சார்பாகவும் மாலைகள் போடப் பட்டன.

ஊர்வலம் போரிபந்தரிலிருந்து கிராபோர்டு மார்க்கெட் போய்ச்சேர அரைமணி நேரமாயிற்று. அங்கும் பலர் மாலைகள்போட்டு வணக்கஞ் செலுத்தினர். கல்பாதேவி ரோடில் ஊர்வலம் செல்லுகையில் கூட்டம் தாங்கமுடியாததாகி விட்டது. ஜனக்கூட்டம் வந்து மோதாமல் தடுப்பது தொண்டர்களுக்கு அசாத்தியமாகி விடும்போலிருந்தது. போலீஸாரும்உதவிசெய்து ஜனக்கூட்டம் வந்து நெரிக்காமல் தடுத்தனர். அங்கிருந்து புலேஷ்வார் போய்ச்சேருகையில் ஜனக்கூட்டம் இன்னும் அதிகரித்துவிட்டது. ரஸ்தாக்களிலுள்ளமரங்களிலும் ஜனங்கள்தொத்திக்கொண்டிருந்தனர். ஊர்வலம் ஒரு மைலுக்கு அதிக நீளமானதாக இருந்ததால் டிராம், வண்டிப் போக்குவரத்தை போலீஸார் நிறுத்திவிட வேண்டியதாயிற்று. கார்னிரோட், கிர்காம் ரோட், தாகூர்த்வார் ரோட், க்வீன்ஸ் ரோட் இவைகள் வழியாக ஊர்வலம் சென்று 11-20-மணிக்கு சோனுப்பூர் ஸ்மசானத்தை அடைந்தது.

தொண்டர்கள் மேலேயிருந்த கள்ளிப்பெட்டியைத் திறந்தனர். அதற்குள் சவப்பெட்டியிருந்தது. அதற்கு மாலை சாத்தப்பட்டிருந்தது. அதன்மேல் இந்தியா சட்டசபையின் மாஜி தலைவர் விட்டல்பாய்படேல் என்று எழுதப்பட்டிருந்தது. அதையுந் திறந்து பிரேதத்தை வெளியே எடுத்தனர். சவம் பந்தோபஸ்தாக வைக்கப்

பட்டிருந்ததால் சிறிதும் கெடாமல் அப்படியே இருந்தது. சவத்தின் கையில் பகவத்கீதை இருந்தது. அதை மேடைமீது எடுத்து வைக்குமுன் ஸ்ரீமான் ஜம்னுதாஸ் மேட்டா அதன்மீது கங்கா தீர்த்தத்தைத் தெளித்து, திருப்பதியிலிருந்துவந்திருந்த சந்தணத்தையிட்டு, மதுராபுரியிலிருந்து வந்திருந்த துளசிமாலையையும் சாத்தினர். அதற்குப் பிறகு கடைசியாக தரிசனம்செய்ய பொது ஜனங்கள் உள்ளே அநுமதிக்கப்பட்டார்கள். ஸ்திரீகளும் புருஷர்களும், ஏழைகளும் தனவந்தர்களும், பெரியவர்களும் சிறுவர்களுமாக 7-லட்சம் பேர்கள் வரையில் 6-30 மணிக்குள் வந்து தரிசித்துவிட்டுப் போனர்கள். ஹிந்து, பார்ஸி, கிறிஸ்தவ, முஸ்லீம் சமூகங்களைச் சேர்ந்த ஸ்திரீகளில் 50,000 பேர்களுக்கு அதிகம் தரிசனத்திற்கு வந்துவிட்டுப் போனது குறிப்பிடத்தக்கது. எல்லாருடைய முகத்திலும் துக்கக் குறி தாண்டவமாடியது.

மாலை 7-மணிக்கு இறந்த பெரியாரின் பந்துக்களும், தொண்டர்களும் சந்தணக் கட்டையாலாகிய ஜதையின்மீது பிரேதத்தை எடுத்து வைத்தனர். பல சமூகங்களையும் சேர்ந்த தொண்டர்கள் பலர் அணிவகுத்து நின்று கடைசி மரியாதை செய்தனர்.

ஸ்ரீமதி ஸரோஜினி தேவி அப்பொழுது ஹிந்தியில் பேசியதாவது:—

"இன்னும் சற்றுநேரத்திற்கெல்லாம் விட்டல் பாயின் பிரேதம் வெந்து பிடி சாம்பலாகி விடும். நாட்டிற்கு கதிமோக்ஷமேற்படவேண்டு மென்பதற்காகப் போராடியே அவர் உயிர்விட் டார். அவர் அந்நிய நாட்டில் இறந்தது இந்தியாவின் துரதிர்ஷ்டமே யாயினும், அவரு டைய பிரேதத்தையாவது தரிசிக்க நமக்கு இப்போது சந்தர்ப்பம் வாய்த்தது ஒரு பெரிய பாக்கியமெனவே கருதவேண்டும். அவர் சமூக வேற்றுமை உணர்ச்சி சிறிதும் இல்லாதவராக இருந்தார். எல்லோரையும் அவர் இந்தியர்க ளென்றே கருதினர். தாம் முதலில் இந்திய ரென்றும், பிறகே குஜராத்தி யென்றும் அவர் நினைத்தார். அதே உணர்ச்சியுடன் அவர் வாழ் நாள் முழுவதும் உழைத்தார்.

"சுபாஷ்பாபு தமது தேக அசுகத்தையும்கவனி யாமல் படேலின் படுக்கையறையில் இருந்து அவருக்கு வேண்டிய சிச்ருஷைகளைச் செய்து வந்ததற்காகவும், 7000 மைல் தூரம் விமா னத்தில் ஸ்ரீமான் கோவர்த்தனதாஸ் படேல் சென்று அவரது பிரேதத்தை ஜாக்கிரதை யாக இங்கு கொண்டுவந்து சேர்த்ததற்காக வும் நாம் அவர்க ளிருவருக்கும் நன்றி செலுத்த வேண்டும். இந்தியாவின் அருந் தவப் புதல்வரும் சிறந்த வீரருமான விட்டல் பாய் இறந்துவிட்டார். எனினும் அவரது

ஆத்மா இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வழிகாட்டியாகவிருந்து இந்தியா சுதந்திரமடைய உதவியாகவிருக்கும். அவர் மரணத் தருவாயில் வெளியிட்ட கோரிக்கையை இந்திய வாலிபர்கள் பூர்த்திசெய்து வைப்பார்கள் என நான் நம்புகிறேன்.”

ஸ்ரீமான் ஜம்னுதாஸ் மேட்டா பேசியதாவது:-

“ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் தலைவர்களுக்குத் தலைவர். அத்தகைய பெரியார், நமது வழிகாட்டி, நமது குரு, தேசாபிமானிகளில் சிரேஷ்டர், காலமாகிவிட்டார். நாடு முழுவதும் அவருடைய மரணத்திற்காகக் கதறுகிறது. தேசத்திற்கு சேவை செய்ய வேண்டுமென்பதே பொதுவாழ்வில் அவர் நுழைந்ததுமுதல் அவருடைய முக்கிய நோக்கமாக இருந்துவந்தது. சௌபாத்தியில் தகனம் செய்ய அனுமதித்தால் ஏராளமாக ஜனங்கள்கூட நேரிடுமென்றும், சோனப்பூரில் அது சாத்தியப்படாதென்றும் கவர்ன்மெண்டார் நினைத்துவிட்டார்கள்போலிருக்கிறது. ஆனல் அவருடைய கடைசி தரிசனத்திற்காக லட்சக்கணக்கானவர்கள் இங்கு இன்றுவந்ததிலிருந்து அவரிடத்தில் அவர்களுக்கு எத்துணை மதிப்பும் மரியாதையும் இருந்துவந்தன வென்பது தெரிகிறது.”

பிறகு ஸர்தார் படேலின் புதல்வரான தயா பாய் படேலால் ஜதைக்குத் தீயிடப்பட்டது. வித்தல்பாய் படேல் வெந்து சாம்பலானுர்.

ஸ்ரீமான் விட்டல்பாய் படேலின் அஞ்சா நெஞ்சமும் வீரமும் நமக்குத் துணையாகவிருக்கின்றன! அவருடைய அரிய தியாகம் நமக்கு வழிகாட்டியாக விருக்கிறது! இவ்விதமிருக்க அவருடைய பிரிவுக்கு நாம் என் துக்கப்பட வேண்டும்? பாரதியாருடன்,

**பல்லவி**

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று - ஆடு

**சரணம்**

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்பதுறுதி யாச்சு
சங்குகொண்டே வெற்றியூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே ஆடு

# தலைவர்களின் துயரம்

## மகாத்மா காந்தி

விட்டல்பாயின் மரணத்தால் நாம் மிக்க திறமையும் உழைப்பும் வாய்ந்ததொரு ராஜீயவாதியை இழந்துவிட்டோம். அவரது சுயநலத் தியாகமும், அவர் மேற்கொண்ட வேலைகளில் அவர் மனப்பூர்வமாக ஈடுபட்டு வேலைசெய்யும் தன்மையும் மிக்க புகழ்ந்து பாராட்டத் தக்கனவாகும். அவர் பம்பாய் கார்ப்பொரேஷன் தலைவராக இருந்தபொழுதும் சரி, இந்தியா சட்டசபை அக்கிராசனராக இருந்தபொழுதும் சரி, அன்றாடம் வேலையை பாக்கி வைக்காமல் செய்து வந்தார். இந்த சமயத்தில் அவர் மரணமடைந்தது தேசத்திற்குப் பெரு நஷ்டமாகும்.

*　　*　　*

## ஸ்ரீமதி ஸரோஜினி தேவி

எனக்கு நெருங்கிய நண்பராகவும் அருமை சிநேகிதராகவு மிருந்த ஸ்ரீமான் படேல் காலகதி அடைந்தது கேட்க எனக்கு அதிகவருத்த முண்டாகிறது. அவரது மரணத்தால் இந்தியா சிறந்த தேசாபிமானியை இழந்துவிட்டதென்னலாம்.

*　　*　　*

## பண்டித ஜவஹர்லால் நேரு

இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராடிய பழைய தலைவர்கள் ஒருவர்பின் ஒருவராக

மறைந்து வருகிறார்கள். போராட்டத்தில் ஈடுபடுவதால் அவர்களுடைய தேகபலங் குறைகிறது. வயோதிகத் தன்மையில் சிறை வாழ்க்கை அவர்களுக்கு ஒத்துக் கொள்ளுவதில்லை. அதனால் அவர்களுடைய தேகசுகம் கெட்டுவிடுகிறது. விட்டல்பாய் படேல் இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய வீரராவார். அவர் இறக்கும் தருவாயிலும் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் அவர் மனத்தில் இருந்த சுதந்திர வேட்கையைக் காட்டுகிறது. வாலிபர்களாகிய நாங்கள் அவரது ஞாபகத்தை என்றும் வைத்திருப்போம். அவர் காட்டிச்சென்ற வழியில் புத்துணர்ச்சி பெறுவோம். சுதந்திர லக்ஷியம் என்ற பெரியதொரு தீயில் தைரியமிக்க வீரர்கள் பலர்வெந்துபோனார்கள். ஆனால் அந்த லக்ஷியம் மட்டில் அப்படியே இருக்கும். அந்த லக்ஷியம் பூர்த்தியாகும்வரை போராட்டம் நீடித்து நிற்கும். விட்டல்பாயுடன் கலந்து வேலைசெய்யும் பாக்கியம் பெற்ற எங்களுக்கு அவர் மரணச்செய்தி மிகுந்த வருத்தத்தையும் துக்கத்தையும் உண்டாக்குகிறது.

* * *

**மகாகவி ரவீந்திரநாத தாகூர்**

ஸ்ரீமான் படேலின் மரணத்தினால் சுதந்திர வீரரொருவரை இந்தியா இழந்துவிட்டது. தன்னலம் சிறிதும் கருதாமல் தேசத்திற்காகத் தம்மையே அவர் அர்ப்பணம் செய்துகொண்

டார். அவருடைய சேவை அவசியமாக இருக்கும் காலத்தில் கூற்றுவன் அவரைக் கொள்ளை கொண்டுவிட்டான். தவிரவும், தாய்நாட்டிற்கு ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருக்கையில் இது நேர்ந்துவிட்டது மிகவும் வருந்தத்தக்கதாகும். இதர இந்தியர்களுடன் நானும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* * *

## மௌலானா ஷவ்கத் அலி

இந்தியா ஒரு போர்வீரரை இழந்துவிட்டது. சென்ற 10 வருஷங்களில் இந்தியா பல வீரர்களை இழந்துவிட்டது. அவர்கள் அதிக காலமிருந்திருந்தால் தேசத்திற்குச் சிறந்த ஊழியம் செய்திருப்பார்கள்.

* * *

## ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்

ஸ்ரீமான் படேல் வெகு விரைவில் ராஜீயவாதியாகி இந்தியாவுக்காக உறுதியுடன் போராடினார். அவர் இந்தியா சட்டசபையில் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவராக வீற்றிருந்து மிக்க சுயேச்சையுடன் நடந்துகொண்டார். அவர் கூறிய தீர்ப்புகள் அவரது புத்திகூர்மையைக் காட்டின. அதோடு போராட்டத்தில் இறங்கியுள்ள ராஜீயவாதியின் மனப்பான்மையும் இடையிடையே அவற்றில் வெளியாயிற்று.

**பண்டித மதன்மோஹன மாளவியா**

என் அருமை நண்பர் ஸ்ரீமான் விட்டல்பாய் படேல் இறந்துபோன செய்தி கேட்டு நான் மிக்க வருந்தினேன். தாய்நாட்டின் விடுதலைக்காக அவர் அதிகம் போராடினார். அவரது மரணத்தால் நாட்டுக்குப் பெருநஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவரது ஆத்மா சாந்தி அடைக!

* * *

**ஸர் அப்துல்லா சுக்ரவர்த்தி**

மனித தேகம் அநித்தியமானது. பெரியார்கள் இறக்கையில் நாம் வருந்தத்தான் வேண்டும். ஸ்ரீமான் படேல் அந்நியநாட்டில் இறக்க நேரிட்டதுபற்றி நான் மிகவும் துக்கிக்கிறேன். இந்தியா சட்டசபையின் சிறந்த அக்கிராசனர்களுள் அவரும் ஒருவராகச் சரித்திரத்தில் திகழ்வாரென்பது நிச்சயம். இந்தியா சட்டசபையில் பண்டித மாளவியா மிகவும் உருக்கமாகப் பேசுகையில் அக்கிராசனத் தமர்ந்திருந்த விட்டல்பாய் படேலின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி அவரது நரைத்த தாடியை நனைத்தபோதிலும் அவர் அப்பிரசங்கத்தால் உணர்ச்சி யடைந்ததுபோல் மனக்கலக்கத்தைச் சிறிதும் காட்டிக்கொள்ளாமல் அசைவற்றிருந்த காட்சியை நான் ஒருநாளும் மறக்கமாட்டேன். அவர் அக்கிராசனராக இருந்தபொழுது பண்டித மோதிலால் நேரு, லாலா லஜபதிராய், முகம்மது அலி ஜின்னா, எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார்,

பண்டித மதன்மோஹன மாளவியா போன்ற மேதாவிகள் கஷ்டமானவைகளாவும் நுணுக்கமானவைகளாகவுமுள்ள ஆட்சேபங்களை எழுப்புவார்கள். அவருடைய தீர்ப்பை அறிய சபையோர் மிக்க ஆவலுடனும் பரபரப்புடனும் காத்துக் கொண்டிருப்பார்கள்.

* * *

**ஸர் புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ்**

சென்ற 15-வருஷங்களாக ஸ்ரீமான் படேலின் வாழ்க்கையைக் கவனித்தவர்கள் யாவரும் அவரது தேசாபிமானத்தையும் நாட்டுக்கு ஊழியம் செய்யவேண்டுமென்று அவருக்கிருந்த அளவிலா ஊக்கத்தையும் பாராட்டாமலிருக்கமுடியாது. அவரது மரணத்தால் இந்தியா தனது அருமைப் புதல்வரை இழந்துவிட்டதாகச் சொல்லலாம்.

* * *

**டாக்டர் முகம்மது ஆலம்**

ஸ்ரீமான் படேல் தாய்நாட்டின் சேவையிலேயே தமது ஆயுளை அர்ப்பணம் செய்தார். அவர் இந்தியா சட்டசபைத் தலைவராகவிருந்து செய்த காரியங்கள் சரித்திரத்தில் பிரசித்திபெற்று விளங்கும். தாம் இந்தியா சட்டசபையின் தலைவராகவிருக்க பூர்ண யோக்கியதையுடையவரென்பதை அவர் காட்டிக்கொண்டதோடு பலருக்கும் வழியுங் காட்டினர்.

ராஜா நரேந்திரநாதர்

ஸ்ரீமான் படேல் காலகதி யடைந்தது இந்தியாவுக்குப் பெருநஷ்டமாகும். அவர் இந்தியாவின் சிறந்த ராஜீயத் தலைவர்களுள் ஒருவர்.

* * *

ஸ்ரீமான் எம். ஆர். ஜேயகர்

இந்தியா ஒரு பெரிய யுத்தவீரரை இழந்து விட்டது.

* * *

சௌத்ரி ஸாபருல்லாகான்

ஒரு மாபெருந் தலைவரை இந்தியா இழந்து விட்டது. இந்தியா சட்டசபையின் தலைவராக விருந்து அவர் கூறிய தீர்ப்புகள் யாவற்றையும் நான் ஒப்புக்கொள்ளாதபோதிலும், சட்டசபை அங்கத்தினர், அக்கிராசனர் ஆகியோருடைய சுதந்திரத்தைக் காப்பாற்ற அவர் மிகப் பாடுபட்டார்.

* * *

ஜனப் கஸ்னவி

இந்தியா சட்டசபையின் நடவடிக்கைகளை அவர் சாமர்த்தியமாய் நடத்திவைத்தார். காங்கிரஸ் கட்சியை அவர் சேர்ந்தவராக இருந்ததன் காரணமாக அபிப்பிராய பேதம் இருந்தபோதிலும் அவருடைய அந்தரங்க சுத்தியை ஒப்புக்கொள்ளாதவர் கிடையாது.

**திவான் பகதூர் ஏ. ராமசாமி முதலியார்**

ஸ்ரீமான் படேலின் மரணச்செய்தி எதிர்பார்க்கப்பட்டதாயினும் அது பெருந்துக்கத்தைஉண்டு பண்ணியிருக்கிறது. அவருடைய மரணத்தை நினைக்கையில், இந்தியா சட்டசபைத் தலைவராக அவர் இருந்தகாலம் ஞாபகத்துக்கு வருகிறது. அவர் ஒரு சிறந்த நிர்வாகியாக விளங்கினார்.

* * *

**கனம் டாக்டர் கோகுலசந்த் நராங்**

இந்தியா சட்டசபையின் தெரிந்தெடுக்கப்பட்ட முதல்தலைவராக அவர் இருந்து, சுயேச்சையுடன் காரியங்களைத் திறம்பட நடத்தியதை எக்காலத்தும் மறக்க முடியாது. சட்டசபையின் உரிமையைக் காக்கப் போராடுவதில் அவர் எப்பொழுதும் முன்னணியில் இருந்தார். சில சமயங்களில் கவர்ன்மெண்டார் அவர் மிக்க சுயேச்சையுடன் நடந்துகொள்வதாகக் கருதினாலும் சபையில் எல்லாக் கட்சியாரும் அவரிடம் அன்பு செலுத்தியே வந்தனர். அவர் மரணமடைந்ததால் காங்கிரஸுக்குமட்டுமின்றி அவரை அறிந்திருந்த எல்லோருக்குமே பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

* * *

**ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார்**

ஸ்ரீமான் படேலின் மரணத்தின்மூலம் இந்தியப் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருந்த ஒரு



8. பிரேத ஊர்வலக் காட்சி

பிரபலஸ்தரை நாம் இழந்துவிட்டோம். இந்தியா சட்டசபையின் முதலாவது தெரிந்தெடுக்கப் பட்ட தலைவரென்ற முறையில் அவர் சட்டசபையின் நடவடிக்கைகளைத் திறம்படவும் தாக்ஷண்ய மன்னியிலும் நடத்திவந்தார். ஐந்துவருஷ காலம் திறமையுடன் அந்த ஸ்தானத்தை அவர் வகித்திருந்தது எல்லோருக்கும் வியப்பை விளைவித்தது. அந்தப் பதவியை வகித்திருந்தகாலத்தில் எத்தனையோ முக்கியமான விஷயங்களில் அவர் தீர்ப்புக் கூறியிருக்கிறார். அவையெல்லாம், விதிகளில் அவருக்கிருந்த பாண்டித்தியத்தைக் காண்பிக்கின்றன. அவர் விசேஷத் துணிவுகொண்டவர். அதிகமாகப் பேசுபவரில்லையெனினும் தம் நண்பர்களால் மிகவும் நேசிக்கப்பட்டவர். அவர் மரணமான செய்தி என்னைத் திடுக்கிடச் செய்துவிட்டது.

* * *

**டாக்டர் சோயித்ராம் கிட்வானி**

சற்றும் தயங்காமல் இந்திய சுதந்திரத்திற்குப் போராடக்கூடிய ஸ்ரீமான் படேலின் மரணத்தால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடுசெய்வது மிக்கக் கஷ்டமாகும். இந்த சந்தர்ப்பத்தில் அவர் காலகதியடைந்தது நாட்டுக்கே பெரு நஷ்டமாகும். அவர் நடத்திக்காட்டிய வழியையும், அவரது தியாகத்தையும் பார்த்தபிறகு இந்நாட்டினர் அவரது கோரிக்கையைப் பூர்த்தி செய்துவைப்ப

பதற்கான ஆற்றல் பெறுவார்கள் என்று நம்பு கிறேன்.

* * *

### ஸர்தார் சாந்தா சிங்

ஸ்ரீமான் படேல் இந்திய சட்டசபையின் தலைவர் என்ற முறையில் அச்சமின்றியும் தாக்ஷண்யம் பாராமலும் நடத்திவந்த காரியங்கள் அரசியல் சரித்திரத்தில் விசேஷ ஸ்தானம் பெறும்.

* * *

### ஸ்ரீமான் எஸ். கே. வஸு

ஸ்ரீமான் படேல் தாய்நாட்டின் சுதந்திரத்துக் காகவே ஏங்கிநின்று தூரதேசத்தில் காலகதி யடைந்தார். நாட்டின் லக்ஷியத்துக்காக அவர் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் தியாகபுத்தியுடன் போராடினார். காங்கிரஸ் தலைவர் என்ற முறையி லும் சரி, இந்திய சட்டசபைத் தலைவர் என்ற முறையிலும் சரி, அவர் மிக்க தைரியத்துடன் நடந்து கொண்டதால் அவருக்கு நாட்டில் அதி கச் செல்வாக்கிருந்தது.

* * *

### ஸ்ரீமான் சச்சிதானந்த சின்ஹா

ஸ்ரீமான் படேலுக்குப் பொது விஷயங்கள் யாவும் நன்கு தெரியும். அரசியல் விஷயங்களில் அவர் வல்லவர். உத்தியோகப்பற்றற்ற முதல் தலைவர் என்ற முறையில் அவர் செய்த அரிய வேலைகள் என்றைக்கும் ஞாபகத்திலிருக்கும்.

ஸ்ரீமான் ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார்

ஸ்ரீமான் படேல் மரணமடைந்தது சொந்த ஹோதாவில் எனக்கு ஏற்பட்ட பெரு நஷ்டமாகும். அவரது மரணத்தால் நாட்டுக்குத் தாங்க முடியாத நஷ்டமேற்பட்டிருப்பது உண்மையே யாயினும் அவரோடு விவாதித்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றிவைப்பதில் அவர் விசேஷப் பங்கெடுத்துக்கொள்ளுவார் என்று எதிர்பார்த்திருந்த எங்களுக்கு அவரது மரணம் விசேஷக் கஷ்டத்தை விளைவித்துவிட்டது. பொதுஜன சுதந்திரத்தைப் பொறுத்த போராட்டங்களில் ஸ்ரீமான் படேல் எப்பொழுதும் முன்னணியில் நின்று வெற்றி யடைந்திருக்கிறார். அவர் தமது நாட்டினரின் உரிமைகளுக்காக தளராத தேசாபிமானத்துடனும், தன்னலமற்ற தன்மையுடனும், தியாக உணர்ச்சியுடனும் போராடியதை இனி வரவிருக்கும் சந்ததிகள் எக்காலத்தும் ஒரு வழித்துணையாகக் கொள்வார்கள் என்பது நிச்சயம்.

* * *

ஸர் டேஜ்பகதூர் ஸாப்ரு

ஸ்ரீமான் படேலின் மரணத்தைக் கேட்டு நான் மிக்க வருந்தினேன். இந்தியாவில் ராஜீய சம்பந்தமான அவரது காரியங்கள் ஒரு உணர்ச்சியை உண்டுபண்ணியிருக்கின்றன. நானும் அவரும் 16 வருஷங்களுக்குமுன் பழைய இந்தியா சட்ட

சபையில் அங்கத்தினர்களா யிருந்தபோது அவரை நான் நன்கறிந்துகொண்டேன். அதிகத் திறமையுடனும் சுயேச்சை புத்தியுடனும் ஒப்புயர்வற்ற விதத்தில் அவர் நடந்துகொள்வார். சில சமயங்களில் அளவுகடந்து உழைப்பதற்கும் அவர் பின்வாங்குவதில்லை. இந்தியா சட்டசபையின் தலைவர் என்ற முறையில் அவர் நாட்டினரின் விசேஷ நன்மதிப்பைப் பெற்ருர். அவரைப் போன்ற பதவியிலுள்ளவர்கள் எப்போதும் எல்லோருக்கும் நல்லவராக இருக்கமுடியாது. அவருக்கு ஆழ்ந்த தேசாபிமானம் உண்டு. அவரது அபிப்பிராயங்களும் உறுதியானவை. அவர் தமது அபிப்பிராயத்தை வற்புறுத்துவதால் ஏற்படக் கூடிய பலாபலன்களையும் அனுபவிக்க சித்தமாக இருந்தார். அவரைப்போன்ற மேதாவிகள் தங்கள் நாட்டில் தங்கள் வாழ்நாளை யெல்லாம் போராட்டத்தில் கழித்துவிட்டு அந்நிய நாட்டில் போய் இறப்பதென்ருல் அது மிகப்பரிதாபமாகும்.

* * *

### ஸ்ரீமான் ஸி. விஜயராகவாச்சாரியார்

ஸ்ரீமான் படேல் வெறும் சம்பிரதாயங்களை அனுசரிக்காமல் தமது அறிவு வளர்ச்சிக்கேற்ற முறையில் பல விஷயங்களைத் தீர்த்துவைத்தார். அவரது திறமையைப் பாராட்டும் சிலர் அவரது தீர்ப்புகள் சிலவற்றை அங்கீகரிக்காம லிருப்பது சரியல்ல. அவர் சபையின் அந்தஸ்தையும் உரி

மையையும் காக்கவும், பத்திரிகைகளின் சுதந்தி ரத்தையும் நாட்டின் சுதந்திரத்தையும் பாது காக்கவுமே அவ்விதத் தீர்ப்புகள் கூறினார்.

* * *

## சேத் யமுனாலால் பஜாஜ்

ஸ்ரீமான் படேலின் மரணத்தால் எங்களுடன் 13 வருஷங்களாக உழைத்துவந்த சகாவை இழந்துவிட்டோம். அவர் தமது உயர்பதவியை மிக்க தகுதியுடன் வகித்துவந்தார். அவர் இறுதி யில் அப்பதவியை ராஜிநாமாச் செய்ததும் சரியா கும். அவர் தேசசேவையிலேயே தமது உயிரைத் துறந்தாரென்று சொல்லலாம்.

* * *

## ஸ்ரீமான் கோஸ்வாமி

ஸ்ரீமான் படேல் உள்ள நிலைமையைத் தெள்ளி தில் உணரக்கூடிய சக்தி பெற்றிருந்தார். இந்த சமயத்தில் நமது தேசீயப் போராட்டத்தில் மிக்க புத்திசாலித்தனத்துடன் நமக்கு வழிகாட்ட வேண்டியவர்கள் அத்தியாவசியமாக இருக்கை யில் சிறந்த அறிவாளியும் தேசாபிமானியு மான ஸ்ரீமான் படேலை இழந்துவிட்டது மிகவும் வருந்தத்தக்கதாகும். நமது நாட்டினர் எப் போதும் அவரது வாழ்க்கையை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

* * *

**மாஸ்டர் டாராசிங்**

ஸ்ரீமான் படேல் ஒரு சுத்தவீரர். அவர் மிக்கக் கடுமையான போராட்டங்களில் கலந்துகொள்ள வேண்டியிருந்தது. ஆனால் எப்போதும் அவர் தமது கவுரவத்தை விட்டுக்கொடுத்ததில்லை.

* * *

**ஸர்தார் பகதூர் மேடாப் சிங்**

ஸ்ரீமான் படேல் சிறந்ததொரு இந்தியர். நான் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு வேலை செய்தபோது அவரைச் சந்தித்தேன். அவர் மிக்க உண்மையானவர். ஆழ்ந்த உறுதிகொண்டவர். நாட்டினிடம் அளவிறந்த அன்புகொண்டவர்.

* * *

**ஜனப் அஸப் அலி**

நாட்டுக்காக உழைத்த பெரிய தேசாபிமானிகளில் ஸ்ரீமான் படேல் ஒருவர். அவர் அரிய தியாகம் செய்திருக்கிறார். அனுபவசாத்தியமான வழியில் தேசாபிமானத்தை உபயோகித்தால் உண்மையான ஊழியம் செய்ய சந்தர்ப்பம் ஏற்படும். ஸ்ரீமான் படேல் சற்றும் சளைக்காமல் நெருக்கடியான சமயங்களில் தைரியமாக நடந்துகொண்டார். இருட்டில் கிடந்து வழி தெரியாமல் உழலுவோருக்கு அவர் நடந்து காட்டிய வழி ஞான ஒளியாக இருந்து உதவும். அவர் சாதித்த பல அரிய காரியங்களால் அவரது

பெயர் இந்திய சரித்திரத்தில் உயரிய ஸ்தானம் பெறும்.

* * *

### ஸ்ரீமதி கமலாதேவி சடோபாத்யாயா

இந்தியா ஒரு சிறந்த வீரரை இழந்துவிட்டது. இருந்தாலும் அவர் போராட்ட உணர்ச்சியை நமக்கு ஊட்டிப்போயிருக்கிறார்.

* * *

### ஸ்ரீமான் குலரத்ன (ஸிலோன்)

உலகில் பிறந்தவர்களில் மனிதரெனக் கூறத் தகுதியுடையவர்கள் ஒரு சிலரே யாவர். அவர்களுள் படேல் முதன்மையானவர் ஆவர். இந்நாட்டில் உள்ளவர்கள் படேல் போன்றாரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டு மென்பதே என் பிரார்த்தனை.

* * *

### ஸ்ரீமான் குமாரசாமி (ஸிலோன்)

இந்தியர் என்ற முறையில் எவ்வளவு உந்நத நிலைமைக்கு வர முடியுமோ அவ்வளவையும் பொதுஜன சம்மதத்தோடு பெற்று இந்திய சுதந்திரம் என்னும் பீடத்தில் அர்ப்பணம்செய்து விட்டு, தியாகம் என்னும் உருவமாகத் தோன்றிய பெரியார் படேலே யாவர். அவர் பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பைப் பெற்றிருந்தும் இந்தியா

விடுதலை அடையும்வரையும் அன்னாரது ஆன்மா இந்தியாவையே வட்டமிட்டிருக்கும்.

* * *

**ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார்**

இந்தியா முழுவதும், முக்கியமாக ஸ்ரீமான் படேலுடன்கூட உழைத்தவர்களும், அப்பெரியாருடைய சேவையைப் பெரிதும் பாராட்டவேண்டும். இந்தியாவானது ஒரு அருமைப் புதல்வரை அவருடைய மரணத்தால் இழந்துவிட்டது. அவர் எந்தக் கோஷ்டியின் உதவியின்றியும், அனுவசியமான ஆடம்பரமின்றியும் பல அரிய காரியங்களைச் சாதித்திருக்கிறார். முக்கியமாக அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் அவர் இந்தியாவுக்காகச் செய்துள்ள சேவையை ஒருவரும் மறக்கமுடியாது. ஆடம்பரமான சட்ட சபை வேலைக்கு அவர் அதிக முக்கியத்தைக் கற்பித்த போதிலும், அதிலும் சுராஜ்யத்திற்காக உண்மையாகப் பாடுபட்டவர் அவரே. அவருடைய கட்சியினரைவிட அவர் அதிகம் சாதித்தார். அவருடைய தேசாபிமானம் லௌகீகத்தையும், சன்மார்க்கத்தையும் பற்றியதாக இருந்ததால் அது தணியாமலே இருந்துவந்தது. எனது அத்தியந்த நண்பரான அவருடைய மரணமானது எனக்கு மிகுந்த துக்கத்தை விளைவித்திருக்கிறது.

* * *

**ஸ்ரீமான் கே. பாஷ்யம்**

ஸ்ரீமான் படேலின் மரணத்தினுல் ஒரு அரிய தலைவரையும், அஞ்சா நெஞ்சம்படைத்த தேசாபிமானியையும் நாம் இழந்துவிட்டோம். சட்டசபைத் தலைவருக்குள்ள சொற்ப அதிகாரங்களைக் கொண்டும் அவர் பெரிய காரியங்களைச் சாதித்தார். இந்தியர்களிடம் பொறுப்பு வாய்ந்த பதவிகளை ஒப்புவித்தால் அவர்கள் எவ்விதம் அவைகளை தேசத்திற்கு ஹிதமான வழியில் உபயோகிப்பார்களென்பதை ஆங்கிலேயர்களுக்கும் உலகுக்கும் அவர் மெய்ப்பித்துக் காட்டினுர்.

*　　*　　*

**மியான்ஷா நவாஸ்**

ஒரு பெரியார் காலமாகிவிட்டார். அவர் சுயேச்சை வாய்ந்தவர். தேசத்திற்கு அந்தரங்க சுத்தியுடன் சேவைசெய்தார்.

*　　*　　*

**ஸ்ரீமான் ராமதாஸ் பந்துலு**

ஸ்ரீமான் படேல் இந்தியா சட்டசபைத் தலைவராகவிருந்து செய்த அரிய ஊழியமானது பார்லிமெண்டு ஸ்தாபனங்களை நடத்திவருவதற்கு இந்தியர்கள் தகுதியுடையவர்களென்பதை உலகிற்கு மெய்ப்பிக்கப் பெரிதும் உதவியாகவிருந்தது. உலகிலிருக்கும் பிரபல பார்லிமெண்டு தலைவர்களுடைய கோஷ்டியில் அவர் இடம்பெறுவார்.

*　　*　　*

**கனம் பி. ராமச்சந்திர ரெட்டி**

மிகுந்த சாமர்த்தியமும் சுயேச்சை புத்தியும் வாய்ந்த ஸ்ரீமான் படேல் தீரமாகப் போராடி இந்தியா சட்டசபைக்குப் பல உரிமைகளை ஸ்தாபித்துக் கொடுத்தார். இந்தியாவிலுள்ள சட்ட சபைகளின் சரித்திரத்தில் அவருடைய பெயர் முக்கிய ஸ்தானத்தைப் பெறும்.

* * *

**ஸ்ரீமான் நியோகி**

ஸ்ரீமான் படேலைப்போல் ஆண்மைத்தனமும் சுயேச்சை புத்தியுமுள்ளவர் இந்தியாவில் கிடைப்பதரிது. இந்தியா சட்டசபையின் உத்தியோகஸ்தரல்லாத முதல் தலைவர்முறையில் அவர் வழிகாட்டியாக இருக்கவேண்டியிருந்தது. சபைக்கு அதிக கௌரவமும் சிறப்பும் ஏற்படும்படி அவர் செய்தார்.

* * *

**ஸ்ரீமான் சந்தோஷ் குமாரவஸு**

தேச விடுதலை சொப்பனங் கண்டுகொண்டே ஸ்ரீமான் படேல் அந்நியநாட்டில் உயிர்நீத்து விட்டார். அவர் அந்த லக்ஷியத்தின் சின்னமாக விளங்கியதோடு காங்கிரஸ் தலைவர் முறையிலும் இந்தியா சட்டசபைத் தலைவர் ஹோதாவிலும் தீரத்துடன் நடந்துகொண்டதன் மூலம் அவரது

தேச மக்களுக்கு அந்தக் குணம் உண்டாகும்படி அவர் செய்தார்.

* * *

**ஸ்ரீமான் சத்தியமூர்த்தி**

ஸ்ரீமான் படேலின் மரணத்தினால் தேசத்திற்காகவே வாழ்ந்து, தேசத்திற்காகவே உயிரை விட்ட வீரசிகாமணியை இந்தியா இழந்துவிட்டது. தாய்நாடு கதிமோக்ஷ மடையுமென்ற நம்பிக்கை அவருக்குப் பூரணமாக விருந்தது. அதற்காக அவர் உழைத்துவந்தார். மேலும் அவர் காரியத்திலேயே கண்ணுயிருப்பவர். எல்லா மர்மஸ்தானங்களிலு மிருந்துகொண்டு கவர்ன்மெண்டைத் தாக்கவேண்டுமென்ற எண்ணமுள்ளவர். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுவதே நாம் அவரை கவுரவிப்பதற்குச் சிறந்த மார்க்கமாகும்.

* * *

**மிஸ்டர் எப். இ. ஜேம்ஸ்**

தேசத்தை வெகுவாக நேசித்த ஒருவர் அந்நிய நாட்டினில் உயிர்நீத்தது மிகுந்த வருத்தத்தை விளைவிப்பதாக இருக்கிறது. நான் இந்தியாவுக்கு வந்ததுமுதல் அவரை அறிவேன். அவர் இங்கிலாந்துக்குக் கடைசியாகச் சென்ற கப்பலிலேயே அவருடன் பிரயாணம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் அசாத்தியரான சத்துருவாயினும் அவர் விசேஷ

சாமர்த்தியம் வாய்ந்தவரென்பதையும் தேசத்திற்கு எது உகந்ததென்று தமக்குத் தோன்றியதோ அதைச் செய்யக்கூடியவரென்பதையும் மறுப்பதற்கில்லை. அவருடைய மரணத்துடன் இந்திய சரித்திரத்தில் ஒரு சகாப்தம் முடிந்து விட்டது.

* * *

குமார ராஜா முத்தையா செட்டியார்

பம்பாய் கார்ப்பொரேஷன் மேயராகவும் இந்தியா சட்டசபையின் தலைவராகவும் ஸ்ரீமான் படேல் செய்துள்ள சேவையை இந்தியா என்றும் மறக்கமுடியாது.

* * *

டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி

ஸ்ரீமான் படேல் ஜனங்களுடைய பாத்தியதைகளுக்காகத் தீவிரமாகப் போராடிவந்தார். ஜோன் ஆப் ஆர்க்குக்காக பிரான்ஸும், வாஷிங்டனுக்காக அமெரிக்காவும், நெல்ஸனுக்காக இங்கிலாந்தும் உருவச் சிலைகளை ஏற்படுத்தி யிருக்கையில் நேருக்களுக்கும், ஸென்குப்தாக்களுக்கும், படேல்களுக்கும் இந்தியா உருவச்சிலைகளை ஏற்படுத்த வேண்டும்.

* * *

**ஸ்ரீமான் ஜாம்ஷேட் மேட்டா**

அபிப்பிராய பேதங்களிருந்த போதிலும் ஸ்ரீமான் படேல் தமது குருவினிடத்தில் மரியா

தையும் தேசத்தினிடத்தில் அன்பும் உடையவ ராக இருந்தார். செல்வத்தையும் பெரிய பதவி களையும் அடைந்து பெருமையாக வாழ்வதற்கு வேண்டிய யோக்கியதைகள் அவருக்கு இருந்த போதிலும் தாரித்திரியத்தையும் தேச சேவை யையுமே அவர் விரும்பினார். அவர் இருந்தும் பெரியார்; இறந்தும் பெரியாரே.

---

# பத்திரிகைகளின் புகழுரை

மேட்ராஸ் மெயில் (சென்னை)

ஸ்ரீமான் படேலின் மரணத்தினால் இந்தியா வானது தனது பிரபல புதல்வர்களில் ஒருவரை இழந்துவிட்டது. அவருடைய மரணம் எதிர் பார்க்கப்பட்டதும், அவர் 60-வயதுக்கு மேற் பட்டவராக இருந்ததும் அந்த நஷ்டத்தின் தன் மையைக் குறைத்து விடுவதற்கில்லை. பழுத்த ராஜீய வாதிகளுடைய முதிர்ந்த அனுபவத்தை இந்தியா இழந்துவிடுவதற்கில்லை. அவர் ஒரு போர்வீரர். கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந் திருப்பதால் வெற்றிபெற்று விடலாமென்று நினைக்கும் கோஷ்டியை அவர் சேர்ந்தவரல்லர். இந்தியா சட்டசபைத் தலைவர் ஹோதாவில் அவர் நல்லவேலை செய்தார். தலைவர் ஸ்தானத் தின் சுதந்திரத்தை அவர் காப்பாற்றினார். சட்ட

சபையின் கௌரவத்தை மதிக்கும்படி அவர் செய்தார். அங்கத்தினர்களும் சபையின் மரியாதையைக் காப்பாற்றும்படி அவர் செய்தார். அவருடைய மரணத்தினால் இந்தியா பெரு நஷ்டமடைந்து விட்டது. காரியவாதிகளின் சேவை அவசியமாக விருக்கும் சமயத்தில் அத்தகைய ஒருவரை இந்தியா இழந்துவிட்டது. அவர் போர்க்குணம் மிகுந்தவராயினும் மரியாதையும், பெருந்தன்மையும், பிறருக்கு உதவி செய்யும் தயாளத்துவமும் பொருந்தியவ ராதலால் அவருடைய மரணத்திற்கு எல்லா சமூகத்தினரும் வருத்தப்படுவார்கள்.

**இந்தியன் எக்ஸ்பிரஸ் (சென்னை)**

பெரியவீரர் சாய்ந்து விட்டார். அவருடைய மரணத்திற்காக தேசம் முழுவதும் வருந்தும். இருந்தாலும் அவர் போர்முனையில் சுதந்திரக் கொடியைத் தாங்கியபடியே சாய்ந்தாரென்பதை நாம் மறந்துவிடவேண்டாம். ஸ்ரீமான் சென் குப்தாவைப்போல பூரண சுயேச்சைக் கொள்கையைச் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் அவர் போராடிய வழியைப் பின்பற்றுவதே அவரிடத்தில் நமக்கிருந்த மரியாதையைக் காட்டிக்கொள்ளுவதற்குச் சிறந்த மார்க்கமாகும்.

**ஹிந்து (சென்னை)**

இந்தியா சட்டசபையின் உத்தியோகஸ்தரல்லாத முதல் தலைவர் ஹோதாவில் அவர் புதிய

சகாப்தத்தை ஆரம்பித்ததை நமது சந்ததிகள் எந்நாளும் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். தமக்கெனப் புதியதொரு வழியை வகுத்துக்கொள்ளுவதில் அவர் விசேஷ தீர்க்க தரிசனத்தையும் தைரியத்தையும் காட்டிக்கொண்டார். ஜனநாயக ஆட்சிக்கு சட்டசபைக்குள்ள வரையறைகள் பெரிய இடையூறாக ளென்பதை அவர் அறிந்திருந்தாராயினும் அதிக சக்தியுள்ளதும் பொறுப்பற்றதுமான கவர்ன்மெண்டுக்கும் தங்களுடைய நியாயமான ராஜீய உரிமைகளைப் பெற விரும்பும் ஜனங்களுக்கும் போராட்டம் ஏற்படுகையில், சட்டசபையானது பல வரையறைகளுக் குட்பட்டதாக இருந்தபோதிலும் ஜனங்களுடைய கட்சியைத் தாங்கிநின்று, நிர்வாகிகளின் அக்கிரமத்தைத் தடுக்கவேண்டுமென்று அவர் நினைத்தார். சபையின் தலைவர் முறையில் அது இந்த வழியில் செல்லும்படி செய்யவேண்டியது தமது கடமையென்று அவர் நினைத்ததுடன் அதன் அதிகாரத்திற்கோ அல்லது கௌரவத்திற்கோ பாதகத்தை விளைவிக்கக்கூடிய எவ்விதக் காரியத்திற்கும் இடங்கொடுக்கக்கூடாதென்றும் அவர் கருதினார். இதைப் பலர் விரும்பவில்லை. ஆயினும் மாண்ட்போர்டு சீர்திருத்தத்தின் கர்த்தர்களுடைய கருத்து இதுவே. லார்டு அல்ஸ்வாட்டருக்குச் சமதையானவரென்று மிஸ்டர் பால்ட்வினால் மதிக்கப்பட்டவரும், முந்தின



10. தகனத்திற்கு முன் தரிசனத்திற்காக ஸ்மசானத்தில் பிரேதம் வைக்கப்பட்டிருந்த காட்சி

தலைவரான ஸர் பிரெடரிக் ஒயிட்டினால் பாராட்டப்பட்டவருமான ஸ்ரீமான் படேல் கட்சிக் கொள்கையைக் கடைப் பிடிப்பவ ரென்றாவது, அல்லது விளம்பர ஆசை பிடித்தவரென்றாவது சொல்லுவதற்கில்லை. இந்தக் கஷ்டமான காலத்தின் சரித்திரம் எழுதப்படுகையில் இந்தியா நிமிர்ந்து நிற்கும்படி செய்தவர்கள் கோஷ்டியில் ஸ்ரீமான் படேலுக்கு முக்கிய ஸ்தானங் கொடுக்கப்படுமென்பதில் சந்தேகமில்லை.

* * *

**சுயராஜ்யா (சென்னை)**

தேசத்திற்காக வாழ்ந்து, அதற்காகவே உயிர் துறக்கும் வீரர்கள் கோஷ்டியை ஸ்ரீமான் படேல் சேர்ந்தவர். சொந்த நன்மை என்பது எந்தக் காலத்திலும் ஓங்குவதற்கு அவர் இடங்கொடுத்ததில்லை. இத்தகைய பெரியார், லட்சக்கணக்கான ஜனங்களால் மதிக்கப்பட்ட வீரர், அந்நிய நாட்டில் உயிர்துறக்க நேர்ந்தது மிகவும் வருந்தத் தக்கதாகும். ஆனால் இந்தியாவில் என்ன நடந்து வருகிற தென்பதையும், தேசத்தை விட்டுப் பிரஷ்டமாகியிருக்கும் தலைவர்களின் கதியென்னவென்பதையும் ஐரோப்பா அறிந்துகொள்ளும்படி இது செய்யக்கூடுமாயின் அது பெரிய லாபமாகும். இந்தியாவில் நமக்கு அவர் காட்டிவிட்டுப்போயுள்ள வழியானது எப்பொழுதும் ஊக்கத்தை ஊட்டிக்கொண்டிருக்கும். அவ

ருடைய மரணத்தால் ஏற்பட்டுவிட்ட நஷ்டத்தை ஈடுசெய்வதற்கில்லையாயினும் நாம்ஒவ்வொருவரும் அவருடைய லட்சியத்திற்காகப் பாடுபட்டு தேசம் சீக்கிரத்தில் விடுதலை யடையும்படி செய்யலாம்.

* * *

**ஜஸ்டிஸ்** (சென்னை)

ஸ்ரீமான் படேல் ஆயுள்காலம் முழுவதும் போராடுகிறவராக இருந்தார். அவருடைய நிர்வாகத் திறமையை ஒருவரும் மறுக்கமுடியாது. நிர்வாக இயந்திரத்தின் தன்மையை அவர் நன்கறிந்திருந்தாரென்பதையும், காரியாலய வேலையை நடத்திவைப்பதில் அவருக்கு விசேஷ சாமர்த்தியமிருந்த தென்பதையும் இந்தியா சட்டசபைக் கார்யாலயத்தினரே ஒப்புக் கொள்ளுவார்கள். அவர் தமது கட்சியின் அங்கத்தினராக இருந்த காலத்திலும், பிறகு இந்தியா சட்ட சபையின் தலைவராக விருந்தபோதும் தமது சாமர்த்தியத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார். இவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்தவர், ராஜீயத் துறையில் அதிகம் சாதிக்க முடியாமற்போனது மிகவும் வருந்தத்தக்கதாகும். அதற்கான காரணங்களை ஹேஷ்யந்தான் செய்யலாம். தேசத்தில் இருந்துவரும் நிலைமையும், இந்தியர்கள் இருந்துவரும் ராஜீய நிலைமையும் இதற்குக் காரணங்களாக இருக்கலாம். ஆனால் அதுவே ஏகதேச சமாதானமாக

இருப்பதற்கில்லை. இவ்வளவு திறமை வாய்ந்த ஒருவர் இறந்து போனதில் நாடெங்கும் துக்கம் ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை.

* * *

**சுதேசமித்திரன் (சென்னை)**

பாரத மாதா மற்றொரு அரிய புதல்வரை இழந்துவிட்டாள். மகாத்மா காந்திக்கு அடுத்த படியாக உலகெங்கும் புகழ்பெற்றிருந்த ஸ்ரீமான் விட்டல்பாய் ஜாவேரிபாய் படேல் பூதவுடலை நீத்துப் புகழுடம்பை அடைந்துவிட்டார். அவர் தேக அசுகத்தைப் போக்கிக் கொள்ளுவதற்காக மேதாவிகளுடைய சிகித்ஸையை நாடி அந்நிய நாடுகளுக்குச் சென்றிருந்த சமயத்தில், இது நேர்ந்துவிட்டது இந்தியர்களுடைய துக்கம் அதிகரிக்கும்படி செய்யக்கூடியதாக விருக்கிறது. அவர் தாய் நாட்டின் விடுதலைக்காக இடைவிடாது போராடி வந்ததுபோல் நமனுடன் அவர் சின்னாட்களாக நடத்திவந்த போராட்டத்திலும் வெற்றி பெற்றுத் தாய் நாட்டுக்கு மேற்கொண்டும் தொண்டு செய்வதற்கு சுகஜீவியாகத் திரும்பி வருவாரென்று பலரும் எதிர்பார்த்திருந்தது அவலமாகிவிட்டது. அஞ்சா நெஞ்சம் படைத்த அரிய தலைவரை இந்திய மக்கள் இழந்து விட்டார்கள். சிகித்ஸைக்காக அவர் வெளிநாடு சென்றிருந்த சமயத்திலும் இந்தியாவை மறந்துவிடவில்லை. இந்தியாவைப்பற்றிய கூட்டமொன்றுக்

குச் சென்ற இடத்திலேயே கடைசியாகவும் அவருக்கு நோய் முற்றி அவர் ஆவியைக் கொள்ளை கொண்டது. இவ்விதம் அல்லும் பக லும் அனவரதமும் தேசத்தொண்டையே பெரிய பணியாகக் கருதிச் செய்துவந்த அந்த மகானு டைய மரணமானது இந்தியாவுக்குப் பெரும் நஷ்டமாகும்.

* * *

**தமிழ்நாடு (சென்னை)**

தம்முடைய உடல், பொருள், ஆவி மூன்றை யும் தேசியப்பணிக்கென்று துறந்துவிட்ட வீரன் நம்மைவிட்டுப் பிரிந்துபோனது சகிக்கமுடியாத கஷ்டமாகும். இந்திய சட்டசபைக்குத் தலைவ ராக விருந்து, விட்டல்பாய் செய்த தேசீய வீர கைங்கர்யத்தை இந்நாட்டு மக்கள் எக்காலத்தி லும் மறக்கமுடியாது. ஸ்ரீ படேலைப் போன்ற ஆண்மையும் தேச பக்தியும் ஒருங்கே பெற்ற இந்தியர் எவரும் இதுவரையில் சட்டசபைத் தலைவர் பதவியை வகித்ததில்லையென்று தைரிய மாகக் கூறலாம். ஸ்ரீ படேலின் அறிவின் தெளி வும், அர்த்த சாஸ்திர ஞானமும், களங்கமற்ற தேசபக்தியும் பொன்னேபோல் போற்றத்தக்க தாகும். ஸ்ரீ படேலின் வீரமும் தேசீயத் துணிச்சலும் எதிர்காலத்தில் இந்நாட்டின ருக்கு வழிகாட்டியாக விருக்குமென்று நம்பு கிறோம்.

இந்தியா (சென்னை)

நமது படேல் பீஷ்மரைப்போலவே இறுதி வரை ஒரு அரசியல் துறவியாகவே இருந்தார். இந்தியாவிலே இந்தியர்கள் பெறுதற்குரிய எத்தகைய பெரிய உத்தியோகங்களையும் வகிக்கத்தக்க ஆற்றலும் அறிவும் சந்தர்ப்பங்களும் படேலுக்கு வாய்த்திருந்தாலும் அவர் தேசப்பணியே பெரிதென எண்ணி நிஷ்காமியமாகக் கடனாற்றினர். "ஆவி துறக்கும் இத்தருணத்திலும் இந்தியா சீக்கிரம் விடுதலை பெறுமாறு ஆண்டவனடி பணிந்து பிரார்த்தனை செய்கிறேன்" எனக் கூறியவண்ணம் அவர் கண்மூடிய காட்சியை இந்தியர்களால் ஒரு நாளும் மறக்கவேமுடியாது. இவ்வண்ணம் தியாக வாழ்வு, வீர வாழ்வு, தூய வாழ்வு வாழ்ந்த நமது படேலின் ஆத்மா சாந்தி அடைவதாக!

* * *

ஜெய பாரதி (சென்னை)

எதுவரினும் தோன்றியதைத் தோன்றியபடி பயமின்றி நிர்த்தாக்ஷண்யமாகச் சொல்லிவிடும் சுபாவம் உடையவராக ஸ்ரீமான் படேல் இருந்தார். சட்டசபைத் தலைவர் பதவியை வகித்திருந்ததற்காகக் காங்கிரஸின் கொள்கைகளையும் அதன் பூரண சுயேச்சை லட்சியத்தையும் அவர் விட்டுக் கொடுத்ததேயில்லை. எத்தனையோ அக்கிராசனர்கள் சட்டசபைக்கு இதற்குமுன்

இருந்தபோதிலும் ஸ்ரீயுத படேலைப்போல் கவர்ன்மெண்டாரை எதிர்த்து நின்றவர் ஒருவருமில்லை. அவர் அக்கிராசனராக விருந்தகாலத்தில் எந்த சமயத்தில் அவரால் தொந்திரவு ஏற்படுமோ என்ற திகைப்பும் பயமுமே கவர்ன்மெண்டுக்கு இருந்து வந்தது. பழுத்த அனுபவம் பெற்று தேசத்தின் விடுதலைப்போரில் சிறந்த தொண்டு செய்யவேண்டிய சமயம் தேசபக்தர்கள் மறைந்து விடுவது இந்தியாவின் துர்ப்பாக்கியமாகும். ஸ்ரீமான் படேலின் பூதவுடல் மறைந்துபோயினும் அவர் புகழ் என்றென்றும் இந்தியாவில் நிலவியிருக்கும்.

* * *

**மணிக்கொடி** (சென்னை)

படேல் ரொம்ப உயர்தரத் தேசாபிமானி. தேசத்துக்காக அவர் உடலும் உள்ளமும் வருந்தி உழைத்ததுபோல் ஏனையோரும் உழைப்பார்களானால், இந்தியர்களின் அடிமை வாழ்வென்பது பொய்யாக, பழங்கதையாக ஆகிவிடும். படேல் சலிக்காத உழைப்பாளி. அலுக்காமல் உழைக்கும் காந்தியே, படேலின் உழைப்பைப் பாராட்டிப் பேசி யிருக்கிறாரென்றால் அதை நாம் கற்பனைதான் செய்துகொள்ள வேண்டும்...அவர் சட்டசபைத் தலைவராகவும் பாரிஸ்டர் வேலை பார்த்தும் ஏராளமாகப் பணம் சம்பாதித்திருக்கலாம். பொருள் சேர்த்து சுகவாழ்வு வாழ

அவர் மனம் இசையவில்லை......ராஜதந்திரத்தை ஒரு வாழும் சாஸ்திரமாகப் பழக்கிக்கொண்டு அதை சமயோசிதமாக உபயோகப்படுத்துவதில் வேறு யாரும் படேலைப்போல் இருக்கமுடியுமோ என்பது சந்தேகம்.

* * *

**காந்தி (சென்னை)**

விட்டல் பாய் வீர வாழ்வு வாழ்ந்தார். தேசத்திற்கு தீபஸ்தம்பம்போல வழிகாட்டியா யிருந்தார். சோர்வடைந்த சமயத்தில், உற்சாகம் கொடுக்கும் வீரப் பேச்சுக்கள் பேசி வந்தார். எதிரிகள் நடுங்கும்படி வெடிக் குண்டுகளைப் போல படீர் படீரென்று காரியங்களைச் செய்தார். இன்று அவரை நாம் இழந்தோம். அவர் ஆத்மா சாந்தியடையுமாக! அவர் எந்த விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணம் செய்தாரோ அந்த விடுதலையைப் பெற நாம் வேலைசெய்து அவர் ஆத்மாவுக்கு சாந்தி கொடுப்போமாக !

* * *

**நவசக்தி (சென்னை)**

தேசபக்தர் விட்டல் பாய் படேல் ஜினிவாவில் உயிர் துறந்தார் என்று கேள்வியுற்று வருந்துகிறோம். விட்டல் பாய் இந்தியா சட்டசபையில் பன்னெடு நாள் அங்கம் பெற்றிருந்தவர். மாண்டேகு செம்ஸ்போர்டு திட்டப்படி அமைந்த அச்சட்டசபையில் முதல் முதல் அமர்ந்த இந்தி

யத் தலைவர் தேசபக்தர் படேல் ஆவர். அவர் தலைவராக அமர்ந்து புரிந்த வீரச் செயல்கள் இந்தியருள்ளத்தில் புத்தம் புதிதாகப் பதிந்து கிடக்கின்றன. தேசம் தற்போது உற்றுள்ள நிலையை அறிவால் ஒழுங்கு செய்யவல்ல ஆற்றல் வாய்ந்தவர் அன்பர் விட்டல்பாய் படேல். அத் தகைய அறிவு வாய்ந்த பெரியார் இப்பொழுது உயிர் துறக்க நேர்ந்தது தேசத்தின் துரதிர்ஷ்டமே யாகும். எல்லாம் ஆண்டவன் செயல். விட்டல்பாய் படேலின் உயிர் அமைதி பெறுவ தாக.

* * *

லோகோபகாரி (சென்னை)

வானுற ஓங்கி வளர்ந்திருந்த பேராலமரம் திடீரென்று பட்டுவிழுந்ததென்ன பாரத தேசத்து வீரத்தலைவரான விட்டல்பாய் படேல் என்ற மரம் பட்டுவிட்டது. ஆண்மை மிக்க வீரத்தலைவர் ஒருவரை இந்தியா இழந்துவிட்டது. இந்தியா குடியரசானால் குடியரசுத் தலைவர் பதவியையும், முடியரசிலே இருந்தால் அரசப்பிரதிநிதி பதவியையும் அரிய திறமையுடன் வகிக்கக்கூடிய பெரிய தலைவரை நாம் இழந்துவிட்டோம். நமக்கு மறுபிறப்பில் நம்பிக்கையுண்டு. பாரத மாதாவை சீர்கெட்ட நிலையில் விட்டுவிட்டு படேல் மோட்ச நிலையை அடைந்துவிடமாட்டார். அவர் திரும்பவும் புத்துடல் கொண்டு

வந்து புனித மிக்க பாரதமாதாவுக்குத் தொண்டு புரிவாரென்றே நாம் நம்புகிறோம்.

* * *

**ஜனமித்திரன் (புதுக்கோட்டை)**

ஸ்ரீ படேலின் அறிவின் தெளிவும், அர்த்த சாஸ்திர ஞானமும், களங்கமற்ற தேசபக்தியும் பொன்னேபோல் போற்றத் தகுந்தவையாகும். மிகமிக நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் சிறிதளவும் கலக்கமுறாமல் தெளிவாக, நிதானமாக நடந்துகொள்ளும் ஆற்றலும் திறமையும் ஸ்ரீபடேலுக்கிருந்ததை நாம் நன்கறிவோம். இவ்வளவு சிறப்புகள் பெற்றிருந்த தேசிய வீரன் மாண்டுபோனது தேசியப் போராட்டத்திற்குப் பெரு நஷ்டமாகும். ஸ்ரீ படேலின் வீரமும் தீரமும் எதிர்காலத்தில் இந்நாட்டினருக்கு வழிகாட்டியாக இருக்குமென்று நம்புகிறோம்.

* * *

**தனவணிகன் (ரங்கூன்)**

தமது இந்தியா சட்டசபை எல்லைக்குள் வந்த போலீஸாரை வெளியேற்றி வெற்றிக்கொடி நாட்டிய வீரர் மறைந்தார்; வைசிராயும், ஸைமன் கமிஷனும் தமது அனுமதியின்றி சட்டசபை மண்டபத்திற்குள் வரலாகாதெனவாதாடி வென்ற விட்டல்பாய் மறைந்தார்; அமெரிக்காவில் இந்தியர்களைக் குறித்து தப்பெண்ணங்களை உண்டாக்கிக் கொண்டிருந்த கோஷ்டியினரைக்

கண்டித்து, இந்தியாவின் உண்மை நிலையை உல குக்குணர்த்திய உத்தமர் மறைந்தார்; அயர் லாந்தில் அயர்லாந்து - இந்திய சுதந்திரச் சங் கத்தை நிறுவிய அருந்தலைவர் மறைந்தார். படே லின் ஆருயிர் இந்திய தேசிய பொக்கிஷம். அதனை நாம் இழந்தோம். படேலின் பிரிவு தேசத்தின் துக்கம். கோடிக்கணக்கான மக்க ளின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட படேலி னிடம் சாதுரியமும் தைரியமும் கலந்துற வாடின. தற்கால அரசியல் நிலையில் தேசீய வீரரான படேலின் மாபெருந் தொண்டினை ஆவலுடன் எதிர்பார்த்துநின்றோம்...படேலின் பிரிவு நமது துரதிர்ஷ்டமேயாகும்.

* * *

சுதேச பரிபாலினி (ரங்கூன்)

தலைவர் படேலோ அரசாங்கக் காரியங்களை அவ்வப்படியே ஆராய்ச்சி செய்தவர். அரசாங் கத்தின் எதேச்சாதிபத்தியம் இன்னதென்று உணர்ந்தவர்; நீதி வழுவாதவர்; பதவி வேட் டையை வெறுத்தவர். இவ்வாறிருந்ததால் அர சாங்கத்தினரோடு அச்சத்துடன் இருப்பதை விட அவர்களிடமிருந்து விலகி விடுவதே மேல் என்றெண்ணி தம்முடைய தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். ஆயினும் அவரது புகழ் எப்பொழுதும் மங்கவில்லை. அதற்குப் பிறகுங்கூட குன்றின்மேலிட்ட விளக்குப்போல்

பிரகாசித்து வந்தார்......அவர் தமது ஸ்தூல திரேகத்துடன் இந்திய மக்களுக்கு எவ்வாறு வழிகாட்டியா யிருந்தாரோ அவ்வாறே சூக்ஷ்ம தேகத்தி லிருந்துகொண்டு ஒரு வழிகாட்டியாய் இருப்பாரென்பது திண்ணம். அவர் மறைந்து விட்டபோதிலும் அவரது நோக்கங்களும் அவர் செய்துவந்த காரியங்களும் இந்திய சரித்திரத்தில் எழுதப்படுமென்பது திண்ணம்.

* * *

## தமிழ் நேசன் (கோலாலம்பூர்)

இருபதாவது நூற்றாண்டின் இந்திய சரித்திரம் எழுதப்படுங் காலத்தில் இந்திய அரசியல் வானத்தில் உயர எழுந்து பிரகாசித்துக் கொண்டிருந்த நட்சத்திரக் கூட்டங்களின்நடுவே விளங்கிய ஸ்ரீயுத விட்டல்பாய் படேல் என்ற ஜோதியின் அழகையும் கம்பீரத்தையும் தெளிவையும் பிரகாசத்தையும் பொன் னெழுத்துக்களால் தீட்டுவார்களென்பதில் சந்தேகமில்லை......சட்ட சபையின் பெருமையையும் கௌரவத்தையும் இம்மியும் விட்டுக் கொடுக்காது இந்தியர்களின் மரியாதையைக் காப்பாற்றிய இவருடைய திறமை வெகுகாலம் வரை போற்றப்படும், புகழப்படும், எழுதி வைக்கப்படு மென்பதில் சந்தேகமில்லை. சுராஜ்யத்திற்காகப் பாடுபட்ட பாரதத் தாயின் அருங்குழவிகளுள் ஒவ்வொன்றாய் அதைக் காணு

மலே ஈசனின் திருவடிகளே நண்ணுகின்றனவே. காந்திஜியின் பெரிய தளகர்த்தர்களுள் இன்னு மொருவர் காலமாய்விட்டது நாட்டின் துர் அதிர்ஷ்டமே.

* * *

இந்து சாதனம் (யாழ்ப்பாணம்)

பாரதமாதாவின் மணியுதரத்துதித்த செல்வன், கூர்ஜரத்தின் முடிசூடா மன்னன், அரசினர் அஞ்சும் அடலேறு, தன்னுயிர்க்கிறுதி நேர்ந்தபோதும் தனது லட்சியத்தை மறவாது தாயாம் தேவியின் சேவை ஒன்றினையே கருதிய வீரன், ஸ்ரீ விட்டல்பாய் படேல் விண்ணுலகேகினுர் என்ற செய்தி எவர்க்கும் திகிலே விளைவிப்பதற் கேதுவாகும். மரணத்தருவாயிலும், "ஆ, ஜகதீசா, பாரததேவி சுதந்திரம் பெற்று மிளிர்வ தெந்நாளோ" என்று அரற்றி, தனது தேச மக்களுக்குச் சுதந்தரச் செய்தி அனுப்பிய வீரன் விட்டல்பாயின் நாமம் என்றும் மறக்கற்பாலதன்று.

* * *

வீரகேசரி (கொழும்பு)

இந்தியத்தாய் அருந்தவப் புதல்வனை இழந்து விட்டாள். சுதந்தர தேவி அரியதோர் பக்தனை இழந்துவிட்டாள். கூர்ஜரம் செல்வனை இழந்து விட்டது. பாரத மக்கள் மாபெருந்தலைவர்களில் சிறந்த ஒருவரை இழந்துவிட்டார்கள். தாயின்

மணிக்கொடியை ஆகாயமளாவத் தூக்கி நின்ற வீரன் சாய்ந்துவிட்டான். தாய்நாட்டின் பெருமையையும் தன்மதிப்பையும் காப்பாற்றிநின்ற பாதுகாவலன் பிணமாகி வீழ்ந்துவிட்டான். ஸ்ரீஜத் படேலின் பெயர் பாரத நாட்டின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் எழுதப்படுமென்பது நிச்சயம். மரணத்தருவாயில் அவர் விடுத்துச்சென்ற செய்தியை ஒவ்வொரு இந்தியரும் குறித்துக்கொள்ளவேண்டும்.

* * *

**தினகரன் (கொழும்பு)**

படேலது அகால மரணத்தால் உலகம் அரசியல் நிபுணர் ஒருவரை இழந்தது. இந்திய நாடு இணையற்ற தலைவர் ஒருவரை இழந்தது. இந்திய இளைஞர் உலகம் இளைஞர் உள்ளம் படைத்த ஒரு வீரரை இழந்தது. இந்தியத் தலைவர்கள் தம் சகா ஒருவரை இழந்தனர். இந்திய அன்னையின் விடுதலைக்காக இந்திய நாட்டில் அவதரித்தார். இந்திய அன்னையின் விடுதலைக்காக உயிர் வாழ்ந்தார். இவர் வீரராகப் பிறந்தார்; வீரராக வாழ்ந்தார்; வீரராகவே விண்ணுலகேகினார். இவர் பூதவுடல் நீத்தபோதிலும் இவரது புகழுடம்பு இந்திய நாட்டுத் தலைவர்கட்கும் இளைஞர்கட்கும் ஊக்கமளித்துக்கொண்டு தானிருக்கும். கற்றாரும் மற்றாரும் ஒருங்கே போற்றும் வெற்றிவாய்ந்த மாபெருந்தலைவர்

மறைவு கண்டு எவரும் சோர்வுறாது, அவர் எதற்காகப் பிறந்து, எதற்காக வாழ்ந்து, எதற்காக மரித்தாரோ, அதற்காகப் பாடுபட்டு அந்த லட்சியத்தை விரைவினில் அடையவேண்டும். அதுவே வேண்டற்பாலதாம்.

* * *

**ஹிந்துஸ்தான் டைம்ஸ்** (டில்லி)

ஸ்ரீமான் விட்டல்பாய் படேலின் மரணத்தினால் இந்தியாவுக்கு மகத்தான நஷ்டமேற்பட்டுவிட்டது. காலஞ்சென்ற தேசபந்து தாஸ் கல்கத்தா முனிசிபல் ஆட்சியைக்கொண்டு ஜனங்களுக்கு எவ்வளவு அனுகூலம் செய்துகொடுக்க நினைத்தாரோ அவ்விதமே விட்டல்பாயும் இந்தியா சட்ட சபையால் வாய்த்த அனுகூலத்தை தேசத்திற்குப் பயன்படுத்த முயன்று அதில் வெற்றியும் பெற்றார். விட்டல்பாய் தீர்க்க தரிசனமுள்ளவர்; வீண் நம்பிக்கை எக்காலும் வைப்பவரன்று. இந்தியா சட்டசபைத் தலைவர் பதவியானது இந்தியர்களுக்குக் கிடைக்கும் மற்றொரு உத்தியோகமென்று அவர் கருதாமல் அது விசேஷப் பொறுப்பு வாய்ந்த ஸ்தானமென்றும், இந்தியா சட்டசபையில் ஜனங்களுடைய செல்வாக்கு ஓங்கவேண்டுமென்றும் அவர் நினைத்தார். அவருடைய காலத்தில் எவரும் மறைமுகமாகவும் இந்தியரை இளப்பப்படுத்திக் கூறுவதற்கில்லை. அதை வெறும் விவாதச் சங்கமாக அதிகாரிகள்

பாவித்து, அதில் கலந்து கொள்ளுவது விசேஷ தயவு காட்டுவதாகுமென்று எண்ணிக் கொள்ள வும் அவர் இடங் கொடுக்கவில்லை. சட்டசபைத் தலைவர், எதேச்சாதிகாரத்திற்கு எதிரிடையாகப் பொதுஜன உரிமைகளைப் பாதுகாக்க வேண்டு மென்று அவர் கருதியதால் அதிகாரிகளுடைய துவேஷத்தையும் அவர் பொருட்டாகக் கருத வில்லை. இந்தியாவின் ஆண்மைத்தனத்திற்கே அவர் ஒரு சிறந்த உதாரண புருஷராக விளங்கி ஞர். அவரைப்போன்றவர் இனிக் கிடைப்பதரிது.

* * *

டெய்லி நியூஸ் (நாகபுரி)

ஸ்ரீமான் படேலின் ராஜீய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட் டாலும் அவருடைய முக விலாசத்தையும், சாமர்த்தியத்தையும் மதித்துத்தா ஞகவேண்டும். சிறிது காலம் அவர் இந்தியா கவர்ன்மெண்டின் அஸ்திவாரமே ஆடிப்போகும்படி செய்து விட் டார். டில்லி அதிகாரி வர்க்கத்தினருடைய ஜம் பம் அவரிடம் சாயவில்லை. ஸ்ரீமான் படேலுக்கு முன்னும் பின்னும் மாகாண மத்திய சட்டசபை களின் தலைவர்களாகப் பலர் இருந்திருக்கிறார்கள். ஆனால் சுயேச்சையிலோ, நிஷ்பக்ஷபாதத் தன்மை யிலோ, அல்லது உறுதியிலோ அவருக்கு இணை யானவர்கள் ஒருவருமில்லை யென்று சொல்லு வது மிகையாகாது. இந்தியாவுக்காக அரும்பாடு

பட்ட இத்தகைய பெரியார் இறந்து போய்விட்டது பெரிய துர்ப்பாக்கியமாகும்.

* * *

**ட்ரைபியூன் (லாகூர்)**

**ஸ்ரீ**மான் வி. ஜே. படேலின் மரணத்தினால் இந்தத் தலைமுறையில் மிகவும் பிரபலஸ்தராக விருந்த ஒருவரை இந்தியா இழந்துவிட்டது. இரண்டு காரியங்களில் அவர் வழிகாட்டவேண்டியிருந்தது. ஸ்ரீமான் கோகலேயினால் ஆரம்பக் கல்வி மசோதாவை நிறைவேற்றிவைக்க முடியவில்லை. அந்தக் காரியத்தை **ஸ்ரீ**மான் படேல் செய்து முடித்தார். இந்தியா சட்டசபைத் தலைவர் பதவியில் ஜனப் பிரதிநிதிகள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்று அவர் வழிகாட்டவேண்டியவராக விருந்தார். இதில் அவர் அடைந்த வெற்றி என்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அவர் தலைமை வகித்த இந்தியா சட்டசபையானது பெயரளவில்தான் பார்லிமெண்டாக இருந்தது. இங்கிலாந்தில் பார்லிமெண்டு அடைந்துள்ள அபிவிருத்தியை அது அடைய வெகுகாலம் செல்லும். ஆனால் ஸ்ரீமான் படேல் இந்தப் பதவியிலிருந்துகொண்டு செய்த பேருழியத்தை அவருக்குப்பின் அப்பதவியை வகிக்கிறவரும் செய்வது அசாத்தியமென்று கூசாமற் சொல்லலாம். நிர்வாகிகளுடன் அவருக்கு அடிக்கடித் தகராறு ஏற்பட்டது. அவைகள் எல்லா

வற்றிலும் அவரே வெற்றியடைந்தார். அவருக்கு இணையான தேசாபிமானி யாரும் இருக்கிறார்களென்றும் சொல்லுவதற்கில்லை. சுதந்திரப் போராட்டம் கடைசி கட்டத்தை அடைந்துகொண்டிருக்கும் இந்தக் குதப காலத்தில் அவரைக் கூற்றுவன் கொள்ளை கொண்டுவிட்டதால் தேசமானது அவருடைய அரிய சேவையைப் பெற முடியாமற் போய்விட்டது. அவருடைய ஞாபகம் என்றென்றும் இந்தியர்களுக்கு இருந்து வரும்.

* * *

**ஸிவில் அண்ட் மிலிட்டரி கெஜட் (லாகூர்)**

ஸ்ரீமான் படேல் வீரராகவே பிறந்தவர். அவருடைய அந்த இயற்கையான சுபாவத்தினால் ராஜீய வாழ்வில் அடிக்கடி அவர் பெரிய போராட்டங்களில் ஈடுபட வேண்டியதாயிற்று. அவருடைய அந்தரங்க சுத்தியையும் திறமையையும் ஒருவரும் சந்தேகிப்பதற்கில்லை. இந்தியா சட்டசபையின் தலைவராக அவர் இருந்த காலம் முழுவதும் தமது ஆண்மைத்தனம் பிரதிபிம்பிக்கும்படி அவர் செய்துவந்தார்.

* * *

**பயோனியர் (லட்சுமணபுரி)**

இந்தியாவின் ராஜீய வாழ்வில் ஈடுபட்டிருக்கிறவர்களில் ஸ்ரீமான் படேலுக்கு இணையானவர்கள் அதிகப் பேர்களில்லை. அவர் இந்தியா சட்ட

சபையின் தலைவராக இருந்து எழுப்பிய போராட்டங்களை வர்ணிப்பதெனில் ஒரு பெரிய புத்தகம் போதாது. அவர் தனி வழியைப் பின்பற்றி வந்தபோதினும் தேசத்திற்கு ஊழியம் செய்ய வேண்டுமென்பதே அவருடைய முக்கியக் கொள்கையாக விருந்ததென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. அவர் வேறு தேசத்தில் பிறந்திருந்தால் வேறு விதமான சந்தர்ப்பங்கள் அவருக்கு வாய்த்திருக்கும்.

* * *

**இந்தியன் ஸோஷல் ரிபார்மர் (பம்பாய்)**

கோகலேயின் விசால அறிவோ அல்லது தீர்க்க தரிசனமோ ஸ்ரீமான் படேலுக்கு இல்லாதபோதிலும், எதிராளிகளை எவ்விதமாவது மடக்கிவிடுவதற்கு ராஜீய வாதிகளுக்கு இருந்துவர வேண்டிய முக்கியமான சாமர்த்தியம் அவரிடம் அதிகமிருந்தது. அவர் ஓய்வு ஒழிவின்றி வேலைசெய்யும் ஆற்றல் படைத்தவர். பாந்த்ரா முனிசிபாலிட்டி, பம்பாய் கார்ப்பொரேஷன் இவைகளின் தலைவர் ஹோதாவில் அவர் அரிய வேலை செய்தார். இந்தியா சட்டசபைத் தலைவர் ஸ்தானமானது அவருடைய சாமர்த்தியம் முழுவதையும் காட்டிக் கொள்ளுவதற்குத் தகுந்த இடமாக விருந்தது. உத்தியோகஸ்தர்க ளல்லாத அங்கத்தினர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதே தமது கடனென அவர் கருதி வந்தார்.

சட்டவரம்பை அவர் ஒருபோதும் மீறிவிடுவ தில்லை யாதலால் அவருடைய செய்கைகளை நிர்வாகிகள் எந்த சமயத்திலும் ஆட்சேபிக்க முடிய வில்லை. அவர் அடக்கமான வாழ்வை நடத்தி வந்தார். அவருடைய தேவைகள் குறைவு. நண்பர்களை அவர் எப்பொழுதும் கைவிட்ட தில்லை. அவருடைய மரணத்தில் யாவரும் துக்கம் தெரிவிப்பதே அவர் செய்துள்ள அரிய சேவைக்குப் போதிய அத்தாக்ஷியாகும்.

* * *

**டைம்ஸ் ஆப் இந்தியா (பம்பாய்)**

ஸ்ரீமான் படேல் பம்பாய் கார்ப்பொரேஷன் தலைவராக இருந்த காலத்தில் அந்த ஸ்தாபனத்தின் கமிஷனராக விருந்த மிஸ்டர் கிளேட்டனே அவர் பின்னர் இந்தியா சட்டசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முக்கியக் காரணஸ்தராக விருந்தாரென்று சொல்லுவது மிகையாகாது. ஸ்ரீமான் படேல் கார்ப்பொரேஷன் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொண்ட பொழுது அவர் அந்த சபையின் தலைவர் ஹோதாவில் செய்த பேரூழியத்தை மிஸ்டர் கிளேட்டன் வெகுவாக சிலாகித்துக் கூறியது இந்தியா சட்டசபைத் தலைவர் தேர்தலில் அவர் எதிர்பார்த்திருக்கக்கூடாத ஒருஓட்டைப் பெறுவதற்குப்பெரிய உதவியாகவிருந்தது. அவர் இந்தியா சட்டசபைத் தலைவர் பதவியி லிருந்துகொண்டு

அனுஷ்டித்த முறையே தேசம் ராஜீயத் துறையில் சுதந்திரம் பெறுவதற்கு உதவியாக விருக்கக் கூடுமென்று அவர் நினைத்திருக்கலாம். அவருக்கு அடக்கியாளும் சக்தியும், எப்பொழுதும் விழிப்பாகவிருக்கும் சாமர்த்தியமும் இயற்கையாகவே அமைந்திருந்தன. இந்தியா சட்டசபையில் நேரிய வழியில் விவாதங்கள் நடந்துவரும்படி செய்யும் ஆற்றல் அவருக்குப் பூரணமாக இருந்தது. ஒழுங்கு முறைகளைப் பற்றி எழுந்த பிரச்சினைகளில் அப்போதைக் கப்போது ஜரூராக அவர் முடிவுகளைக் கூறி வந்தார். தலைவர் பதவியை வகித்திருக்கிறவர் நிஷ்பக்ஷபாதியாக இருக்கவேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்திருந்தார். அவர் அந்த வழியை விடுத்து வேறு வழியில் திரும்பாம லிருந்திருந்தால் அரசியல் துறையில் விசேஷ அபிவிருத்தி ஏற்படும்படி செய்திருக்கலாம். லார்டு இர்வினிடத்திலும் அவருக்கு விசேஷச் செல்வாக்கு இருந்துவந்தது. தேசத்தின் ராஜீய விஷயங்களை முடிவு செய்வதற்காக அவர் உள்நாட்டு இலாகாவின் நிர்வாகத்தைத் தாமே எற்றுக்கொண்டு காங்கிரஸுக்கும் கவர்ன்மெண்டுக்கும் ராஜியை ஏற்படுத்துவதற்கு ஸ்ரீமான் படேலின் உதவியை உபயோகித்துக் கொண்டு வந்தார். ஸிம்லாவிலும், டில்லியிலும் படேல் ராஜ்யம் ஏற்பட்டுவிட்டதென்று பலர் நினைக்கவும் இது இடங் கொடுத்தது. அவர்

இந்தியா சட்டசபையின் தலைவராக இருந்த காலத்தில் இந்தியா கவர்ன்மெண்டாராலும் அவருக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

* * *

பம்பாய் கிரானிகில் (பம்பாய்)

சுதந்திரப் போராட்டம் மிகவும் நெருக்கடியானதாக இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீமான் படேலைப்போன்ற தலைவரை இந்தியா இழப்பதற்கில்லை. அவர் போர்க் குணத்துடனேயே பிறந்தவர்; உறுதியும் சமயோசிதமாக நடந்துகொள்ளும் ஆற்றலும் வாய்ந்தவர். தேசாபிமானத்திற்கு ஒரு திலகமாக அவர் இருந்தார். தமது கட்சிக்கு அவர் பெரிய பலமாக இருந்ததோடு, எதிர்க்கட்சியினர் திணறும் படியும் அவர் செய்து வந்தார். அவர் என்ன செய்து விடுவாரோவென்ற பயம் எதிராளிகளுக்கு எப்பொழுதும் இருந்து வந்தது.... காலத்திற்கேற்ற புதிய வழியைப் பின்பற்ற வேண்டுமென்ற அபிப்பிராயம் ஓங்கியிருக்கும் இந்த சமயத்தில் அவருடைய சாமர்த்தியமும், பழுத்த அனுபவமும், சமயத்திற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளும் ஆற்றலும் தேசத்திற்கு மிகவும் உபயோகமாக இருந்திருக்கும். பொதுஜன இயக்கத்திலேயே அவருக்கு எப்பொழுதும் திருஷ்டி யிருந்துவந்தது. 1925-ம் வருஷத்திலேயே இந்தியா சட்டசபையில் அவர் அதைத்

தெரிவித்தார். அவர் ஜீவித்திருந்தால் அதற்குத் தகுந்த திட்டத்தை அவர் வகுத்திருப்பார். ஆனால் ஆண்டவன் செயல் வேறாக இருந்துவிட்டது.

* * *

## பிரீ பிரேஸ் ஜர்னல் (பம்பாய்)

ஸ்ரீமான் படேலின் மரணத்தினால் இந்திய ராஜீயக் கோஷ்டியில் ஏற்பட்டுவிட்ட நஷ்டத்தை ஈடு செய்வது அசாத்தியமென்று சொல்லுவது சம்பிரதாயத்தை ஒட்டி மட்டில் கூறும் வார்த்தை யாகாது. அவர் அதிக புத்தி கூர்மையும் ஜாகரூகத்தன்மையும் வாய்ந்தவராக இருந்தாராயினும் கொள்கைகளை விட்டுக் கொடுக்க அவர் ஒருபோதும் சம்மதித்ததில்லை. இவ்விதம் அவர் உறுதியாக இருந்ததால் யுவர்கள் அவரைத் தெய்வமாகக் கொண்டாட லாயினர். ராஜீயத் துறையில் சமரஸம் ஒரு உத்தமமான குணமே. ஆனால் அடிமைப்பட்டுக் கிடக்கும் தேசத்திற்கு அது ஏற்றதில்லை. இந்த உண்மையை ஸ்ரீமான் படேல் நன்கறிந்திருந்ததுடன் இதைக் காரியத்திலும் காட்டி வந்தார். மற்றவர்களிடத்தில் ஒவ்வொரு சமயத்தில் சிலர் சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனால் ஸ்ரீமான் படேலிடத்தில் ஒருவரும் எக்காலத்திலும் சந்தேகப் பட்டதில்லை. சமயத்திற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளும் தன்மையும் அவருக்கு இருந்தது. அவர் காங்

கிரஸின் வைதீக கோஷ்டியினருடைய அபிப் பிராயத்திலிருந்து மாறுபட்டு சட்டசபைப் பிர வேசத்தை ஆதரித்தாரெனில், சுதந்திரத்தை அடைவதற்கு அவை தகுந்த கருவிகளென அவர் நினைத்ததே காரணமாகும். ஆனால் அவர் யோக்கியப் பொறுப்பு மிகுந்தவராதலால் சட்ட சபை வெறும் மாயைதானென்பது தெரிந்ததும் இந்தியா சட்டசபைத்தலைவர் பதவியைத் உதறித் தள்ளிவிட்டு ராஜீயப் போராட்டத்தில் திரும்பி விட்டார். அவர் படுக்கையிலிருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்க வேண்டிய சமயத்தி லும் அமெரிக்கா சென்று இந்தியப் பிரசாரத்தை நடத்தினார். அவர் தேச சேவையிலேயே உயிர் துறந்தார்.

* * *

**டெயிலி கெஜட்டு (கராச்சி)**

ஸ்ரீமான் படேல் காரிய சாதகத்தில் மிக்க கருத்துள்ளவர். அதிக உண்மையோடு பாடுபடக் கூடியவர்; சிறந்த ராஜீயவாதி. அவரது மரணத் துக்கு இந்தியர் பலரும் வருந்துவார்கள். இன் னும் பல தலைமுறைகள் வரை அவரது செயல் கள் ஒரு வழிகாட்டியாக விருக்கும்.

* * *

**நாஷனல் கால் (டில்லி)**

அக்கிராசனர் படேல் என்ற பெயரே காலஞ் சென்ற படேலுக்கு எக்காலத்தும் வழங்கும்.

அவர் தேசத்துக்காக உயிர் துறந்த தியாகிகளுள் ஒருவராகிவிட்டார். உலகிலுள்ள பார்லிமெண்டு ஸ்தாபனங்களில் அக்கிராசனம் வகித்த மேதாவிகளுள் ஸ்ரீமான் படேல் எவருக்கும் பின்வாங்காத நிலைமையை அடைந்துவிட்டார்.

* * *

லீடர் (அலகாபாத்)

ஸ்ரீமான் படேல் அந்தரங்க சுத்தியுடன் போராடிய சிறந்த தேசாபிமானி. அவருடைய மரணம் தேசத்திற்குப் பெரிய நஷ்டமாகும்.

* * *

தியான பிரகாஷ் (பூனா)

ஸ்ரீமான் படேல் சமூகச் சீர்திருத்த விஷயத்திலும் அதிக அக்கரை யுடையவராக இருந்தார். பல மசோதாக்களை அவர் கொண்டுவந்து நிறைவேற்றி வைத்தார். அவர் இறந்துவிட்ட போதிலும் இந்தியா சுதந்திரமடையும் வரை அவருடைய ஆத்மா சாந்தி யடையாது.

* * *

அமிர்தபஜார் பத்திரிகை (கல்கத்தா)

தாய்நாட்டுக்கு வெளியே ஸ்ரீமான் படேல் காலகதி யடைந்துவிட்டார். தாய்நாட்டில் உயிர் துறக்க வேண்டுமென்று அவருக்குக் கடைசியாக இருந்த அவா நிறைவேறாமலே போயிற்று. புதிய சகாப்தத்தின் தீர்க்க தரிசியான ராஜாராம் மோஹன்ராயைப் போலவே, தாய் நாட்டின்

சுதந்திரத்திற்காகப் போராடியவரும், மிகுந்த தீரமும் விசேஷ சாமர்த்தியமும் வாய்ந்தவரு மான இவரும் அந்நிய நாட்டில் பூதவுடலை நீத்து விட்டார். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத் தின் மூன்று அங்கங்களுக்கும் அவர் பிரதிநிதி யாக விருந்தார். முதலில் ஒத்துழையாதாராக விருந்தார்; பிறகு ஒத்துழைப்பவ ராஞர்; மறு படியும் ஒத்துழையாதா ராகிவிட்டார். தாய்நாடு சுதந்திரமடையுமுன் உயிரை விடவேண்டியிருக் கிறதே யென்ற துக்கத்துடன் அவர் பிராணனை விட்டார். அவரைப்போல் பழுத்த பழமாகவும் தேக உபாதை மிகுந்தவராகவும் இருந்த வேறு எவரும் அதுவரையில் சாதித்துள்ளதில் திருப்தி யடைந்திருப்பார். அதனுலும் மகா ஜனங்க ளுடைய நன்றி குறைந்திராது. சட்டசபைத் தலைவர் பதவிக்கு முன்னும் பின்னும் அவர் செய் துள்ள பேரூழியத்தில் யாரும் திருப்தி யடைய லாம். ஆனுல் விருத்தாப்பியமோ, சரீர உபா தையோ, அல்லது சிறை வாசமோ கடைசி நிமி ஷம் வரை போராடியே தீருவதென்று சங்கற் பித்துக்கொண்டிருந்த அவருடைய வேகத்தைத் தணித்துவிட முடியவில்லை. அவருடன் நெருங் கிப் பழகியவர்கள் அவர் செய்துவந்த அபார சேவையை எவ்விதம் நிறைவேற்றிவைக்க முடிந்த தென்று அதிசயப்பட்டு வந்தார்கள். கடைசியாக அவருடைய உடல் பிரிந்துவிட்ட போதிலும்,

போராட்டம் முடியும் வரை அவருடைய ஆவி வட்டமிட்டுக்கொண்டே யிருக்கும்.

* * *

**பார்வர்டு (கல்கத்தா)**

மற்றொரு பெரிய விருக்ஷம் சாய்ந்துவிட்டது. வனத்திலுள்ள பெரிய விருக்ஷம் சாய்ந்துவிடுகை யில் அந்த இடம் வெறு வெளியாக விருப்பது கண்ணை உறுத்தும். விட்டல்பாய் படேல் கால மாகிவிட்டார். அவருடைய மரணத்தால் இந்தியா ஒரு பெரியாரை இழந்துவிட்டது. நூற்றுக்கணக் கான போராட்டங்களில் அவர் ஈடுபட்டார். சரீ ரத்திலிருந்து உயிர் நீங்கும் வரையிலும் விட்டுக் கொடுப்பதையே அவர் அறியாதவராக இருந்து விட்டார். இந்தியா சட்டசபையின் உத்தியோ கஸ்தரல்லாத முதல் தலைவர் முறையில் தைரி யத்தையும் புத்தி சாதுர்யத்தையும் அவர் காட் டிக்கொண்டார். யுவர்கள் அவரை வழிகாட்டி யாகக் கருதிவந்தனர்.

* * *

**கல்கத்தா முனிசிபல் கெஜட்**

ஸ்ரீமான் படேலின் மரணத்தினால் இந்தியா வின் ராஜீய வாழ்விலிருந்து தீரமும் வீரமும் நிறைந்த ஒரு மனிதர் மறைந்துவிட்டார். குடி யானவர் வயிற்றில் பிறந்த அவருக்கு அத்தொழி லைச் செய்வோருக்கு இயற்கையாகவுள்ள பிடி வாதமும் உறுதியுமிருந்தது. போராட்டத்தில்

அவருக்குப் பரம திருப்தி. அது அதிக காலம் நீடிப்பது அவருக்கு அதிக சந்துஷ்டியைக் கொடுத்து வந்தது. போராட்டமே அவருடைய பிறவிக் குணமாக அமைந்துவிட்டது. காங்கிரஸிலும் சரி, சட்டசபையிலும் சரி, அவர் அந்த குணத்தைக் காட்டிவந்தார். இந்தியாவின் சுதந்திரப் போராட்ட சரித்திரம் எழுதப்படுகையில், விட்டல்பாய் படேலின் சேவையும் தியாகமும் அதில் முக்கியஸ்தானத்தைப் பெறும். அவருடைய ஆத்மா சாந்தி அடைக!

* * *

ஸ்டேட்ஸ்மன் (கல்கத்தா)

ஸ்ரீமான் படேலின் மரணமானது நண்பர்கள், விரோதிகள் ஆகிய இருதரத்தாருக்கும் மிகுந்த வருத்தத்தை விளைவிக்கும். அவர் தமது சுபாவப்படி நமனுடனும் தீவிரமாகப் போராடினார். அவரை மதிப்பிடுவது கஷ்டம். அவருக்கு நண்பர்களும் அறிமுகமானவர்களும் பலரிருந்தும் அவரோடு அந்நியோந்நியமாக அதிகப் பேர்கள் இருந்ததில்லை. தனித்திருக்கும் குணம் இயற்கையாகவே அவருக்கு அமைந்திருந்ததால் அவர் எப்பொழுதும் ஒதுங்கியே யிருந்தார். இருந்தாலும் அன்பு அவருக்குப் பூரணமாக உண்டு. யாருடனும் ஸிம்லா குன்றுகளை அவர் சுற்றிவருகையில் அவர் அதிகக் குஷாலாகவிருப்பார். சம்பாஷணைக்கிடையில் பொட்டென எதையேனும் சொல்

வதால் அங்குக் கூடியிருப்போர் சிரிக்கும்படியும் அவர் செய்துவிடுவார். அவர் ஈடுபட்ட போராட்டங்களில் வெற்றி அவருடையதாகவே இருந்தது. அவர் போர்க்குண மில்லாமலிருந்த சமயங்களில் பரம நிதானஸ்தராக இருந்தார். கௌரவமான பதவியை வகித்திருப்பதற்கு வேண்டிய யோக்கியதையும் அவரிடம் இயற்கையாகவே அமைந்திருந்தது. அவர் பேச எழுந்துவிட்டால் எல்லோரும் நிசப்தமாக விருந்து கேட்பார்கள். "அடுத்த கூட்டம் நடைபெறுமோ, நடைபெறாதோ? அது நடந்தாலும் நம்மில் எத்தனை பேர்கள் இங்கிருப்பார்களோ?"வென்று அவர் கடைசியாகச் சொல்லி ஒவ்வொரு அங்கத்தினரையும் தம்முடன் கைகுலுக்கும்படி கேட்டுக்கொண்டது எந்நாளும் மறந்துபோகாது.

* * *

**அட்வான்ஸ் (கல்கத்தா)**

விட்டல்பாய் படேல் வேலை செய்வதற்குப் பரந்த வசதிகள் இருந்தும் அவர் பலரும் கவுரவிக்கும் பதவியை விட்டது இந்திய தேசிய சரித்திரத்திலேயே என்றும் மறக்க முடியாத விஷயமாகும்.

---

# சபைகளின் அநுதாபம்

ஸ்ரீமான் விட்டல் பாய் படேல் கால கதியடைந்து விட்டதற்கு வருந்தி இந்தியாவிலுள்ள

பல பொது ஸ்தாபனங்களும் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டன:—

**சென்னை சட்டசபை**

1933-ம் வருஷம் அக்டோபர் மாதம் 30-ந் தேதி எதிர்க்கட்சியின் தலைவரான டாக்டர் பி. சுப்பராயன் அடியிற்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

> "இந்தியா சட்டசபையின் உத்தியோகஸ்தரல்லாத முதல் தலைவரான ஸ்ரீமான் வி. ஜே. படேல் காலகதி யடைந்து விட்டதற்கு இச்சபை தனது ஆழ்ந்த வருத்தத்தைப் பதிவு செய்கிறது"

அவர் பேசியதாவது:— இந்தியா சட்டசபையில் உத்தியோகஸ்தரல்லாத முதல் தலைவர் என்ற முறையில் ஸ்ரீமான் படேலின் பெயர் என்றும் ஞாபகத்திலிருக்கும். இந்த சமயத்தில் இந்தியா சட்டசபையின் இப்போதைய தலைவரும் இந்த சபையில் பிரசன்னமாக இருப்பது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது. அவர் தமக்கு முன் அப்பதவியை வகித்திருந்த ஸ்ரீமான் படேலின் சேவையைப் பாராட்டியிருப்பதோடு, அவர் கொடுத்துள்ள தீர்ப்புகள் தமக்குச் சிறந்த வழி காட்டிகளாக இருக்கின்றன வென்றும் சொல்லியிருக்கிறார். இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராடியவர் என்ற முறையிலும் ஸ்ரீமான் படே

லின் பெயர் என்றும் மறவாமலிருக்கும். அவர் இறந்துபோகும் சமயத்திலும் இந்தியா சீக்கிரத்தில் சுதந்திரமடைய வேண்டுமென்றே பிரார்த்தித்திருக்கிருர். அவருடைய ஆத்மாவும், அவரது கடைசிச் செய்தியும் நம்முடன் எப்பொழுதுமிருந்து சுதந்திரத்திற்காக நாம் பாடுபடும்படி தூண்டிக்கொண்டிருக்கும்.

கனம் முகம்மது உசுமான் கவர்ன்மெண்டின் சார்பாகத் துக்க முணர்த்தினர். சபையினர் எழுந்து நின்று தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தனர்.

* * *

## சென்னை கார்ப்போரேஷன்

அக்டோபர் மாதம் 24ந்தேதி குமார ராஜா முத்தையா செட்டியார் அக்கிராசனத்தின்கீழ் நடந்த சென்னை கார்ப்பொரேஷன் கூட்டத்தில் ஜனுப் அப்துல் ஹமீதுகான் அடியிற்கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

இந்தியா சட்டசபையின் மாஜி தலைவரும், பிரபல தேசாபிமானியுமான ஸ்ரீமான் விட்டல் பாய் படேல் காலகதி யடைந்துவிட்டதற்கு இந்தச் சபை வருந்துவதோடு, அவருடைய குடும்பத்தினருக்கு சபையின் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளும்படி மேயரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

ஸ்ரீமான் ஏ. இராமசாமி முதலியார் இதை ஆமோதித்தார். மிஸ்டர் எப். இ. ஜேம்ஸ் முதலியவர்கள் ஆதரித்துப் பேசினர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. சபைக் கூட்டம் மற்றொரு தீர்மானத்தின் மூலம் ஒத்திவைக்கப் பட்டது.

*   *   *

**கல்கத்தா கார்ப்பொரேஷன்**

அக்டோபர் மாதம் 25ந்தேதி கூடிய கல்கத்தா கார்ப்பொரேஷன் சபையானது ஸ்ரீமான் படேலின் மரணத்திற்கு வருந்தியும் அவருடைய சேவையைப் பாராட்டியும் ஒரு தீர்மானம் செய்துவிட்டுக் கலைந்தது. மிஸஸ் நீலி ஸென் குப்தா, ஸ்ரீமான் ஸி. ஸி. விசுவாஸர் முதலியவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். மேயர் இத்தீர்மானத்தின் மேல் பேசுகையில் ஸ்ரீமான் படேலைப்போல் சிறந்த தலைவர் ஒருவர் வங்காளத்தில் இல்லையேயென்று துக்கப்பட்டார்.

*   *   *

**டில்லி முனிசிபாலிட்டி**

அக்டோபர் மாதம் 25ந்தேதி நடந்த முனிசிபல் சபையின் கூட்டத்தில் ஸ்ரீமான் படேலின் மரணத்திற்கு வருந்துவதாக ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

*   *   *

## பம்பாய் கார்ப்பொரேஷன்

இந்தியாவின் சிறந்த ராஜீய வாதிகளில் ஒருவரும், பார்லிமெண்டு ஞானத்தில் மிகுந்தவரும், உத்தம தேசாபிமானியும், மதிப்பு வாய்ந்த தேசீயத் தலைவருமான ஸ்ரீமான் படேல் காலகதியடைந்துவிட்டதற்கு வருந்துவதாக அக்டோபர் மாதம் 26ந்தேதி நடந்த பம்பாய் கார்ப்பொரேஷன் கூட்டத்தில் ஸ்ரீமான் யமுனா தாஸ் மேட்டா பிரேரித்த தீர்மானத்தை சபை நிறைவேற்றி வைத்துவிட்டு, அவரிடத்தில் மரியாதை காட்டுவதற் கறிகுறியாக வேறு வேலை செய்யாமலே கலைந்தது. ஜனாப் ஹூசேன் பாய் லால்ஜி, மிஸ்டர் மேயர் நிஸிம், மிஸ்டர் ஜி. ஐ. கிரிப்பித் முதலியவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள்.

* * *

## எல்லைப்புற மாகாண சட்டசபை

எல்லைப்புற மாகாண சட்டசபை நவம்பர் மாதம் 6-ந் தேதி கூடியது.

இந்தியா சட்டசபையின் மாஜி தலைவரும், தீவிர தேசாபிமானியும், சிறந்த அரசியல் ஞானியும்,எல்லைப்புற மாகாணத்தின் கட்சிக்குப் பூர்ண ஆதரவளித்து வந்தவருமான ஸ்ரீமான் படேல் அகால மரணமடைந்து விட்டதற்கு வருந்துவதாக எல்லோரும் எழுந்து நின்று ஒரு தீர்மா

னத்தை நிறைவேற்றினர். அவரிடத்தில் மரியாதை காட்டுவதற் கறிகுறியாக சபையின் நடவடிக்கை 5 நிமிஷ நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

* * *

## இந்தியா சட்டசபை

நவம்பர் மாதம் 20ந்தேதி இந்தியா சட்டசபையில் இந்தியா சட்டசபையின் உத்தியோகஸ்தரல்லாத முதல் தலைவராகவிருந்த ஸ்ரீமான் படேலின் மரணத்திற்கு வருந்துவதாகவும், அவரிடத்தில் சபைக்கு இருந்த மரியாதையைக் காட்டிக் கொள்ளுவதற்காக சபையை ஒத்திவைக்க வேண்டுமென்றும் சபையின் பிரதான புருஷரான ஸர் பி. எல். மித்தர் பிரேரணை செய்து பேசியதாவது:—

இந்த சபையில் தலைமை வகிக்க இந்தியர் அருகரென்பதை முதன் முதலாக நிரூபணம் செய்தவர் ஸ்ரீமான் படேல் என்பதை கவர்ன்மெண்டார் எக்காலத்தும் மறக்கமாட்டார்கள். ஸிம்லாவில் நாம் கூடிக் கலைந்த பிறகு அவர் காலமாகிவிட்டார். பொதுவாக இந்த சபையின் சார்பாகவும், குறிப்பாக இந்தியா கவர்ன்மெண்டின் சார்பாகவும், நான் இன்று அவரது திறமையைப் பாராட்டி அவர் காலகதி அடைந்துவிட்டதில் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தலைவர் பதவிக்குத் தாம்

அபேக்ஷகராக நின்றதன் நோக்கத்தைப் பூர்த்தி செய்து வைப்பதற்காக அவர் சபைத் தலைவர் பதவியை வகித்ததுமுதல் சபையின் நடவடிக்கைகளைத் திறம்பட நடத்திவந்தார். உத்தியோக பதவியி லிருக்கையில் அரசியல் முறையைக் குலைக்க வேண்டுமென்று அவர் சிறிதும் நினைக்கவே இல்லை. அதனைச் சரிவர நடத்திக் காட்டவும், இந்த சபையின் கௌரவத்தைப் பாது காக்கவும் அவர் விசேஷ அக்கரை எடுத்துக் கொண்டார். அவருக்கும் கவர்ன்மெண்டாருக்கும் ஏற்பட்ட தகராறுகளைப்பற்றி விவரிக்க இது சமயமில்லை. அவர் விஷயத்தில் எந்த சமயத்திலும் எங்களுக்குக் கெட்ட எண்ணம் ஏற்படாதென்பதை நான் கவர்ன்மெண்டின் சார்பாக இன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த சபையில் தலைமை வகிக்க இந்தியருக்கு அருகதை உண்டு என்பதை அவர் கிரியாம்சையில் நிரூபணம் செய்தார் என்ற எண்ணமே எப்பொழுதும் எங்கள் மனதிலிருக்கும். இச்சந்தர்ப்பத்தில் ஒரு சொந்த விஷயத்தை இங்கு குறிப்பிட நான் விரும்புகிறேன். நான் ஜினிவாவுக்குப் போயிருந்த பொழுது சிகிச்சா விடுதியிலிருந்த அவரைக் காண நானும் என் மனைவியும் சென்றோம். அவர் மரணம் நெருங்கிக்கொண் டிருக்கிறதென்பதை உணர்ந்திருந்தார். லார்டு வில்லிங்டனுக்கும் லேடி வில்லிங்ட

னுக்கும் தம்மைப்பற்றி ஞாபகப்படுத்தும்படி அவர் சொன்னார். அதோடு என் மனைவியிடம் "எல்லோருக்கும் என்னைப்பற்றி ஞாபகப் படுத்துங்கள்" என்று சொன்னார். நாங்கள் விடை பெற்றுக்கொண்டு திரும்பும்போது, இச் சபையிலுள்ள எல்லாக் கட்சியினரிடமும் தமக்கு இருந்துவரும் நல்லுணர்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளும்படி அவர் வேண்டிக்கொண்டார். நாங்கள் மிகுந்த துக்கத்துடன் அவருடைய அறையைவிட்டு வெளியேறினோம். பல் வேறு கட்சியினரும் அவருடைய மரணத்தில் வருத்தத்தைத் தெரிவித்த பிறகு சபைக் கூட்டத்தை ஒத்திவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்டசபையின் உபதலைவரான ஜனப் அப்துல் மதீன் சௌத்ரி பேசுகையில் ஸ்ரீமான் படேலின் மரணம் இந்தியாவுக்குப் பெரிய நஷ்டமென்றும், அவர் பொது ஜனங்களுடைய உரிமையைப் பாதுகாத்து வந்ததால் சபையில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படலாயிற்று என்றும், அவர் சிறிதும் பக்ஷபாதமின்றி நடந்துகொண்டு வந்தாரென்றும் சொன்னார்.

திவான் பகதூர் ஏ. ராமசாமி முதலியார் பேசுகையில் பொது ஜனங்களுடைய லட்சியத்தையும் அவர்களுடைய உரிமைகளையும் ஸ்ரீமான் படேல் பாதுகாப்பாரென்ற நம்பிக்கை ஜனப் பிரதிநிதிகளுக்குப் பூரணமாக இருந்ததென்றும், அவர்

போராடுவதில் வல்லவ ரென்றும், விட்டுக் கொடுப்பதென்பதை அறியாதவரென்றும், அந்நிய நாடுகளுக்குச் சென்றிருந்த சமயத்திலும் தேச விடுதலைக்காகவே அவர் பாடுபட்டாரென்றும், அவரது ஞாபகார்த்தமாக சபையிலேயே ஞாபகச் சின்னமொன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் சொன்னார்.

ஸ்ரீமான் நியோகி, தலைவர் பதவிக்கு ஒரு அந்தஸ்தையும் கௌரவத்தையும் ஸ்ரீமான் படேல் உண்டுபண்ணியதாகச் சொன்னார்.

ஸர் வெஸ்லி ஹட்ஸன் பேசுகையில் ஐரோப்பிய அங்கத்தினர்களிடமும் ஸ்ரீமான் படேல் ஒரே மாதிரியாக அன்பு காட்டி வந்தாரென்றும், தலைவர் பதவியி லிருக்கையில் எக்கட்சியையும் தாம் சேர்ந்தவ ரில்லையென்பதை அவர் கிரியாம்சையில் காட்டிக்கொண்டா ரென்றும் சொன்னார்.

ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியாரும் ஞாபகச் சின்னம் அமைக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர்.

ஸ்ரீமான்களான அமரநாத தத்தர், ஸர் அப்துல்லா சுக்ரவர்தி, ஸ்ரீமான் யாதவர் முதலியவர்களும் தீர்மானத்தை ஆதரித்து ஸ்ரீமான் படேலின் அரிய சேவையைப் பாராட்டினர். பம்பாய்க் கவர்ன்மெண்டார் தகன விஷயத்தில்

சின்ன புத்தியைக் காட்டியதில் ஸ்ரீமான் யாதவர் வருத்த முணர்த்தினர்.

தலைவர் ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பேசியதாவது:—

எனக்குச் சொந்தமாக ஒரு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கருதி நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வருத்தம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சுராஜ்யக் கட்சியில் நான் ஸ்ரீமான் படேலுடன் நெருங்கி உழைத்திருக்கிறேன். ஸ்ரீமான் படேல் பிரபல பொதுஜன ஊழியராக விருந்ததோடு எனக்கு அரிய நண்பராகவு மிருந்தார். கண்டிப்பானவர் என்று அவரைச் சொன்னாலும், அவரிடம் ஹாஸ்ய உணர்ச்சியும் அதிகமாக விருந்தது. அது வெளி உலகுக்கு விசேஷமாகத் தெரியாது. தாய்நாட்டின் ஊழியர் என்ற முறையில் அவர் செய்த சேவைகள் விசேஷம். இந்தியா சட்டசபைத் தலைவர் என்ற ஸ்தாவில் அவர் செய்த ஊழியத்தால் தலைவர்களுக் கெல்லாம் தலைவர் என்ற பெயர் அவர் எடுத்தார். இந்தியா சட்டசபைக்குத் தலைவராக அவரைத் தெரிந்தெடுத்த போது அவர் தாம் செய்யவேண்டிய வேலைகள் இன்னின்னவையென நிர்ணயிப்பதில் சற்றும் சளைக்கவில்லை. நிர்மாண வேலை செய்ய இந்தியருக்கு அருகதை யுண்டாவெனச் சந்தேகித்தவர் பலருண்டு. தாம் தெரிந்தெடுக்கப் பட்டதும் ஸ்ரீமான் படேல் இந்தியப் பொது

ஜனங்களுக்கு அது ஒரு சோதனை காலம் என்று கருதினர். இநதியருக்கு ஜவாப்தாரித்துவம் வகிக்கப் போதிய ஆற்றல் இருப்பதாகக் காட்டவே அவர் எப்போதும் வேலை செய்துவந்தார். அவர் இந்த சபையில் தீர்ப்பு அளிக்கையில் சபையின் கவுரவத்துக்கும் தலைவர் பதவியின் அந்தஸ்துக்கும் யாதொரு பங்கமும் நேராமலிருக்கப் பார்த்துக்கொண்டார். அவர் கூறிய தீர்ப்புகளில் சிலவற்றைக் கண்டு ஒரு தரப்பார் ஆத்திரமடைந்தது உண்மையெனினும், அவரது தீர்ப்புகளை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் அவர் சபையின் சட்ட திட்டங்களுக்கும் நிரந்தர விதிகளுக்கும் புறம்பாக ஒரு அணுவளவும் செல்லவில்லை யென்பது நன்கு தெரியும். அவர் தாம் சேர்ந்திருந்த ராஜீயக் கட்சிக்குச் சாதகம் செய்ய வேண்டுமென்ற கொள்கையுடன் ஒரு காரியமும் எப்போதும் செய்ததில்லை. பொது ஜன வாழ்வில் அவர் சிறந்த வீரராக விளங்கினர். அவரது திறமை அளவிடக் கூடியதன்று. அவர் விஷய ஞானமுடையவர். பிற்காலத்தில் சரித்திரக்காரர்கள் ஸ்ரீமான் படேலைப்பற்றி ஒரு முடிவு கூறுவார்களானாலும், அவரிருந்த காலத்தில் வாழ்ந்திருந்த நாம் இப்போது அவர் இந்தியப் புதல்வர்களில் சிறந்தவர் என சுலபமாகச் சொல்லிவிடலாம். இச்சபையின் அநுதாபத்தை அவரது சகோதரருக்கு அறிவிக்கிறேன்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

:: தியாகமூர்த்தி ::

# பண்டித மோதிலால் நேரு

## 33-போடோ படங்களுடன் அணா 12

ஸ்ரீமான் வே. சாமிநாத சர்மா அவர்கள்

அழகாய்த் தொகுத்தது.

'தமிழ் நாடு' ஆசிரியர்

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள்

சிறப்புரையுடன் கூடியது.

பத்திரிகைகளின் புகழுரைகள்

லோகோபகாரி:— *இதில் பண்டித மோதிலால் நேருவின் சரித்திரம் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

ஊழியன்:— *தமிழில் இத்தகைய ஒரு நூலின் தேவையையும், பயனையும்பற்றி எவ்வளவு எழுதினும் மிகையாகாது.

நவசக்தி:— *நூல் மிகத் திறம்படத் தொகுக்கப் பட்டிருக்கிறது.

**The Hindu:**— * The Publishers have done a service to the Tamil Nadu by publishing in Tamil the biography of one who was the foremost leader of Indian opinion in modern times, except Mahatmaji and whose sacrifices and services in the cause of the country were unprecedented.

தமிழ் நாடு :— *உத்தம தேசபக்தர் பண்டித மோதிலால் நேருவின் சரித்திரத்தை அறிய விரும்பும் தமிழருக்கு இந்நூல் பயன்பெறுமென்றே கருதுகிறோம்.

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

# :: ஜவஹர்லால் ::

## இந்தியரின் மூச்சிலும், பேச்சிலும் இன்று பிரதான புருடராகவிருக்கும் பண்டித ஜவஹர்லால்!!!

இளஞ் சிங்கங்களைத் தட்டி எழுப்பி, புது உற்சாகமும், ஊக்கமும், பலமும் ஊட்டி வரும் நமது மாபெருந் தலைவர்!! இவர் ஜீவிய சரிதம் இப்பொழுது விற்பனைக்குத் தயார். பள்ளிப் படிப்பு, சீமை வாசம், பாரிஸ்டர் பரீட்சை, லாயர் தொழில் முதற்கொண்டு - சகல ராஜ போகங்களையும் துறந்து தேசத்திற்காகத் தொண்டாற்றிய அருஞ்சேவை, பெருந் தியாகம், ஜெயில் வாஸம், அவ்வப்போது நிகழ்த்திய வீரம் செறிந்த சொற் பொழிவுகள், காங்கிரஸ் தலைவர் பதவி, பேருரை, கராச்சி காங்கிரசில் செய்த அரிய பிரசங்கங்கள் முதலிய யாவும் ஒருங்கே திரண்ட புஸ்தகம்—தமிழகத்திற்கே முதல் நூல்.

—— அணா 12 ——

**அல்லயன்ஸ் கம்பெனி,**

**மயிலாப்பூர், சென்னை.**

## பெண்பாலாரும், வயது முதிர்ந்தவரும் வாசிக்கத் தக்கவை

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| ஸ்ரீமத் பாரத ஸாரம் | ... | 1 | 2 | 0 |
| ஸ்ரீமத் பாகவத ஸாரம் | .... | 1 | 0 | 0 |
| ஸ்ரீமத் ராமாயண ஸாரம் | .... | 1 | 0 | 0 |
| பஞ்ச ரத்தினம் ... | ... | 0 | 12 | 0 |
| மரகதவல்லி ... | ... | 0 | 12 | 0 |
| நால்வர் சரித்திரம் சாதா பைண்ட் | | 0 | 10 | 0 |
| ஷை கலிகோ பைண்ட் | ... | 0 | 12 | 0 |
| ஷண்முக விஜயம் ... | ... | 0 | 12 | 0 |
| வியாச விதானம் ... | ... | 0 | 12 | 0 |
| ஷண்முக சுந்தரம் | உயர்தர நாவல்கள் | 2 | 0 | 0 |
| விஜய பாஸ்கரன் | | 2 | 0 | 0 |
| தனபாக்கியம் | | 2 | 0 | 0 |
| மோகனாங்கி | | 1 | 4 | 0 |
| சிவகுமாரன் | | 1 | 0 | 0 |
| விக்ரமசிங்கன் கோட்டை மர்மம் (கற்பின் வெற்றி) | | 1 | 0 | 0 |
| தஞ்சை நாயகர் தாழ்வு | ... | 1 | 0 | 0 |
| தேசிங்கு ராஜன் சரிதை | ... | 0 | 10 | 0 |
| கன்றுங் கனியுதவும் | ... | 0 | 10 | 0 |
| மீராபாய் (படங்களுடன்) | ... | 0 | 12 | 0 |
| ராபின்ஸன் குரூஸோ | ... | 0 | 8 | 0 |
| திருக்குறள் நீதிக் கதைகள் | ... | 0 | 10 | 0 |
| ஸ்ரீ கிருஷ்ணாவதார சரித்திரம் | | 0 | 8 | 0 |

**அல்லயன்ஸ் கம்பெனி,**

மயிலாப்பூர், சென்னை.

## :: பாராயணத்திற் குரியவை ::

| | |
|---|---|
| த்ராவிட வேதத் திரட்டு - கயப்பாக்கம் திரு. சதாசிவ செட்டியார், பி.ஏ., அவர்கள் அழகாய்த் தொகுத்தது. நல்ல காகிதம், அழகிய கலிகோ பயிண்ட் கட்டடம் - | 3 8 0 |
| திருப்புகழ் விருத்தியுரை - இவ் உயரிய நூலில் பழநி, த்ருச்சேந்தூர், சுவாமி மலை ஆகிய திவ்ய ஸ்தலங்களில் முருகப் பெருமான்மீது ஸ்ரீ அருணகிரியார் பாடிய திருப்புகழ்ப் பாடல்களும், பதவுரை, விருத்தியுரையும். உரையாசிரியர் திரு. பி.எஸ். சுப்பிரமணியம், எம். ஏ., | 6 0 0 |

| | | | |
|---|---|---|---|
| ஷண்முக விஜயம் (படங்களுடன்) | 0 | 12 | 0 |
| திருப்புகழ் பாராயணத் திருமுறை | 1 | 0 | 0 |
| ஷை கலிகோ பயிண்ட் ... | 1 | 4 | 0 |
| நால்வர் சரித்ரம், கலிகோ பயிண்ட் | 0 | 12 | 0 |
| பாராயணத் திருப்புகழ் .... | 0 | 2 | 0 |
| வேல் விருத்தம், மயில் விருத்தம் | 0 | 1 | 0 |
| திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, சஷ்டி கவசம் | 0 | 2 | 0 |

**அல்லயன்ஸ் கம்பெனி,**

மயிலாப்பூர், சென்னை.

# :: "கலை மகள்" ::

தமிழ் மாதப் பத்திரிகைகளுள் தலை சிறந்து விளங்குவது; பிரபல கமிட்டி ஒன்றால் நன்கு நடத்தப்படுவது; அருமையான விஷயங்கள் கொண்டது; படங்கள் நிறைந்தது; குறைந்த சந்தா வுள்ளது; எவரும் படிக்கத்தகுந்தது.

வருட சந்தா (தபால் செலவுடன்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடுகளுக்கு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடுகளுக்கு | ரூ. | 6 | 0 | 0 |
| தனி சஞ்சிகை | ரூ. | 0 | 6 | 0 |

"கலைமகள்" சந்தாதார்க்கு மாத்திரமே அநேகம் அரிய தமிழ் நூல்கள் குறைந்த விலைக்கு அகப்படும்.

:: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர் ::